# SERAN VANJI

(IN TAMIL)

Dr. S. KRISHNASWAMY IYENGAR

# சேரன் வஞ்சி

## (வஞ்சி - சேரர் தலைநகர்)

39

31 / ஜூலை 1982

திவான் பஹதூர்
டாக்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்கார்
M.A., PH.D., LL.D.
சென்னை.

**எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி**
**நுங்கம்பாக்கம் :: :: சென்னை**

பதிப்புரிமை] 1946 [விலை ரூ. 2–8–0

*First Edition, October 1946*

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம்
31 [illegible] 1982

7751

Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Madras and Published by
The Educational Publishing Company, Nungambakkam, Madras.
Paper Issue Card No. MS. 7 (1000—20-10-46)

# முகவுரை

சேரநாடும் அதன் தலைநகரமான வஞ்சியும் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அப்பாற்பட்டவை என்பது இலக்கியம் கண்ட உண்மை; நாட்பட்ட கருத்துமாகும். ஆயின் இவ்வுண்மை, இராவ் சாகிப் மு. இராகவையங்கார் எழுதிய சேரன் செங்குட்டுவன் என்னும் நூலினும் அந்நூலினை ஆதரிக்கப் புகுந்த சேது சமஸ்தான மகா வித்வான் ரா. இராகவையங்கார் எழுதிய வஞ்சிமாநகர் என்னும் நூலினும் மறுக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள கருரே சேரர் தலைநகரமான வஞ்சி என்பது குறிக்கப்பட்டுள்ளது. இப்புதிய கொள்கையைத் தமிழ்ப்புலவர் பெருமக்கள் இன்றுவரை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆயினும், சென்னைப் பல்கலைக் கழக வரலாற்று ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த திருவாளர் V. R. இராமச்சந்திர தீக்ஷிதர் என்பவர் தாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்ட 'சிலப்பதிகாரம்' என்னும் நூலில் இப்புதிய கொள்கையையே வற்புறுத்தியுள்ளார். இதனால், சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் போன்ற தமிழறிஞர் உண்மை யறிய அவாக்கொண்டனர். அவர் என்னை இதுபற்றிக் கேட்டபோது, "இருபது ஆண்டுகளுக்குமுன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் யான் செய்த சொற்பொழிவுகளில் குறித்த குறிப்பே (சேரநாடு என்பது இன்றைய மலையாள நாடு ; வஞ்சி என்பது மேற்குக் கரையில் இருப்பது என்னும் கொள்கையே) எனது இன்றைய கருத்துமாகும்" என்று பதிலளித்தேன். பின்னர், இது பற்றிய விவாதம் திருப்பதியில் கூடிய கீழ்க்கலை மகாநாட்டிலும் நடைபெற்றது. இது நிற்க.

திருவஞ்சைக்களம் கோவிலுக்குச் சிறிது அப்பால் உள்ள 'சேரமான் பரம்பா' என்னும் மேட்டுப் பகுதி அகழ்ந்து ஆராயப்படுவதாக சர். ஷண்முகம் செட்டியார் அவர்கள் என்னிடம் தெரிவித்தார். அம்மேட்டுப் பகுதி கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டினரான சேரமான் பெருமாள் வாழ்ந்த அரண்மனை இருந்த இடம் என்பது கூறப்படுகிறது. இதனை எனக்குத் தெரிவித்த திவான் அவ்விடத்தைப் பார்வையிடுமாறு என்னைப் பரிந்து அழைத்தார். நான் அவரது அழைப்பை ஏற்று, கீழ்க்கலை மகாநாட்டிற்குப் பிறகு கொச்சி நாட்டிற்குச் சென்றேன்; திவான் அவர்கள், திவான் பேஷ்கா எனப்படும் திருவாளர் K. அச்சுத மேனன் அவர்கள், கொச்சி நாட்டுப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் ஆகிய திருவாளர் அநுஜன் அச்சன் அவர்கள் முதலிய அறிஞருடன்

ு இடங்களைப் பார்வையிட்டேன். இப்பெருமக்கள் நான் ர்வையிட்ட இடங்களைப் பற்றிய பல செய்திகளை எனக்குத் தரிவித்தார்கள்.

வஞ்சி இருந்த இடத்தை ஐயத்திற்கு இடமின்றித் தெளி ாகக் குறித்துவிட வேண்டும் என்று சர். ஷண்முகம் அவர்கள் ரும்பியதால், நான் இவ்வாராய்ச்சியில் மீட்டும் இறங்கினேன் ; துகாறும் கிடைத்துள்ள சான்றுகளைத் துருவினேன். புதிய காள்கைக்காரர் வாதங்களுக்கு எதிர்வாதங்கள் விடுத்தல் இந் ரலின் நோக்கமன்று. சேரநாட்டைப் பற்றியும் அதன் தலை கரான வஞ்சியைப் பற்றியும், மேனாட்டு யாத்ரிகரும் சங்க காலப் லவர்களும் யாது கூறிச் சென்றனர்—அக்கூற்றுகள் இன்றுள்ள சரநாட்டு ஊர்களுடனும் பிற இடங்களுடனும் அவற்றின் பயர்களுடனும் அங்கு வழங்கும் செவிவழிச் செய்திகளுடனும் ந்த அளவு ஒற்றுமை உடையனவாகக் காண்கின்றன என்னும் வரங்கள் மட்டுமே இந்நூலில் தரப்பட்டுள்ளன. இங்ஙனம் ரப்பட்டுள்ள விவரங்கள் வஞ்சி பற்றிய விவாதத்தை ஒரு டிவுக்குக் கொண்டுவரலாம் என்பது எனது நம்பிக்கை. இந் ரலின் முடிவைக் காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய-தாக்ஷி ாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் மன ாரப் பாராட்டினார்கள் என்பது இங்கு அறியத்தகும்.

. என்னைக் கொச்சி நாட்டிற்குப் பெரு விருப்புடன் வர ழைத்து என் பரிசோதனைக்குரிய எல்லா வசதிகளையும் செய்து தவிய சர். ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கும் அவரைச் சர்ந்த அறிஞர்க்கும் எனது நன்றி என்றும் உரியது. நாவலர்-ண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் இப்பணியில் னக்கு உதவிபுரிவதாக வலிந்து வாக்களித்தனர். ஆயினும் ருவரும் சந்திக்கத்தக்க வாய்ப்பு நேராமையின் அவரது ஒத் ழைப்புக் கிடைக்கவில்லை. எனினும் அந்நாவலர்க்கு எனது ன்றி உரியதாகுக.

இத் தமிழ் நூலுக்குத் தேவையான படங்களைத் தந்துதவிய காச்சி அரசாங்கத்தார்க்கும் இதனை மகிழ்ச்சியோடு வெளியிட ன்வந்த எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனியாருக்கும் எனது ன்றி உரித்தாகுக.

"ஸ்ரீபாதம்"
3, ப்ராடிஸ் ரோட்,
யிலாப்பூர், சென்னை.

S. கிருஷ்ணசுவாமி ஐயங்கார்.


Road to Nilagiri
Chowaghat
Palayoor (Palluru)
Chetuvai
Christians
Kappachal along the Back Waters
Manappuram Road (Known as the Rajavidhi of Makotai)
Ancient Families of Nambudiris, Nairs & Syrian Christians
From Paravoor to Palayoor
Karuvannur
Karuvippuram
Irinjalakkuda
BACK WATERS
Tirukkanamathilakam
Karoor
Vellangallur
Pappinivattom
Matilakom
Punnaikkad
Chenkunnu
Karumathara
Karuvilangu
Karuppatanna
KARUR (Between KARUPPATANNA & KAROORMURY)
(Karoor North)
Karoor Muri
(Karoor South)
Pullootu
Eastern Road
Eriyad
Kodungalloor
Coastal Road
Thiruvanchikulam (Vanci)
Azhikkode
Krishnankotta & Payya Hill
Periyar Baris
Kundoor
Ayroor
Chengamanad
Chalakkudi River
Muringoor
Annanad
Mangat
Karukkutty
Muringayur
Karumachei
Mutoris
A
E

# சேரன் வஞ்சி

## (சேரநாடும் அதன் தலைநகரமும்)

### தென் இந்தியாவின் முற்காலப் பாகுபாடுகள்

தென் இந்தியா என்று கூறப்படுவது திட்டமாக வரையறுக்கப்பட்ட ஓர் இந்திய நாட்டுப் பகுதி என்பது யாவரும் அறிந்த செய்தியே ஆகும். இது விந்திய மலைத்தொடருக்கு வடக்கிலுள்ள இந்துஸ்தானத்திலிருந்தும் விந்திய மலைக்கும் கிருஷ்ணை, துங்கபத்திரை ஆறுகட்கும் இடைப்பட்ட தக்ஷணத்திலிருந்தும் பெரும்பாலும் வேறாகக் கொள்ளத் தக்க பகுதியே ஆகும். தென்னாட்டு மக்கள் இதனைப் பொதுவாகத் 'தமிழகம்' என்றே வழங்கி வந்தனர். இதனையே வடமொழிவாணர் 'திரமிடகம்' என்றனர்; பண்டைக்காலக் கிரேக்க, ரோம நிலநூல்வல்லார் 'திமிரிகா' அல்லது 'லிமிரிகா' என்றனர். மிகப் பழங்கால முதல் இந் நிலப்பகுதி முடியுடை வேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் ஆட்சிக்கு உட்பட்ட மூன்று நாடுகளாகப் பகுக்கப் பட்டிருந்தது என்பது செவிவழிச் செய்தியாகக் கூறப் படுகிறது. இம் மூவரசர்கள் மட்டும் அல்லாமல் அவர்களுக் குக் கீழ்ப்பட்டு அவர்கள் அரசியல் தலைமையை ஏற்றுக் கொண்ட குறுநில மன்னர் பலரும் இதே பகுதியில் ஆட்சி செலுத்திவந்தனர். ஆயினும் எப்போதுமே இக்குறுநில மன்னர் அம் மூவரசர் ஆதிக்கத்தை உதறித் தள்ளிவிட்டுத் தம் உரிமை ஆட்சி செலுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் எதிர் நோக்கியே இருந்தனர். இம் முத்தமிழ் நாடுகளைப் பற்றி மாபாரதத்திலும் இராமாயணத்திலும் ஆங்காங்குக் குறிப்புகள் கிடைக்கின்றன. எனினும், இவற்றைப்பற்றி

550—1

யும் இவற்றின் எல்லைகளைப்பற்றியும் திட்டமாகக் காலத்தை வரையறுத்துக் கூறக்கூடிய தெளிவான முதல் குறிப்பு அசோகர் கல்வெட்டுகளிலேயே காணப்படுகின்றது. அவரது இரண்டாம் பாறைக் கல்வெட்டு, 'சோழ, பாண்டிய, கேரளபுத்திர, சதியபுத்திர, தாம்பபன்னி' என்ற வரிசையில் சில பிரிவுகளைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இவற்றுள் இறுதியில் வரும் பெயர் இலங்கையையே குறிக்கின்றது என்பது தெளிவு. ஆகவே, அது நம் ஆராய்ச்சிக்குப் புறம்பானது. மற்ற நான்கிலும் கடைசியான 'சதிய புத்திர' என்பது, பெரும்பாலும் தென் மஹாராட்டிர நாட்டைச் சார்ந்தது 'என்பது துணியப்படுகிறது. எனவே, மற்ற மூன்றுமே தென்னாட்டுடன் சம்பந்தமுடையவை என்பது தெரிகிறது. இதிலிருந்து தென்னாட்டுப் பகுதி மூன்று அரசர்கள் ஆட்சிக்கு உட்பட்டதென்றே அசோகரும் அவர் அதிகாரிகளும் கருதினர் என்பது கொள்ளப்பட வேண்டும். இம்மூவரசரும் முறையே சோழர், பாண்டியர், சேரர் அல்லது கல்வெட்டிற் குறித்தபடி கேரளபுத்திரர் என்பவர் ஆவர். எனினும், அசோகரின் கல்வெட்டுகள் இப்பிரிவுகளின் பெயர்களை மட்டிலும் இவ்வரிசையில் குறிக்கின்றனவேயன்றி அவற்றின் இட அமைப்பை வரையறுத்துக் கூறவில்லை. கிர்னாரில் கண்ட பாடப்படி இரண்டாம் கல்வெட்டில் இவற்றைப்பற்றிக் குறிப்பிடும் பகுதிகள் வருமாறு:—

"தேவாநாம்ப்ரிய ப்ரியதர்சியின் ஆட்சிப் பகுதி எங்கணும், அதன் எல்லையிலுள்ள சோடர், பாண்டியர், சதிய புத்ரர், கேரள புத்ரர், அன்றித் தாம்ர பர்ணி நாடுகளிலும், யோன அரசர் அந்தியோகர் நாட்டிலும், அந்தியோகர் நாட்டையடுத்த அரசர்கள் நாடுகளிலும் எங்குமே தேவாநாம்ப்ரிய ப்ரியதர்சியால் இரண்டுவகையான மருத்துவ முறைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஒன்று மக்களுக்கான மருத்துவம்; மற்றொன்று கால்நடைகளுக்கான மருத்துவம்."

## தென் இந்தியாவும்
## பழைய கிரேக்க நிலநூல் வல்லாரும்

அசோகர் கல்வெட்டே அன்றி மெகாஸ்தெனீஸ் என்பவர் எழுதியவற்றுள்ளும் இத் தென்னிந்திய நாடுகளைப் பற்றி ஆங்காங்குக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. அக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு நாம் அவற்றைப் பற்றி உருவாக எதையும் அறிய முடியவில்லை என்பது உண்மையே; ஆயினும், மௌரியப் பேரரசர் காலங்களில் அவை நிலவியிருந்தன என்பதிலும், மௌரியப் பேரரசராகிய அசோகர் காலம்வரை அவை நன்கு அறியப்பட்டிருந்தன என்பதிலும் ஐயமில்லை. ஒருவேளை அப்பேரரசர், அவற்றுடன் அரசியல் முறையில் நட்புறவுகூடக் கொண்டிருத்தல் கூடும் என்று எண்ண இடமுண்டு. இதுவன்றி இத்தென் பகுதிகளுக்கும் வட பகுதிகளுக்கும் நெருங்கிய போக்குவரவுத் தொடர்பும் இருந்தது என்பது தெரிகிறது. இத்தொடர்பின் பயனாகவே தென் நாடுகளில் புத்த சமண சமயங்களுக்கு மக்களிடையே மிகுந்த ஆதரவும் இருந்ததென்பது தெரிகிறது. தென் இந்தியாவின் பல பகுதிகளில் அவர்களைச் சார்ந்த சமுதாயங்கள் பல வாழ்ந்து வந்தன வென்பது பல இடங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. நடு இந்தியாவில் ஆந்திரர் ஆதிக்கம் அடைந்ததிலிருந்து தென் இந்தியாவுடன் வட இந்தியாவின் உறவும் பெருகலாயிற்று. ஆனல், இத் தொடர்பு தமிழ்நாட்டு எல்லைவரை வந்ததே யன்றித் தமிழ்நாட்டை மட்டும் பாதிக்காமலே நின்றுவிட்டது. எனவே, கிறிஸ்தவ ஆண்டுத் தொடக்கம் வரை மேற்கூறிய சில குறிப்புகள் நீங்கலாக, தென் இந்தியாவைப் பற்றிய நம் அறிவு மிகவும் குறைந்த அளவினதே ஆகும். கிறிஸ்தவ ஆண்டுத் தொடக்கம் வந்ததும் வாணிகத்தை முன்னிட்டு இப்பகுதிக்கு வந்து பார்வையிட்டுப் போன சிலர் சில விவரங்களைக் குறித்துப்போயிருக்கின்றனர். அவற்றிலிருந்து, தென் இந்தியாவைப் பற்றியும் அதன் வாணிக வாழ்வைப் பற்றியும் சிற்சில செய்தி

கள் நமக்குத் தெரிகின்றன. இக் குறிப்புகளின் உதவியாலும் இவற்றினும் மிகுதியாகத் தமிழ் இலக்கியத்தின் உதவியாலும் தென் இந்திய வரலாறு பற்றிய நம் அறிவு இது முதல் புத்துருப்பெற்று விரிவடைகின்றது. பண்டைய இந்தியாவைப் பற்றி மெகாஸ்தெனீஸ் தரும் விவரங்களிடையே ஓரிடத்தில் அவர் நேரடியாகச் சேர நாட்டையே குறிக்கிறார் என்று எண்ண இட முண்டு. அவர் கூறுவது இது :—

"இதனை அடுத்து மிக உயரிய இந்திய மலைத்தொடர்களிடையே நாரோக்கள் நாடு என்றொரு நாடு உண்டு........ சார்மோநாட்டுச் சிற்றரசனிடம் யானைப்படையாக 60-ம் மற்ற வகையில் இன்னும் குறைந்த படைகளுமே உண்டு." மெகாஸ்தெனீஸ் 'நாரோக்கள்' என்று கூறுவது மலபாரைச் சேர்ந்த நாயர்களையே என்றும், சார்மோ என்றது சேரனையே என்றும் 'விக்ரம்' என்பார் கருதுகின்றார். தெற்கு நாடு அரசிகளாலேயே ஆளப்பட்டது என்னும் அவர்தம் பொதுப்படையான கூற்றுத் தெளிவும் விளக்கமும் அற்றதாதலால் துணிவுடன் ஏற்கத்தக்கதன்று. மெகாஸ்தெனிஸை அடுத்து அவருக்குப்பின் இந்நாட்டுக்கு வந்த ஏரடாஸ்தெனீஸ் என்பவர் தற்செயலாகக் கன்னியாகுமரியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஸ்ட்ராபோ என்பவர் கூறுவதிலிருந்து, ஸிஸிகஸ் என்ற ஊரைச் சார்ந்த யூடாக்ஸஸ் என்ற கிரேக்க நாட்டான் எகிப்து நாட்டுக் கடற்கரையிலிருந்து புறப்பட்டு இந்தியாவுக்கு வந்ததாகவும், செங்கடற் பகுதியிலிருந்து இந்தியாவின் மேற்குக் கடற்கரைவரை ஒரு 'ஹிந்து' கப்பலோட்டி அவனுக்கு வழிகாட்டியா யிருந்ததாகவும் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து எகிப்தரசி கிளியோப்பாத்ராவினது ஆட்சிக் காலத்தில் மற்றொருவன் இவ்வாறே பயணம் செய்தான். ஹிப்பலாஸ் என்ற கிரேக்கக் கப்பலோட்டியின் வாயிலாகப் பருவக் காற்றின் ஒழுங்கு தெரியவருவதன்முன்- இப் பயணங்கள் ஒரோவழி மட்டுமே நிகழ்ந்தன. அதன்பின்னரே அவை

நிலவரமான திட்டங்களுடன் சாதாரணப் போக்கு-வரவு நிலைமையை அடைந்தன. இன்னும் கிரேக்க நாட்டின ரிடையே பருவக் காற்றிற்கு இக்கிரேக்கக் கப்பலோட்டி யின் பெயரை ஒட்டியே பெயர் ஏற்பட்டிருக்கிறது என் பது குறிப்பிடத் தக்கது. ஹிப்பலாஸ் வந்த காலம் கி. பி. 47 ஆகும். ஆயினும், மேற்குக் கடற்கரையைப் பற்றிய மட்டிலும் கி. பி. 23 முதல் கி. பி. 79 வரை வாழ்ந்த ப்ளினி என்பார்வரை நேரிடையாக யாரும் எதையும் குறிப்பிட வில்லை. கீழ்வரும் அவர் கூற்றுகளில் காணப்படும் சில விவரங்கள் நமக்கு மிகவும் பயன் தருபவையாக இருக் கின்றன. அவை வருமாறு: "இந்தியாவுக்குச் செல்ல விரும்புபவர்கள் ஓகெலிஸிலிருந்து புறப்படுவதே மிகவும் வசதியானது (இஃது இப்போது கல்லா அல்லது கெல்லா என்று வழங்குகிறது. இது பாபெல்மான்டெப் ஜலசந்தி அருகிலுள்ள ஒரு சிறு விரிகுடா ஆகும்.) அதன் பின் அவர்கள் ஹிப்பலாஸ் (பருவக்) காற்றின் உதவி கொண்டு 40 நாட்களுக்குள் இந்தியாவின் முதன்மை வாய்ந்த வாணிகத் துறைமுகப்பட்டினமாகிய முஸிரிஸை அடைய லாம். (இதுவே கொடுங்கோளூர் என்பது.) இவ்விடத்தில் வந்து இறங்குவது நல்லதன்று. ஏனெனில் இதன் அக்கம் பக்கங்களிலெல்லாம் கடற் கொள்ளைக்காரர் தொல்லை அதிகம். இக் கடற் கொள்ளைக்காரர்கள் நிட்ரியா என்ற இடத்தைக் கைக்கொண்டவர்கள். இவ்விடத்துக்கு யாரும் பண்டங்களைத் தருவிப்பது இல்லை. மேலும் மேற்கூறிய துறைமுகத்தில் மற்றொரு துன்பமும் உண்டு. கப்பல் தங்குமிடம் கரையிலிருந்து நெடுந்தூரத்தில் உள்ளது. ஆகவே, பண்டங்களைச் சிறு படகுகளின் உதவியாலேயே இறக்கவும் ஏற்றவும் முடியும். நான் இதை எழுதும்போது இவ்விடத்தை ஆள்பவர் 'கேள பொத்ராஸ்' என்பவர். இத்துறைமுகத்திலும் சிறிதளவு மிக்க வசதி உள்ள 'பகாரே' என்று வழங்கும் நியாகின்டன் துறைமுகமும் இதே நாட் டைச் சேர்ந்ததுதான். இத்துறைமுகத்தை அதிலிருந்து

உள் நாட்டுப்பக்கம் நெடுந்தூரத்திலுள்ள மதுரை என்ற நகரத்தில் உள்ள பாண்டியன் ஆளுகின்றான். இவ் விடத்திலிருந்துதான் அத் துறைமுகத்துக்கு மிளகு கொட்டனாரா வில் (கொட்டாரக் கரையில்) ஒரே கட்டையைக் குடைந்து செய்த படகுகளில் கொண்டு செல்லப்படுகிறது.". இக் குறிப்புகள் பல வகையிலும் பெரும் பயனுடையவையே ஆகும். கப்பல்கள் செங்கடல் முகத்துவாரத்திலிருந்து 40 நாட்களில் அரபிக்கடலைக் கடந்து வந்தன. இவ்விரைவு ஹிப்பலாஸ் என்ற பருவக்காற்றின் பயன் என்றும் கூறப் படுகிறது. அடுத்த சிறந்த செய்தி, முஸிரீஸ் துறைமுகத்தின் அயலிடம் எங்கும் கடற்கொள்ளைக்காரர் நிறைந்திருந்தனர் என்பதும் துறைமுகத்தை அடையும்போது இக்கரைப் பகுதி விலக்கப்பட வேண்டியது என்பதும் ஆகும். மற்றொரு வசதிக் குறைவு, துறைமுகத்திற்கே கப்பல்கள் நேரில் போக முடியாது என்பதும் பண்டங்களைக் கொண்டு வரச் சிறு படகுகளை உபயோகிக்க வேண்டும் என்பதும் ஆகும். மேலும் இப்பகுதியை ஆண்டவர்கள் 'கேள போத்ராஸ்' என்று ப்ளினி கூறுகிறார். அசோகரது கேரளபுத்ராவே ரோமக நாட்டினர் நாவில் இச்சிறு திரிபு அடைந்து 'கேள பொத்ரா' ஆயிற்று என்பது தெளிவு.

முஸிரீஸுக்கு அடுத்தபடி சிறப்பு வாய்ந்ததும் முஸிரீஸி னும் வசதி மிக்கதுமாகச் சொல்லப்படுவதும் நியாகின்டன் ஆகும். இது சற்று உள்நாட்டிலிருப்பினும் 'பகாரே' என்ற இடத்தில் கப்பல் தங்கும் துறையுடையது. பகாரே என்பது இப்போது கோட்டயத்துக்கு நேரெதிராக இருக்கும் கடற் கரைப்பட்டினமாகிய 'வைக்கரை' என்று தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது. ப்ளினியின் நியாகின்டனும் அதன் அருகி லுள்ள ஓரிடமென்று கூறப்படுகிறது. காலஞ்சென்ற திரு. கனகசபைப் பிள்ளை அதனை 'நெய்க்குன்றம்' என்று கூறிப்போயினர். மற்றும் சிலர் அதனை 'நீண்டகரை' என்று உரைத்தனர். ஆனால் இதுபற்றிய ப்ளினியின் முக்கியமான குறிப்பாவது, 'இது நெடுந்தொலை உள்நாட்

டில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட பாண்டியன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது' என்பதே. அதே சமயம் அது மிளகு பயிராகும் நாட்டிலேயே இருந்ததென்பதும் கவனிக்கத் தக்கது.' மேலும் ப்ளினி கூறும் கொட்டநாரா, குட்டநாட்டுக்கு மிக அண்மையிலுள்ளதாகும். அது பின்னாட்களில் புகழ்பெற்ற 'கொட்டாரக் கரை' என்ற நகரமன்று. ப்ளினியின் குறிப்புகளுள் ஒன்று மிகவும் சுவையுடையது. இவ் வெளிநாட்டு வாணிகத்தில் வாணிக லாபம் (பண்டமாற்றில் பொருள் மீப்பு) அடைந்தது இந்தியாவே என்றும், இந்த லாபத்தின் அளவு அக்காலப் பொற்காசுகள் (ஸெஸ்டர்ஸ்கள்) 5½ கோடி (அதாவது 4,86,979 பவுன்கள்) என்றும், இப் பணம் பெரும்பாலும் வாசனைப் பொருள்கள், முத்துகள், பட்டு வகைகள் முதலிய இன்ப வாழ்க்கைப் பொருள்களின் வாணிகத்தினாலேயே ஏற்பட்டது என்றும் அவர் பிறிதோரிடத்தில் கூறுகிறார். எனவே, அவர் முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் ஏறத்தாழக் கி. பி. 70-இல் இவற்றை எழுதியிருக்கக்கூடும் என்றும் எண்ணத்தகும். அவர் கேரளபுத்ர நாட்டையும் முஸிரிஸ் துறைமுகத்தையும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். அத்துடன் அவர் எழுதிய காலத்தில், அத் துறைமுகத்தில் ஒரு சேர அரசன் வாழ்ந்தான் என்றும் அத் துறைமுகத்தை அடுத்த நிலப்பகுதிகள் கடற் கொள்ளைக்காரர் தொல்லைக்கு உட்பட்டிருந்தன என்றும் அவர் கூறுகிறார். இம் மூன்று செய்திகளையும் முற்காலச் சங்க இலக்கியமும் உறுதி செய்வது காணலாம்.

இதே பொருள் பற்றி 'பெரிப்ளஸ் தரும் குறிப்புகளாவன :—

"53. கல்லியெனவுக்கப்பால் இப்பகுதியின் பிற வணிக நகரங்கள் இருக்கின்றன. இவை ஸெமில்லா, மந்தகோரா, பலைபாட்மே, மெலிஸிகாரா, பைஸாந்தியம், தோகாரம், ஔரன்னேபோவாஸ் என்பவை யாகும். பின்

ஔஸெகிரியெனே, எகிடியை முதலிய தீவுகளும், கெர்ஸனீஸஸ் என்ற இடத்திற்கு எதிராகக் கேனிடேயும் உள்ளன. (இவற்றில் கடற் கொள்ளைக்காரர் உண்டு.) இவற்றிற்கு அப்பால் உள்ளது வெள்ளைத்தீவு. இவற்றைக் கடந்தால் தீமிரிகாவின் முதன்மை பெற்ற வணிகப் பகுதிகளான நாராவும் திண்டிஸும், அவற்றின்பின் முஸிரிஸும் நெல்கிந்தாவும் வருகின்றன. இவை யனைத்தும் இப்போது முதன்மை யுடையவை ஆகும்.

"54. திண்டிஸ் கேரொபொத்ராவின் நாட்டைச் சார்ந்தது. அது கடலிலிருந்து நன்கு புலனாகும் ஒரு சிற்றூராகும். முஸிரிஸும் அதே நாட்டைச்சேர்ந்ததே. அத்துறை முகத்தில் அராபியரிடமிருந்தும் கிரேக்கரிடமிருந்தும் சென்ற பண்டங்கள் சுமந்த கப்பல்கள் நெருங்கி நிறைந்து நிற்கும். அஃது ஓராற்றங்கரையில் உள்ளது. ஆற்று வழியாகவும் கடல் வழியாகவும் சென்றால், அது திண்டிஸி (தொண்டிஸி)லிருந்து 500 ஸ்டேடியம் (அதாவது ஏறத்தாழ 55 மைல்) தூரத்திலுள்ளது. ஆற்றை எதிர்நோக்கிச் சென்றால் அது கடற்கரையிலிருந்து 20 ஸ்டேடியம் (அதாவது 2¼ மைல்) தூரமுள்ளது. நெல்கிந்தா, ஆற்று வழியாகவும் கடல் வழியாகவும் முஸிரிஸிலிருந்து 500 ஸ்டேடியம் (55 மைல்) இருக்கும். ஆனால், அது பாண்டிய நாட்டைச் சேர்ந்தது. அதுவும் ஓர் ஆற்றின்கரையிலேயே இருக்கிறது. கடற்கரையிலிருந்து அது 120 ஸ்டேடியம் (13¼ மைல்) தூரத்திலிருக்கிறது.

"55. இவ்வாறு கடலொடுகலக்கும் இடத்து மற்றோர் ஊர் இருக்கிறது. இதுவே 'பகாரே' என்பது. நெல்கிந்தாவிலிருந்து வெளியேறிப் பயணம் செய்யும் கப்பல்கள் இங்கே வந்து தங்கி நங்கூரமிட்டுப் பொருள்களை ஏற்றிக்கொள்கின்றன. ஏனெனில், ஆற்றில் ஆழமற்ற பகுதிகளின் நீர்த்தடங்கல்கள் மிகுதி; நீர்ப்பாதைகளும் நேரிய முறையில் இல்லை. இவ்விரண்டு வாணிக இடங்

களையும் ஆட்சிபுரியும் மன்னர் உள்நாட்டிலேயே வாழ்கின்றனர். கடலிலிருந்து இவ்விடங்களை அணுகுபவர்களுக்கு அடையாளமாக அவர்களை வரவேற்பதுபோல் கருநிறமும் குட்டையுமான பாம்புகள் காணப்படுகின்றன; அவற்றின் கண்கள் சிவப்பாயிருக்கின்றன.

"56. இவ்விடத்தில் மிளகும் மலபத்ரமும் மிகுதி ஆதலின் அவற்றைக் கொண்டுசெல்லும் பொருட்டுக் கப்பல்களும் மிகப் பெரியவையாக இருக்கின்றன. இவற்றில் இறக்குமதியாகும் பொருள்களில் முதன்மையானது நாணயக்குவைகளே. அடுத்தபடி சிறிது நீலக்கல் (Topaz), மெல்லிய ஆடைகள், பலவகை உருவங்கள் தீட்டப்பட்ட நார்ப்பட்டு கருமிளை பவழம், கீழ்த்தரக் கண்ணாடிவகைகள், செம்பு, வெள்ளீயம், ஈயம், (மிகுதியாக இல்லையாயினும் பாரிகஸாவில் இறக்குமதியாகும் அளவு) சாராயம், கப்பலோட்டிகளுக்கு வேண்டிய அளவு கோதுமை (இதனை அந்நாட்டு வணிகர்கள் கொண்டு செல்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது) ஆகியவையே. இங்கு மிகுதியான அளவில் ஏற்றுமதியாகும் மிளகு முழுவதும் வாணிக இடங்களுக்கு அருகிலேயே யுள்ள 'கொட்டநாரா' என்ற ஒரே பகுதியில் விளைகிறது. இதனையன்றி மிகுதியான முத்துகள், தந்தம், பட்டுத்துணி, கங்கைப் பகுதியிலிருந்து வரும் வெட்டிவேர் உள்நாட்டுப் பகுதிகளிலிருந்து வரும் மலபத்ரம், வைரம், நீலம் முதலிய எல்லாவகையான இரத்தினங்கள், க்ரைஸித் தீவிலும் தமிரிகாக் கரையோரமுள்ள தீவுகளிலும் கண்டெடுக்கப்படும் ஆமையோடுகள் ஆகிய இவை பெருவாரியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்விடத்துக்குச் செல்ல விரும்புபவர்கள் எகிப்திலிருந்து நல்ல பருவகாலத்தைத் தேர்ந்து எபிபி மாதத்தில் அதாவது ஜூலை மாதத்தில் பயணம் தொடங்குகின்றனர்."

### சேரநாடு - திரமிடகம் அல்லது தமிழகத்தின் மேற்குக் கரையே.

மேலே காட்டப்பட்ட நாற்பகுதிகளிலிருந்து தெற்றென விளங்கும் செய்திகளாவன: ப்ளிப்ளஸ் 'திமிரிகா' என்றும் வேறு சிலர் 'டிமிரிகா' என்றும் தவறுதலாக 'லிமெரிகா' என்றும் குறிப்பிடும் சொற்கள் அனைத்தும் வடமொழியாளரின் 'திரமிடகமே' ஆகும். இவ்வட்சொல் தமிழிலக்கியத்தில் வழங்கப்படும் 'தமிழகம்' என்ற சொல்லை அடியாகக்கொண்டே தோன்றியிருக்கவேண்டும். இத் தமிழகத்தின் மேற்குக் கடற்கரை, மேற்குறிப்பிட்ட ஆசிரியரால் 'நாரா' என்றும் 'திண்டிஸ்' என்றும் கூறப்படும் இரு நகரங்களுடன் தொடங்கிற்று. இவற்றுள் பின்னதைப்பற்றி எத்தகைய ஐயத்துக்கும் இடமில்லை. அது தொண்டி என்ற தமிழ்ப் பெயரே யாகும். கீழ்க்கரையிலுள்ள சோழனுடைய தொண்டியிலிருந்து பிரித்தறிவதற்காக அது 'குட்டுவன் தொண்டி' அல்லது 'சேரன் தொண்டி' என்று அழைக்கப்பட்டது. இஃது இப்போது மேற்குக் கரையில் கொடுங்கலூருக்கு (Cranganore) 50 மைல் வடக்கிலும் பெய்ப்பூருக்கு (Beypore) ஒருசார் வடக்கிலும் உள்ள 'கடலுண்டி' அல்லது 'கொயிலாண்டியாகும்' என்று திருப்திகரமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் நாரா என்னும் பெயர் தெளிவாக இல்லை. ப்ளினியும் இப் பெயரை இங்ஙனமே கையாளுகிறார். தாலமி (Ptolemy) மட்டும் இதனை 'நித்ரா' அல்லது 'நித்ரியாஸ்' என்று வழங்குகிறார். இவ்விடம் இன்னதென்று விளக்க இப் பெயர் மிகவும் உதவியாகும். மங்களூரை யடுத்து அதன் தென்புறம் கடலில் கலக்கும் ஆறு 'நேத்ராவதி' என்பதாகலின். இப்பெயர் அவ்யாற்றின் பெயரை யொட்டித் தோன்றிய மங்களூரின் பெயராகவே இருத்தல்வேண்டும். இதற்கு எதிராக ஒரு தீவு இருந்ததென்றும், அது கடற்கொள்ளைக்காரர் ஒன்றுகூடும் நடு இடமாக இருந்ததென்றும் கூறப்படுகிறது. இத்தீவும் 'நித்ரா' என்றே அழைக்கப்படுகிறதாயினும், சில சமயம் 'லியூகெ' அல்லது 'வென்

தீவு' என்றும் வழங்குகிறது. எனவே, இப்பண்டைய ஆசிரியர்களின் கருத்துப்படி மேல் கடற்கரைப் பக்கம் தமிழ் நாடு மங்களூருடன் தொடங்கிற்று என்பது தெளிவாகிறது. உண்மையில் சரித்திரக் காலங்களில் மலையாள நாடு (மலபார்) தொடங்கியது இவ்விடத்தில்தான். இவ்விடத்துக்கு உடனடியாக வடக்கிலுள்ள கரையோரமும் பெரும்பாலும் கண்ணனூர் உட்படத் தெற்கே கண்ணனூர் வரையுள்ள சிறுபகுதி தூரமும் துளுநாட்டைச் சேர்ந்ததாக இருந்தது. உண்மையான மலையாள நாடு இவ்விடத்தில் இருந்தே தொடக்கமாயிற்று. இங்கிருந்து 500 ஸ்டேடியம் (55 மைல்) தெற்கே சென்றால் முஸிரிஸையும், அதிலிருந்து இன்னும் 500 ஸ்டேடியம் தெற்கே சென்றால் மெல்கிந்தா அல்லது நியகிந்தாவையும் அடைவோம். இந்த இட வரையறைகளிலிருந்து மூன்று நகரங்களின் அமைப்பை நன்கு அறிகிறோம். அவற்றுள் மங்களூரும் முஸிரிஸூம் கடற்கரையிலும், நியகிந்தா கடற்கரையிலுள்ள பகாரே (வைக்கரை)யை யடுத்துக் கோட்டயத்திற்கு நேரெதிராகவும் உள்ளன. குறிப்பிடத் தகுந்த மற்றொரு செய்தி, தொண்டி சேர நாட்டில் இருந்தது என்பது. முஸிரிஸூம் அதே நாட்டில்தான் இருந்தது. அது மிக நல்ல நிலையில் இருந்தது. அவ்விடத்துக்குக் கிரீஸிலிருந்தும் அரேபியாவிலிருந்தும் எகிப்திலிருந்தும் பெருந்திரளான கப்பல்கள் வந்தன. தமிழ் நூலாசிரியர்கள் அவ்விடத்துக்கு யவனர்கள் வந்ததாகக் குறிப்பிடுவது இக்கூற்றுகளுடன் முற்றிலும் பொருந்துகிறது. அத்துறைமுகம் ஓர் ஆற்றின் கரையில் தொண்டியிலிருந்து 500 ஸ்டேடியம் தூரத்திலிருந்ததென்று கூறப்படுகிறது. அதிலிருந்தும் இன்னும் 500 ஸ்டேடியத்துக்கு அப்பாலுள்ளது மெல்கிந்தா. இது பாண்டியநாட்டைச் சேர்ந்ததென்று இவ்வாசிரியர் கூறுகிறார். அத்துடன் நெல்கிந்தா என்று அவர் குறிப்பிடும் நகரம் கடற்கரையிலிருந்து 120 ஸ்டேடியம் அதாவது 12 மைலில் இருந்ததாகவும், அதற்கு நேராகக்

கடற்கரையிலிருந்த நகரம் 'பகாரே' என்பதாகவும் தெரிகிறது. இந்தப் பகாரே என்ற நகரம்' மலையாளத்தில் 'வைக்கரை' என்று வழங்குமிடத்துக்கு மிகவும் அருகில் இருந்திருக்கவேண்டும். இவற்றை நோக்கக் கடற்கரையோரமாக வடக்கிலும் தெற்கிலும் சேரநாட்டின் எல்லை தெளிவாக வரையறுக்கப்படுகிறது. அத்துடன், ப்ளினி முஸிரிஸே தலைநகரமாக இருந்ததென்று குறிப்பிடுகிறார். இப்பெயரின் தமிழ் வடிவம் முசிறி அல்லது முயிறி என்பதாகும். மேலும் இதில் கூறப்படும் இரண்டு முதன்மையான செய்திகள் கவனிக்கத் தக்கவை: இப்பகுதியை அடுத்து வடக்கிலுள்ள கடற்கரை கடற்கொள்ளைக்காரர் தொல்லைகளுக்கு ஆட்பட்டிருந்தது. உண்மையில் மங்களூர்த் துறைமுகமும் அதற்கு எதிரிலிருந்த தீவும் தெளிவுபட அவர்கள் உறைவிடமாயிருந்தன என்பதே கூறப்பட்டிருக்கிறது. இது தமிழிலக்கியத்தில் கூறப்பட்ட கடம்பர்கள் விவரத்துடன் பொருந்தும். இவர்கள் தமிழில் 'கடற் கடம்பர்கள்' என்றே வழங்கப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் கடற் கொள்ளையிடும் இயல்புடையவராக இருந்திருக்கக்கூடும். சேர அரசர்களில் பலரும் அவர்களை ஒறுத்து அடக்கவேண்டியவர்களாக இருந்தனர். இப்பகுதியின் சிறந்த ஏற்றுமதி மிளகு என்பது கூறப்பட்டது. இஃது ஆசிரியரால் கொட்டநாரா என்றழைக்கப்படும் இடத்திலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்நாடு தமிழ் வழக்காற்றில் குட்ட நாடு எனக் கூறப்படுவதே ஆகலாம். இது பாண்டியநாட்டை அடுத்து வடக்கில் உள்ளது. மேலும் ஆசிரியர் கூறுகிறபடி இவ்வாணிகம் கடல் வாணிகமாகமட்டும் நிற்கவில்லை. கரையிலும் உள்நாட்டு வாணிகம் இதனுடன் நடந்ததென்பது தெரிகிறது. ஏனெனில் வாணிகப் பொருள்களில் பல கிழக்குப் பகுதியிலிருந்தும் வங்காள விரிகுடாவுக்கு அப்பாலிருந்தும் சீனவிலிருந்தும்கூட மீட்டும் ஏற்றுமதி செய்யும்படி கொண்டுவரப்பட்டன என்பது தெரிகின்றது.

## சேரநாடு—தாலமியின் குறிப்புகள்

பண்டைய ஆசிரியர்களில் அடுத்தவர் தாலமி. இவர் ஒன்றிரண்டு தலைமுறைக்குப் பின்வந்தவர். இவர் குறிப்பிடும் லிமிரிகா, 'டிமிரிகா' என்பதன் பிழைப்பட்ட வடிவமே என்பது தெளிவாகக் கொள்ளத்தகும். இவரும் லிமிரிகாவின் நகரங்களைப்பற்றிய விவரங்கள் சில குறிப்பிடுகிறார். இவர் திண்டிஸ் அல்லது தொண்டியுடன் தொடங்கி, ப்ளினி கூறும் அதே தூரக் கணக்கையும் தருகிறார். கடற்கரை ஓரம் இருப்பவை எனக் கூறப்படும் பிற நகரங்களிடையே முஸிரிஸின் பெயரும் காணப்படுகிறது. தமிழர் முசிறி அல்லது முசிறிக்கோடு என்று கூறுவது இப்பண்டைத் துறைமுகத்தையே என்பதில் ஐயமில்லை. தாலமி கூற்றுப்படி அதுவே சேரநாட்டின் தலைநகருமாகும். சில முற்காலக் கல்வெட்டுகளின் உதவியால் அது கொடுங்கலூர் (Kranganore) தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. மிகப் பழமையான ஸிரியன் கிறிஸ்தவரின் எழுத்து மூலங்கள் (Records) அதனை 'மாகோதை' அல்லது 'மாகோதைப் பட்டினம்' என்றும் குறிக்கின்றன. ஸ்யூடோஸ்தொமாஸ் (Seudostomos) அல்லது பேரிமுகம் எனப்படுவது இங்குள்ள ஆறு கடலொடு கலக்கும் இடத்தையே ஆகும். இதுவே கடற்கரையில் முஸிரிஸிலிருந்து ஒன்றிரண்டு மைல் தூரத்திலுள்ள பெரியாற்றின் சங்கமமுகம் ஆகும். மலையாள வழக்கில் இச்சங்கமமுகம் 'அழிமுகம்' என வழங்கப்படுகிறது. முன் நகரிருந்த பகுதியே இப்போது 'அழிக்கோடு' என்று குறிக்கப்படும் இடமாக இருக்கலாம் என்பது தோற்றுகிறது. நெல்கிந்தா என்பது முஸிரிஸிலிருந்து சிறிது தூரம் தெற்கிலுள்ளதாகக் காண்கிறது. இஃது எங்குள்ளது என்பது இன்னும் திண்ணமாகத் தெளிவுபடவில்லை. ஆயினும் இது கோட்டயத்தின் பக்கம் பெரும்பாலும் அச்சன் கோவிலாற்றின் கரையில் இருந்திருக்க வேண்டும் என்பதைக் கருத்து வேற்றுமை இன்றி அறிஞரெல்லாரும்

ஒத்துக்கொள்கின்றனர். இவ்வாறு மலையாளத்து மக்கள் வைக்கரை என்றழைக்கும் பகாரேக்குச் சில மைல் கீழ்ப் புறம் தள்ளிக் கடலுடன் கலக்கிறது. இப்பகுதியில் தாலமி 'கொரெவூரா' என்னும் ஓரிடத்தைக் குறிப்பிடு கிறார். அது நிரைகோடு (Longitude) 118 பாகை 40 தற் பரை நேர்கோடு (Latitude) 14 பாகை 20 தற்பரையி லுள்ளது. அது பகாரேக்கும் முஸிரிஸுக்கும் இடைப் பட்டது. ஆனால் உள்நாட்டு நகர்களிலும் அவர் கேரொ பொத்ரர்களின் அரசிருக்கையிடமாக ஒரு கொரெவூரா வைக் குறிப்பிடுகிறார். இதன் இட அமைப்பு நிரைகோடு (Longitude) 119 பாகை நேர்கோடு (Latitude) 16 பாகை 20 தற்பரைக்குச் சரியானதென்று அவர் தெரிவிக்கிறார். முஸிரிஸின் அமைப்பு நிரைகோடு 117 பாகை நேர்கோடு 14 பாகை ஆனபடியால், இக்கொரெவூரா முஸிரிஸினும் மிகுதி தொலை உள்நாட்டில் இருந்தது எனக் கொள்ள வேண்டும். தாலமியின் நேர்கோட்டு நிரைகோட்டுக் கணக் குகள் முற்றிலும் நம்புதற்குரியவை அல்ல. எனினும், கரூர் என்ற பெயருடைய பல நகரங்களுள் எதுவும்—இவ் வுள்நாட்டுக் கரூர்கூட, திருச்சிராப்பள்ளி ஜில்லாக் கரூர் அளவு உள்நாட்டிலிருந்திருக்க முடியாது. தாலமி காட்டும் குறிப்புகளின்படி பார்த்தால், இக்கரூர் சேரர் நாட்டுப் பகுதியிலேயே கடற்கரைக்கும் மேற்கு மலைத்தொடருக்கும் இடையில் இருக்கவேண்டும் என்பது தோற்றுகிறது. அதனைக் காண நாம் மேற்கு மலைத்தொடருக்கும் அப்பால் செல்லமுடியாது. எனவே, இங்ஙனம் கப்பலோட்டிகளிட மிருந்து நேரடியாகவே செய்திகளை அறிந்தவர்களான பண்டைய கிரேக்க ஆசிரியர்கள் தரும் விவரங்களிலிருந் தும், இக்கரைப் பகுதியை வந்து பார்வையிட்ட பிறர் தரும் விவரங்களிலிருந்தும் 'சேரநாடு கடற்கரை நெடுகிலும் 1000 ஸ்டேடியம் (111 மைல்) அளவு நீளத்தில் பரந்து இருந்தது; (மேலும் குறிப்பிட்ட விவரங்களில் அவ்விதம் தெளிவுபடக் கூறப்படாவிட்டாலும் அது பெரும்பாலும்)

கிழக்கில் மேற்கு மலைத்தொடருக்கும் மேற்கில் அரபிக் கடலுக்கும் இடையிலேயே இருந்திருக்கவேண்டும்; இந் நாட்டினை ஆண்டவன் சேரன் என்று இரண்டு மூன்று பெயர்களால் குறிப்பிடப்படுகிறான்; ஆனால் அப்பெயர்கள் எல்லாம் 'சேரபுத்திரா, கேரளபுத்ரர் ஆகிய வடிவுகளுடன் பொருந்துபவையே', என்பன அறியத் தக்கவை. பண்டைத் தமிழ் இலக்கியத்தில் சேரபுத்திரா என்ற தொடர் காணப்படவில்லை. ஆயினும், 'சேரர் பெருமான்', 'சேரர் பெருமகன்' என்ற தொடர்கள் வழங்குகின்றன. பின்னாட்களில் 'சேரமான்' என்ற வடிவும் தோற்றுகிறது. 'கேரளபுத்திரா' என்பது அசோகர் கல்வெட்டுக்களில் மட்டுமன்றிப் பிற்காலங்களிலும் பொதுப்படையாக வழங்கியதே ஆகும். ஆகவே, பண்டைக் கிரேக்க ஆசிரியர் நாட்களில் சேரநாடு ஒரு கடற்கரையோர நாடாகவும் அதன் தலைநகர் கடலிலிருந்து நெடுந்தூரம் இல்லாததாகவும் இருந்தது என்னல் வேண்டும்.

## சேரநாடு : சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

இனிப் பண்டைத் தமிழ்ப் பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் சேரநாட்டைப் பற்றியும் அதன் தலைநகரெனக் கூறப்படும் வஞ்சியைப் பற்றியும் தெரியவரும் செய்திகளால் ஏற்படும் நிலைமையினை ஆராய்வோம் : இக்கால ஆராய்ச்சியாளர் இந்நூற்கள் ஒன்றற்கொன்று தொலைவிலுள்ள இரு வேறு காலத்தைச் சார்ந்தவை என்று பிரித்தாலும், தமிழ்ப் புலவர்கள் இன்னும் இந்நூல்களில் குறிப்பிட்டபடியே இரண்டையும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய உறவுடைய 'இரட்டைக் காவியங்கள்' எனவே கொள்கின்றனர். இதுவே தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் துறைக்கும் உகந்ததாகும். இக் கருத்தினின்றும் விலகிச் செல்வதற்கு இதுவரை எத் தகைய சரியான காரணமும் காட்டப்படவில்லை. இப்

பிரச்னையை இங்கே மீண்டும் விரித்துரைக்கவேண்டும் காரணமும் இல்லை. இங்கே நாம் கூறவேண்டுவதெல்லாம், சிலப்பதிகாரம் தனிப்பட நின்றால் காவிய இலக்கணப்படி நிறைவுடைய நூலாகாது என்பதே. ஏனெனில், உறுதிப் பொருள் நான்கையும் உணர்த்தும் வகையில் அது தலைவனது வாழ்க்கையை முழுமையாகக் கூறவில்லை. இதுபோக, மற்றொரு மிகத் தெளிவான செய்தியும் கவனிக்கத் தக்கது: சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இக்கதை நிகழ்ந்த காலத்தில் சேரநாட்டை ஆண்ட அரசனாகிய செங்குட்டுவன் தம்பியே யாவர். மற்றொரு காப்பியமாகிய மணிமேகலையின் ஆசிரியரும் மன்னன் செங்குட்டுவனுக்கும் அவன் தம்பியாகிய சிலப்பதிகார ஆசிரியர்க்கும் நண்பரென அச்சிலப்பதிகாரத்திலேயே குறிப்பிடப்படுகிறார். இது மட்டுமன்று. அவர் சிலப்பதிகாரக் கதையுடனேயே மிக நெருங்கிய தொடர்பும் உடையவர். எனவே, இவ்விரண்டு நூல்களையும் இருபெரும் 'பொய் - மூட்டைகள்' என்று கொண்டாலன்றி, இவற்றுள் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துணரமுடியாது. சிலப்பதிகாரம் தெளிவாகவே சோழர், பாண்டியர், சேரர் ஆகிய முடியுடை அரசர் மூவருடனும் நெருங்கிய தொடர்புடையதெனக் கூறப்படுகிறது. வெளிப்படையாகக் கூறப்படாவிடினும், மணிமேகலையும் இதே நிலைமையுடையதே எனல்வேண்டும். எனவே இம்மூன்று நாடுகளைப் பற்றியும் இந்நூல்கள் தனித்தனிக் கூறுவனவற்றைத் தொகுத்தெடுத்துப் பார்ப்பின், இந்நூல்களின் கருத்துப்படி, சேரநாடும் அதன் தலைநகரும் எவ்விடங்களில் நிலைபெற்றிருந்தன என்பதைக் காணலாம்.

## இரு பெருங் காப்பியங்களிலும் கண்ட கதைப்பகுதி

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு நூல்களுமே சேர்ந்து, சோழர் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த மாதவி என்ற அழகிய நடனமாது, அவள் கண்கவர் வனப்புடைய புதல்வி மணிமேகலை ஆகிய

வர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுகின்றன. சோழர் தலைநகரின் முதன்மை வாய்ந்த வணிகன் மகனாகிய கோவலன் தனக்கு ஒத்த குடியில் வந்த தன் மனைவியைப் புறக்கணித்து அந் நடனமாதின்மீது காதல் கொண்டான். இவ்வகையில் கோவலன் வாழ்ந்துவரு நாளில், ஒருநாள் அவன், தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு நின்ற அவ் வாடல் நங்கை தான் உரிமையுடன் எதிர்பார்த்தபடி தன்னிடம் பற்றுதல் உடையவளாக இருக்கவில்லை என்று மயங்கி உணர்ந்தான். அதுமுதல் அவன் கழிவிரக்கங் கொண்டு இனியேனும் புகாரைவிட்டுப் பாண்டியர் தலைநகராகிய மதுரை சென்று தன் வாழ்வைப் புதுவகையில் சீர்படுத்தித் தான் தன் காமக்கிழத்திமீது சொரிந்து பாழ்படுத்திய - தன் தந்தையிடம் பெற்ற செல்வத்தை மீட்டும் ஈட்ட எண்ணினன். இங்ஙனம் மனமாற்றமடைந்த நிலையில் அவன் தன் கருத்தைத் தன் மனைவிக்குத் தெரிவித்தான். அவளும் தன் பெற்றோர் தனக்கீந்த விலைமதிப்பரிய அணிகலன்களுள் தன்னிடம் எஞ்சி இருந்த ஒரே அணிகலனாகிய விலையேறிய சிலம்பு ஒன்றைத் தந்து அதற்கான முதற்பொருளை உண்டுபண்ண இணங்கினள். ஆயினும் அவனுடன் தானும் உடன்செல்ல வேண்டும் என்றும் இனியும் அவனிடமிருந்து பிரிந்திருக்க முடியாதென்றும் அவள் உரைத்தாள். அவனும் இணங்கவே, இருவரும் தம் செலவை நகரத்தார் அறியாதபடி பொழுது விடியுமுன்னே புறப்பட்டனர். பயணத்தின் முதற்கூறு முற்றுப் பெற்றபின், கோவலன் சமணப் பெண் துறவியார் ஒருவரைக் கண்ணுற்று அவரையுந் தம்மோடு கூட்டிக் கொண்டு ஸ்ரீரங்கத்தின் வழியாகப் பாண்டியர் தலைநகராகிய மதுரையை அடைந்தான்.; மதுரையில் நுழைந்ததும் நகரின் புறஞ்சேரியில் உள்ள ஆயர்மகள் ஒருத்தியிடம் மனைவியை ஒப்படைத்துவிட்டு மனைவியின் கால் சிலம்பு ஒன்றை யேந்திய கையனய், நகர் ஆவண வீதிகளின் வழிச் சென்றான். அச்சமயம் தற்செயலாக மதுரை அரசியின்

காற்சிலம்புகளுள் ஒன்று திருடுபோக, அரசி அதனல் ஆற்ரெணுத் துயருள் ஆழ்ந்திருந்தாள். இவ்வகையில் உண்மைக் குற்றவாளியான அரண்மனைப் பொற்கொல்லன் ஒற்றைச் சிலம்புடன் வெளியூரான் ஒருவன் போதல் கண்டு, தன்னை மறைத்துக்கொள்ள இதுவே தக்க சூழ்ச்சியெனக் கொண்டு . கோவலனையே திருடனெனச் சாற்றினன். அணிகலன் இழந்த அரசியின் துயர்கண்டு தன்னிலை இழந்துநின்ற அரசன், உடனே அவனைக் கொன்று சிலம்பு கொணருமாறு பணித்தான். வழக்கப்படி, முற்றும் ஆரா யாது செய்த இவ்வோராச் செயலின் பயனுகப் பேரிடர் வந்துற்றது. இறந்த வணிகன் மனைவி, நிகழ்ந்ததைக் கேள்வியுற்று, மற்றத் துணைச் சிலம்பைக் கைக்கொண்டு பாண்டியன் அரண்மனைக்குச் சென்று நிகழ்ந்த அநீதியை அரசன் அறியச்செய்தாள். தான் செய்த பெரும் பிழை யையும் அநீதியையும் கண்டுகொண்ட அரசன், மதுரைப் பாண்டிய குல மன்னர் புகழ் தன் அநீதியால் குறை பெற்றதே என மாழ்கி மனமுறிவுற்று மாண்டான். அவன் மனைவியும் அவனுடன் மடிந்தாள். ஆற்ரெணுத் துய ருடன் வணிகன் மனைவி மதுரைத் தெருக்களில் நடந்து, நகரத் தேவதையின் கோயிலடைந்தாள். தேவி அவள்முன் தோன்றி, நடந்த யாவும் முற்பிறப்பில் அவரவர் வினைப் பயனுல் நேர்ந்தன என்றும், கண்ணகி மனித யாக்கை யுடனே இனிக் கணவனை யடைய முடியாவிடினும் பதினன்காம் நாள் அவன் ஆவியுடன் சேர்வாள் என்றும் விளக்கினுள். வணிகன் மனைவியும் தேவி காட்டிய வழி யைப் பின்பற்றி நகரின் மேற்கோபுரவாயில் கடந்து, வையைக்கரை வழி நடந்து மேற்கு மலைத்தொடரையும் தாண்டினுள். பின்பு குறிப்பிட்ட நாளில், தத்தம் வழக்கமான தொழிலில் ஈடுபட்டு நின்ற குன்றக் குறவர்கள் காண, அவள் தேவ னெருவனுல் விண்ணுலகுக்குக் கொண்டு செல்லப்பட்டாள். அச்சமயம் பொழுதுபோக்காக மலைவளம் காணச் சென்ற சேரனிடம் குன்றவர் இக் காணற்கு அரும் காட்சியைத்

தெரிவித்தனர். இவ்வியத்தகு நிகழ்ச்சியைச் செவியுற்ற அரசன் அரசியுடன் கலந்து இக்கற்புடை மங்கையின் பெயரால் சிலை யெடுப்பித்துக் கோயில் கட்டி வழிபாடு செய்விக்க உறுதி கொண்டான். முதற்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தின் கதை இங்கே முடிவுறுகிறது. இவ் வியத்தகு கதையின் நிகழ்ச்சிகளுக்கு இயக்கும் காரண மாய் அமைந்த சிலம்பை ஒட்டி அது 'சிலப்பதிகாரம்' எனப் பெயர் பெற்றது. இனிக் கோவலன் காவிரிப்பூம் பட்டினத்தை விட்டகன்ற செய்தி கேட்டுத் தன் காதலன் மனத்துட்கொண்ட குற்றத்திற்குச் சிறிதும் பாத்திரமாகாத தூய உள்ளத்தினளாகிய மாதவி, தன் தாயின் துயரத்தை யும் பொருட்படுத்தாது தன் தொழில் துறக்கத் துணிந்தாள். அவளது அழகுமிக்க புதல்வி மணிமேகலையும் அப்போதே வயதறிந்த நிலையிலுள்ளவ ளாயினும், தாயிணக்கம் பெற்று அவ்வாழ்வு துறந்து பௌத்த பிக்ஷுணியாகத் துணிந் தாள். ஆடல் நங்கையின் அழகுமிக்க இக் கன்னியின் வரலாறே மணிமேகலைக் காப்பியத்தின் நூற்பொருளாகும். சிலப்பதிகாரம் மனித வாழ்க்கையின் நோக்கங்களுள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும், அஃதா வது ஒழுக்க நெறி நிற்றலாகிய தருமம், பொருளீட்டலாகிய அர்த்தம், அதன்வழி நேரிய இன்பந் துய்த்தலாகிய காமம் ஆகியவற்றைப் பற்றிக் கூறுவதாகும். இவை யனைத்துமே சிலப்பதிகாரம் என்னும் பெயருடைய காவியத்திற் பரந்து காணப்படும் பொருள்கள். இளமை வாய்ந்த ஆடல் நங்கை யாகிய மணிமேகலை தன் வாழ்க்கையின் முதற்படியிலேயே துறவை மேற்கொண்டது மனித வாழ்வின் நான்காம் நோக்கமாகிய துறவு அல்லது மோக்ஷ உபாயத்தைக் குறிப்பதாகும். இரண்டு காப்பியங்களும் ஒன்று சேர்ந் தால், தாயும் மகளும் வாழ்ந்த வாழ்வின் வரலாறாதலின் இரண்டும் ஒரு காப்பியமே ஆகும். தமிழ் இலக்கிய முறைப்படி காப்பியம் என்பது தலைவன் வாழ்க்கை யையோ தலைவி வாழ்க்கையையோ வாழ்க்கையின் புரு

ஷார்த்தங்கள் என்று கூறப்படும் நாற்பொருள்களின் பரப்புகளினூடாகக் கொண்டு செலுத்தவேண்டும். சிலப்பதிகாரத்திற் கண்ட கதையின் முதற்பகுதி நூலில் வெளிப்படையாகக் கூறப்பட்டபடியே முடியுடை மூவரசரையும் தழுவிய கதை யாதலின் இறுதியில் சேரனையும் அவன் நாட்டையும் நகரத்தையும் பற்றிக் கூறுகிறது. இரண்டாம் காப்பியமும் கதையின் சில பகுதிகளில் சேர நாட்டைப் பற்றிக் கூறுகிறது. இவ் விவரங்களை எல்லாம் திரட்டி அவற்றிலிருந்து உய்த்துணரப்படும் நிலஇயல் - வரலாற்றியல் உண்மைகளைத் தொகுத்து ஆராய்வோம்.

## சிலப்பதிகாரத்தின்படி கண்ணகி மதுரையிலிருந்து வஞ்சி நோக்கிச் செய்த பயணம்

சேர நாட்டையும் அதன் தலைநகரையும் பற்றி முதற் காப்பியமாகிய சிலப்பதிகாரம் நமக்குத் தலைமை வாய்ந்த சிறப்புடைய செய்திகளைத் தருகிறது. சேரர் தலைநகர் இன்ன இடத்தில் உள்ளது என்பதை உறுதிசெய்ய இவை பெரிதும் பயன்படத் தக்கவை. ஆங்காங்கு வரும் குறிப்புகள் ஒருபுறம் இருக்க, கதையின் போக்கிலேயே நேரடியாகக் காவிரி கடலொடு கலக்கும் இடத்திலுள்ள சோழர் தலைநகரான புகாரிலிருந்து உறையூர் கடந்து மதுரைக்கும், அங்கிருந்து சேரர் தலைநகராகிய வஞ்சிக்கும் செல்லும் வழியே முற்றிலும் ஒழுங்குபட விரித்துரைக்கப்பட்டிருக்கிறது. இவற்றிலிருந்து அக்காலச் சேரநாட்டின் கிடக்கை, அதன் தலைநகரின் இடம், பெயர் முதலியவற்றைப்பற்றி நாம் திட்டமாக ஏதேனும் உய்த்துணரக்கூடும் என்பதில் ஐயமில்லை. எனவே, சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட இப் பயணப் போக்கை, சிறப்பாக மதுரையிலிருந்து வஞ்சி செல்லும் வழியை நாம் ஒழுங்காக - அதன் சொற்களைக் கூடக் கூடியமட்டும் விடாமல் எடுத்துரைத்தல் வேண்டும். அத்துடன், அங்ஙனம் உரைக்கையில் ஆருமளவும் பிற செய்திகளைக் கொண்டுவராமல் அதன் விவரங்களிலிருந்தே

சேரன் தலைநகர் இவ்விடத்தில் நிலவியது என்பதை நிலை நாட்ட முயலுவோம். கதையில் திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரை போமளவும் எத்தகைய சிறந்த நிகழ்ச்சியுமில்லை. மதுரையில் பயணக் குழுவினருள் கோவலனுக்கு மன்னன் ஆணையால் மரணம் நேர்ந்தது. இப்பெருந்துயர் மீதூரப் பெற்ற கண்ணகி நகரைத் தீ மயமாக்கினாள். நகர்த் தேவதையிடமிருந்து, நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவுமே அவரவர் முன்பிறப்பின் வினைப்பயன் என்றும், ஆகலின் நடந்தவற்றுக்குப் பாண்டிய அரசன் உட்பட யாருமே பொறுப்புடையவர் அல்லர் என்றும் மனித உருவில் இனித்தான் தன் கணவனைக் காண முடியாதென்றும் கேள்வியுற்றபின் அவள் வேறு வகையின்றித் தேவதை கூறியபடி தேவர் குழுவுடன் கணவனைக் காணும்வரை பதினான்கு நாளும் காத்திருக்க இசைந்தாள்; துன்பத்தால் மன அமைதி முற்றிலும் இழந்து, தேவியருளிய ஆறுதலை ஏற்றுப் பதினான்கு நாட்கழித்துக் கணவனைக் காணும்வரை ஓய்வு கொள்ள முடிவு செய்தாள். அவள் நகர் வழியே சென்று துர்க்கை கோவிலின்முன் தான் அணிந்திருந்த சங்கு வளைகளை உடைத்தெறிந்துவிட்டு, "கிழக்கு வாயில் வழியே கணவனுடன் இன்பமாய் வந்தேன்; மறுநாளே மேற்கு வாயில் வழியாகத் தனியே செல்லும் தீவினை அடைந்தேன்" என்று கூறிக்கொண்டு வேதனையால் குழம்பிய மனத்தினளாய்க் கையற்று இராப்பகலாக வையையின் ஒரு கரை வழியாக நடந்து சென்றாள். பெருந் துயரால் தன்வசம் இழந்து சென்ற அவள், மேடுபள்ளம் அறியாது முன்னேறிச் சென்று நெடுவேளுக்கு (சுப்பிர மணியருக்கு) உரிய குன்றமொன்றில் மெல்ல ஏறினாள். அங்கே முழுமையும் பூத்து நிறைந்த வேங்கை ஒன்றின் கீழ்த் தேவி உறுதியளித்தபடி தேவர்கள் கணவனுடன் வருமளவும் துயராறக் காத்திருந்தனள் என்பதை,

"கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென

இரவும் பகலு மயங்கினள் கையற்
றுரவுநீர் வையை யொருகரைக் கொண்டாங்
கவல வென்னு ளவலித் திழிதலின்
மிசைய வென்னுண் மிசைவைத் தேறலிற்
கடல்வயி றுகிழித்து மலைநெஞ்சு பிளந்தாங்
கவுணரைக் கடந்த சுடரிலை நெடுவே
னெடுவேற் குன்ற மடிவைத் தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
தீத்தொழி லாட்டியேன் யானென்று........"

—சிலம்பு–காதை 23 ; வரி. 182—192.

என்னும் அடிகளால் உணரலாம்.

இக்குன்று நூலின் மூலத்தில் கண்டபடி முருகக் கடவுளுக்கு உரிய ஸ்தலம். ஆனால் உரையாசிரியர் அது திருச்செங்கோடு என விளக்கம் கூறினர். இப்பெயருடன் வேறு ஓரிடம் இருப்பதனால் இதன்மூலம் அநாவசியமான ஒரு குழப்ப நிலைமை புதிதாக ஏற்பட்டது. அவ்விடம் சேலம் ஜில்லாவிலுள்ள பெயர்போன ஸ்தலமாகிய திருச்செங்கோடு ஆகும். அங்கும் முற்கூறப்பட்டது போன்ற ஒரு கோயில் உள்ளது. ஆயினும் நல்ல காலமாக இக்கோவில் குன்றின் அடிவாரத்திலேயே உள்ளது என்பதை,

"நிறங்கிள ரருவிப் பறம்பின் றாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழ்"

—சிலம்பு–காதை 24 ; வரிகள் 13—14.

என்னும் அடிகளால் அறியலாம். இதிலிருந்து கண்ணகி வைகையின் பிறப்பிடம்வரை மலையேறி உச்சி சென்று, பின் மறுபுறச் சரிவில் இறங்கி இக்கோவிலிருக்கும் குன்றின் அடிவாரத்துக்குச் சென்றாள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவ்விடத்திலிருந்தும் மற்றோர் ஆறு மேற்கு நோக்கி ஓடியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குன்றவர் பலர் நடந்தவற்றை எல்லாம் கண்ணாரக் கண்டனர். அருமையான இந்நிகழ்ச்சி கண்டு அவர்கள் அதிக ஆச்சரியமும் அச்சமும் கொண்டவர்களாய் இச்செய்தியை

அரசனிடமே அறிவித்தல் இன்றியமையாததெனக் கருதி னர் என்பது தோன்றுகிறது. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் அரசனும் அச்சந்தர்ப்பத்தில் தலைநகரை விட்டு அந்நாட் பொழுதைப் போக்கும்வண்ணம் குன்றின்பக்கம் வந்திருந்தான்.

## சேர மன்னனும் கண்ணகி தெய்விக உருப்பெறுதலும்

இக்காப்பியத்தின் பிற்சேர்க்கைப் பகுதி கூறுவது போல், சேர அரசன் தலைநகரிலிருந்து வெளியேபோய்ப் பொழுது போக்காக ஒரு பகற்காலம் அருகிலுள்ள குன்று களிலும் காடுகளிலும் கழிக்க எண்ணினான். அவன் நாடு 140 யோசனைப் பரப்பளவு உள்ளது.

"ஒருநூற்று நாற்பதி யோசனை விரிந்த"
—சிலம்பு - காதை 25; வரி - 15

அந்நாட்டின் பெரும்பகுதியும் பூஞ்சோலைகளும் விசாலமான ஆற்றோர வெளிகளும், ஒளிமிக்க சிறு தீவங் களும் இளமரக்காக்களும் நிறைந்தது. இத்தகைய சோலை களின் வழியாகச் சிறிது தூரம் சென்றபின், 'திருநெடுமால் தோளிலிருந்து புரளும் மலைபோல் குன்றுகளிலிருந்து வீழ்ந்தோடும் பெரியாற்றின் கரையில் ஒதுக்கப்பட்ட மணல் திடலொன்றில் அவன் இளைப்பாறினான் என்பதை,

"நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
யிடுமண லெக்க ரியைந்தொருங் கிருப்ப"
—சிலம்பு - காதை 25; வரி. 21 - 23

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

அச்சமயம் வஞ்சித்தலைநகரில் அரண்மனை முற்றத்தில் திறைகொணரும் கூட்டத்தார் வருவதுபோலப் பல்வேறு காட்டு விளைபொருள்களும் சுமந்த குன்றவர் மக்கள் அவனை அடுத்து, "தங்கள் வெற்றி பொருந்திய வேற் படை வாழ்க! யாம் தலைமுறை தலைமுறையாக நும் குடிமக்களாய் உள்ளோம்" என்று வாழ்த்து உரைத்தனர். பின் அவர்கள்

குன்றினது சாரலின் அடிவாரத்தில் மரத்தடியில் தாங்கள் கண்ட உருத்தோற்றத்தின் வரலாற்றை எடுத்துரைத்தனர். பின்னும் அவர்கள், "அவள் எந்நாட்டினளோ, யார் மகளோ, அறியோம். அவள் நம் நாட்டினைச் சார்ந்தவள் என்று தோற்றவில்லை. நீவிர் பல ஆயிர ஆண்டு நிலை பெற்று வாழ்வீராக" என்றனர். இக்காட்டுப்புற மக்கள் கூறுவது கேட்டு மன்னன் ஒன்றும் தோன்றாது திகைத்தான். ஆனால்,

"மண்களி நெடுவேன் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கும்"

—சிலம்பு - காதை 25 ; வரி. 64 - 66

எனச் சிலப்பதிகாரம் கூறியவாறு, அச்சமயம் மன்னனுடன் இருந்த அவன் நண்பராகிய தமிழ்க் கவிஞர் சாத்தனார் அக்கதை நடந்தவாறே முழுவதும் உரைத்து முடிவில், "துன்புற்றலைந்த இவ்விரநங்கை தன் நாட்டிற்கே திரும்பிச் செல்லாது உன் நாடுவர எண்ணியமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்" என்றார். துயர் தரும் இக்கதை கேட்டு மன்னன் மனங்கரைந்து, "அந்தோ! உலகாளும் மன்னனாகப் பிறத்தல் மிக்க பொறுப்புடையது. மழை பொய்த்தால் அரசன் அஞ்சவேண்டும். குடிகள் துன்புற்றால் அரசன் அவர்களைவிடத் துன்புறவேண்டும். அரசன் குடிப்பிறந்து குடிமக்களை ஆளும் பொறுப்பை ஏற்று நீதி தவறாது ஆட்சி நடத்துவதென்பது மிகவும் துன்பந்தரும் பொறுப்பே யாகும்" என்று கூறினன் என்பதைக் கீழ்வரும் அடிகளால் உணரலாம்.

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கு நன்குடிப் பிறத்த
லுன்ப மல்லது தொழுதக வில்லென."

—சிலம்பு - காதை 25 ; வரி. - 100-103

அஜாக்கிரதையினல் நீதி தவறியதைப் பொறுத்துவாழ் வதினும் உயிர்விடுவதே நன்றெனத் துணிந்த பாண்டியன் பெருமையைப் பாராட்டிச் சேரன் தன் அருகில் அமர்ந் திருந்த அரசியை நோக்கி, "கணவன் இறந்தபின் பிழைத் திருத்தலை விரும்பாது உயிர்நீத்த பாண்டியன் மனைவி ஒருபாலாகவும், தன் கணவனது குற்றமற்ற தன்மையை நிலைநாட்டும் பொருட்டு வெஞ்சினமும் துயரமும் கொண்டு இங்கே நம் நாட்டுக்கு வந்துசேர்ந்த இவ்வீரப்பெண்மணி ஒருபாலாகவும் கொண்டால், இவ்விருவருள் யாரே உன்னல் உயர்வாக மதிக்கப்படும் தகுதியுடையவர்?" என்று கேட் டான். அதற்கு மறுமொழியாக, "கணவனிறந்த உடன் தானே தன் உயிர்நீத்த மங்கைநல்லாள் மிகுதியும் போற் றற்குரியவளே. ஆயினும், அவள் சுவர்க்கத்தின் உயர் வாழ்வு எய்திவிட்டாள். அவள் இன்பம் அவ்விடம் நிலை பெற்றுவிட்டது. நம் நாட்டை நாடிவந்த இக்கற்புடை நங்கையே நம்மால் சிலை எடுப்பித்து முறைப்படி வணங்கு தற்குரியாள்" எனச் சேர மாதேவி கூறினள் என்பதைக் கீழே வரும் அடிகளால் அறிகிறோம்.

"காதலன் றுன்பங் காணது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்
தத்திற நிற்கநம் மகநாட் டடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென."

—சிலம்பு - காதை 25; வரி. 111 - 114.

அவள் மொழிகேட்ட அரசனும் அதன்படி "ஆவன செய்க" என்று ஆணை பிறப்பித்தான்.

## கண்ணகி மதுரையிலிருந்து சேரநாடு சென்ற வழி

மதுரையில் நிகழ்ந்த துயர்மிக்க வெம்பழிக்குப் பின் கண்ணகி செய்த பயணங் குறித்துச் சிலப்பதிகாரம் கூறும் வரலாறு இதுவாகும். சேரநாடு, அதன் தலைநகர் ஆகிய வற்றின் மெய்யான அமைப்புப் பற்றி இப்பயண விவரங் களிற் காணப்படும் சில குறிப்பிட்ட பகுதிகளை நாம்

கவனிக்கவேண்டும். கண்ணகி மேலைக் கோபுரவாயில் வழியாக மதுரையை விட்டகன்று, அரையுணர்வுடன் வைகையின் ஒரு கரைவழியே பயணம் செய்தாள் என்பதை முதலில் குறிப்பிட்ட அடிகளால் உணர்க. பின் காப்பியத்தில், 'நெடுவேள் குன்றம்' என்று கூறப்பட்டிருக்கும் குன்றேறிச் சென்று, கோவலனுடன் தன்னை இட்டுச் செல்லவந்த தேவதூதர்களின் வரவை எதிர்நோக்கி இருந்தாள். இந்நூல் பெருங்காப்பியம் என்பதனை மனத்தில் வைத்துக் கொள்ளினும் ஆசிரியர் இளங்கோவடிகள் அபிப்பிராயப்படி, வருணனைகளிடையே, கண்ணகி வைகையின் ஒரு கரைவழிச் சென்று நெடுவேள்குன்றம் என்னும் பெயரை உடைய குன்றிற்குச் செல்லும் வழியே போய் அதன்மீதேறி, அவ்விடம் பூ நிறைந்து நின்ற ஒரு வேங்கை மரத்தடியில் தங்கினள் என்று தெளிவாக வுணரலாகும். இங்கு வழங்கும் சொற்கள் அவள் உண்மையில் அக்குன்றில் ஏறிச்சென்றாள் என்றே பொருள்படத் தக்கவை. அடுத்த காதையில் அவள் வந்து தங்கிய மரம் அக்குன்றின் மறுபுறச் சாரலின் அடிவாரத்தில் இருந்ததென்றும் அதிலிருந்து ஓர்யாறு அல்லது ஆறுகள் ஓடின என்றும் (காதை 24; 11-13,14) கூறப்படுவது இதற்குப் பின்னும் ஆதரவு தருவதாகும். அவள் மேற்கு மலைத்தொடரின் கிழக்குப் பகுதியில் ஏறி மறுபுறச் சரிவில் இறங்கி, அக்குன்றின் அடியிலுள்ள மரத்தை அடைந்தாள் என்று தெளிவுபடக் கூறப்பட்டிருக்கிறது. பயணத்தின் பொதுப்போக்கு இதுதான் என்பதை இந்நூலின் முந்தியபகுதி ஒன்று (23-ஆம் காதை) தெளிவாக்குகிறது. இங்கே தார்க்கிகப் பிராமணனை பராசரன் புகாரிலிருந்து அந்நாளில் சேர அரசனைக் காணச் சென்றதாக ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "அவன் இந்நாடு முழுமையும் கடந்து சென்றான். அவன் காடுகளின் வழியாகவும் பயிரிட்ட நிலங்களின் வழியாகவும் கிராமங்களின் வழியாகவும் நடந்து சென்று, ஓங்கியுயர்ந்த மலையத்தின் மீதேறி அதனைக் கடந்து சேரர்

தலைநகரை அடைந்தான்." இளங்கோ அடிகள் கருத்தில் சேரநாடு மேற்கு மலைத்தொடருக்கப்பால் இருந்ததென்பதை இது நன்கு தெளிவுபடுத்தும். பாண்டி நாட்டிலிருந்தும் அதன் தலைநகரிலிருந்தும் சேரநாடு செல்லும் ஒருவன் மேற்கு மலைத்தொடரைக் கடந்து பின்னும் சிறிது தூரம் சென்றே அதனை அடையக்கூடும். இந்நூலில் பின்னால் வரும் மற்றொரு தொடர் இதனைப் பின்னும் வலியுறுத்துவதாகும். துன்பமிக்க இருவேறு சந்தர்ப்பங்களிலும் தம் உயிர்நீத்த இரு பெருமாதர்களிடையேயும் மதுரையரசி இன்பப்பேறு எய்தியவளாய்ச் சுவர்க்கத்தில் நல்ல முறையில் பேணப்படுபவள் என்றும்; ஆனால் தனக்கு நேர்ந்த பேரிடர்க்குப்பின் தன் நாடு செல்வதற்கு மாறாக நம் சொந்த நாடாகிய சேர நாட்டிற்கு வந்த கண்ணகியிடமே நாம் கடப்பாடுடையோம் என்றும் சேர அரசி கூறும்போது 'நம் சொந்த நாடு' என்ற கருத்தை 'நம் அகநாடு' என்று குறிக்கிறாள். இதனை 'நம் நாட்டின் உட்பகுதி' என்ற பொருளில் கொள்ளக்கூடும். அல்லது பேசுபவர் கருத்தை நோக்கினால், 'நம் தாயக நாடு' என்று கூறியதாகவே கொள்ளலாகும். இங்ஙனம் சிலப்பதிகாரத்தைப் பற்றியமட்டில் சேரநாடென்பது மேற்குமலைத் தொடருக்கு அப்பாலும் மேல் கடற்கரை நெடுகிலும்தான் இருப்பதாகக் கொள்ளப்பட வேண்டும் என்பது முற்றிலும் தெளிவாகும்.

## சேர நாட்டுக்கு அப்பால் செங்குட்டுவன் வென்ற இடங்கள்

சிலப்பதிகார ஆராய்ச்சியால் ஏற்படும் இம்முடிவு, மேற்கு மலைத்தொடர்களுக்கு இப்பால், அதாவது, கிழக்குப் பகுதியில் செங்குட்டுவன் அடைந்த வெற்றிகளை விலக்குவதாகக் கொள்ளப்படக்கூடாது. நேர்மாறாக, சிலப்பதிகார ஆசிரியரின் உடன்பிறந்தானான செங்குட்டுவன், அவன் முன்னோர்கள் ஆகிய சேரர்கள் கொங்கு நாடும் அதனையடுத்த நிலப்பகுதிகளும் உட்படப் பரந்த பல இடங்களையும்

வென்றதற்கும், உண்மையில் கிழக்குக் கடற்கரை வரையிலும் வென்றடக்கியதற்கும், சிலப்பதிகாரத்தின் குறிப்புகளே சான்று பகர்கின்றன. இவ்வகையில் சேரர் வெற்றிகளைக் குறித்துப் பல செய்திகளைக் கூறும் சங்க நூல்களை ஆராயுமிடத்தில் இவற்றை நாம் விரிவாகச் சோதனை செய்வோம். இங்கே நாம் கூறப்புகுவதெல்லாம், சேரர் தலைநகரின் இடத்தை உறுதிசெய்யும் வகையில் சிறப்புவாய்ந்த கொங்கு நாடு உட்படச் சேரர் தாயகநாட்டுக்கப்பால் சேரர் அடைந்த பல வெற்றிகளைப் பற்றிச் சிலப்பதிகாரமே கூறுகின்றது என்பதே ஆகும். அவற்றுள் இவ்விடத்துக்குத் தெளிவாக ஏற்புடையவை, சிலப்பதிகாரம் இரண்டிடங்களில் கூறும் கூற்றுகளே ஆகும். அவை சேரன் தன்னை ஒத்த இரண்டரசர்களையும் கொங்கர் செங்களத்தில் வென்று கீழடக்கினன் என்று கூறுவதுடன், சிறப்பாகப் புலிக்கொடியுடைய (சோழர்) நாட்டையும் மீன் கொடியையுடைய (பாண்டிய) நாட்டையும் வென்றதாகவும் கூறுகின்றன.

> "நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
> கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
> பகைப்புறத்துத் தந்தன ராயினு மாங்கவை
> திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன
> கொங்கர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
> பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
> வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
> கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது"
>
> —சிலம்பு - காதை 25; வரி. 152 - 159

எனவரும் அடிகளால் அவன் ஆட்சியைச் சிரமேற்கொண்டவர்களிடையே கொங்கு, கலிங்கம், கருநடம் (கர்நாடகம்) வங்கம், கங்கைநாடு ஆகியவற்றின் மக்களும் கட்டி என்ற தலைவன் குடிகளும் வடநாட்டாரியரும் கூறப்படுகின்றனர் என்பதை உணரலாம். இந்தப் பட்டியலே முற்றிலும் மற்றோரிடத்தில் மீட்டும் கூறப்படுகிறது. மேலும் சங்க நூல்களில் அவன் தன் தந்தையாரைப் பற்றிக்

குறிப்பிடப்படுவது போலவே ஏழு அரசர் மணிமுடிகளை மாலையாக அணிந்தான் என்று குறிக்கப்படுகிறான். இதிலிருந்து அவன் இரண்டு அரசர்களுடன் வேறு ஐந்து குறுநில மன்னர்களையோ அல்லது ஏழு குறுநில மன்னர்களையோ வென்றடக்கியவன் என்று கொள்ளலாகும். அவ்வெற்றிகட்கு அறிகுறியாகவே அவன் ஏழு மணிமுடிகளை மாலையாக அணிந்திருக்க வேண்டும். மற்றும் தெய்வ உருவடைந்த கண்ணகியாகிய பத்தினி தேவிக்குத் தத்தம் தலைநகர்களில் கோவில் கட்ட இணக்கம் கேட்ட மன்னர்களுள் குடகொங்கரும் குறிப்பிடப்படுகின்றனர். குடகொங்கர் என்ற தொடரைக் குடகரும் (குடகு நாட்டினரும்) கொங்கரும் என்றோ, கொங்கர் என்றோ அல்லது மேலைக் கொங்கர் என்ற அளவிலோ கொள்ளலாகும். இவற்றுள் பிந்திய பொருளே தக்கதாகக் காண்கிறது. ஏனெனில், மற்றோரிடத்தில் குடகர் தனியாகக் குறிப்பிடப்பட்டபின், கொங்கு மன்னர் கொங்கிளங்கோசர் என்று குறிக்கப்படுகின்றனர். பெரும்பாலும் இக்காரணங் கொண்டே, கண்ணகி தன் நாட்டிற்கு வந்ததாகக் குறிப்பிடும் அரசி, அவள் சேரர் 'அகநாட்டிற்'கு வந்தாள் எனக் கூறியிருக்க வேண்டும். எனவே, சேரன்-செங்குட்டுவன் தன் வெற்றிகளின் பயனாகவும் தன் முன்னோர்கள் வெற்றிகளின் பயனாகவும் தன் நாடு மட்டுமன்றிக் கொங்கு நாடு என்று கூறப்படும் நாடும் கட்டாயம் உட்படப் பாண்டியர்-சோழர் நாடுகளின் எல்லைவரை யுள்ள நாடுகளை ஆண்டான் என்பதைச் சிலப்பதிகாரம் முழுமையாக ஒத்துக்கொள்கிறது. ஆயினும், கொங்கு நாடு குறிப்பிடப்படும் இடங்களில் எல்லாம் அஃது அச்சமயம் சேரர் ஆட்சிக்குட்பட்டதாகக் கூறப்பட்டாலும் அரசியல் முறையில் தனி நாடாகவே குறிக்கப்படுகிறது. ஆக, முடிவாக நாம் காண்பதாவது, சிலப்பதிகாரத்தின்படி சேரநாடு என்பது பண்டைய கிரேக்க நில நூல் வல்லார் குறிப்பிடுவது போன்று கரையோரப் பகுதியே என்பதும், பல்வேறு சிறு மன்னரைச்

சார்ந்த அயல்நாடுகளும் அவற்றுள் தலைமையுடையதாகக் கொங்கு நாடும் செங்குட்டுவன். கீழ்ச் சேரர் ஆட்சியிலிருந்த போதிலும், தலைநகர் மேல் கரையோரத்தை ஒட்டியே இருந்தது என்பதுமாகும்.

**தலைநகர் - கரையோரப் பகுதியிலுள்ள வஞ்சி அல்லது கருரே அன்றிக் கொங்கு நாட்டுக் கருர் அன்று.**

இனிச் சேரநாட்டுத் தலைநகரைக் கவனிப்போம்: பழைய கிரேக்க நில நூல் வல்லாருள் ப்ளினியே மற்றவர்களைவிடத் தெளிவாகப் பெரியாறு கடலோடு கலக்கும் இடத்திற்கு அருகிலிருக்கும் முஸிரிஸே அவர்கள் தலைநகரம் என்று கூறுகிறார். தாலமி இதனை ஒருவாறு நேரடியாகவே வலியுறுத்துகிறார்; ஆயினும் கருர் என்ற ஓரிடத்தையும் சேரர் தலைநகர் என்று கொள்ளுகிறார். கடலுக்கருகில் அல்லாவது கடலிலிருந்து சற்றே விலகியிருக்கும் முஸிரிஸை ஒத்த கடலோர நகரங்களைப் போலல்லாமல் இந்தக் கருர் சேரநாட்டின் உள்நாட்டுப் பகுதியிலேயே இருந்தது என்று கூறப்படுகிறது. ஆயினும், அவர் வாசகப்போக்கை நோக்க, அது சேரநாட்டுக்கு வெகு தொலை வெளியில் கொங்கு நாட்டிலோ, கிழக்குக்கரைப் பகுதியிலோ இருந்ததென எண்ணுவதற்கு இடமேற்படவில்லை. தாலமியின் நில நூலுடன் சேரத் தரப்படும் நாட்டுப்படமும் இந்நிலையை வலியுறுத்துவதாக இல்லை. அதோடு பியூட்டிங்கர்ப் பட்டியல்களில் தரப்பட்ட நேர்கோட்டு நிரைகோட்டு அளவுகளும் இங்குக் குறிப்பிடப்பட்ட கருர், முஸிரிஸைப்போல் அல்லாது கரையிலிருந்து சற்று அதிகமான தூரம் உள் நாட்டில் தள்ளியிருந்தது என்று எண்ண இடந்தருகிறதே அன்றி, மேற்குமலைத் தொடரையும் கடந்து நெடுந்தூரத்திலிருந்தது என்று கூறுவதற்கு இடந்தரவில்லை. இக்கருர் எப்படியும் அப்பெயரால் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படவேயில்லை. உரையாசிரியர் இரண்டிடங்களில் மட்டுமே வஞ்சியைக் கருருடன் ஒன்றுபடுத்துகிறார். மூலத்தில் தலை

நகரைக் குறிப்பிடும் போதெல்லாம் கூறப்படும் பெயர் வஞ்சியே; கரூர் அன்று. ஆயினும், இதனால் உரையாசிரியர்கள்மீது அறியாமைக் குற்றமோ, வேண்டுமென்றே புரட்டிய குற்றமோ சுமத்தவேண்டிய அவசியமில்லை. வஞ்சியைச் சுற்றிலும் எத்தனையோ கரூர்கள் இருந்திருக்கின்றன. அவை சேரர் தலைநகருக்கு உட்பட்ட பகுதிகளாகவே இருந்திருக்கலாம். ப்ளினியின் தெளிவான கூற்று ஒன்று இக்கோட்பாட்டை ஆதரிக்கிறது.

### சேரநாடு - தமிழ் இந்தியாவின் மேற்பகுதி.

சிலப்பதிகார நூலின் தொடக்கத்திலேயே ஆசிரியர் இளங்கோ அடிகளைப் பற்றிய பாயிரத்தில் இளங்கோ அடிகள் 'குடக்கோச் சேரன் தம்பியார்' என்று குறிப்பிடப் படுகிறார் என்பதை,

> "குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
> குடக்கோச் சேர லிளங்கோ வடிகள்."
>
> —சிலம்பு-பதிகம். ii. 1-2

என்னும் அடிகளால் உணரலாம். இதிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பழைய நம்பிக்கையின்படி சேரன் தென்னாட்டரசர்களில் மேலை நாட்டின் தலைவன் என்பது ஏற்படுகிறது. இரண்டாவதாக,

> "வில்லெழுதிய விமயத்தொடு
> கொல்லி யாண்ட குடவர் கோவே"
>
> —சிலம்பு-காதை 24; கடைசி 2 அடிகள்.

என்னும் அடிகளால், சேர அரசன் இமயமலையின்மீதும் தெற்கே கொல்லிமலைமீதும் ஒன்றுபோல ஆணை செலுத்திய "குடவர் கோ" என்று கூறப்படுகிறான். பின்னும் மூன்றாவதொரு பகுதி 'குடக்கோக் குட்டுவன் வெல்க' (காதை 26; அடிகள் 61-62) என்றும்,

> "...............................கோவலன் மனைவி
> குடவர் கோவே நின்னொடு புகுந்து"
>
> —சிலம்பு-காதை 27; வரி. 63-64

என்னும் பகுதியால், குடவர்கோ என்றும் அவன் குறிக்கப்படுகிறான்; மேலும்,

"குடதிசை யாளும் கொற்ற வேந்தன்"
—காதை 27; வரி. 197

"குடவர் கோமான் வந்தா னாளை"
—காதை 27; வரி. 227

என்னும் வரிகளில்குடவர்கோமான் என்றும் குறிக்கப்படுகிறான்.

"குடதிசை வாழும் கொற்றவற் களித்து"
—சிலப்பு-காதை 28; வரி. 217

"முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
குடதிசை யாளும் கொற்றம் குன்றா
வார மார்பிற் சேரகுலம்"
—சிலம்பு-பக். 592

என்னும் வரிகளில் 'ஆளுதற்குவந்து குடதிசை வாழ்ந்தான்' என்றும், 'வெற்றி மாறாத குடதிசை ஆளும் அரசன்' என்றும் அவன் குறிக்கப்படுகிறான். இக்காப்பியத்தில் அங்கங்கே சிதறிக் காணப்படும் இப் பகுதிகள் அனைத்திலுமே சேரன் மேற்றிசையை ஆளுபவன் என்பது சொல்லப் படுகிறது. இதனால், அவன் தமிழ் இந்தியாவின் மேற்குப் பகுதியை ஆண்டான் என்பதே கருத்தாகும் அன்றோ? எனவே, வரலாற்றின் பிற்பகுதியில் சேரர் மேற்கு மலைத் தொடருக்கு இப்பாலுள்ள நாடுகளை வென்றடக்கியிருந்தன ராயினும், அவர்கள் வரன்முறையாக ஆண்ட பழம்பகுதி மேற்குக் கடற்கரையே என்பது பெறப்படும். 33-ஆம் காதையிலுள்ள மற்றோர் இடம் இதனைத் தெளிவாக்கும். புகாரைச் சார்ந்த பார்ப்பனப் புலவன் ஒருவன் வள்ளன் மைக்குப் பெயர்போன சேர அரசன் ஒருவனைக் காணச் சென்றான். அவன் காட்டுப் பகுதிகளையும் மக்கள் உறையும் நாடுகளையும் பல நகரங்களையும் கடந்து நெடுந் தொலைக்கப்பால் ஓங்கி உயர்ந்த மலைய மலையையும் தாண்டி, (ஆசிரியர் தெளிவாகக் கூறுகிறபடி) அது பின்பட நடந்து

சென்று, பின்னரே சேரர் தலைநகர் சென்று சேர்ந்தான் என்பது,

" பூம்புனற் பழனப் புகார்நகர் வேந்தன்
றாங்கா விளையு ணன்று டதனுள்
வலவைப் பார்ப்பான் பராசர னென்போன்
குலவுவேற் சேரன் கொடைத்திறங் கேட்டு
வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேற் சேரலற் காண்கெனக்
காடு நாடு மூரும் போகி
நீடுநிலை மலையம் பிற்படச் சென்று "

—சிலம்பு-காதை 23; வரி. 59–66

எனவரும் அடிகளால் பெறப்படுகின்றது.பிறிதோரிடத்தில், செங்குட்டுவன் நீலகிரி மலையின் அடிவாரத்தில் தங்கியிருக்கும்போது முனிவர்கள் சிலர் அவன்முன் தோன்றி அவனை ஆசீர்வதித்தனர். அதன் பின் அவர்கள் அவனை நோக்கி, " நீ வடபுலப் படையெழுச்சியின்போது அங்கே அமைதியான தொழிலில் ஈடுபட்டிருக்கும் அந்தணரைக் கண்டு அவர்களை நன்கு பாதுகாக்குமாறு வேண்டுகிறோம்" என்று கூறுகின்றனர். இதனை,

" செஞ்சடை வானவ னருளினால் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்
மலையத் தேகுதும் வான்பே ரிமய
நிலையத் தேகுத னின்கருத் தாகவி
னருமறை யந்தண ராங்குளர் வாழ்வோர்
பெருநில மன்ன காத்தனின் கடனென்று "

—சிலம்பு-காதை 26; வரி. 98-103

என்னும் அடிகளால் உணரலாம். அத்துடன் அவர்கள் தாமும் மலைய நாட்டிற்கே செல்வதாகக் கூறுகின்றனர். அப்போதும் அவர்கள் மேலும் மேற்கு நோக்கியே செல்லப்போவதாகவே குறிக்கப்படுகிறது. 25-ஆம் காதையின் மற்றோர் இடத்தில், 'பாண்டியன் இறந்ததும் தானே அவனுடன் இறந்த பாண்டிய அரசி உயர் தகுதியுடையவளா? அல்லது வருந்தத்தக்க சூழ்நிலைகளிடையே

கணவனை இழந்த பின் அவனுடன் இறுதியாக ஒன்றுபடு முன் அவன் குற்றமற்ற தன்மையை நிலைநாட்டுவதற்காக உயிர் தரித்திருந்த மகள் உயர்தகுதியுடையவளா?' என்று தன் கணவன் கேட்ட கேள்விக்குப் பதிலாகச் சேரன் அரசி, 'கண்ணகியே கோயிலெடுப்பித்து வணங்குதற் குரியாள்'' எனப் பேசும்போது, அவள் கூறுவதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். "கற்புத் தெய்வமாகிய அப் பத்தினி நம் அகநாட்டிற்கு (இன்னும் தெளிவாகக் கூறுவதானல், நம் தாய்நாட்டிற்கு) வந்தவள்; நம்பால் வழிபாடு பெறுதற்கு உரியவள்'' என்பவை அவள் சொற்கள். சரித்திர காலத்தின் வாழ்வு தாழ்வுகளிடையே அவர்கள் 'அவ்வக்காலங்களில் எப்பகுதிகளை ஆண்டிருந்தபோதிலும் **சேரர் தாயகம் கடற்கரைப் பகுதியே** என்பதை இது தெள்ளத் தெளியக் காட்டுகிறதென்று கூறலாம். இவ்விஷயத்தில் சிலப்பதிகாரம் பண்டைய கிரேக்க நிலநூல் வல்லார் கூற்றுகளை உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது.

**சேரர் தலைநகராகிய வஞ்சி மேற்குக்கரைப் பக்கமே இருந்தது.**

இனிப் பெரிதும் வாதுக்கு இடமாயிருந்துவரும் சேரர் தலைநகரத்தைப் பற்றிய பிரச்னைக்கு வருவோம். சிலப்பதிகாரம் என்னும் இக்காப்பியம் இத் தலைநகரை எங்கும் 'வஞ்சி' என்று குறிப்பிடுகிறதேயன்றி மாற்றுப்பெயராகக் கூடக் கரூர் என்ற பெயரை யாண்டும் வழங்கவில்லை என்று மேலே பொதுப்படக் கூறியிருக்கிறோம். பழைய உரைகாரர் குறைந்தது இரண்டிடங்களிலேனும் 'கரூர்' என்பதை வஞ்சியின் மறுபெயராகக் கூறியிருக்கிறார். இதிலிருந்து இளங்கோவடிகளால் இத்தலைநகர் 'வஞ்சி' என்ற பெயராலேயே அறியப்பட்டிருந்தது என்றும், ஆயின், உரைகாரர் காலத்தில் 'கரூர்' என்ற பெயராலேயே அஃது எளிதில் உணரப்படுவதாயிருந்தது என்றும் நாம் எண்ண இடம் உண்டாகிறது. இஃது எங்ஙனமாயினும், அது 'வஞ்சி' என்ற பெயராலேயே பெரிதும் உணரப்பட்டு வந்தது.

வஞ்சி என்ற பெயர் இந்நூலின் பல பகுதிகளிலும் வந்திருப்பதுடன் இடத்தை அடையாளம் அறியும் வகையில் வழங்கப்பட்டும் இருக்கிறது. பாயிரத்திலுள்ள வாசகங்கள் வஞ்சியின் கீழ்வாயிலிலுள்ள கோயில் அல்லது மண்டபம் என்று பொருள்படும் குணவாயிற் கோட்டம்பற்றிக் குறிப்பிடுகிறது. ஆனல் இஃது இட அமைப்பை வரையறுக்கப் போதியதன்று.

> " முந்நீரி னுட்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
> மன்னர்க்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன் "
>
> —சிலம்பு-காதை 17; பக். 448

என்னும் பகுதி கடலில் சிலதூரம் சென்றபின் காணும் கடம்பு மரத்தின் அழிவுபற்றிக் குறிக்கிறது. இவ்வெற்றி கண்ட அரசன் வளமோங்கும் வஞ்சியில் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

> " அளந்துகடை யறியா அருங்கலஞ் சுமந்து
> வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றத்து "
>
> —சிலம்பு-காதை 25; வரி 34-35

என்னும் பகுதியில் வளமிக்க வஞ்சி குறிப்பிடப்படுகிறது. படையெழுச்சி கொண்ட செங்குட்டுவன் வஞ்சி நகரின் பொன் மதிலின் புறத்தில் படையெழுச்சிக்குரிய சின்னமாகிய வஞ்சி சூடிப் போர்க்கு எழுந்ததாக,

> " பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்
> வாய்வாள் மாலை வஞ்சிசூ டுதுமென "
>
> —சிலம்பு-காதை 25; வரி. 148-49

என்னும் இவ்வடிகள் குறிக்கின்றன. அதன்பின் 174-ஆம் வரியில், ' நன்கு காவல் செய்யப்பட்ட வஞ்சி ' என்றும், 180-ஆம் வரியில், ' மங்காத அதாவது குறையாத சீருடைய வஞ்சி.' என்றும் குறிப்புகள் வருகின்றன. அடுத்த காதையில் அதுபோன்றே ' பூவா வஞ்சி ' குறிப்பிடப்படுகிறது. அதே காதை 98 முதல் 100 வரையுள்ள அடிகள் ' மன்னன் சிவபிரானருளால் வஞ்சியில் பிறந்தான் ' என்று கூறுகின்றன. காதை 28, வரி 4 பழைமை மிக்க

வஞ்சி பற்றிக் குறிப்பிடுகிறது. மன்னன் ஆன்பொருநை யாற்றின் வெள்ளத்தாற் சூழப்பட்ட வஞ்சிநகர் மக்களை ஆள்பவன் என்பதை,

"வாழியரோ வாழி வருபுனனீ ரான்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் றொல்குலமே"

—சிலம்பு-பக். 578

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. மன்னன் தன் சேனையுடனும் பரிவாரங்களுடனும் தேவருலகத்து இறைவனாகிய இந்திரனையே போன்று நுரைதரு பெருங் கடற்கரை வழியாகக் குன்றுகளின் புறமேறித் தானைகளின் பாரத்தினால் மலைநாடு முற்றிலும் அதிரும்படி நாட்டியக் குதிரைகளும் நெடுந்தேர்களும் அடங்கிய படையை நடத்திச் சென்று நீலகிரியின் பக்கத்தில் படைவீடமைத்துத் தங்கினான் என்னும் கருத்தை நமக்கு உணர்த்தும்.

"தானவர் தம்மேற் றம்பதி நீங்கும்
வானவன் போல வஞ்சி நீங்கித்
தண்டத் தலைவருந் தலைத்தார்ச் சேனையும்
வெண்டலைப் புணரியின் விளிம்புசூழ் போத
மலைமுதுகு நெளிய நிலைநா டதர்பட
வுலக மன்னவ னொருங்குடன் சென்றங்
காலும் புரவி யணித்தேர்த் தானையொடு
நீல கிரியி னெடும்புறத் திறுத்தாங்கு"

—சிலம்பு-காதை 25; வரி. 78-85

என்ற பகுதி, மேற்கூறியவை அனைத்தையும் விட நாம் எடுத்துக்கொண்ட விசாரணையை உறுதி செய்ய உதவும் சிறந்த பகுதியாகும். காப்பிய ஆசிரியர் இவ்விடத்தில் சேனையின் பேரளவை நம் மனத்தில் பதியவைக்க முயல்கிறார்; அத்துடன் படைகள் தம் பயணத்தில் மேற்கொண்ட வழியைப் பற்றியும் தெளிவான விவரங்கள் கூறுகிறார். அவர்கள் வஞ்சியை விட்டுப் புறப்பட்டு, மேல் கடற்கரை வழியாகச் சென்று பின் குன்றுகளின் பக்கமாகத் திரும்பி, நாட்டுப் பகுதி முற்றிலும் தாண்டி மலைப் பகுதிகளின் வழியாகச் சென்று நீலகிரியின்பக்கம் படைவீடு அமைத்

தார்கள். இவ்வர்ணனே, வஞ்சி—சேரநாட்டில் மேற்குமலைத் தொடருக்கு • மேற்கில் கடற்கரையை அடுத்து இருந்தது என்பதை உறுதிப்படுத்துவதாகும். ஏனெனில், நீலகிரியி லுள்ள படைவீடு சென்று அடையச் சேனைகள் மலைநாட் டையே கடந்து செல்லவும் மேற்குமலைத் தொடரைச் சார்ந்த குன்றுகளின் வழியாகச் செல்லவும் நேர்ந்ததாதலின் என்க.

**வஞ்சியருகே பாய்ந்த ஆறு ஆன்பொருநை அல்லது பேரியாறு.**

வஞ்சியுடன் தொடர்புடையதாகச் சொல்லப்படும் ஆறு சில இடங்களில் ஆன் பொருநை என்றும், சில இடங் களில் 'ஆன் பொருந்தம்' என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்த ஆறே சேரநாட்டின் தலைசிறந்த ஆறென்பதனைச் சிலப்பதிகாரத்தில் ஐந்திடங்களில் அப்பெயர் வருவ தொன்றே விளக்கும். முதன் முதலாக அப்பெயர்,

"பூந்தண் பொருநைப் பொறையன் வாழி
மாந்தரஞ் சேரன் மன்னவன் வாழ்கென"

—சிலம்பு-காதை 23; வரி. 84-85

என்னும் அடிகளில், 'பொறையன் பொருநை' என்பது குறிக்கப்படுகிறது. பொறையன் என்பது சேரர் பெயர்களில் ஒன்று. இவ்யாற்றின் பெயருடன் சேரன் பெயர் இணைத்துக் கூறப்படுவது, நாட்டு வாழ்வுடன் அவ் யாற்றின் தொடர்பு தனிச்சிறப்பும் முதன்மையும் உடை யதா யிருக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறதன்றோ? அடுத்த குறிப்பு, 'ஆன் பொருநை' என்ற வடிவுடன் வரு கிறது. மன்னன் வடபுலப் படையெழுச்சியிலிருந்து மீண்டும் வஞ்சிக்கருகில் வரும்போது அவ்யாற்றில் குளித் துக்கொண்டிருந்தவர்களை அவன் சந்தித்ததாக,

"தண்ணான் பொருநை யாடுந ரிட்ட
வண்ணமுஞ் சுண்ணமு மலரும் பரந்து
விண்ணுறை விற்போல் விளங்கிய பெருந்துறை
.................. .................. .................. ..................

வில்லவன் வந்தான் வியன்பே ரிமயத்துப்
பல்லா விரையொடு படர்குவிர் நீரென "
—சிலம்பு-காதை 27; வரி. 231-239

என்னும் அடிகள் குறிக்கின்றன. மற்றோரிடத்தில்,

" மண்ணாள் வேந்தே நின்வா ணாட்க
டண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க."
—சிலம்பு-காதை 28; வரி. 125-126

என்னும் அடிகளால், 'ஆன்பொருநை யாற்றின் மணலினும் நின் வாழ்நாள் மிகுதி யாகுக' என்று சேரன் வாழ்த்தப் பெறுகிறான். இறுதியாய் வரும் விவரம் டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பில் 578-ஆம் பக்கத்தில் உள்ளது. இங்கே, 'சேர அரசக் குடியினர் வாழ்வாராக' என்று குறிப்பிடும் இடத்தில், 'சேரன் வஞ்சியார் கோமான்' என்று கூறப்படுவதுடன் அவ்வஞ்சிக்கு அடையாக, 'ஆன் பொருநை ஆற்றுநீர் சூழ்ந்த வஞ்சி' என்ற தொடரும் காணப்படுகிறது. இதிலிருந்து ஆன் பொருநை என்ற பெயருடன் கூறப்படும் இப்பொருநை ஆறு சேரர் தலை நகராகிய வஞ்சியைச் சுற்றி ஓடிற்று என்பது ஏற்படுகிறது. இக்கடைசிக் குறிப்பிலிருந்து, வஞ்சி இருக்கும் இடத்திலேயே இந்த ஆன்பொருநை அல்லது பொருநையாறு இருக்கவேண்டும் என்பதும், இவ்விரண்டின் கிடக்கையும் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதும் பெறப்படும். மேலே கூறப்பட்டவாறு சேரர் தலைநகராகிய வஞ்சியை நாம் மேற்குக் கரை ஓரத்திலேயே தேடவேண்டும். ஏனெனில், அந்நகரம் கடலுக்கு அருகிலேயே இருந்தது. எனவே, இவ்யாறும் மேற்குக் கரையிலேயே மலையினின்று கரையை நோக்கி ஒழுகுவதா யிருந்திருக்கவேண்டும். இச்சந்தர்ப்பத்தில்,

" முதிர்பூம் பரப்பி னொழுகுபுன லொளித்து
மதுகர ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் போன்று

பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
"யிடுமணை லெக்க ரியைந்தொருங் கிருப்ப."

—சிலம்பு - காதை 25 ; வரி. 19-23

என்னும் மற்றொரு பகுதியை நாம் கவனிக்கவேண்டும். இதனில் சேரன் ஒருநாள் முழுவதும் தன் அரசகாரியங்களிலிருந்து ஓய்வெடுத்துக்கொண்டு குன்றுகளிலும் காடுகளிலும் இன்பமாகப் பொழுதுபோக்கும் எண்ணத்துடன் வஞ்சிநகரைவிட்டு வெளிப்போந்தான் என்பது கூறப்படுகிறது. மற்றும் இதிலேயே, அப்பொழுதுபோக்கின்போது திருமாலின் தோள்களிலிருந்து வண்டு வீழும் மாலைபோல் மலையினின்று விழுந்தோடும் பெரியாற்றின் கரையில் உள்ள மணல் திடலில் அவன் தங்கி இருந்தான் என்பதும் காணப்படுகிறது. இவ்விடத்தில் 'பெரியாறு' என்பது அத்தகைய இயற்பெயரையுடைய ஓர் ஆற்றைக் குறித்தாலும் சரி, அல்லது ஏதோ 'பெரிய ஆறு' என்று குறிப்பிட்டதாகக் கொண்டாலும் சரி; அது, தலைநகரான வஞ்சியின் அருகே ஓடும் ஆற்றைக் குறிக்கின்றது என்பதில் ஐயம் இருக்க இடமில்லை. இவ்யாற்றிற்குப் 'பெரியாறு' என்ற இயற்பெயர் உண்டு என்பதையும் சேரநாட்டில் 'பெரியாறு' என்ற பெயரையுடைய ஆறு இருந்தது என்பதையும் திருவாங்கூர் நாட்டிலேயே இதற்கு அண்மையில் 'சித்தாறு' (அல்லது தமிழில் எழுதப்படும் முறையில் சில்லாறு - சிற்றாறு) என்றொரு ஆறு இருந்திருப்பதே காட்டும். மலைநாடு அல்லது மலை மண்டலத்தில் உள்ள வைணவத் தலங்களுள் ஒன்றானதும்,

8, 10, 4 - ஆம் திருமொழி.

"வார்கடா வருவி யானைமா மலையின்
மருப்பிணைக் குவடிறுத் துருட்டி
ஊர்கொள்திண் பாக னுயிர்செகுத்து அரங்கின்
மல்லரைக் கொன்றுசூழ் பரண்மேல்
போர்கடா வரசர் புறக்கிட மாட
மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த

*சீர்கொள்சிற் றுயன் திருச்செங்குன் றூரில்*
*திருச்சிற்று றெங்கள்செல் சார்பே."*

என நம்மாழ்வாரால் திருவாய்மொழிப் பதிகமொன்றில் பாடப்பட்ட புகழுடையதுமான திருச்செங்குன்றூர்த் திருமால் கோயில் இச்சிற்றாற்றின் கரையிலேயே அமைந்திருக்கிறது. இப்பகுதியில் 'சிற்றாறு' ஒன்றிருப்பது அதனுக்கெதிராகப் 'பெரியாறு' என்று ஒன்று இருக்கவேண்டும் என்பதை நன்கு காட்டுகிறது. அன்றேல், அவ்யாறு 'சிற்றாறு' என்றழைக்கப்பட்டிருத்தல் முடியாது. மேலும் அப்பெரியாற்றில் வந்துவிழும் சிறிய ஆறும் அப்பெரியாறும் ஆகிய இரண்டு ஆறுகளும் மகாவிஷ்ணுவின் அகன்ற தோள்களிலிருந்து புரண்டுவிழும் பெரிய மாலையைப்போல மலையினின்று விழுகின்றன என்ற சிலப்பதிகார வர்ணனை, அந்த இடத்து மக்களுக்கு இன்னும் மிக்க பொருத்தமுடையதாகவே இருந்திருக்க இடமுண்டு. இந்திய நிலப்பரப்புப் பட்டியல்களில் காணப்படும் நாட்டுப் படங்களைப் பார்ப்பவருக்கு இவ்யாறு, சிற்றாற்றுடன் மேற்கூறிய ஒற்றுமையுடையதாக இருப்பது நன்கு தெரியவரும். எனவே, சிலப்பதிகாரத்தைக் கொண்டு நோக்கினல், வஞ்சியுடன் தொடர்புடைய இப்பொருநையாறு பெரியாறே என்பதும், அது தலைநகர் ஆகிய வஞ்சியைச் சுற்றி வளைந்தோடி மேற்குக்கரையில் விழுந்தது என்பதும் பெறப்படும். 23-ஆம் காதையிலுள்ள வர்ணனை இதனை வலியுறுத்துவதாகும். இங்கே வடபுலப் படையெடுப்பிலிருந்து மீண்டுவரும் செங்குட்டுவனை நகரின் அருகில் தத்தம் தொழிலிலீடுபட்டிருந்த பல்வகை மக்களும் தகுந்த முறையிற் சென்று வணங்கினர். அவர்களிடையே ஆன்பொருநை ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தவர்களும் குறிப்பிடப்படுகின்றனர். ஆன்பொருநை வஞ்சிக்கு மிக அருகிலிருந்தது என்றும் அதனை அடுத்துச் சென்றே நகரினுள் நுழைய முடியுமென்றும் இது தெளிவாகக் காட்டுகிறது.

இவ்யாற்றின் பெயராகிய 'பொருநை' என்பது

'பொரு' என்னும் வினைப்பகுதியிலிருந்து பிறந்ததாகும். இதன் பொருள் 'போரிடுதல்' அல்லது 'சென்று மோதுதல்' என்பதாகும். ஆற்றைக் குறிக்கும்போது, அது கரைகளைச் சென்று மோதுவது என்றோ, அல்லது இன்னும் பொதுப்பட்ட வகையில் மண்ணில் மோதி வழிசெய்வதென்றோ பொருள்படக்கூடும். இது பொருத்தமான பொருள் என்பதற்குத் தடையில்லை. பிற்காலத்துப் பிள்ளைப் பெருமாளையங்கார் எழுதிய நூலொன்று காவிரியாறு கரையறுத்துச் செல்லுவதாகக் கூறுவதை,

"கரைபொரு தொழுகுங் காவிரி யாறே
யாற்றிடைக் கிடப்பதோ ரஞ்சன மலையே."

என்னும் அடிகளில் காணலாம். எனவே, 'நிலத்தினூடாக அறுத்துச் சென்று வழி செய்யும் நீர் ஒழுக்கு' என்பதே 'பொருநை' என்பதன் பொதுப்படைப் பொருளாகலாம். தமிழ் நாட்டிலும் தமிழ் இலக்கியத்திலும் இப்பெயரால் சிறக்க வழங்கும் பொருநையாறு திருநெல்வேலி ஜில்லாவின் சிறப்புடை யாறாகிய தாமிரபரணியே யாகும். இது தமிழ் இலக்கியவாணரிடையே 'பொருநை' என வழங்கியதென்பதை,

"பன்மலர் மாலை வேய்ந்து பானுரைப் போர்வை போர்த்துத்
தென்மலைச் சேர்ந்த சாந்த மான்மதச் சேறு பூசிப்
பொன்மணி யாரந் தாங்கிப் பொருநையாங் கன்னி முன்னீர்
தன்மகிழ் கிழவ னாகந் தழீஇக்கொடு கலந்த தன்றே."

எனத் தமிழ்ப் பெருநூலாகிய நைடதத்தின் பாட்டொன்று காட்டுகிறது. பொருநை என்பது பொதுப்பொருளாக ஆற்றையும் சிறப்பாகத் தாமிரபரணியையும் குறிக்கும் என்பது பெறப்படவே, ஆன் பொருநை என்ற தொடர் பொதுப்பெயரிலிருந்தும், சிறப்புப் பெயராகிய பெயர் போன திருநெல்வேலிப் பொருநை யாற்றிலிருந்தும் பிரித்து அறிவதற்காகவே எழுந்ததாகல் வேண்டும் என்று கொள்ளலாம்; 'ஆன்' என்ற பெயர் பொதுவாக மாட்டையும் சிறப்பாக அதன் ஆணாகிய காளையையும் இன்னும்

பொதுப்படையாக விலங்கின் ஆண்பாலையும் குறிக்கும். இப்பொருள் கொண்டு பார்த்தால், ஆன்பொருநை என்பது சாதாரணப் பொருநைக்கு எதிராக 'ஆண் பொருநை' என்றாகும். இதனால், சாதாரணப் பொருநை 'பெண் பொருநை' என்று கொள்ளப்படும். இவ்வகையில் இவற்றைப் பொருள் கொள்ளுவது வடமொழி வழக்கிற்கு ஒத்ததே யாகும். எனெனில், அவ்வழக்குப்படி கிழக்கு நோக்கி ஓடும் ஆறுகள் 'நதிகள்' எனப் பெண்பாலிலும், மேற்கு நோக்கி ஓடும் ஆறுகள் (நருமதை என்ற பெரிய ஆறொன்று நீங்கலாக) 'நதங்கள்' என ஆண்பாலிலுமே வழங்குகின்றன. வடமொழி நிகண்டுகளில் இங்ஙனம் தெளிவுபடக் கூறப்பட்டே யிருக்கிறது. 'ஆன் பொருநை' என்ற பெயர் இவ்வழக்கை ஒட்டியே எழுந்திருக்கலாம். முன் வழக்கில் நன்கு தெரியப்பட்டதாக ஐயமறச் சொல்லக்கூடிய தாமிரபரணியிலிருந்து பிரித்துணர்வதற்காகவே இவ்வழக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். காட்டுப்படத்தை மீண்டும் சற்று உற்றுநோக்கினால், மேற்கு மலைத்தொடரின் கிழக்குச் சரிவிலுள்ள பொருநையின் பிறப்பிடமும் அதன் மேல் கரையில் (இன்னும் விளக்கமாகத் தெரியவராதிருக்கும்) பெரியாற்றின் பிறப்பிடமும் தொலைதூரத்திலில்லை என்பதைக் காணலாம். பக்கத்துக்குப் பக்கமாக இருக்கும் இவ் யாறுகள் இவ்வளவு அருகிலிருப்பதனால் மக்கள் அவற்றை நன்கு அறிந்திருக்கவேண்டும். அங்ஙனமாயின், அவற்றின் பெயர்களில் எழுந்த வேற்றுமை எளிதில் அறியப்படுவது ஒன்றே யாகும்.

இங்ஙனம் சிலப்பதிகாரத்தின் குறிப்புகளிலிருந்தே, மேற்குமலைத் தொடரிலிருந்து உற்பத்தியாகி மேல் கடலிற் சென்று பாயும் ஓர் ஆறு சேரநாட்டின் தலைசிறந்த ஆறாயிருந்தது என்பதும், சிலப்பதிகார ஆசிரியர் கூற்றுப்படி அவ்யாற்றின் பெயர் 'ஆன்பொருநை' என்பதும் தெளிவாகின்றன. பொது மக்களிடையே அவ் யாறு 'பெரியாறு' எனவும் வழங்கிவந்ததாகத் தோற்றுகிறது. இறுதி

யில் கண்ட இப்பெயர் எளிதில் விளங்கக் கூடியதே; ஏனெனில், இக்குறிப்பிட்ட பகுதியில் மேற்குமலைத் தொடரிலிருந்து பாயும் பல ஆறுகளுள்ளும் இதுவே மிகப் பெரிய ஆறு ஆகும். மற்ற இடங்களிலும் இங்ஙனமே ஆறுகள் பெரியாறு என்று வழங்குவதுண்டு. இப்பெயருடன் ஆங்காங்குப் பலப்பல ஆறுகளிருக்கக் கூடுமாயினும், நாம் இங்கே கூற எடுத்துக்கொண்டது வஞ்சியுடன் தொடர்புடையதும் அங்ஙனம் தொடர்புடையதெனக் கூறப் படுவதுமாகிய பெரியாற்றையே யாகும்.

## குணவாயிற் கோட்டம் அல்லது வஞ்சிநகரின் கிழக்குக் கோட்டைவாயில்

சேரநாடும் அதன் தலைநகரமும் அமைந்துள்ள இடத்தைச் சோதிக்கும் வகையில் இத்துடன் இன்னும் சில செய்திகளையும் ஆராயவேண்டுவது அவசியம். சிலப்பதிகாரத்தின் பாயிரம் அல்லது முன்னுரையின் தொடக்கத்தில் வரும்,

> "குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
> குடக்கோச் சேர லிளங்கோ அடிகட்கு,"
>
> —வரி. 1-2

என்னும் வரிகள், குடக்கோச்சேரன் (அதாவது மேற்கு நாட்டரசனாகிய சேரல் அல்லது சேரன்) தம்பியாகிய இளங்கோவடிகள் குணவாயிற் கோட்டத்தில் தங்கியிருந்தார் என்று கூறுகின்றன. மேலும் அவர் அரசு துறந்தே அங்ஙனம் தங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறார். குன்றுகளிலிருந்து வந்த குறவர் குழுவினர் இங்கே வந்துதான் வேங்கை மரத்தின்கீழ்த் தாங்கள் கண்டதை அவரிடம் கூறினர். உரைகாரர் அடியார்க்கு நல்லார், குணவாயிற் கோட்டம் என்பதனைத் திருக்குணவாயிலிலுள்ள கோயில் என்று விளக்குகிறார். இதிலிருந்து திருக்குணவாயில் என்பது நற்புகழ்பெற்ற ஓரிடம் என்றும் அதிலுள்ள பல கட்டிடங்கள், பள்ளிகள், சைத்தியங்கள் அல்லது கட்டிடங்

கள் ஒன்றில் அவர் தங்கினர் என்றும் ஏற்படுகிறது. 'குண வாயிற் கோட்டம்' என்ற தொடரினல், அவர் தங்கிய கோயில் குணவாயில் அல்லது கிழக்கு வாசலிலிருந்த தென்று ஊகிக்கலாம். கிழக்குவாயில் என்றவுடன் 'எதன் குணக்கு வாயில்?' என்ற வின உடனே எழுகின்றது. அதிக விளக்கத்திற்கு இடமில்லாமலே அஃது அந்நகரின் கிழக்கு வாயில், அஃதாவது குறிப்பாகச் சேரர் தலைநகரின் கிழக்கு வாயில் என்ருதல் இயல்பே. இக்கருத்தை இங்ஙனம் பொதுத் தொடர்களாலேயே குறிப்பதற்கு அக்கால வழக்கே காரணமா யிருந்திருக்கலாம். அந்நாட்களில் பொதுவாழ்விலிருந்து ஒதுங்கித் தனிப்பட்ட தவநிலையிலோ-நூலாராய்ச்சியிலோ - வேறு தொழில்வகை முயற்சியிலோ - காலங்கழிப்பவர் பெரிய தலைநகரங்களின் கிழக்குவாயிலை அடுத்துள்ள சோலைகளிலும் உபவனங்களிலும் தங்கியிருக்கும் வழக்கம் இருந்திருக்கக்கூடும். ஒவ்வொரு தலைநகரிலும் இத்தகைய ஒதுக்கிடம் இருந்திருக்கக் கூடுமானல் சிலப்பதிகாரத்தில் இங்ஙனம் அது வழக்கப் போக்கில் குறிக்கப் படுவதை நாம் எளிதில் உணரலாம். சிலப்பதிகாரமே இதனை, புறஞ்சேரியை வருணிக்குமிடத்தில்,

"புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீ ரேரியுங்
காய்க்குலைத் தெங்கும் வாழையும் கமுகும்
வேய்த்திரட் பந்தரும் விளங்கிய விருக்கை
யறம்புரி மாந்த ரன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர் புரிந்தென."

—காதை 13; வரி. 191-196.

என்னும் வரிகளால் தெளிவுபடுத்துகின்றது. உரைகாரர் இதனை இன்னும் தெளிவாக விளக்குகிருர் என்பதும் கவனிக்கத்தக்கதே. இவ்விடத்தில் இது மதுரைமாநகரின் கிழக்கு வாயிலை அடுத்த ஒதுக்கிடத்தைக் குறிப்பதாகும். இத்தகைய ஏற்பாடு பெருவழக்கானதொன்று என்பதை 'ஸ்வப்ன வாசவதத்தா' என்ற வடமொழி நாடகத்தின்

தொடக்கக் காட்சியிலிருந்து உய்த்துணரலாம். இங்கே நகரை யடுத்துள்ள சோலை வருணிக்கப்படுகிறதாயினும் அது கிழக்குவாயிலை அடுத்துள்ளதென்பது குறிக்கப்பட வில்லை. ஆயினும், இதுபற்றிய குறிப்புச் சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்திலேயே காணப்படுகிறது. எனவே, இத்திருக்குணவாயில் என்பது வஞ்சியின் கிழக்கு வாயி லும், அதனை அடுத்துப் பெரியனவும் சிறியனவுமான பல கட்டடங்கள் அமைந்துள்ள சோலையுமே யன்றி வேறன்று. இத்தகைய கட்டிடங்களுள் ஒன்றிலேயே அரசு துறந்த இளங்கோவடிகள் தம் தமையன் தலைநகரை அடுத்து வசித்துவந்தார். இத்தொடர் வடமொழியிலும் மலையா ளத்திலும் பலவகைத் திரிபுகள் அடைந்துள்ளன. வட மொழியிற் சென்றதும் வடமொழியாளர் தம் பண்புக் கேற்ப அதனைக் 'குணபுரி' என மாற்றிக்கொண் டனர். வடமொழியிலிருந்து மலையாளத்துக்கு வந்தபோது மெய்யெழுத்து மீண்டும் உரம் பெற்றுத் 'திருக்கணும திலகம்' என்று ஆயிற்று. இதன் தமிழ் வடிவமாகிய திருக்குணமதிலகம் கோட்டையின் 'கிழக்கு மதிலை யடுத்த வீடு' என்று பொருள்படும். மலையாளத்தில் இது 'திருக் கணு மதிலகம்' என்று மாறிற்று. மலையாளத்தில் இப் பெயருடைய இடம் இன்றும் திருவஞ்சிக்குளத்தின் அருகில் இருக்கிறது. நகரினின்று மூன்று நான்கு மைல் தூரத்தில் மேற்குறிக்கப்பட்ட திசையிலேயே இருக்கும் இது, தலை நகர்க் கோட்டையின் புறப்பகுதி என்று வருணிக்கப்படும் இடத்துடன் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது. சில நூற்றாண்டுகளுக்குப்பின் எழுதப்பட்ட வடமொழி நூல் களில் அது குறிக்கப்படுவதும், அது நகரின் சிறப்பு மிக்க பகுதி என்பதையும் செங்குட்டுவனுக்குப்பின் பல நூற் றாண்டுகள் கழித்தும் அது நன்குணரப்பட்டிருந்த தென் பதையும் அடியார்க்கு நல்லார் காலத்தில் மிக எளிமையாக உணரப்பட்டிருந்தது என்பதையுமே காட்டுவதாகும். எனவே, குணவாயிற் கோட்டம் என்பது வஞ்சிநகருக்கு

வெளியில் அதன் கிழக்கு வாயிலில் இருந்ததென்று கொள்ளலாம். இப்போது 'திருக்கணமதிலகம்' என்று வழங்கும் இடத்தில் ஒரு சில முகம்மதியரை யன்றி வேறு யாரும் வசிக்கவில்லை என்பது தெரிகிறது; ஆயினும், அவ்விடத்திலேயே முன்னைய குணவாயில் கோட்டம் இருந்திருக்கவேண்டும் என்று கொள்ளத்தகும்.

அவ்விடத்திலிருந்த இளங்கோ அடிகளிடமே குன்றக் குறவர் குழுமி வந்து வேங்கை மரத்தடியில் நிகழ்ந்த நிகழ்ச்சியைப்பற்றிக் கூறினர். இச்செய்தி மிகவும் விளக்கமாகவும் விவரமாகவும் சிலப்பதிகாரம் 23-ஆம் காதை 180 முதல் 200 வரையுள்ள அடிகளில் விரித்துரைக்கப்படுகிறது. இப்பகுதி கண்ணகி உலகு நீத்த செய்தியை மட்டுமன்றி அவள் மதுரையிலிருந்து வந்த வழியையும் தெளிவாகக் கூறிப் பின் தெய்வ உருப்பெற்ற இடத்தையும் திட்டமாக உரைக்கிறது. இதுவே இந்நூலின் அடுத்த காதையும் வஞ்சிக் காண்டத்தின் முதற் காதையுமாகிய காதை 24-ன் தொடக்கப் பகுதியில் மீட்டும் கூறப்படுகிறது. முன்னைய காண்டங்கள் புகாரையும் மதுரையையும் தலைப்பிடமாகக் கொண்டதுபோலவே இக்காண்டம் வஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்டதாகும். இனிக் குணவாயிற் கோட்டத்தில் இளங்கோவடிகளைக் கண்ணுற்ற இக்குறவர் எங்கிருந்து அங்கே வந்து சேர்ந்தனர் என்பதை ஆராய்வோம்.

## வஞ்சியும் நெடுவேள் குன்றமும்

குறவர் வாழ்ந்த அதே குன்று 23-ஆம் காதை 190-ஆம் அடியில் நெடுவேள் குன்று என்ற பெயரால் குறிக்கப்படுகிறது. கண்ணகி அக் குன்றின்மீதேறிப் பின் அதனினின்றும் இறங்கி வேங்கைமரச் சோலையை அடைந்தாள். 24-ஆம் காதை 13-ஆம் அடியில் இஃது இன்னும் தெளிவாக அம் மேட்டு நிலத்தின் அடிவாரத்தில் இருப்பதாகவும் நெடுவேள் குன்றம் எனப்படுவதாகவும் கூறப்படுகிறது.

எனவே, இக்குன்றின் சாரலும் இதன் அடிவாரத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்படும் சோலையும் எங்குள்ளன என்று ஆராய்தல் வேண்டும். கண்ணகி தன் வாய்மொழி யாகவே தான் மதுரையினின்று மேற்கு வாயில் வழியே அகன்றதாகவும் இரவு பகல் துணையின்றி வைகையாற்றின் ஒரு கரைவழி வந்து நெடுவேள் அல்லது சுப்பிரமணியர் பெயரால் குறிக்கப்படும் இக்குன்றில் வந்து சேர்ந்தாகவும் கூறப்படுகிறாள். பின் அவள் மறுபுறம் இறங்கி அதன் அடி வாரத்திலுள்ள இவ் வேங்கைமரச் சோலையை அடைந் தாள்; இங்கே மதுரைத் தேவியின் உறுதி மொழிப்படி தன் கணவன் வருமளவும் காத்திருந்தாள். சிலப்பதிகாரத் தின் இரண்டு உரையாசிரியர்களுள் முதல் உரையாசிரியர் இதற்கு உரை கொள்ளுகையில் 'நெடுவேள் குன்றம்' என் பது 'திருச்செங்கோடு' என்று வரைந்து செல்கிறார். இது துரதிருஷ்டவசமாகத் தப்பெண்ணத்திற்கு இடந்தந்து விட்டது. ஏனெனில், 'திருச்செங்கோடு' என்ற பெயருடன் இது போலவே சுப்பிரமணியர் அல்லது முருகனுக்கு உறைவிடமான மற்றொரு திருச்செங்கோடு இருக்கிறது. ஆயினும், 'செங்கோடு' என்பதும் 'செங்குன்று' என்பதும் ஒருபொருட் சொற்களே. ஆகவே முதல் உரையாசிரியர் 'செங்கோடு' என்றவிடத்துச் 'செங்குன்றைத்'தான் கூறி னரோ என்னவோ, நாம் உறுதியாக எதுவும் கூறமுடியாது. திருச்செங்கோடு என்று கூறிய போதே அவர் தம் மனத் தில் இவ்விடத்துள்ள திருச்செங்குன்றையே கருதியிருக்க லாம். ஆனால், இது பற்றித் துணிவுகொண்டுவிடமுடியாமல் இருக்கிறது. ஏனெனில், பிற்பட்ட உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் முதலாசிரியரைக் கண்டித்துரைக்கும் முறையில் குன்றக் குறவர் என்ற தொடரிலுள்ள குன்றம் திருச் செங்குன்றையே குறிப்பதாகும் என்றும் திருச்செங்கோடு வஞ்சியின் வடகிழக்காக 60 காத தொலைவில் இருப்பதால் அரசன் தலை நகரிலிருந்து காலையில் சென்று மாலையில் மீளத்தக்க தூரத்திலில்லை என்றும் எழுதிப் போயினர்.

உண்மையில் முதல் உரையாசிரியர் சேலம் ஜில்லாவிலுள்ள இக்காலத் திருச்செங்கோட்டை மனத்தில் கொண்டிருப்பார் என்பது ஐயத்திற்கு இடமானதே ஆகும். ஏனெனில், மூல நூலின். கூற்றுகளை அவர் கட்டாயம் பார்த்தே யிருக்க வேண்டும். நெடுவேள் குன்று பற்றிக் குறிப்பதற்கு முன் வரும் பத்துவரிகளில் கூறப்பட்ட பிரயாண விவரத்தி லிருந்து கண்ணகி காவிரியாற்றைக் கடந்து சேலம் ஜில்லா விலுள்ள திருச்செங்கோட்டுக்குச் சென்றாள் என்று அவர் கொண்டிருக்க முடியாது. வைகை யாற்றின் பிறப்பிடத் துக்கு நேராக மேற்கு மலைத் தொடரைக் கடந்து மறுபுறச் சாரலின் அடியில் முருகன் கோயில் ஒன்று—மிகச்சிறிய தான கோயிலே—இன்று வரையும் இருப்பதாக நான் அறி கிறேன். மூல நூலில் கண்ட குன்றின் பெயர் நெடுவேள் குன்றம் என்பதே. அது முருகன் என்றும் சுப்பிரமணியர் என்றும் ஸ்கந்தர் என்றும் கூறப்படும் நெடுவேலனின் குன் றம் ஆகும். செங்குன்று என்ற பெயர் அங்கு இல்லை. முதலுரைகாரர் குறிப்பிடும் திருச்செங்கோடு என்ற சொல், செந்நிறக் குன்று என்றே பொருள்படும். அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் திருச்செங்குன்றின் பொருளும் இதுவே. இது கொடுங்கோளூருக்கு அருகில் உள்ளது என்றும் அவர் விளக் கிக் கூறுகிறார். மேற்கு மலைத்தொடரின் பக்கமாக நெடுந் தொலைவில் இருக்கும் இத்திருச்செங்கோடே முதலுரை யாசிரியர் கொண்ட திருச்செங்கோடா யிருக்கலாம். செங் குன்று என்பதும் திருச்செங்குன்று என்பதும் யாதொரு தடையுமில்லாமலே பல குன்றுகளுக்கும் பொதுவாகக் குறிக்கப்படக் கூடும். இப்பகுதி முற்றிலுமே செந்நிறப் பாறைகளால் ஆனதாதலாலும் குன்றுகள் எல்லாம் இத் தகைய பாறைகள் நிறைந்தவை ஆதலாலும் 'செங்குன்று' என்பது ஒரு குன்றைத்தான் குறிக்க வேண்டும் என்ப தில்லை. ஆயினும், அது சிறப்பாக ஒரு குன்றைக் குறிக்க வும் இடமுண்டு. இப்போது விவாதிக்கப்படும் இடத்திலும் அதற்குச் சற்றுத் தெற்கிலும் 'திருச்செங்குன்றூர்' (மலை

யாளம், செங்கன்னூர்) என்ற நம்மாழ்வார் பாடல்பெற்ற வைணவத் தலமொன்று இருக்கிறது. இது 'செங்குன்று' என்ற மலை ஒன்றையும் குறிப்பதாயிருக்கிறது. இச் செங் குன்றூர் பெரியாற்றின் வழக்குக்கெதிரான சிற்றாற்றின் கரையில் உள்ளது. குன்றக் குறவர் குணவாயிற் கோட் டத்திற்கு இக் குன்றிலிருந்தோ அல்லது இதைவிட வஞ் சிக்கு அருகில் உள்ள இப் பெயர் கொண்ட மற்றொரு குன்றிலிருந்தோ சென்றிருக்கக் கூடும். சேலம் ஜில்லாவி லுள்ள திருச்செங்கோடு இவ்வகையில் சற்றும் பொருந் தாது; காரணம், அது வெகு தூரத்திலிருப்பதுமட்டும் அன்று; கண்ணகியின் பயண விவரத்துடன் அது முற்றி லும் ஒத்துவராதது என்பதே யாகும். இப் பிரதேசத் தில் திருச்செங்குன்றூர் என்ற ஓரிடம் இருப்பதிலிருந்தே ஏறக்குறைய அதன் அருகில் திருச்செங்குன்று ஒன்றும் இருந்திருக்க வேண்டும் என்பதை அறியலாம். திருச்செங் குன்றூர் இருக்கும் இடத்தைக் கவனித்தால் திருச்செங் குன்று மேற்கு மலைத்தொடரின் மேற்குச் சரிவில் வைகை யின் பிறப்பிடத்திற்கு அண்மையிலேயே இருக்கவேண்டும் என்பது தெரிகிறது. இக் கோட்பாடு, இப் பகுதியில் இப் பெயருடன் வெறும் குன்றுகள் இருப்பதை விலக்குவதாக மாட்டாது. ஆகவே, அடியார்க்கு நல்லார் கூறுகிறப்படி, திருச்செங்குன்று-கொடுங்கோளூர் அருகில் இருந்ததென்று கொள்ளலாம் (குணவாயில் கோட்டத்திலிருந்து சிறிது தூரத்தில் அப்பெயர் கொண்ட ஓரிடம் பழைய தேசப்படம் ஒன்றில் காணப்படுகிறது). ஆயினும் சிலப்பதிகாரத்தைக் கொண்டு பார்க்கும்போது அஃது இத்திருச்செங் குன்றூருக்கு அப் பெயர்வரக் காரணமாயிருந்த திருச் செங்குன்றாயிருந்திருக்கும் என்று திட்டமாகக் கூறமுடிய வில்லை. சிலப்பதிகாரம் பிறவிடங்களில் நெடுவேள்குன்று என்று குறிப்பிடும் திருச்செங்கோடு இதனினும் மேற்கு மலைத்தொடருக்கு இன்னும் அருகிலேயே இருந்திருக்க வேண்டும். ஏனெனில், சேரனிடம் மலைவிளை பொருள்

களைத் திறையாகக் கொண்டு வந்த மக்கள் மலையிலேயே வசித்தவராதல் வேண்டும். சிலப்பதிகாரமும் இதற்கேற்பவே, அவர்கள், குன்றின் முகடுகளில் வாழ்ந்தவரர்கக் குறிப்பிடுகிறது. விவரமாகக் குறிக்கப்படும் அவர்கள் கொணர்ந்த திறைப் பொருள்கள் மலை விளைபொருள்களே யாகும். சில இப் பகுதிக்கே சிறப்பாக உள்ள பொருள் களும் ஆகும். சான்றாகச் சந்தனம், சந்தனக் கட்டைகள், ஏலக் கொடிகள், மிளகுக் கொடிகள், பெரிய வாழைக்குலை கள் (இவை மலையாளக் கரைக்கே சிறப்பான நேந்திரன் காய்கள் என்று கூறலாம்) ஆகியவை இவ்விடத்திற்கே உரிய விளைபொருள்கள்.

"யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளும் அணியரி தாரமும்
ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்
தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமும் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
ஆளியின் அணங்கும் அரியின் குருளையும்
வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியும் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையும் மடமான் மறியும்
காசறைக் கருவும் மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியும் தேன்மொழிக் கிள்ளையும்
மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டாங்
கேழ்பிறப் படியேம் வாழ்கவின் கொற்றம்"

—காதை 25; வரி. 37–56.

எனவே, இம்மக்கள் மேற்கு மலைத்தொடரின் மேற்குச் சரிவுகளிலிருந்து வஞ்சிநகரின் கிழக்கு வாயில் அருகில் ஏறத்தாழக் கொடுங்கோளூர் அண்மைவரை நெடுந்தொலைப் பயணம் செய்து வந்திருக்கவேண்டும். இங்கேதான் அவர்



குறும்பர் கோவில்—கொடுங்கோளூர்

கள் ஆசிரியர் இளங்கோவடிகள் உட்படப் பரிவாரங் களுடன் கூடியிருந்த மன்னனிடம் தம் செய்தியைக் கூறி யிருக்கவேண்டும். எனவே, வேறெவ்வகைக் குழப்பத்துக்கும் இடமின்றிச் சிலப்பதிகாரத்திலுள்ள கண்ணகியின் ப்பயண வழியை மட்டும் நாம் ஒழுங்காகப் பின்பற்றிக் கவனித்தால், வஞ்சிநகர் எவ்விடத்தில் உள்ளது என்பது பற்றி நமக்கு ஐயம் உண்டாக இடமில்லை; சுப்பிரமணியர்க்கு உரிய மலையைத் தேடி வைகைக் கரையிலிருந்து நெடுந்தொலை சென்று பழநி மலைகளையோ ஐவர் மலையையோ இன்னும் வேறிடங்களையோ நாடவேண்டுவதும் இல்லை.

### திருச்செங்குன்று என்பது திருச்செங்கோடோ, பழநியோ அல்லது இவை போன்ற பிறிதோரிடமோ அன்று.

இங்ஙனம் சிலப்பதிகாரத்தில் நுணுக்கமான விவரங் களுடன் தரப்படும் கண்ணகியின் பயண வழி, வைகைக் கரை வழியாக மேற்கு மலைத்தொடர்மீது சென்று அவ் யாற்றின் பிறப்பிடத்தை அடைந்து, அங்கிருந்து மேற்கு மலையின் உச்சி கடந்து மறுபுறம் செல்கிறது. பின் அவள் மறுபுறம் இறங்கும் வழியில் அதன் சரிவில் உள்ள வேங்கை மரச்சோலையை அடைந்தாள். இங்கே இன்று இருப்பதாகச் சொல்லப்படுவது போலவே அன்றும் தமிழ் மரபுப்படி மலைத்தெய்வமாகிய முருகனது கோயில் ஒன்று இருந்தது. அங்குள்ள முதன்மை வாய்ந்த குன்று ஒன்று 'செங்குன்று' என்று அழைக்கப்பட்டது. தெய்வச் சிறப்பால் அது 'திருச்செங்குன்று' என்று உபசரிக்கப் பட்டிருந்தது. இப்பள்ளத்தாக்கில் 'திருச்செங்குன்றூர்' என்ற ஊர் இருப்பது இதனை வலியுறுத்தும். ஏனெனில், அவ்வூர்ப் பெயரிலிருந்தே அப்பெயருடைய குன்று ஒன்று இருந்ததுஎன்பது ஏற்படும் ஆதலால் என்க. எனினும், இத னுடன் தொடர்பில்லாமலே வேறு குன்றுகளுக்கும் அவ் விடத்துச்செம்பாறை காரணமாகச் செந்நிறக் குன்று அல் லது செங்குன்று என்ற பெயர் வழங்கியிருக்கலாம் என்பதற்

கும் தடையில்லை. எனவே, செங்குன்றை நாடி நெடுந்தொலை விலிருக்கும் சேலம் ஜில்லாத் திருச்செங்கோட்டுக்கோ அல்லது குன்றுகளின் பக்கத்திலேயே வைகையின் இரு கரைகளிலும் ஆனால், வைகையிலிருந்து வெகு தொலைவில் முருகனுக்குரிய திருத்தலங்களாக இருக்கும் பழநி அல்லது ஐவர் மலைகளுக்கோ போக வேண்டியதில்லை. வைகைக் கரைகளில் ஒன்று கண்ணகிக்கு வழியாக அமைந்ததென்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, செங்குன்று என்பது கொடுங்கோளூர் அருகிலுள்ளது என்று கூறுவது பொருத்தமற்றது என்று எண்ணுவதற்கில்லை.

## திருமால் கோயில் கொண்ட 'ஆடக மாடம்'

சேரர் தலைநகராகிய வஞ்சி மேற்சொன்ன இடத்திலேயே அமைந்திருந்தது என்பதற்குச் சிலப்பதிகாரத்தில் அதுபற்றிக் கூறப்பட்டிருக்கும் பிற விவரங்களும் சான்று பகரும். இவற்றுள் ஒன்று செங்குட்டுவன் வடபுலப் படையெழுச்சி பற்றியது. படையெழுச்சிகள் வழக்கமாகத் தொடங்குவது போலவே சேரன் படையும் காலையில் புறப்பட்டது என்று மேலே கூறியிருக்கிறோம். புறப்படுவதற்கு அறிகுறியாக முரசம் முழங்குமுன் மன்னன் திருமுழுக்கு முடித்துப் படைகளுடன் சேர்வதற்குத் தயாராக ஆடை அணிந்தான். அவன் சிவபெருமானுடைய அருளால் தோன்றினான் என்று நூல் கூறுவதற் கிணங்கப், படையுடன் சென்று சேருமுன், அவன் தன் வழிபடு தெய்வமாகிய சிவபிரான் திருக்கோயில் சென்று அங்கே இறைவனுக்குப் பூசனை செய்யும் குருக்களிடம் சிவன் கோயில் வழக்கப்படி திருநீறும் பூவும் வில்வமும் பிரசாதமாகப் பெற்றான்; சைவ நெறியாளர் மரபை ஒட்டித் திருநீற்றில் ஒரு பகுதியையும் பூக்களில் சிலவற்றையும் தலையில் அணிந்து, பின் படையுடன் செல்லும் வண்ணம் யானை மீதேறினான். அச்சமயம் "அறிதுயில் அமர்ந்த இறையோன் கோவிலி"ல் இருந்த அர்ச்சகர் தொலைவில் படை

யெழுந்து செல்லும் அரசனுக்குச் சிவன் கோயிற் குருக்களைப் போலவே பிரசாதங்கள் கொண்டு வந்தனர். அரசன், அதனையும் தக்க மரியாதையுடன் பெற்றான். ஆயினும், சிவபெருமான் பிரசாதத்தை முன்பே தலையில் அணிந்துகொண்டு விட்டதனால், அதன்மீது இவற்றை அணியலாகாது எனக்கொண்டு, அவற்றைத் தலையில் அணியத் தயங்கி அப்பிரசாதத்துள் சிறந்த பகுதியாகிய மாலையை வாங்கித் தோளில் அணிந்துகொண்டான்" என்று கவி கூறுகிறார். இவ்வாறு கூறுவது, உண்மையில் கவிஞரின் அணியுரையே ஆகும். வழக்கப்படி, திருமால் கோவிலின் பிரசாதம் இறை வடிவத்தின் கழுத்தினின்று எடுக்கப்பட்ட மாலையே ஆகும். இதனைக் குருக்களே பூசிப்போர் தோளில் அணிவதுமுண்டு. அல்லது மரியாதையுடன் பூசிப்போர் வாங்கித் தோள்களில் அணிவதுமுண்டு. இதனுடன், கோவிலுக்கே பூசிப்போர் செல்லுவதானால் துளசிக்கொழுந்தும் தீர்த்தமும் கொடுப்பதுண்டு. ஆனால், இங்கே அரசன் கோவிலுக்குப் போகாமையால், தீர்த்தம் கொடுத்தல் விடப்பட்டிருக்க வேண்டும். மாலையும் துளசியுமே கொண்டுவரப்பட்டிருக்கக்கூடும். எனவே, மாலையைத் தோள்களிலிடுவதிலும் ஒருவேளைத் துளசியைக் காதில் சூடுவதிலும் மன்னன், திருமாலைப் பூசிப்பவரது வழக்கப்படிதான் நடந்துகொண்டானேயன்றி வேறன்று. இங்குத் துளசி கூறப்படவில்லை. மாலை ஒன்றே கூறப்படுகிறது. அதனைச் செங்குட்டுவனேயன்றி எவரும் தோள்களில்தான் இடுவர். ஆனால் காவியத்தில் இப் பொது உண்மையைக் கவி தம் கற்பனையலங்காரத்துடன் இணைத்திருக்கிறார். இச்சமயம் ஆசாரப் பகுதி நம் ஆராய்ச்சிக்குப் புறம்பானது. அவ்வகையில் சிறப்பு வாய்ந்தது இங்கு விரித்துரைக்கப்பட்ட திருமாலின் மூர்த்தமே. இதில் இரண்டு கூறுகள் கவனிக்கத் தக்கவை. ஒன்று, கோயில் கொண்ட இறைவன் அறிதுயிலமர்ந்த மூர்த்தி. மற்றது அவர் கோயில் பொற்கோவில் அல்லது

பொன் மண்டபம் எனப்படுவது. இப்பகுதிக்கு மூதலுரைகாரர் உரை மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளது. அவர், இதில் குறிப்பிட்டுள்ள 'ஆடக மாடம்' பெரும்பாலும் திருவனந்தபுரமாக இருக்கலாம் என்றும், ஒருவேளை இரவிபுரமாக இருக்கக்கூடும் என்றும் எழுதுகிறார். திருவனந்தபுரம் என்பது திருவாங்கூரின் தலைநகர் என்பதும் அங்கே கோயில்கொண்ட பெருமாள் பாம்பணைமேல் கிடந்த திருக்கோலத்தினர் என்பதும் அது காரணமாக அஃது அனந்தசயனம் என அழைக்கப்படுவதும் யாவரும் அறிந்ததே. அவ்விடம் இதனாலேயே 'அனந்தசயனம்' என்றும் வழங்குகிறது. இப்பெருங் கோயில் சாதாரணமாகப் பொற்கோயில் என்று குறிப்பிடத்தக்கதே. அதன் ஸ்தூபிகளும் கூரையும் பொற்பூச்சு உடையனவே. ஆனால், படையெழுச்சிக்கான அறிவிப்புச் செய்த ஒரு நாளைக்குள் மறுநாள் காலையிலேயே புறப்பட இருந்த மன்னனுக்கு அர்ச்சகர் பிரசாதம் கொண்டு வந்து கொடுத்தார் என்று கூறமுடியாதபடி அது நெடுந்தொலைவில் உள்ளது. உரைகாரர் இரண்டாவதாகக் கூறிய 'இரவிபுரம்' இதனினும் அருகில் உள்ளதே. இரவிபுரம் என்று குறிப்பிடும் இவ்விடம் இக்காலத்திய எர்ணகுளத்தின் தென்பகுதியாகும். இஃது இப்போது திருப்பூணித் துறையிலிருக்கும் மகாராஜாவின் அரண்மனைக்கு எதிர்ப்புறம் உள்ளது. இங்கும் ஒரு திருமால் கோவில் இருக்கிறது. இதன் முக்கிய மூர்த்தி ஐந்தலை நாகப்படத்தின் கீழ் வீற்றிருக்கும் சந்தான கோபாலர் ஆவர். இந்நிலை, மேற் குறிப்பிடப்பட்ட 'அறிதுயில் அமர்ந்தோன்' நிலைக்குச் சற்றும் ஒவ்வாதது. சாதாரண வழக்கிலுள்ள பொருளின்படி, இத்தொடர் திருவனந்தபுரம் மூலஸ்தானத்திலுள்ளபடி பாற்கடலில் அனந்தன் அல்லது சேஷநாகத்தின்மேல் பள்ளிகொண்டிருக்கும் நிலையிலுள்ள கோயிலையே குறிக்கும். ஆனால், நூலில் குறிக்கப்பட்டது பொன்மாடம் மட்டுமேயாயிருக்க, அதன் கிடக்கையைக் காணத் தொலை தூரத்திலுள்ள

இத்தகைய கோயில்களைத் தேடுவதற்கே நியாயமில்லை; தலை நகரங்களில் அரண்மனை நகர் நடுவிலோ அல்லது ஒரு சார் சற்று ஒதுங்கியோ இருப்பது வழக்கம். இந்து சிற்ப சாஸ்திரத்திற் கூறப்பட்டுள்ளபடி திருமால் கோவில் நகர் நடுவிலேயே அமைய வேண்டும். ஆதலால், நகரில் திருமால் கோயில் ஒன்றிருந்திருக்குமே யாகில், அரண்மனை அதனை அடுத்தே இருத்தல் வேண்டும். அரண்மனை அகத்திலேயே ஒரு கோயிலிருந்து அதில் திருமால்கொண்ட கோலம் கிடந்த திருக்கோலமாக இருக்கக்கூடுமானல், நூலின் குறிப்புக்கு அதுவே போதிய அளவு பொருத்தமாயிருக்கும். மன்னன் செங்குட்டுவன் சிவனருளால் பிறந்தவன் என்பது கூறப்படுகிறது. தம்பி சமண சமயத்தவரா யிருந்து, அண்ணன் இங்ஙனம் சிவபிரானிடத்தில் பற்றுதலுடையவரா யிருப்பது நமக்கு வியப்பைத் தர வேண்டுவதில்லை. சரித்திரத்தில் இது போன்ற சான்றுகள் பிறவும் உள்ளன. ஹர்ஷன் தந்தை சூரிய உபாசகன். அவன் அண்ணன் புத்த சமயத்தில் மிகுந்த பற்றுடையவன். ஹர்ஷனே முதலில் சைவனக இருந்து பின்பு புத்த சமயத்தின் பக்கமாகச் சாய்ந்தவன். இவற்றை நோக்க நகரின் ஒரு பகுதியாகவோ முன்னைய அரசர் வழிபட்ட முறையில் அரண்மனையின் ஒரு பகுதியாகவோ திருமால் கோவில் ஒன்றிருந்திருப்பது இந்து அரசர் இயல்பை நோக்கப் பொருத்தமானதாகும். 30-ஆம் காதை 51-53 வரிகளில் இத்தகைய கோயில் ஒன்றைப்பற்றி வருணித்திருப்பது இக்கோவிலை நாடி நகருக்கு வெளியில் செல்ல வேண்டியதே இல்லை என்ற கோட்பாட்டிற்கு ஓரளவு வலிவு தருவதாகும். ஆயினும், தலைநகரில், ஒரு கோயிலிருப்பது கூடுமாயினும் அஃது ஆடகமாடம் அல்லது பொன் மாடம் என்று குறிப்பிடப்படுவதற்கு விளக்கம் கூறியேயாக வேண்டும்.

"படுதிரை சூழ்ந்த பயங்கெழு மாநிலத்
திடைநின் றோங்கிய நெடுநிலை மேருவிற்

கொடிமதின் மூதூர் நடுநின் றோங்கிய
தமனிய மாளிகைப் புனைமணி யரங்கின்
வதுவை வேண்மாண் மங்கல மடந்தை
மதியோர் வண்ணங் காணிய வருவழி"

—சிலம்பு-காதை 28; வரி. 47-52

என்னும் அடிகள், தமிழில் தமனிய மாளிகை (பொன் மாளிகை) என்று குறிப்பிடப்படும் அரண்மனையின் ஒரு பகுதியைக் கடந்து அரசி அரசனை வரவேற்கச் சென்றதாகக் கூறுகின்றன. மேலும்,

"குடதிசை யாளுங் கொற்ற வேந்தன்
வடதிசைத் தும்பை வாகையொடு முடித்துத்
தென்திசைப் பெயர்ந்த வென்றித் தானையொடு
நிதிதுஞ்சு வியனகர் நடுநிலை நிவந்து
கதிர்செல வொழித்த கனக மாளிகை
முத்துநிரைக் கொடித்தொடர் முழுவது வளைஇய
சித்திர விதானத்துச் செய்பூங் கைவினை
இலங்கொளி வைரமொடு பொலந்தகடு போகிய
மடையமை செறுவின் வான்பொற் கட்டிற்
புடைதிரைத் தமனியப் பொற்கால் அமளிமிசை
யிணைபுணர் எகினத் திளமயிர் செறித்த
துணையணைப் பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்
கெறிந்துகளங் கொண்ட வயறோர்க் கொற்ற
மறிந்துரை பயின்ற வாயச் செவிலியர்
தோட்டுணை துறந்த துயரீங் கொழிகெனப்
பாட்டொடு தொடுத்துப் பல்யாண்டு வாழ்த்தச்
சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று
பெருங்கவின் செவ்வி பெருமகன் வந்தான்
நறுமலர்க் கூந்தல் நாளணி பெறுகென."

—சிலம்பு-காதை 27; வரி. 197-216

என்னும் அடிகளிலும் இதுபோன்று 'கனக மாளிகை' என அரண்மனையின் பகுதி ஒன்று வருணிக்கப்படுகிறது. இவற்றினின்று, முற்கூறப்பட்ட கோயில் தலைநகருக்கே உரியதென்றும் இறைவன் இங்கும் திருவனந்தபுரத்துப் பெருங்கோயில் மூர்த்தியைப் போலவே பாம்பணைமீது பள்ளிகொண்டிருந்தான் என்றும் கொள்ளலாம். இதன்

படி ஆடகமாடம் வஞ்சிநகரின் ஒரு பகுதியாகவோ அல்லது அரண்மனையின் ஒரு பகுதியாகவோ இருந்திருக்கலாம். உரைகாரர் குறிப்புத் திருவனந்தபுரத்தைப் பற்றிய மட்டில் ஒருவாறு எளிதில் உணரக்கூடியதாகவே இருக்கிறது. ஆனல் இரவிபுரம் என்பது இப்போது திருப்பூணித் துறையில் மகாராஜா அரண்மனை இருக்கும் இடமான எர்ணுகுளத்தின் பகுதியாகிய இரவிபுரமா யிருக்குமேயானல் உரைகாரர் குறிப்புத் தெளிவுபடுவதா யில்லை. ஆயினும், அங்கே இன்று பூசிக்கப்பட்டுவரும் வடிவம் முன்னைய வடிவத்திற்கேதேனும் ஊறு ஏற்பட்டபின் அண்மையில் புதிதாக அமைக்கப்பெற்றதாகவே தோற்றுகிறது. கோவிலில் அடைபட்டிருக்கும் ஒரு பகுதியில் பின்புறக் கதவிடுக்கு வழியாகப் பார்ப்பவருக்குப் பாம்பணை மட்டுமேனும் தெரிதல் உண்மை. அதிலிருந்து அப்பழைய வடிவம் பாம்பணைமேல் பள்ளிகொண்ட வடிவம் என்று கூறலாம். இங்ஙனம் ஒரு பகுதி அடைபட்டிருப்பதைக் கொண்டும் பூசிக்கப்படும் மூர்த்தி கோவிலில் வழக்கத்திற்கு மாறாக அமைக்கப்பட்டிருப்பதாலும் இஃது அனந்தசயனக் கோயிலாகவே இருந்திருக்கக்கூடும் என்று கருதலாம். அவ்விடத்திலுள்ள வயது சென்ற மக்கள் பலர் அங்கே அனந்தசயன வடிவம் இருந்ததென்று ஒத்துக்கொள்கின்றனர். ஆயினும், ஒரு சிலர் அஃது உண்மையில் அனந்தசயனமன்று என்றும் முற்கால நாகவணக்கத்தின் அறிகுறியாக மலையாளிகள் சர்ப்பக்காவு என்று வழங்கும் பாம்புக் காடே என்றும் கூறுகின்றனர். இதற்கிடையில், நாம், மேற்கூறிய காரணங்களால், நூலில் குறிப்பிட்ட திருமாலின் பொன்மாளிகையை வஞ்சிக்கு வெளியில் சென்று தேடவே அவசியமில்லை என்றே கொள்ளலாம்.

இங்ஙனம் ஆடகமாடம் என்பது அரண்மனையின் ஒரு பகுதியே ஆகலாம் என்றும், குறிப்பிடப்பட்ட திருமால் கோவிலும் அரண்மனை அகத்துள்ள கோவிலாகவே

இருக்கலாம் என்றும் நாம் கூறுவதற்கு இணங்க டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் தம் சிலப்பதிகாரப் பதிப்பில் நமக்கு ஆதாரம் தந்துள்ளார்.

"வேடகம் சேர்ந்தவெங் கானம் விடலைபின் மெல்லடிமேற்
பாடகந் தாங்கி நடந்ததெவ் வாறுகொல் பாழிவென்ற
கோடக நீள்குடிக் கோனெடு மாறன்தென் கூடலின்வாய்
ஆடக மாடங் கடந்தறி யாதவென் னரணங்கே."

—இறையனார் அகப்பொருள், சூத்திரம் 22.

(பக். 165, பாடல் 190 பவானந்தம் பிள்ளை பதிப்பு.)

இப்பாடல் ஆடகமாடம் என்பது, அரண்மனைமாதர் உறையும் இடம் என்பதையும், எனவே அரண்மனையின் ஒரு பகுதி மட்டுமன்று, முக்கியமான பகுதியுமாகும் என்பதையும் குறிக்கின்றது. தன் தாய் - தந்தையரை விடுத்துத் தன் தலைவனுடன் செல்லத் தீர்மானித்துவிட்ட இளமை சான்ற தலைவியைக் குறிக்கையில் அச்செய்யுள், 'அவள் ஆடகமாடத்தின் எல்லைகடந்து என்றும் சென்றறியாதவள்' என்று கூறுகிறது. பிறர் காண்பர் என்ற அச்சமின்றி மாதர் தங்குதடையின்றி நடமாடும் அரண்மனை உட்பகுதியே ஆடகமாடம் என்று இதனால் ஏற்படும். இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தரசோழனுக்குப் 'பொன்மாளிகைத் துஞ்சிய' என்ற அடைமொழி ஏற்பட்டதும், 'பொன் மாளிகை' அல்லது 'ஆடகமாடம்' என்பது சோழரின் அரண்மனை உட் பகுதியே என்பதை வலியுறுத்தும். அத்தகைய இடத்தில் திருமால் கோயில் இருக்கக்கூடும் என்பதை விஜயநகரத்திலுள்ள (ஹம்பி) ஹஜாரத ராமசுவாமி கோயில் காட்டும். ஹஜாரத என்பது 'ஹஜாரம்' அல்லது 'அரண்மனையின் உட்புறத்துள்ளது' என்று பொருள்படும். திருவனந்தபுரம் திருமால் கோயிலின் பக்கத்திலுள்ள பழைய அரண்மனை அமைப்பையும் அரச குடும்பத்தினர் பகுதிகளையும் கவனித்தால், இக்கோட்பாடு பின்னும் உரம்பெறும். இவற்றுடன் பொருந்த சிலப்பதிகாரம் 27-ஆம் காதை 197-216-ஆம்

அடிகளில் சேரர் அரண்மனை பற்றிய பகுதியின் வருணனையை ஒப்பிட்டு நோக்குக.

இதுகாறும் கூறியவற்றால், இந்நூலில் குறிப்பிடப்பட்ட ஆடகமாடம் தன்னகத்தே திருமால் கோவிலையுடைய அரண்மனையின் ஒரு பகுதியே என்பது தோற்றுகிறது. மேலும்,

"ஆடக மாடத் தரவணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறுமக ளீங்குளள்"

—சிலம்பு-காதை 30; வரி. 51—52.

என்னும் அடிகளும் இதனை வற்புறுத்தும். அவற்றில் அதே திருமால்கோயில் அர்ச்சகரின் சிறு புதல்வி கண்ணகிக் கோயில் பிரதிஷ்டை சமயத்தில் உடனிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்து சிற்பசாஸ்திரத்தில் மேற்கொள்ளப்பட்ட விதிகளின்படி நகரங்களில் திருமால் கோவில் மக்கள் வாழும் பகுதியின் நடு விடத்தில் இருக்க வேண்டும். அஃது அரசர் உறையும் தலை நகரமானால் அரண்மனையையும் ஒட்டியிருக்க வேண்டும். சேரர் தலைநகரும் மற்றத் தலைநகர்களைப்போலவே கட்டப்பட்டு அவற்றின் பொது அமைப்புகளைக் கொண்டிருத்தல் இயல்பே. இதனாலும் பின்வரும் விவரங்களாலும் வஞ்சி நகர் மிக விரிவுடையதாக இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. நாம் இதுவரை ஆராய்ந்தவை அக்குறிப்புகளுட் சிலவே யாகும்.

## வேளாவிக்கோ மாளிகை—வஞ்சியின் உபவனச் சேரி

நகரின் மற்றோர் பகுதியை நாம் இனிக் கவனிக்க வேண்டும். வடபுலப் படையெழுச்சியிலிருந்து மீண்டபின் செங்குட்டுவன் தான் சிறையாகக் கொணர்ந்த வடநாட்டு மன்னரை மற்றைத் தென்னாட்டு அரசரிருவரிடமும் கொண்டு காட்டும்படிச் செய்தான். அச்சமயம் அவர்கள் கூறிய அவமதிப்பான சொற்களைத் தூதுவர் கூறக்கேட்டுத் தன்னை அவர்கள் இகழ்ந்ததற்குப் பழிவாங்கும் எண்ணமுடையவனாய்ப் போர்க்கெழ முனைந்தான். அச்சமயம் அரச அவையி

விருந்த மாடலன் என்னும் பிராமணன் எழுந்து செங்குட்டு வன் தன் ஆட்சிக்காலமாகிய ஈரிருபத்தைந்து (ஐம்பது) ஆண்டுகளுக்குள் எத்தனையோ போர்களில் ஈடுபட்டத ஞல் அதன்பின்னும் மற்ருெரு போரில் ஈடுபடுவது நன்றன்று என்று எடுத்துக் காட்டியதுடன் இகவாழ்வில் புகழை நிலைநாட்டுவதில் முழுதும் அவன் ஈடுபட்டிருந்த கார ணத்தினுல் தன் வருங்காலத்து நிலையான வாழ்விற்கு எது வும் பெருமுயற்சி செய்யாமலிருப்பதையும் நினைவூட்டினுன். பேரரசனும் வெற்றிவீரனுமாகிய செங்குட்டுவன், அத்த கைய வாழ்விற்குப் பயன்தருவதும் அரசர்க்கே உரியது மான இராஜசூய யாகம் செய்தல் நலம் என அவன் அறி வுரை நல்கியதுடன் மனிதவாழ்வு கணப்போதிருந்து நிடு மென மாய்வது. ஆதலால், இவ்வகையில் தாமதம் கூடா தென்றும் வற்புறுத்தினுன். செங்குட்டுவனும் அதற் கிணங்கி உடனே அப்பெரிய யாகத்தைத் தக்கமுறையில் நடத்தக் கட்டளை இட்டான். அவ்வேள்வியை நடத்தும் ஆணை தாங்கி முதன் மந்திரியுடன் அமர்ந்திருந்தவர்களிடம் அரசன் வஞ்சிநகரின் மதில்களுக்குப் புறம்பாக அவ்வகை யில் தேவையான தங்கும் இடங்கள் அமைந்ததும் சோலை களின் நடுவில் உள்ளதும் எல்லாவகை வசதிகள் நிறைந் ததுமான ஓர் அரண்மனையைக் குறிப்பிட்டான். இவ் வரண்மனையின் பெயர் 'வேள் ஆவிக்கோ மாளிகை' அதாவது 'ஆவிக்கோ என்ற பிரபுவின் மாளிகை' என்பதாகும். இது வும் குணவாயிற் கோட்டத்தை ஒருசார் ஒப்பாக நகர்ப் புறத்திலேயே இருந்திருக்கவேண்டும். இன்றும் உப்பங்கழிக் கரையில் 'வேளாவிக்கோ மாளிகை'யை நினைவூட்டத்தக்க முறையில் ஆவிக்கோ மந்திரம் என ஓரிடத்திற்குப் பெயர் கூறப்படுகிறது. இங்கிருந்து கண்ணகிக்குக் கோயில் எடுப் பிப்பதற்காக் அவள் சிறிது தூரம் பயணம்செய்ய வேண்டி யிருந்ததாகத் தெரியவருவதால், இவ்வேளர்விக்கோ மாளிகை இன்று கொடுங்கோளூர் இருக்கும் இடத்திற்கு எதிர்ப்புறமாகவே அமைந்திருந்தது என்று கொள்ளாம்.

## பறையூர் அல்லது இக்காலப் பரூரிலிருந்து வந்த நாடகக் குழுவினர்

வடபுலப் படையெழுச்சியிலிருந்து மீண்டு வந்தபின் நிகழ்ந்ததாகச் சிலப்பதிகாரத்தின் 28-ஆம் காதையில் விரித்துரைக்கப்படும் மற்றொரு நிகழ்ச்சி, தலைநகர்க்குள் அவன் நுழைந்த நாள் மாலையில் நடந்த கொலுவிருக்கை யாகும். மாளிகையின் திறந்த மேல்மாடியில் அரசனும் அரசியும் வீற்றிருக்க, அவர்கள் முன்னிலையில் நாடகக் குழுவினர் வந்து சிவனும் பார்வதியும் ஆடிய புகழ்படைத்த கோட்டிச்சேதம் என்ற கூத்தை நடித்துக் காட்டினர். திரிபுரத்துள்ள தம் எதிரிகளை அழித்தபின் சிவபெருமான் ஆடியதாகக் கூறப்படும் கூத்தே இது. இக்கூத்தின் போது சிவபெருமான் தம் துணைவியார் அருகில் நின்று நயம் மிக அமைந்த நளினமான கூத்தொன்றில் ஈடுபட்டு நிற்க, தாம் உக்ரமான வீரச்சுவை மிக்க கூத்து நடித்தார். அவர் தம் காற்சிலம்புகள் புலம்பவும், கையிற் சிறுபறை உரத்து ஆர்ப்பரிக்கவும் கண்கள் ஆயிரங் குறிப்பிற் சென்று சுழலவும் சடாபாரம் நாற்புறமும் நின்றாடவும் ஆடினர் என்பதை,

> "ஆங்கவள் தன்னுடன் அணிமணி யரங்கம்
> வீங்குநீர் ஞால மாள்வோ னேறித்
> திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
> பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்
> செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவும்
> செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்
> பாடகம் பதையாது சூடகந் துகளாது
> மேகலை யொலியாது மென்முலை யசையாது
> வார்குழை யாடாது மணிக்குழ லவிழா
> துமையவள் ஒருதிற னாக ஓங்கிய
> இமையவ னாடிய கொட்டிச் சேதம்
> பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
> கூத்தச் சாக்கைய னாடலின் மகிழ்ந்தவன்
> ஏத்தி நீங்க இருநிலம் ஆள்வோன்
> வேத்தியல் மண்டபம் மேவிய பின்னர்"
>
> —சிலப்பு-காதை 28; வரி. 65-79

என்னும் அடிகளால் அறியலாம். இத்தகைய ஆட்டம் இன்னும் மலையாள நாட்டில் பெருவழக்காயுள்ளது. இக் கூத்து நடத்தியவர் நடன நிபுணர்களாகிய சாக்கையர்கள். அவர்களில் பறையூரில் வசித்த ஒரு வகுப்பார் தலைசிறந்து விளங்கினர். சாக்கையர் ஆடலாகிய சாக்கைக்கூத்து

அந்நாளில் மிகுதியும் பாராட்டப்பட்டிருந்ததொன்று என்பதற்கு இலக்கியத்திலேயே பல சான்றுகள் இருக்கின்றன. தொலைதூரத்திலுள்ள திருவிடைமருதூர் அருகிலுள்ள காமரசவல்லி என்ற இடத்தில் முதலாம் இராஜேந்திர* சோழன் காலத்தது என்று குறிக்கப்படும் கல்வெட்டு ஒன்று அவ்விடத்தில் சாக்கை நடிகன் ஒருவனுக்கு அரசன் 'சாக்கை மாராயன்' என்ற பட்டம் தந்ததாகக் குறிப்பிடுகிறது. பறையூரைச் சார்ந்த சாக்கையர்கள் பிராமணர்கள் எனவும் அவர்கள் கூத்து அரசனாலும் பிறராலும் மிகவும் பாராட்டப்பட்டது எனவும் கூறப்படுகிறது. அவர்கள் அரசன் முன்னிலையில் வந்து கூத்து நடத்தினர் என்றும், அதன்பின் மாடலன் உட்படப் பிறருடன் அரசன் கொலுவீற்றிருக்கச் சென்றபோது அவர்கள் அகன்றனர் என்றும் குறிக்கப்படுகிறது. இப்பறையூரே இக்காலப் பரூர் என்றும், இந்த ஆடல் வகுப்பைச் சேர்ந்த பிராமண சமூகம் ஒன்று அங்கே இன்னும் நிலைபெற்று வாழ்கின்றது என்றும் கூறப்படுகிறது.

## சேரநாடும் கொங்குநாடும்

நாம் அடுத்து ஆராயவேண்டும் முக்கிய செய்தி இந்நூலில் வரும் கொங்கு நாட்டைப்பற்றிய குறிப்புகளும், இவ்வரிய நூலிலிருந்தும் அதன் இணைநூலாகிய மணிமேகலையிலிருந்தும் தெரியவரும் அளவு கொங்கு நாட்டுக்கும் சேரநாட்டுக்கும் இடையில் உள்ள அரசியல் தொடர்பும்

* The inscription referred to is No. 65 of 1914 coming from the temple at Kamarasavalli in the Udaiyarpalaiyam Taluq, Trichinopoly District. It refers to a provision made for a Chakkai dancer entitled Chakkai Marayan Vikrama Cholan for his performances in connection with the festivalof *Ardhra* in *Margali* and the festival in the month of Vaikasi. There is a further reference in section 13 of the Epigraphist's report for 1924—25 where this inscription is referred to, and some little other information is also given in association with the name of Rajaraja, the father of Rajendra chola.

ஆகும். கொங்கு நாட்டைப்பற்றிப் பல குறிப்புக்கள் குறிக்கப்பட்டுள்ளது. அது பொதுவில் சேர நாட்டுக்கு வெளியில் உள்ள ஒரு நிலப்பகுப்பாகவே பெரும்பாலும் கூறப்படுகிறது. கொங்கு நாட்டின் அம்சங்களைப்பற்றிக் குறிப்பிடும் முதல் குறிப்பு இதுவாகும் :

"வில்லெழு தியவிமயத் தொடு
கொல்லி யாண்ட குடவர் கோவே."

—காதை 24; இறுதி வரிகள்

இங்குச் சேரன் ஒருபுறம், விற்பொறி தாங்கிய இமயமலைக்கும் தென்னாட்டில் இப்போது கொல்லிமலை என்று வழங்கும் கொல்லிக்குன்றத்துக்கும் ஒன்றுபோலவே உரிமை உடையவனாகக் கூறப்படுகிறான். அடுத்தபடி 25-ஆம் காதையில் கொங்கு மக்களே குறிப்பிடப்படுகின்றனர். வில்லவன் கோதை என்ற அமைச்சன் இமயமலையிலிருந்து கண்ணகியின் உருச்சமைக்கச் சிலை கொண்டு வருவதற்காக வடபுலத்தில் படையெடுக்க வேண்டும் என்ற கருத்திலிருந்து அரசனை விலக்கி, அவனுக்கு வேண்டும் கல்லை அனுப்பித் தரும்படி அங்குள்ள அரசர்களுக்குச் செய்தி அறிவிக்கும் படி தூண்ட முயலுகிறான். அவ்வமயம் அரசனுடைய பழைய வெற்றிகளைக் குறிப்பிடுகையில் அவனது முதல் வெற்றியாக அவ்வமைச்சன் புலிக்கொடியை யுடைய அரசனையும் மீன்கொடியையுடைய் அரசனையும் கொங்கர் செங்களத்தில் முறியடித்தான் என்று கூறுகிறான். இதனை,

'நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தன ராயினும்''

—காதை 25; வரி. 152-154

என்னும் இவ்வடிகளால் உணரலாம். இதிலிருந்து புலிக்கொடியுடைய சோழனையும் மீன்கொடியுடைய பாண்டியனையும் சேரன் கொங்கர்நாட்டின் ஏதோ ஒரு பகுதியிலுள்ள செங்களம் ஒன்றில் சந்தித்து அவர்களைத் தோற்கடித்தான் என்பதும், இப்புகழ் உலகின் நாலாத்திசை

யிலும் பரந்தது என்பதும் தெரிகின்றன. எனவே, கொங்கு நாடு அவன் பகைவர்களால் தாக்கப்பட்ட சேர நாட்டினின்று தனிப்பட்ட ஒரு நாடு என்பது விளங்கும். 30-ஆம் காதையில் மற்றோர் இடத்தில் செங்குட்டுவன் தன் நாட்டில் பத்தினியைப் பிரதிஷ்டை செய்ததுபோலவே,

"குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்"
—வரி. 159-160.

தங்கள் நாட்டிலும் பிரதிஷ்டை செய்ய இணக்கம் தர வேண்டுமென்று வேண்டினர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இங்ஙனம் வேண்டியவர்களிடையே 'குடகக் கொங்கர்' என்ற பெயரும் காணப்படுகிறது. இத்தொடருக்குக் குடகு மக்களும் கொங்கு மக்களும் என்றோ, அல்லது மேலைக்கொங்கு நாட்டைச் சேர்ந்த மக்கள் என்றோ பொருள் கொள்ளலாம். சரித்திர காலங்களில் கொங்குநாடு மேலைக்கொங்கு, தென் கொங்கு, வட கொங்கு என்ற மூன்று பிரிவுகளை உடையதாக இருந்தது. இத்தகைய பிரிவினை பண்டும் இருந்ததாகக் கொள்ளலாம். அங்ஙனம் இருந்ததெனக் கொள்ளத் தடை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அங்ஙனம் கொண்டால் குடகக் கொங்கர் என்பது மேற்குமலைத் தொடரை அடுத்து அதன் அடிவாரத்துள்ள குன்றுகளில் சற்றுத் தொலைவரை உள்ள கொங்குநாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் என்று பொருள் தருவதாகும். எவ்வகையில் எடுத்துக்கொண்டாலும், பத்தினிப் பிரதிஷ்டை செய்ய விரும்பிய கொங்குநாட்டரசன் ஒருவன் இருந்தான் என்பது வெளிப்படை. அவ்வரசன் சேரநாட்டரசனுக்குக் கீழ்ப்பட்டு அவன் மேலதிகாரத்தை ஒப்புக்கொண்டவனுயிருத்தல் கூடும். ஆயினும் நாம் இப்பொழுது செய்யும் ஆராய்ச்சிவரையில் கொங்கு ஒரு தனி நாடாக இருந்தது என்பதை விளக்க இதுவே போதியது. கொங்கு நாட்டின் இங்கிலை, அது சேரநாட்டின் ஓர் உட்கூறு என்றோ அல்லது சேர அரசரின் தாயக

நாடு என்றே கூறுவதனுடன் முற்றிலும் முரண்பட்டதாகும்.

## செங்குட்டுவன் கீழ்ச் சேரர் பேரரசுத்தலைமை.

சிலப்பதிகாரத்திலிருந்து விளங்கும் அடுத்த செய்தி சேரநாட்டரசனின் உயர் நிலைபற்றி அந்நூலிற் காணும் விவரங்களும், தென் நாட்டில் தன் பேரரசை நிலைநாட்டும் வகையில் அவன் வென்ற பகுதிகள்பற்றிய விவரங்களும் ஆகும். கீழே தரப்படும் மாடலன் நாவன்மைமிக்க கூற்று அவ்வெற்றிகளைப் புனைந்து கூறி விளக்குகின்றது.

" ........... ........... குறையாக் கேள்வி
மாடலன் எழுந்து மன்னவர் மன்னே
வாழ்கநின் கொற்றம் வாழ்கவென் றேத்திக்
கறிவளர் சிலம்பிற் றுஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூ ரெறிந்தபின்
ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயில் நிலைச்செரு வென்று
நெடுந்தேர்த் தானையொ டிடும்பிற்புறத் திறுத்துக்
கொடும்போர் கடந்து நெடுங்கட லோட்டி
உடன்றுமேல் வந்த ஆரிய மன்னரைக்
கடும்புனற் கங்கைப் பேர்யாற்று வென்றோய்
நெடுந்தார் வேய்ந்த பெரும்படை வேந்தே
புரையோர் தம்மொடு பொருந்த வுணர்ந்த
அரைச ரேறே யமைகநின் சீற்றம்
மண்ணாள் வேந்தே நின்வா ணாட்கள்
தண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க
அகழ்கடன் ஞாலம் ஆள்வோய் வாழி
இகழா தென்சொற் கேட்டல் வேண்டும்
வையங் காவல் பூண்டநின் னல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை
வேந்துவினை முடித்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிநின் னூங்கணோர் மருங்கில்
கடற்கடம் பெறிந்த காவல னாயினும்
விடர்ச்சிலை பொறித்த விறலோ னாயினும்

நான்மறை யாளன் செய்யுட் கொண்டு
மேல்நிலை யுலகம் விடுத்தோ னாயினும்
போற்றி மன்னுயிர் முறையிற் கொள்கெனக்
கூற்றுவரை நிறுத்த கொற்றவ னாயினும்
வன்சொல் யவனர் வளநா டாண்டு
பொன்படு நெடுவரை புகுந்தோ னாயினும்
மிகப்பெருந் தானையோடு இருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருந்திற லாயினும்
உருகெழு மரபின் அயிரை மண்ணி
இருகடல் நீரும் ஆடினோ னாயினும்
சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோ னாயினும்
மீக்கூற் றாளர் யாவரும் இன்மையின்
யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோர் மருங்கில்
செல்வம் நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரின்
கண்டனை யல்லையோ காவல் வேந்தே
இளமை நில்லா தென்பதை எடுத்திங்கு
உணர்வுடை மாக்கள் உரைக்க வேண்டா
திருஞெமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே
நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனை
விண்ணோர் உருவின் எய்திய நல்லுயிர்
மண்ணோர் உருவின் மறிக்கினும் மறிக்கும்
மக்கள் யாக்கை பூண்ட மன்னுயிர்
மிக்கோய் விலங்கின் எய்தினும் எய்தும்
விலங்கின் யாக்கை விலங்கிய இன்னுயிர்
கலங்கஞர் நரகரைக் காணினுங் காணும்
ஆடுங் கூத்தர்போல் ஆருயிர் ஒருவழிக்
கூடிய கோலத் தொருங்குநின் றியலாது
செய்வினை வழித்தாய் உயிர்செலு மென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலின்
எழுமுடி மார்பநீ யேந்திய திகிரி
வழிவழிச் சிறக்க வயவாள் வேந்தே
அரும்பொருட் பரிசிலேன் அல்லே னியானும்
பெரும்பே ரியாக்கை பெற்ற நல்லுயிர்
மலர்தலை யுலகத் துயிர்போகு பொதுநெறி

புலவரை யிறந்தோய் போகுதல் பொறேஎன்
வானவர் போற்றும் வழிநினக் களிக்கும்
நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்
அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்
நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்
இதுவென வரைந்து வாழ்நாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவது மில்லை
வேள்விக் கிழத்தி யிவளொடுங் கூடித்
தாழ்கழல் மன்னர் நின்னடி போற்ற
வூழியோ டூழி யுலகங் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை யென்று."

—காதை. 28. வரி. 111-186

இதில் வியலூர்ப் போர் நடந்த இடமான வியலூர் என்பது இன்னது என்று நம்மால் உணரமுடியாதிருப்பது நமது துரதிருஷ்டமே ஆகும். அதன்பின் நேரி வாயில் என்னுமிடத்தில் கிளர்ச்சியில் மூளைத்த சோழ மன்னன் இளங்கோக்கள் ஒன்பது பெயரை அடக்கியதும்; கடற்கண் பகைவரை அடர்த்து வென்றதும் தென்நாட்டின் மேற் படையெடுத்த ஆரிய மன்னரைக் கங்கைக்கரை வரை சென்று முறியடித்ததும் கூறப்படுகின்றன. இக் கூற்றின் முதற்பகுதி இதனுடன் முடிகிறது. இதன் பின்னும் பல வெற்றிகள் குறிப்பிடப்படுகின்றன. ஆனால், அவை முற்றிலும் செங்குட்டுவனுக்கே உரியவை அல்ல. அவற்றுள் பல அவன் முன்னோர் அடைந்த வெற்றிகள் ஆகும். அவற்றுள் கடற் கடம்பர்களைக் கீழடக்குதல், இமயமலையில் விற்பொறி நாட்டல், அரசன் பெயரால் எழுதிய பாடலுக்காக அதனை வரைந்த பார்ப்பனனைத் துறக்கத்துக்கு அனுப்பியது, காலனையே கட்டுப்படுத்தி ஒரு வரம்புக்கு உள்ளாக்கியது, யவனர் நாட்டில் தன் அரசாட்சியை நிலை நிறுத்தியது, பொன்படு நெடுவரை (பொன் தரும் மலை) யைக் கடத்தல், சேரநாட்டின் வடக்கி லுள்ளதாகக் கூறப்படும் அகப்பாவை வெல்லல், 'அயிரை'

என்ற குன்று ஒன்றைப்போல 'அயிரை' என்றே குறிக்கப் படும் ஆற்றில் குளித்தல், கீழ்க்கடல் மேல் கடலாகிய இரு கடல் நீரிலும் ஒருங்கே குளித்தல், சதுக்க பூதத்தைக் கொணர்ந்து பிரதிஷ்டை செய்து விழாவாற்றுதலாகிய அருஞ்செயல் ஆகியவை அடங்கும். இவ்வகையில் கடற் கடம்பரை வெல்லல் செங்குட்டுவன், அவன் தந்தை, ஒரு வேளை இருவருக்கும் முந்திய அரசன் ஆகிய மூவருக்குமே உரிய செயலாம். விற்பொறித்தல் சிறப்பாக அவன் தந்தை செயல் ஆகும். பார்ப்பனனுக்குத் துறக்க வாழ்வளித்தல் அவன் சிற்றப்பனுடையது. கூற்றுவனை வரம்புபடுத்தல் வேறு எக்குறிப்புகளின் உதவியுமில்லா திருப்பதனுடன் நன்கு விளங்காததாகவும் இருக்கிறது. யவனர் நாடாளு தலும் பொன்படுமலை கடத்தலும் வெளிநாடொன்றை வென்று ஆண்டதைக் குறிக்கும். இது செங்குட்டுவன் தந்தையின் செயல் ஆகும். அகப்பா வெற்றி அவன் சிற்றப்பனல் வடமலையாள நாடு வெல்லப்பட்டதைக் குறிக் கும். அயிரை யாற்றில் குளித்தல், இரு கடல் நீரிலும் ஒருங்கே குளித்தல் ஆகிய இரண்டும் அதே சிற்றப்பனுக் குரியவை. சதுக்கப்பூதம் (க்ஷேத்திர பாலர்) என்ற தெய்வத்தை வஞ்சிக்குக் கொண்டுவந்து விழா நாட்டியது செங்குட்டுவனது செயலே யாகும். சிலப்பதிகாரத்திலேயே காணப்படும் சுருக்கமான குறிப்புகள் மற்றைச் சங்க நூல் களால் வலியுறுகின்றன. இவற்றை நாம் பின் ஆராய் வோம். இப்போதைக்கு நாம் கவனிக்க வேண்டுவது, இக் குறிப்புகளால் செங்குட்டுவன் நாட்களுக்குள் சேரநாடு, தென் நாட்டிலுள்ள தமிழ் அரசுகளையும் சிற்றரசுகளையும் அடக்கிப் பேரரசு நாட்டி இருந்தது என்பதே ஆகும். மாடலப் பார்ப்பான் இவ்வரசனை ஏழு முடிகளை மாலையாக அணிந்தவன் என்று குறிப்பிடுவது இதனை விளக்கமாகக் காட்டுகிறது. இம்மாலை ஏழு மன்னரின் மணி முடிகளால், அஃதாவது மற்ற இரண்டு தமிழரசர் முடிகளையும் தமிழ் இந்தியாவில் தலைமை வாய்ந்த சிற்றரசர் ஐவர் முடிகளையும்

கொண்டு செய்யப்பட்டதென மற்றோரிடத்தில் விளக்கப் படுகிறது. இச்செயல் செங்குட்டுவன் தந்தைக்கு உரியது; தந்தை உரிமையாலோ, அல்லது அதுபோன்ற தன் செய லின் உரிமையாலோ செங்குட்டுவனுக்கும் இஃது உரிமை யுடையதாகின்றது. இங்ஙனமாகச் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட வகையிலேயே செங்குட்டுவன் சேரநாட்டின் தனிப் பெருந் தலைவனாகவும் தென்னாட்டிலேயே தன் தலை மைப் பேரரசை நிலை நாட்டியவனாகவும் காணப்படுகிறான். அத்துடன் சிறப்பாகக் கடலிலும் வடஇந்தியாவில் கங்கைக் கரையிலும் அவன் தன் வெற்றிகள் மூலம் தன் ஆதிக்கத் தையும் செல்வாக்கையும் கொண்டு சென்றவனாகவும் கூறப் படுகிறான்.

## மணிமேகலையில் வஞ்சிநகரம் பற்றியும் சேரநாடு பற்றியும் காணப்படும் குறிப்புகள்

செங்குட்டுவனைப் பற்றியும் அவன் செயல்களைப் பற்றியும் சிலப்பதிகாரத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்திகள் மிகப் பலவாகும். இவற்றை நோக்க, இவை பற்றி மணிமேகலையிலிருந்து அறியவரும் செய்திகள் மிகச் சிலவே ஆகும். அவற்றுட் சில நம்மால் கவனிக்கத் தக்க வையே யாகும். நமது முதல் குறிப்பு,

"எஞ்சா மண்ணசை இ யிகலுளந் துறப்ப
வஞ்சியி னிகந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையுந் தேரும் மாவும்
மறங்கெழு நெடுவாள் வயவரு மிடைந்த
தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத் தலைவந்தோர்
சிலைக்கய னெடுங்கொடி செறுவேற் றடக்கை
யார்புனை தெரிய லிளங்கோன் றன்னாற்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
யொளியொடு வாழி யூழிதோ றூழி."

—மணிமேகலை-காதை. 19; வரி. 119-128.

என்னும் பகுதியே யாகும். இதில் படையெழுச்சி வஞ்சியி லிருந்து புறப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்படை

யெழுச்சி சேரன்து விற்கொடியையும் பாண்டியன் மீன் கொடியையும் தாங்கிச் சென்றதாகக் கூறுகிறது. இதிலிருந்து சேரர்படையில் பாண்டியர் படைப்பகுதி ஒன்றும் இருந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது. இப்படை காரியாற்றின் கரையில் "ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்" முறியடிக்கப் பெற்றது. இப்படை யெழுச்சிக்குத் தூண்டுகோல் மண்ணசை (பூமி ஆசை) என்று கூறப்படுகிறது. இதன் பொருள், புதிய அதாவது முன் கீழடக்கப்படாத நாட்டைப் பிடிப்பது என்பதேயன்றி வேறன்று. 21-ஆம் காதையில் வஞ்சி பெயரளவில் மட்டும் குறிக்கப்படுகிறது. இதில் 'நீ வஞ்சி செல்வாய்' என மணிமேகலையிடம் எதிர்கால நிகழ்ச்சியுரை ஒன்று கூறப்படுகிறது. மணிமேகலையே தன் தாயினிடமும் பாட்டியினிடமும் கண்ணகிக்கு விழாக்கள் நடத்தும்படி தான் வஞ்சி செல்ல இருப்பதாகக் கூறுகிறாள். இஃது அவள் உறவினரிடம் புகாரில் கூறப்பட்டது என்பதைக் கீழ்வரும் பகுதிகளால் உணர்க.

"சாவக மன்னன் றன்னா டடைந்தபின்
ஆங்கத் தீவம்விட் டருந்தவன் வடிவாய்
பூங்கொடி வஞ்சி மாநகர் புகுவை."

—மணி - காதை 21; வரி. 89-91.

"மாசில் மணிபல லவந்தொழு தேத்தி"
வஞ்சியுட் புகுந்து மாபத் தினிதனக்
கெஞ்சா நல்லறம் யாங்கணுஞ் செய்குவல்"

—மணி-காதை 24; வரி. 154-156.

25-ஆம் காதை 206-ஆம் வரியில் புகார் கடல் கொள்ளப்பட்டுப் போனபின் மணிமேகலையின் தாயும் பிறரும் பாதுகாப்பை முன்னிட்டுத் தொலை தூரத்திலுள்ள வஞ்சிக்குச் சென்றனர் என்பது,

"விரிதிரை வந்து வியனகர் விழுங்க
வொருதனி போயின னுலக மன்னவன்
அருந்தவன் தன்னுடன் ஆயிழை தாயரும்
வருந்தா தேகி வஞ்சியுட் புக்கனர்"

—மணி-காதை. 25; வரி. 203-206.

எனக் காதையின் கடைசி அடிகளில் மீண்டும் வஞ்சியின் குறிப்பு ஏற்படுகிறது. சாவக நாட்டரசன் ஆபுத்திரனை இலங்கையிலிருந்து தன் நாடு மீளும்படி கூறிவிட்டு மணி மேகலை வஞ்சி நோக்கிப் புறப்படுகிறாள் என்பதை,

"மன்பெரு நன்னாடு வாயெடுத் தழைக்கும்
வங்கத் தேகுதி வஞ்சியுட் செல்வனென்
றந்தரத் தெழுந்தனள் அணிமே கலையென"

—மணி-காதை. 25; வரி. 237-39.

இவ்வடிகள் தெரிவிக்கின்றன. மணிமேகலைஅறவண அடிகளிடமிருந்து புத்தசமய நுட்ப அறிவு அடையு முக்கிய மற்ற சமயவாதிகளையும் சமய ஆசிரியர்களையும் கண்டு அவர்க்ள் போதனைகளை உணரும் நோக்கத்துடன் மாற்றுருவில் வஞ்சி செல்கின்றாள். நூலின் இப்பகுதி, நகர் மதில்களின் புறத்துள்ள சோலையை சிலப்பதிகாரத்தில் பல் சமயவாதிகள் இருப்பதாகக் கூறப்படும் நகரத்துப் புறஞ்சேரியை—இவ்விரிவரன வர்ணனை நினைவூட்டுவதாக இருக்கிறது. இதனை,

"மையறு சிறப்பின் தெய்வம் தந்த
மந்திர மோதியோர் மாதவன் வடிவாய்த்
தேவ ருலகமுந் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
நற்றவ முனிவரும் கற்றடங் கினரும்
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
எங்கணும் விளங்கிய எயிற்புற இருக்கையில்"

—மணி-காதை 26; வரி. 70-76.

என்னும் இப்பகுதியால் உணர்க. மணிமேகலை தானும் துறவி உருக்கொண்டு அவர்களை அங்கே சந்திக்கிறாள். தொடக்கத்திலேயே அவள் வஞ்சிக்கு வந்ததாகக் கூறப் படுகிறது. அங்கிருந்து அவள் காஞ்சிக்குப் புறப்பட இருக்கிறாள். அவள் வஞ்சியில் தன் பாட்டனைச் சந்திக் கிறாள் என்பதையும் அவர்தம் சொத்து முழுமையும் பிறருக் குத் தானமாக அளித்துவிட்டுக் காவிரிப்பூம் பட்டினத்

துக்கு நேர்ந்த தீ நிகழ்ச்சிக்குப்பின் வஞ்சியில் சென்று தங்கியிருந்தார் என்பதையும்,

"நவையறு நாக நல்லறம் பகர்வோர்
உறையும் பள்ளிபுக் கிறைவனை நல்லாற்
கோவலன் ருதை மாதவம் புரிந்தோன்
பாதம் பணிந்து"

—காதை. 28; வரி. 71-74.

"புரிந்த யானிப் பூங்கொடிப் பெயர்ப்படூஉந்
திருந்திய நன்னகர் சேர்ந்தது கேளாய்"

—காதை. 28; வரி. 101-102.

"கண்டுதொழு தேத்துங் காதலின் வந்தித்
தண்டாக் காட்சித் தவத்தோ ரருளிக்
காவிரிப் பட்டினம் கடல்கொளு மென்றவத்
தூவுரை கேட்டுத் துணிந்திவ ணிருந்தது."

—காதை. 28; வரி. 133-136.

என்னும் பகுதிகள் அறிவிக்கின்றன. நூலின் பின்வரும்,

"அருந்தவன் அருள ஆயிழை வணங்கித்
திருந்திய பாத்திரஞ் செங்கையி னேந்திக்
கொடிமதின் மூதூர்க் குடக்கணின் ருேங்கி
வடதிசை மருங்கின் வானத் தியங்கி"

—காதை. 28; வரி. 162-165.

என்னும் இப்பகுதியில் மணிமேகலை நகரின் மேற்புறத்தினின்றும் புறப்பட்டு வடதிசையாக வானத்தெழுந்து சென்று காஞ்சி நகரை அடைகிருள் என்பது கூறப்படுகிறது. வஞ்சி நகரைப்பற்றி இந்நூலில் நமக்குக் கிட்டும் குறிப்புகள் அனைத்தும் பெரும்பாலும் இவையே. செங்குட்டுவனைப்பற்றிய சில விவரமான குறிப்புகள் நீங்கலாகச் சேரநாட்டைப் பற்றியும் வஞ்சியைப் பற்றியும் நமக்குக் கிடைக்கும் குறிப்புகள் மிக்க பொதுப்படை யானவையே. எனவே, மணிமேகலையில் கூறப்படுபவை சிலப்பதிகாரத்திற் காணப்பட்டவற்றை உறுதிசெய்ய உதவுகின்றனவேயன்றிச் சிலப்பதிகாரத்திலிருந்து அறிபவற்றுக்கு மேலாக எதையும் தெளிவுபடுத்துவனவாக இல்லை.

## இந்நூல்களுக்கும் பண்டைக் கிரேக்க நிலநூல்வல்லார் கூற்றுகளுக்கும் உள்ள ஒற்றுமை

இரண்டு நூல் குறிப்புகளையும் ஒத்திட்டுப் பார்த்தால் தெரியவருபவையாவன : சேரநாடு மேல்கரையில் நீண்டு கிடந்தது; அஃதாவது, அது மேல்கரையில் உள்ள நாடே என்பதிலும் சிறப்பாகக் கடலுக்கும் மேற்கு மலைத்தொடர்களுக்கும் இடையிலேயே அஃது இருந்தது என்பதற்கும் ஐயமில்லை. சேரர் அடைந்த நாடுகள் ஏறத்தாழத் தமிழ் இந்தியா முழுவதுமே பரந்து கிடந்தது என்பனவாகும். இந்நூல்கள் கூற்றைக் கொண்டால், சேரர் ஆட்சி இமயமலை வரை கடந்து பரந்திருந்திருக்க வேண்டும் என்றும் தலைநகர் வஞ்சியும் இச்சேர நாட்டில் துறைமுகமாயில்லாவிட்டாலும் கடலிலிருந்து நெடுந்தொலை அகலாமலே இருந்தது என்றும் கொள்ளலாம். சேர நாட்டைப்பற்றியும் அதன் தலைநகரைப்பற்றியும் நமக்குக் கிடைத்துள்ள இவ்விவரங்கள் பண்டைக் கிரேக்க நிலநூல் வல்லாலரின் சிதறுண்ட குறிப்புகளை உறுதி செய்கின்றன. இவற்றிடையே உள்ள ஒற்றுமை மிகுதியாக இருப்பதுடன் மிகச்சிறு விவரங்களில்கூட முழு ஒற்றுமை யுடையவையாக இருக்கின்றன. சான்றாக, சேரநாட்டை அடுத்து வடக்கிலுள்ள கடற்கரை, கடற்கொள்ளைக்காரர் நிரம்பியதென்பது இருசாரார் உரைகளிலும் தெளிவாகக் காணப்படுகிறது. இவ்வொற்றுமையிலிருந்து இரு சாராரும் ஒரே காலத்துச் சேரநாட்டு நிலையையே வருணிக்கின்றனர் என்பதை நாம் காணலாம். இவ்வுண்மை, இத்தமிழ் இலக்கிய நூல்களின் காலவகையில் பெரிதும் விளக்கம் தருவது கவனிக்கத் தக்கது.

## தலைநகரின் பெயர்—வஞ்சி அல்லது கருர்

இனித் தலைநகரின் பெயரை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம் : இலக்கியத்திலும் பொது வழக்கிலும் அதன் மிகப் பழக்கமான பெயர் வஞ்சி என்பதே யாகும். ஆனல் அதற்குக் 'கருர்' என்று மற்றொரு பெயர் வழங்கியதாகவும்

தெரிகிறது. இஃது அவ்வளவு சாதாரணப் பெயராயிருந் திராவிடினும் பெரும்பாலும் நன்கு தெரியப்பட்ட ஒன்ருகவே இருந்தது. கால்டுவெல் துரை மகனர் பண்டைக் கிரேக்க நிலநூல் வல்லார் குறிப்பிட்ட கரூரைக் கொங்கு நாட்டுக் கரூருடன் வேண்டுமென்றில்லாவிடினும் துரதிருஷ்டவசமாகவேனும் ஒன்றுபடுத்திக் கூறினர் என்னல் வேண்டும். ஏனெனில், அவர் எதிர்பார்த்திராத வகையில் அண்மைக் காலங்களில் அஃது அலை எதிர் அலையாக வந்து வந்து மோதியிருக்கிறது. இப் பிரச்னையை இப்போது முழுமையாக ஆராயப் புகாமலே பண்டை நிலநூல் வல்லார் அறிந்த கரூர் சேரநாட்டுக் கரையில் உள்நாட்டில் இருந்தது என்பதையும் அவர்கள் அதுபற்றிக் குறிப்பிட்டது அவ்வளவே என்பதையும் மட்டும் கூறிச் செல்வோம். இக்காலத்தில் பலர் ஆய்ந்தோய்ந்து பாராமல் வஞ்சி என்ற சொல்லை 'நாணல்' அல்லது 'சூரல்' என்று பொருள் கொள்கின்றனர். பொது வழக்கில் வஞ்சி அதன் மறுபெயரே யாகும். ஆனல் இலக்கிய வழக்கில் அச்சொல் பெரும்பாலும் தனிச்சிறப்புடன் பூவுடைய ஒருவகைக் கொடிக்கே வழங்கப்படுகிறது. வடமொழியாளர் வஞ்சி என்பதைக் கொடி என்ற பொருளிலேயே வழங்குகின்றனர். 'வஞ்சுள' என்ற வடிவிலேயே அதற்கு நாணல் அல்லது சூரல் என்ற பொருள் ஏற்படுகிறது. ஆயினும், தமிழிலக்கியத்தின் பரந்த வழக்கில் வஞ்சி என்னும் சொல் 'கொடி' அல்லது 'செடி'வகையை மட்டுமன்றி, அதற்குரிய பூவையும் குறிக்கிறது. சிலப்பதிகாரத்திலேயே பல இடங்களில் 'பூவா வஞ்சி' என்ற தொடரால் வஞ்சி நகருக்கும் வஞ்சிக் கொடிக்கும் உள்ள வேற்றுமை வற்புறுத்தப்படுகிறது. அது பூவாவஞ்சி (வஞ்சி நகரு)க்கு எதிரான 'பூத்த வஞ்சி' அல்லது 'பூக்கும் வஞ்சி', பூக்கள் தரும் வஞ்சிக் கொடியைக் குறிக்கின்றதென்பது சொல்லாமலே தெரியலாம். இம் மாறுபாட்டைக் கிளந்துரைக்க உபயோகிக்கப் படும் செய்தி 'பூத்தல்' ஆதலால், இப் பெயர் பூக்கும் செடி



திருவஞ்சைக்களம் கோவில்

அல்லது கொடியிலிருந்து வருகின்றதே யன்றி, மலையாளத்தில் இச் சொல்லின் சாதாரணப் பொருளாகிய 'படகு' என்பதிலிருந்து வரவில்லை என்பது தெளிவு. மிகப் பெரும் பான்மை வழக்காகப் படகு இங்கே வஞ்சி என்று அழைக்கப்படுவதால், 'வஞ்சிக்குளம்' அல்லது 'வஞ்சிக்களம்' என்பது 'வஞ்சிகள் அல்லது படகுகள் ஒன்று கூடும் இடம்' என்று எளிமையாகக் கொள்ளப்படுகிறது. இன்றைய நிலைமையில் இக் காலத்தில் இப்பெயர் கொண்ட 'வஞ்சிக்குளம்' என்ற கிராமத்தின் பெயரென்ற முறையில் இத்தொடர் பொருத்த மற்றதன்று. ஆனல், இக் கிராமத்துக்கு வழங்கும் 'வஞ்சிக் குளம்' என்ற பெயர் மிக அண்மையான கால வழக்கு என்பதை நாம் அறிதல் வேண்டும். சங்க காலத் தமிழிலக்கியம் எதனிலும் அஃது அப் பெயருடன் குறிக்கப் படவில்லை. மேலும் வஞ்சி நகரின் சீரோங்கிய காலத்தில் இவ் வஞ்சிக்குளம் அதன் ஒரு பகுதியாயிருந்திருக்கக் கூடுமாயினும், வஞ்சிக்குளம் அல்லது வஞ்சிக்களம் அல்லது சில சமயம் கொள்ளப்படும் வடிவில் 'அஞ்சைக்களம்' என்பனவற்றுடன் அதை ஒன்றுபடுத்துதல் தகாது. இறுதியில் சொன்ன, அஞ்சைக்களம் என்ற மறு பெயர், சேர அரசரான சேரமான் பெருமாளின் ஆசிரியரும் அறிவுரையாளரும் ஞானகுருவும் ஆகிய சுந்தரமூர்த்தி நாயனரின் திருப்பதிகங்களில் குறிக்கப்படுவதாகும். செவிவழி வழக்கில் சேரமானின் தலைநகராகவும் அது கூறப்படுகிறது. 'அஞ்சைக்களம்', பொது மக்கள் வழக்கில் 'அஞ்சைக் குளம்' என்றும் மாறுபடுகிறது. மக்கள் தத்தம் வேண்டு கோளின்படி நாணயங்களையும் பிற வகைக் காணிக்கைகளையும் குளத்தில் இடும் வழக்கத்திலிருந்து இத்தொடர்கள் ஒருவேளை எழுந்தவையாயிருத்தல் கூடும். இவ் வழக்கம் இன்றளவும் அவ்விடத்தில் நடைபெறுவதாகும். ஆனல் இஃது அவ்விடத்திற்கு மட்டுமே தனிச் சிறப்புடைய வழக்கு அன்று. தென் இந்தியாவில் இவ்வழக்கம் நடைமுறையில் இருக்கும் இடங்கள் இன்னும் பன்னிரண்டு

உள்ளன. அவற்றை மேற்கோள் வாயிலாக எடுத்துக் காட்டவும் முடியும். இங்ஙனம் எறியப்படும் காசுகளை மக்கள் 'அஞ்சிக்கம்' என்று கூறுகின்றனர். கொச்சியில் இஃது 'அஞ்சைக்கம்' எனப் பொது வழக்கில் கூறப்படு கிறது. எனவே திரு அஞ்சைக்குளம் என்பதும் திரு வஞ்சிக்குளம் என்பதும் ஒரே இடத்துக்கு உரிய இருவேறு பெயர்களாக இருக்கக்கூடும். ஆனால் நாம் இங்கே ஆராய எடுத்துக்கொண்ட பொருள் இப் பெயர்களைப் பற்றிய தன்று; அரசர் தலைமை இடமாகிய 'வஞ்சி' என்ற பொதுப் படையான பெயர் பற்றியதாகும். இது 'பூவாவஞ்சி' என்ற இலக்கிய வர்ணனையை ஒட்டியெழுந்ததே என்பது உறுதி. இவ் வழக்கில் இது பூத்த வஞ்சிக்கொடி அல்லது செடிக்கு மாறாகவே கூறப்படுகிறது. வேறு எப்பொருளுட னும் அஃது இணைத்துக் கூறப்படவில்லை. இங்ஙனம் செடி கொடிகளின் பெயரிலிருந்து இடங்கள் பெயர் பெறுவது வியப்பு அன்று. எனவே, வஞ்சிக்குளத்தின் இருவேறு மாறுபட்ட பெயர்களுக்கும் புறம்பாக வஞ்சி என்ற பெயரை நாம் ஆராயவேண்டும்.

இவ் வஞ்சி எங்கிருந்தது? மேலே பண்டைய நில நூல் வல்லவர்கள் குறிப்புகளையும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பழந் தமிழ்க் காப்பியங்கள் இரண் டையும் நாம் ஆராய்ந்ததிலிருந்து, வஞ்சி சேர நாட்டின் தலைநகரமாக இருந்ததென்றும், அது பெரும்பாலும் மேல் கடற்கரையை ஒட்டி இருந்தது என்றும் அது கடற்றுறைமுகம் அல்லாவிடினும் சற்றே உள் நாட்டில் அகன்றிருந்தது என்றும் அறிந்தோம். பண்டைய நில நூல் வல்லார் முஸிரிஸ் என்பதையே தலைநகரின் துறை முகம் என்றும், அதனின்றும் 'உள் நாட்டில்' சற்றுத் தூரத்தில் சேரர் தலைநகராகிய 'கரூர்' இருந்ததென்றும் கூறுகின்றனர். அவர்கள் 'உள் நாட்டில்' என்று கூறும் கூற்று நமக்குக் குழப்பத்தை விளைவிக்க வேண்டுவதே இல்லை. ஏனெனில், ப்ளினியின் உள் நாடு நாம் கொள்ளும்

தொலைதூர உள்நாடன்று. பாண்டியனுக்கு உரியதாகச், சற்றுத் தெற்கில் உள்ளதென்று அவர்கள் கூறும் நெல்கிந்தாவைப் போல, அதுவும் கடற்கரைக்கு அருகிலுள்ள உள்நாடே ஆகும். நெல்கிந்தா, கரையிலிருந்து 120 ஸ்டேடியம் அதாவது 10 மைலுக்கு உள்ளான தொலைவிலேயே இருந்ததாகக் கூறப்படுகிறது. கரையிலிருந்து 10 மைலுக்கு உள்ளாக உள்ள ஓரிடம் 'உள் நாடு' என்று கூறப்படுமாயின், அதனினும் சற்றுக் குறைந்த தூரம், ஓராறு மைலுள்ள இடமும் அவர்களால் உள்நாடு என உறைக்கப் படுவது கூடாததன்று. எனவே, பெரியாற்றின் சங்கம முகத்தில் உள்ள கடற்கரையிலிருந்து 5 முதல் 10 மைல் வரையுள்ள தொலைவில் 'கரூர்' என்ற நகரம் இருந்தால் அஃது அதிசயத்துக்கிடமாகாது. அது கரூர் என அழைக்கப்படினும் அவ்விடத்து மக்களிடையே இன்னொரு மறுபெயருடனும் சாதாரணமாக வழங்கி யிருக்கலாம். சிலப்பதிகாரம் அல்லது மணிமேகலையில் சேரர் தலைநகர் 'கரூர்' என்ற பெயருடன் குறிக்கப்படவே யில்லை என்பதைக் கண்டோம். ஆனல், பழய உரைகாரருள் ஒருவராவது பொதுமக்கள் அறியும்படி 'வஞ்சி' என்ற பெயரைக் 'கரூர்' என்று விளக்கிக் கூறுகிறார். சிலப்பதிகாரத்தில் இரண்டிடத்தில் உரைகாரர் வஞ்சி என்பது கரூர் என்று தெளிவுபடக் கூறுகிறார். வஞ்சி என்ற பெயரைவிட அவர்காலத்து மக்களுக்குக் கரூர் என்ற பெயர் எளிதில் உணரத் தக்கதாக இருந்தது என்பதை இது காட்டுகிறது. இப் பெயர் 'கரோரா', கேரொபோத்ரிஸுடன் பொருத்தமானதல்லவா? அவ்விடத்தில் கரூருடன் ஒப்பு உடைய எதாவது வேறு இடம் இருந்து அதுவே கரைக்கருகாமையில் உள்ள 'கரூர்' என்ற இடம் என்று கூற வழியிருக்கிறதா? இச்சந்தர்ப்பத்தில் நாம் நம் மனதிற் கொள்ள வேண்டும் விஷயம் ஒன்று உண்டு. அது யாதெனில், இப்பகுதியை ஒட்டி எர்ணாகுளத்துக்கு வடக்கே தள்ளியும் பொன்னானியிலிருந்தும் சற்றுத் தூரத்திலுள்ள 'சேற்றுவாய்' என்ற துறைமுகம் வரையிற்

பரவியும் கடலிலிருந்து சற்றுத் தொலைவில் வடக்குத் தெற்காக நீண்டு கிடக்கும் காயல் ஒன்று இருக்கிறது. காயலுக்கும் கடலுக்கும் இடையிலுள்ள நிலம் கடலாலானது என்று கூறலாம். அதற்கியைய, அது மணற்பாங்காகவும் இருக்கிறது. அது மிக்க அண்மையில் ஏற்பட்ட நிலமாகவும் கரையோர அலையியக்கத்திற்கு ஏற்ப அடிக்கடி மாறுவதாகவும் இருக்கிறது. கடலாலான புது நிலத்தை மலையாளிகள் 'புதுவைப்பு' எனக் கூறுவர். அதன் பொருள் புதிதாக ஏற்பட்டது என்பதே. காயலை அடுத்த நிலப்பகுதி மலையடிவாரம் வரையிலும் செம்மண்ணும் செந்நிறப் பாறையுமாயிருக்க, இப் பகுதிமட்டிலும் முற்றிலும் மணலாக அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. காயல் நெடுகிலும் பெரியாற்றின் முகத்துவாரத்திலிருந்து வடக்கில் 8 அல்லது 10 மைல் அளவும் உள்ள சிறு கிராமங்களில் பலவற்றின் பெயர்கள், முழுமையாகவோ பகுதியாகவோ 'கரூர்' என்ற பெயர் காணப்படுகிறது. அதன் குறுக்கே டச்சுக் கோட்டையின் பக்கத்திலுள்ள ஒரு முக்கியமான இடம் 'கருவா-படஞ்ஞா' என்று வழங்குகிறது. இதில் ஒரு சிற்றூரும் அதனை அடுத்து ஒரு சிறு குன்றும் இருக்கின்றன. அவ்விடத்தில் விசாரித்ததில் அப் பெயரின் பிற்பகுதியான 'படஞ்ஞா' என்பது உப்புப் பாத்திகளைக் குறிக்கிறது என்பது தெரிய வந்தது. அவ்விடமும் இப்போது உப்பெடுக்கும் இடமாகவே இருக்கிறது. 'படஞ்ஞா' என்ற இம்மலையாளச் சொல் 240 குழி நிலத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லான 'பாடகம்' என்பதனுடனும் ஊர்ப் புறத்து விளை நிலங்களைக் குறிக்கும் 'படாகை' என்ற சொல்லுடனும் உறவுடையதாயிருக்கக்கூடும். இச் சொற்களே அன்றி, ஆற்றின் இருகரையிலும் உள்ள பண்பட்ட நிலத்துக்குப் பெயராகத் தமிழில் 'படுகை' என்றொரு சொல்லும் இருக்கிறது. இலக்கியத்தில் இது 'படப்பு' என்ற உருவில் வழங்குகிறது. இவ்வூரைப்போலவே 'கரூர்ப் பட்டினம்' முதலிய பல ஊர்கள் இவ்விடமெங்கும் காணப்படுகின்றன.



சேரமான் பரம்பா

அவற்றின் ஒரு கோடியில் இப்போது மலையாளிகள் திருக்கணா-மதிலகம் என்றழைக்கும் இடம் இருக்கிறது. இது கிழக்குக் கோட்டை மதிலை அடுத்துள்ள மாளிகை என்று பொருள்படும் சொல்லின் மலையாளத் திரிபு என்பது தெளிவு. இதுவே சிலப்பதிகாரத்தில் 'குணவாயில் கோட்டம்' எனப்படுவது.. வஞ்சி நகர்க்கோட்டையின் கிழக்கு மதில் இவ்விடத்தில் இருந்திருக்க வேண்டும். அது தன் வளைவினுள் அழிக்கோட்டை முதலாகக் கொண்ட பல ஊர்களையும் உட்கொண்டதாயிருக்க வேண்டும். இவ் 'அழிக்கோடு' பெரியாறு கடலிற் சேரும் சங்கமுகம் அல்லது அழிமுகத்தில் உள்ளது; ப்ளினியும் பிறரும் குறிப்பிட்ட சங்கமுகமான முஸிரிஸ் இருந்த இடம் பெரும்பாலும் இதுவாயிருக்கலாம். இதிலிருந்து மேற்கில் வடசாய்வாக 2 மைல் தொலைவில் திருவஞ்சிக்குளம் உள்ளது. இங்கே தான் சேரமான் பரம்பா என்றழைக்கப்படும் தூபி அமைந்துள்ளது. இவ்விடத்தில் ஏதேனும் புத்தாராய்ச்சிக்கு இடமிருக்குமா என்று காணக் கொச்சி அரசாங்கத்தார் நில அகழ்வாராய்ச்சி நிகழ்த்தி வருகின்றனர். இதிலிருந்து அதே திசையில் பின்னும் சற்றுத் தூரத்தில் இக்காலத்திய கொடுங்கலூர் (Cranganure) கோயில் அமைந்திருக்கிறது. அதிலிருந்தும் சற்றுத் தூரத்தில்தான் க்ஷேத்திர பாலர் என்று வழங்கும் உருவச்சிலை இருக்கிறது. க்ஷேத்திர பாலர் என்ற நவீன வடமொழிப்பெயருக்குச் சரியான பண்டைத் தமிழிலக்கியப் பெயர் சதுக்கப்பூதம் என்பதாகும். கொச்சி அரசாங்கத்தாரின் நில அளவைக் கணக்கரின் உருவப்படங்களில் நெடுந்தொலை சுற்றளவுடைய இப்பரந்த பிரதேசம் முழுவதும் 'கரூர் வடக்கு' என்றும் 'கரூர் தெற்கு' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது கூறப்படுகிறது. இதிலிருந்து இவ்விடம் 'கரூர்' எனப் பெயர் பெற்றிருந்தது என்பதும், அதன் ஓர் பகுதி கடலுக் கருகில் நேராகவோ காயல் வழியாகவோ அதனுடன் தொடர்பு கொண்டுள்ளதாயிருந்ததுபற்றியே 'கருவூர்ப் பட்டினம்' என வழங்கப்பட்

டிருந்தது என்பதும் தெளிவாகின்றன. பெரியாறு அல்லது ஆன்பொருநை வெள்ளத்தால் சூழப்பட்ட. வஞ்சிக் கோட்டை இருந்த இடத்தை இவ்வெல்லைக்குள்ளாகவே நாம் தேடவேண்டும். சிலப்பதிகாரத்தில் கண்ட விவரங்களைக் கூர்ந்து கவனித்து ஆராய்ச்சி நடத்தினுல், அதன் கிடக்கையையும் எல்லைகளையும் கூட நாம் வரையறுத்துக் கூற முடியும். இப்போதைய இராஜபாதைகளின் அமைப்பின்படி முக்கியபாதை ஏறக்குறைய இன்று அழிக்கோடு இருக்கும் இடத்தில் பெரியாற்றிலிருந்து புறப்பட்டு இரண்டு கிளைகளாக வடக்கு நோக்கிச் செல்கிறது. ஒன்று கரை வழியே நேர்வடக்காகச் செல்லுகிறது. மற்றொன்று வடகிழக்காகக் காயல் கரைவழியாகச் சென்று சிறிது தூரத்துக் கப்பால் முக்கிய பாதையுடன் சென்று சேருகிறது. இன்னும் வடக்கில் சென்றபின் பாதை பின்னும் இரண்டாகப் பிரிகிறது. அவற்றுள் தலைப்பாதை, கரையை அடுத்தாற் போலக் கள்ளிக் கோட்டைவரை செல்லுகிறது. கிளைப் பாதை பொன்னனிக் காயலின் பக்கமிருந்து கிழக்குநோக்கித் திரும்பி மேற்கு மலைத்தொடரை அடுத்த குன்று நிறைந்த பிரதேசத்தைக் கடந்து பாலக்காட்டுக் கரையின் வடபகுதி வழியாகச் சென்று நீலகிரி மலையை அடைகிறது. பின்னல் கூறப்பட்ட இப்பாதையே சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட செங்குட்டுவன் சேனை சென்ற வழியுடன் பொருந்துவதாகும்.

> "குணகடல் பின்ன தாகக் குடகடல்
> வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
> வலமுறை வருதலும் உண்டென் றலம்வந்து
> நெஞ்சுநடுங் கவலம் பாய்த்
> துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே."

வரி. 13—17.

எனவரும் புறநானூற்று 31-ஆம்பாட்டிலும் இஃது ஒருவகையில் குறிக்கப்பட்டுள்ளது. இச் சான்றுகள் அனைத்தையும் கொண்டு பார்க்குமளவில், வஞ்சி என்பதும் கருர் அல்லது

வஞ்சிக்குளம் என்பதும் கட்டாயம் இவ்விடமாகவே இருக்க வேண்டும் என்றும் கூறிவிடலாம்.

## சிலப்பதிகாரமும் சங்க நூல்களும் இவ்வகையில் மிகுதியும் பொருத்தமுடையவையே.

மேலே நாம் நிகழ்த்திய தொடக்க ஆராய்ச்சியின் அடிப்படையை வைத்துக்கொண்டு, சங்க இலக்கியம் என்று கூறப்படும் நூல்களை ஆராய்வது பயனுடையதாகும். நாம் ஆராய்ந்த ஆராய்ச்சியினிடையே சேரநாடு அதன் தலைநகர் ஆகியவற்றின் கிடக்கையைப் பற்றிய மட்டில் ஒருபுறம் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களுக்கும் மற்றொரு புறம் பண்டைய சில நூல் வல்லாரின் சிதறுண்ட குறிப்புகளுக்கும் இடையில் உள்ள ஒற்றுமைகள் எவ்வளவோ மிகுதியாக இருப்பதைப் பார்க்க, அவற்றுக்கு இடையே காலவகையில் அவ்வளவு மிகுந்த வேற்றுமை இருக்க முடியாது என்று கண்டோம். சாதாரணமாக, ஒப்புக்கொள்ளப்பட்ட சிலப்பதிகார காலத்தையும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் வேறு வேறு காலத்தில் செய்யப்பட்ட நூல்களாக இருக்க முடியாதென்பதையும் நாம் ஏற்றுக்கொள்வோம். அங்ஙனமாயின், சங்க இலக்கியத்தின் காலமும் அதற்கு மிகவும் முந்தியதாகவோ பிந்தியதாகவோ இருக்க முடியாது. எனவே, பலவகையில் அவற்றைத் தனித்தனி ஆராய்வது வசதியானது. அத்துடன் மேலே நம் ஆராய்ச்சியில் நாம் முன்னேறுந்தோறும் இருசாரர் இலக்கியங்களிலுமிருந்து கிடைக்கும் சரித்திர விவரங்கள் ஒன்றை ஒன்று முற்றிலும் நெருக்கமாகத் தழுவி நிற்கின்றன. அவற்றின் பயனாக அவற்றையும் அதே காலத்தவை என்றே நாம் மதிக்க வேண்டிவரும்.

## சங்க இலக்கியமும் அதன் காலமும்

சங்க இலக்கியம் எனப்படுவது மூன்றும் சங்கம் என்று வரன்முறையாகக் கூறப்படும் சங்க காலத்துக்கும் அதற்கு

மூந்திய காலங்களுக்கும் உரிய நூல்தொகுதி யாகும். அவற்றின் சில சில தனிச்செய்யுட்கள் மூன்றும் சங்க காலத்துக்கு முன்னரே எழுதப்பட்டிருக்கலாம். ஒரு சில விதிவிலக்குகளை நீக்கினல் நமக்குக் கிடைத்துள்ள இந்த இலக்கியத் தொகுதி முற்றிலுமே பல்வேறு காலங்களில் எழுதப்பட்ட பலநூல் பகுதிகளின் தொகுப்பு ஆகும். அவை அனைத்தும் சில நூல்வகைகளுக்கு மாதிரிகளாகத் தொகுக்கப்பட்டவை. அத்தொகுப்பு ஏற்பட்ட காலம், அதில் குறிப்பிடப்படும் அறிஞர்கள், கவிஞர்கள், வள்ளல்கள் ஆகிய அனைவர் செய்திகள்பற்றியும் நாம் நிர்ணயமான வரையறைகள் செய்யமுடியும்; அவர்கள் காலத்தையும் ஏகதேசமாக வரையறுத்துக் கூறலாகும். தொகுத்தவர் வேறு வேறு அறிஞரே; ஆனல் அவை யனைத்தும் மக்கள் நன்மதிப்புப் பெற்ற புலவர் தொகுதி ஒன்றூல் ஏற்கப்பட்டன என்பதற்கு எழுத்துமூலம் தெளிவான சான்று இல்லையாயினும், அங்ஙனம் ஏற்கப்பட்டிருக்கக்கூடும் என்று கொள்ளலாம். ஆயினும் அவை வெளியிடப்பட்ட சமயம்மட்டும் குறிப்பாகத் திட்டப்படுத்திக் கூறமுடியும். இவற்றுட் பெருந்தொகைநூல்கள் எட்டிற்கு மாபாரதம் தமிழ்ப் பாவாக்கியவர் எனச் சிறப்பிக்கப்படும் ஒரே ஆசிரியர் காப்புச் செய்யுட்கள் கூறிருப்பதும் அவற்றைத் தொகுத்து வெளியிட உதவிய அரசர் ஒருவரே என்பதும் இக்காலத்தை வரையறுக்க உதவுபவை யாகும். புகழ்மிக்க இத்தொகுப்பாளர் இயற்பெயர் பெருந்தேவனூர் என்பது. அவர் “பாரதம் பாடிய பெருந்தேவனுர்” எனச் சிறப்பிக்கப்படுகிறூர். அவர் தொகுப்பதற்குக் காரணமாயிருந்த அரசர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்பவர். பெருந்தேவனூர்மூலம் இவற்றைத் தொகுப்பித்த இவ்வுக்கிரப் பெருவழுதி தலையாலங்கானப் போரில் வெற்றிகொண்ட புகழுடைய பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற மற்றொரு தமிழ் அரசருடன் தொடர்புடையவராகவே இருக்கவேண்டும். ஏனெனில், மகாபாரதத்தைத் தமிழ்ப்படுத்திய செயலுடன் அவர் மிக

வும் தொடர்புடையவர். தமிழ்ச் சங்கத்தை நிறுவியவரும் அவரே. எனவே, உக்கிரப்பெருவழுதியும் தலையாலங் கானப்போர் வென்ற இந்நெடுஞ்செழியனும் இப்பெருந் தேவனார் காலத்தவராகவே இருக்கவேண்டும். அவர்களுள்ளும் உக்கிரப் பெருவழுதியே பிந்தியவரா யிருக்கவேண்டும். அவரே அவருக்கடுத்த அரசராகவும் இருந்திருக்கலாமாயினும், இதனை உறுதியாகக் கொள்ளமுடியாது. எனவே, சங்கநூல்கள் சேரர்களையும் அவர் தலைநகராகிய வஞ்சியையும் குறிப்பிடும்போது அவை இவ்விரு பாண்டியர்களின் காலத்தையோ அதற்கு முந்திய காலத்தையோ சார்ந்தனவாகவே இருக்கவேண்டுமல்லாமல் (இடைச்செருகலென விளக்கப்பட்ட இடங்கள் நீங்கலாக) அவர்களுக்குப் பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவையாக இருக்க இடமில்லை. இடைச்செருகல்கள் இருக்கக்கூடும் என்று பொதுப்படையாக நாம் ஏற்றுக்கொள்ளக் கூடுமாயினும், போதிய சான்றுகள் இல்லாமல் கண்டதையெல்லாம் இடைச்செருகல் என்று கூறுவது பொருந்தாது. இவ்வடிப்படையுடன் சேரர் தாயகநாடு எது என்றும், அவர்கள் தலைநகரம் எங்கிருந்தது என்றும் நாம் ஆராயப்புகுந்த இவ்வாராய்ச்சியை நோக்கமாகக் கொண்டு சங்கநூல்களை ஆராய்வோம்.

## பதிற்றுப்பத்து—சேரர்களைப் பற்றியே சிறப்பாக எடுத்துரைக்கும் நூல்

சங்கநூல்களில் சேர அரசர்களையே சிறப்பாகக் குறிக்கும் வகையில் தலைசிறந்து விளங்கும் நூல் ஒன்று உளது. சேரநாட்டையும் அதன் தலைநகரையும் அறுதியிட்டுணரும் முயற்சியில் இந்நூல் தரும் சான்றுகளை முதன்முதலில் ஆராய்வோம்: இது நீண்டவையும் குறுகியவையுமான பத்துப் பாடல்கள் அடங்கிய பத்துப்பத்துக்களை உடையது. ஒவ்வொரு பத்தும் ஒரு தனி ஆசிரியரால் ஒரு தனி அரசனைக் குறித்துப் பாடப்பட்டது. அந்நூலை ஆக்கிய திறனை வியந்து, ஒவ்வோர் ஆசிரியருக்கும் பாடல்பெற்ற

அவ்வவ் வரசர் பலவகைப்பட்ட பரிசில்களை அளித்திருந்தனர். தமிழிலக்கியத்தை வளர்த்த வகையில் சேர அரசர்களின் வள்ளன்மையையும் இது நன்கு விளக்குவதாகும். இப்பத்துக்களுள் முதற்பத்தும் கடைசிப்பத்தும் காணக் கிடைக்கவில்லை. மற்ற எட்டுப் பத்துக்களும் ஆராய்ச்சியில் வல்லுநரான டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் பதிக்கப்பெற்றுள்ளன. அவர் அப்பதிப்புப் பிற்சேர்க்கையாக அந்த எட்டுப்பத்திலும் காணுமல் பதிற்றுப்பத்திலிருந்து எடுத்துக் காட்டப்பெற்றவை எனத் தெரியவரும் மேற்கோட் பகுதிகள் சிலவற்றையும் தருகிறார். பத்துப்பத்துக்கள் இருந்தன என்ற மரபு உரையை இது வலியுறுத்துவதாகும். இந்த எட்டுப்பத்துக்களுள்ளும் பாடப்பெறும் மன்னர்களை ஒழுங்கான மன்னர் பரம்பரை அட்டவணையாகக் குறிக்க முடியவில்லை. ஆயினும், அவர்களை இருவகையினராகப் பிரிக்கலாம். மன்னர்களுள் முதல் நால்வர் அல்லது ஐவர் ஒருவரோடொருவர் உறவு உடையவராகக் காணப்படுகின்றனர். தவறுதலுக்கு இடமின்றி அவர்கள் உறவு முறையும் உய்த்துணரத் தக்கவையே. மற்ற மூவரும் குறிப்பிடப்படும் வகையிலிருந்து முந்திய கூட்டத்தாருடன் அவர்கள் உறவைத் தெளிவாய் அறிந்து கொள்வதற்கில்லை. ஆயினும், எப்படியும் அவர்கள் முன்னவர்களிடமிருந்து நெடுங்காலம் அகன்றவர்கள் அல்லர் என்பதுமட்டும் உறுதியாகக் கூறக்கூடும். ஏனெனில், அவர்களைப் பாடிய புலவர்கள் அதே காலத்தில், அதாவது சங்கப் புலவரில் பெரும்பான்மையோர் வாழ்ந்த அதே தலைமுறைக்கு உரியவர்களே யென்பதை வேறு ஆதாரங்களிலிருந்து காட்டலாகும். இம்முன்னுரையுடன் பதிற்றுப்பத்தில் கூறப்படும் முறையிலேயே இச்சேரர்களைப்பற்றி ஆராய்வோம்.

### இத்தொகுதியின் முதல் சேரன்—இமயவரம்பன்

இரண்டாம் பத்தின் தலைவனான அம்முதற் சேரன் நெடுஞ்சேரலாதன் எனப்படுபவன். அவன் 'இமயத்தை

எல்லையாகக் கொண்டவன்' எனப் பொருள்படும் 'இமய வரம்பன்' என்ற அடையால் சிறப்பிக்கப்படுகிறான். அவன் ஆட்சிப் பகுதியின் வடவெல்லை இமயமலைவரை சென்றிருந்தது என்பதை இது குறிக்கிறது. ஈற்றுச் செய்யுளாகிய பதிகத்தில், இவன் தந்தை உதியஞ்சேரல் என்றும் தாயின் பெயர் 'வெளியன் வேண்மாள்' என்றும் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வுதியஞ்சேரலே முதற்பத்தின் தலைவனாக இருந்திருக்கக்கூடும். உதியஞ்சேரலின் மகனாகிய இந்நெடுஞ்சேரல் 58 ஆண்டுவரை நீண்டகாலம் அரசாட்சி நடத்தியவன். இந்நூலில் அவனைப்பாடிய புலவர் தம்மைக் குமட்டூரைச் சார்ந்த கண்ணன் (குமட்டூர்க் கண்ணன்) என்று கூறிக்கொள்கிறார். ஏறக்குறைய எல்லாப் பாடல்களிலும் காணப்படுவது போல இங்கும் இவ்வரசன் வீரச் செயல்கள் பாடலில் விரித்துரைக்கப்பட்டு, இந்நூலின் இறுதியில் பிற்சேர்க்கை வடிவில் தரப்படும் பதிகத்தில் தொகுத்து உரைக்கப்படுகின்றன. இப்பதிகங்கள் ஒருவகையில் முன்னுரைகளே யாகும். இலக்கண முறைப்படி இத்தகைய பதிகங்களை இயற்றுதற்குரியவர் நூலாசிரியரின் ஆசிரியர், உடன் மாணவர், அவரிடம் கற்ற மாணவர்; ஆகியவரும் இறுதியாக உரையாளரும் மட்டுமே யாவர். இந்தப் பட்டியலின் கடைசியில் சொன்ன உரைகாரர் என்ற வகையினர் மட்டுமே ஆசிரியரிடமிருந்து காலத்தால் தொலைப்பட்டவராக இருக்கக்கூடும். பதிற்றுப்பத்தைப் பற்றியமட்டில் உரைகாரர் பதிகத்துக்கும் உரைசெய்கின்றனராதலால் அவர் பதிகத்தை இயற்றியவர் அல்லர் என்பது தெளிவு. அது யாவரேயா யிருப்பினும், உரையாசிரியர்க்கு முந்தியவராகவே இருத்தல்வேண்டும். பதிகங்கள் அனைத்தையும் ஒருங்கே வைத்துப் பரிசீலனை செய்துபார்த்தால், அவை பெரும்பாலும் நூலின் முற்பகுதியில் விரிவாகக் கூறப்பட்டவற்றையே தெளிவாகக் கூறுகின்றன என்பது விளங்கும். ஒரு சில இடங்களில்தான் தலைவன் வீரச் செயல்களின் நுட்ப விரிவுகள் பதிகத்தில்மட்டும் கூறப்படு

பலவையாயும் நூலில் காணப்படாதனவாயும் இருக்கின்றன. எனவே, இந்நூலில் முற்பகுதியைப் போலவே பதிகத்தையும் சிறந்த ஆதாரமாகக் கொள்ளலாகும்.

## இமயவரம்பன் வீரச்செயல்கள்

இனி இமயவரம்பன் சேரலாதன் வீரச் செயல்களை எடுத்துக்கொள்வோம்: இரண்டாம் பத்தின் முதற்பாட்டில் அவன் கடம்புமரத்தை வேருடனும் கிளையுடனும் அழித்து வீரவேந்தனாக 'நறவு' என்ற இடத்தில் ஆண்டதாகக் குறிக்கப்படுகிறான். பின்னும் மேற்செல்ல, அவன் ஆட்சிப்பகுதி வடக்கில் ஆரியர் வழக்கப்படி கூடுமிடமாகிய இமயமலை முதல் தெற்கே குமரி (கன்னியாகுமரி முனை) வரை பரந்திருந்தது என்று கூறப்படுகிறது. இவற்றில் கடம்புமரத்தை அழித்ததென்னும் முதற் கருத்து, அடுத்த பாடலிலும் கூறப்படுகிறது. அவன் மார்பில் ஏழு முடிகளாலான மாலையை அணிந்தவன் என்றும் நல்லவர்களுக்கும் நண்பர்களுக்கும் பாதுகாப்பளித்தவன் என்றும்,

"எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை"

—பதிற்றுப்பத்து, பாடல். 14. வரி. 11-12.

என்னும் அடிகளால் சிறப்பிக்கப்படுகிறான். மேலும்,

"வயங்குகதிர் வயிரமோ டுறழ்ந்துபூண் சுடர்வர
எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்துப்
புரையோ ருண்கட் டுயிலின் பாயல்"

—பதிற்றுப்பத்து-பாட்டு 16. வரி 16-18.

என்னும் அடிகள் ஏழு முடிகளாலான மாலையை அணிந்த சிறப்பை மீட்டும் குறிக்கின்றன. பாடல் 17-ல் கடம்பின் அழிவும் குறிக்கப்பெறுகிறது. இவ்வருணனையில் அம்மரத்தையடைய வேண்டித் 'தண்புனல் நுரையெழக் கடலில் நாவாய் செலுத்தி'ச் சென்றதாகக் காணப்படுகிறது.

" துளங்குபிசிருடைய மாக்கட னிக்கிக்
கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை
யாடுநர் பெயர்ந்துவந் தரும்பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோ ளியவ "

—பதிற்றுப்பத்து-பாட்டு 17. வரி. 4-7.

இக்கருத்தே திரும்பவும்,

" ................................எங்கோ
விருமுந்நீர்த் துருத்தியுண்
முரணியோர்க்குத் தலைச்சென்று
கடம்புமுத றடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன் வாழ்கவவன் கண்ணி "

—பதிற்றுப்பத்து. பாடல் 20. வரி. 1-5,

என்னும் அடிகளில் குறிப்பிடப்படுகிறது. இதன்படி நெடுஞ்சேரலாதன் கடலின்கண் உள்ள ஒரு தீவினுட் சென்று பகைவர்களின் எதிர்ப்பை முறித்துக் கடம்பு மரத்தை வெட்டினன் என்பது கூறப்படுகிறது. பிற் சேர்க்கையாகிய பதிகம் இவையனைத்தையும் திரும்பவும் உரைத்துத் தொடக்கத்திற் குறிப்பிட்டது போலவே அவன் பெற்றோரான உதியன் சேரல், வெளியன் வேண்மான் ஆகியவரது விவரமும் தருகிறது. மேலும் ஒன்றன்பின் ஒன்ருக இமயமலையில் விற்பொறித்தது பற்றி யும் வட புல ஆரியரைத் தன்னடிப் படுத்தியது பற்றியும் அஃது அவனைச் சிறப்பித்துக் கூறுகிறது. அடுத்த பாடலில் அவன் யவனர்களைச் சிறைப்பிடித்துக் கைகளை முதுகுப் பக்கமாகக் கட்டித் தலையில் நெய்யூற்றிப் பின் அவர்களின் விடுதலைக்கீடாகப் பெற்ற பெரும்பொருட் குவையைத் தலை நகருக்குக் கொணர்ந்து அவற்றைத் தக்கோர்க்கு வழங்கி னன் என்று கூறுகிறது. இவ்வொரு பாடல் சம்பந்தப் பட்டவரையேனும் அரசன் தலைநகர் அப்போதைக்கு நறவு என்ற இடமா யிருந்திருக்க வேண்டும். காலஞ்சென்ற ஸ்ரீ. கே. ஜி. சேஷ ஐயர் இவ்விடமே ப்ளினி கூறிய நௌரா அஃதாவது அவர் பின்வந்த தாலமி குறிப்பிடும் 'நிட்ரியாஸ்' என்று கொண்டார். 'நறவு' என்ற தமிழ்ப் பெயர்

அவ்விடத்து மக்கள் கூறக்கேட்ட பிறநாட்டுக் கப்பலோட்டிகள், அதனை இலக்கணப் போலியாக எழுத்து மாற்றித் தம்மையறியாமல் 'நவுரா' என்று கொண்டிருப்பர் என்பது பொருத்தமானதே. தாலமி அதற்குக் கொடுத்த பெயரான 'கிட்ரியாஸ்' என்பது அது பற்றிப் பின்னும் தீர்க்கமாக விசாரணை செய்ததின் பயனாக அடைந்த பெயராய் இருக்கக் கூடும். அப்பெயர், மங்களூரைத்தான் குறிப்பது என்றறிய நமக்கு உதவுவதாயிருக்கிறது. கிட்ரியாஸ் என்ற பெயர், மங்களூரைத் தென்புறமாகச் சுற்றிவந்து கடலுடன் கலக்கும் ஆற்றின் பெயராகிய 'நேத்ராவதி' என்பதை ஒட்டி எழுந்தது அதற்கெதிராக கிட்ரியாஸ் என்ற ஒரு தீவும் இருந்ததாக வருணிக்கப்படுகிறது. அவர் காலத்தில் அத்தீவு கடற்கொள்ளைக்காரர்களின் சந்திப்பிடமாக இருந்ததாகத் தெரிகிறது. கடலிற் புகுந்து கடம்பு மரத்தை வெட்டியதாகக் கூறப்படுவது அவ்விடத்தில் குடியிருந்த கடம்பர் என்ற மக்களையே குறிப்பதாகத் தோற்றுகிறது. பகைவராகிய அவர்களைப் போரில் முறியடித்த பின் அவர்கள் தலைமையிடம் அல்லது அவர்களுக்குப்பலம் தரும் இடத்திற் சென்று அவர்கள் அதிகாரச் சின்னமாகிய மரத்தை வெட்டியழிப்பது என்பது, பகைக் குடியை அழிக்க முனைபவர்க்கு வழக்கமான செயலேயாகும். இச்செயல்கள் அனைத்திலிருந்தும், இச் செயல்களுக்கு நிலைக்களமாக இருந்தது, சரித்திர காலங்களில்கூட மலையாளம் பேசும் பகுதியின் வடகோடியிலிருந்த இக்கால வட மலபாரே என்பது காண்கிறது. அவன் தலைநகர் 'நறவு' எனப்படுவதும் அவன் வட மலபாரையே தலைமையிடமாகக் கொண்டிருந்தான் என்பதைக் காட்டும். ஆயினும், இதுவும் கரையோரப் பகுதி என்பதும் கடற்கரையிலேயே இருந்தது என்பதும் கவனிக்கத்தக்க செய்திகள் ஆகும். வடநாட்டுப் படையெடுப்பு என்பதும் ஆரியர்மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்தி இமயத்தில் விற்பொறி நாட்டுதல் என்பதும் அவன் தன் நாட்டை அடுத்த அயல்நாட்டினரை அடக்கி

யதேயாம். ஏனெனில் தென்பகுதியில் ஆண்ட அவ்வயலவர் தம்மை ஆரியர் என்று கூறிக்கொண்டனர். எனவே, இமயத்தில் விற்பொறி நாட்டிய செய்தியை அப்படியே விற்பொறி நாட்டியதாக வலியுறுத்திக் கொள்ளாமல், இமயம்வரை பரந்த அவ்வாரியரை அவன் அடக்கினன் என்று குறிப்பிட்டதாகவே கொள்ளலாம். குறிக்கப்படும் இச்செய்தி நிகழ்ந்த காலத்தில் சேரன், சதகர்ணிகள் அல்லது சாதவாகனர்கள் என்றழைக்கப்பட்ட ஆந்திரர்களைக் கீழ் அடக்கியிருத்தல்கூடும் என்றும், இவ்வாந்திர அரசரிற் சிலர் அசோகர் பேரரசுமீதே அரசு செலுத்தியதாக உரிமை கொண்டாடினர் என்றும் நாம் பிறிதோரிடத்தில் காட்டியிருக்கிறோம்.*

யவனர்களை அவன் வென்று வியக்கத்தகுந்த முறையில் அவர்களை நடத்திய விவரம் நூற்பகுதியிலே தரப்படவில்லை; ஆயினும் பதிகத்தில் மிக்க விவரமாகவும் மிகத் தெளிவாகவும் கூறப்படுகிறதாதலால், அதனை ஏற்க மறுப்பது பொருத்தமற்றது. அது பதிகத்திலேயே கூறப்பட்டதன் காரணம், அஃது அவன் ஆட்சியில் மிகப் பிற்பட்ட நிகழ்ச்சியாக இருந்திருக்கலாம். ஆதலால் அதைத் தனிப்படச் சிறப்பித்துக் கூறுவதற்கும் இடந்தராதபடி அஃது அப்போது அண்மையில் நிகழ்ந்ததாகவும் இருக்கலாம். மேலும் மேல் கடற்கரையில் வாணிகம் செய்து வந்த கிரேக்கர், எகிப்தியர் அல்லது அராபியருடன் அவருக்குப் பகைமை ஏற்பட்டிருப்பது பொருத்தமற்ற செய்தியன்று. ஒரு வேளை மேற்கில் கடம்பரையோ அவர் பின்வந்தவர்களையோ எதிர்த்த போரிடையே யுள்ள ஒரு நிகழ்ச்சியை அது குறிப்பதாகவும் இருக்கக் கூடும். ஆகவே இப்பாட்டுகளில் அவ்வரசனைப் பற்றிக் கூறப்படும் இந்நுணுக்கமான விவரங்கள் அவன் கரையோர நாட்டையே ஆண்டதாகவும் அவன் தலைநகரம் கடற்கரையிலேயே இருந்ததாகவும் அவன் ஆண்ட பகுதி சிறப்பாகக் கடலுக்கும் மேற்கு மலைத்தொடருக்கும் இடை

* The Beginnings of South Indian History.

யிலேயே இருந்ததாகவும் கருத இடந்தருகிறது. பின் வருபவற்ருல் இச்செய்தி மேலும் உறுதிபெறுவதாகும்.

## பல்யானைச் செல்கெழு குட்டுவன்

அடுத்த பத்தின் தலைவன் இன்னெரு சேரன். அவன் பெயர் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்பது. அதன் பொருள்—படையெடுத்துச் செல்கையில் பெரிய யானைப் படையின் பின்செல்லும் குட்டுவன் என்பதாம். இதிலிருந்து, அவன் படையில் யானைப் படையே வன்மை மிக்க பெரும் பகுதி என்பது தோற்றும். அவன் இமயவரம்பனின் தம்பி என்பதும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாம் பத்தின் முதற் பாடலில்,

> "முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
> புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
> கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉ
> மிதியற் செருப்பிற் பூழியர் கோவே"

—பதிற்றுப்பத்து. பாடல் 21. வரி. 20-23.

> "சீருடைத் தேஎத்த முனைகெட விலங்கிய
> நேருயர் நெடுவரை அயிரைப் பொருந"

—பதிற்றுப்பத்து. பாடல் 21. வரி. 28-29.

என்னும் அடிகளால் அவன் பூழியர் மன்னன் என்றும், 'செருப்பு' என்று கூறப்படும் குன்றினை உடைய சிறப்புடையவன் என்றும் தெரிகின்றது. 'பூழியர்' என்ற சொல் பாண்டியரையும் குறிக்குமாயினும், இங்கே சேர நாட்டின் ஒரு பிரிவான பூழி நாட்டுமக்களையே குறிப்பதாகக் காணப்படுகிறது. இதுவும் சேரநாட்டின் வடக்கில் இன்றைய வட மலபார் அல்லது தென் கன்னடத்தையே குறிப்பதாகும். இதே பாடலின் 28, 29-ஆம் அடிகளில் அவன் அயிரைமலையின் வலியுடைய தலைவன் எனக் கூறப்படுகிறான். 'அயிரை' என்னும் இப்பெயர் அயிரை என்ற மலைக்கும் அயிரை என்ற ஆற்றுக்கும் பொதுவான பெயர் என்பதை மேலே காட்டுவோம். சேர மன்னரைக் குறிக்

கும் இடங்கள் பலவற்றிலும் இம்மலையோ, ஆறோ குறிப்பிடப்பெறுகிறது. இப்பத்தின் அடுத்த பாடலாகிய 22-ஆம் பாட்டில் வரும்,

"ஆகெழு கொங்கு நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்
.........................................
நெடுமதி னிரைப்பதனத்
தண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ"

—பதிற்றுப்பத்து. பாடல் 22. வரி. 15-16 ; 25-27.

என்னும் பகுதிகளால் ஆநிரைச் செல்வமுடைய கொங்கு நாட்டை அவன் வென்றான் என்ற முக்கியமான குறிப்புப் பெறப்படுகிறது. கொங்கு நாட்டை வென்றான் என்று கூறப்புகும் இக்குறிப்பே அஃது ஒரு புதிய வெற்றி என்பதைக் காட்டும் தொனியுடையதா யிருக்கிறது. கொங்கு அவன் முன்னோன் ஆகிய அவன் தமையன் ஆட்சியிலும் இருந்தாகத் தெரியவில்லை. பின்னர் இதே பாடலில் அவன் உயர்மதில் அகப்பாவை அழித்தமை கூறப்படுகிறது. சங்க நூற்களில் அடிக்கடிக் குறிக்கப்படும் இஃது அப்பகுதியிலுள்ள மிகப் பலமான கோட்டையா யிருந்திருக்கவேண்டும். 'அகப்பாவை யழித்த குட்டுவன்' என்று இங்கே கூறும்போது அஃது ஓர் அரும்பெருஞ் செயல் என்ற முறையிலேயே கூறப்படுகிறது.

'கோடை நீடக் குன்றம் புல்லென
அருவி யற்ற பெருவறற் காலையும்
நிவந்துகரை இழிதரு நனந்தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன்புலம் வாய்பரந்து மிகீஇய
உருவலை சூடி யுருத்துவரு மலிர்நிறைச்
செந்நீர்ப் பூச லல்லது"

—பதிற்றுப்பத்து. பாடல் 21. வரி. 8-13.

என்னும் இப்பகுதியில் மிகச் சிறப்பு வாய்ந்த பேரியாற்றுப் புதுப்புனல் விழவின் குறிப்பு வருகிறது. அளவு கடந்து கோடை நீடித்ததன் பயனாக மலைகளே வறட்சியடைந்தன ;

மலையினின்று வரும் ஆறுகளிலும் நீர் வராது போயிற்று; ஆனால் அத்தகைய காலங்களிலும் இந்த யாறு நீர் நிரம்பி ஒழுகிற்று. இவ்விடத்தில் இவ்யாறு பேரியாறு என்று மட்டுமே குறிக்கப்படுகிறது. இச்சொல்லைப் பொதுவாகப் பெரிய ஆறு என்று மட்டுமே பொருள் கொள்ளலாகும். ஆனால் இங்கே இச் சந்தர்ப்பத்தில் அஃது ஒரு குறிப்பிட்ட ஆற்றையே குறிக்கின்றது என்பதில் ஐயமிருக்க முடியாது. அதுவும் அவ்யாறு சேர அரசனுடன் சிறப்பான தொடர் புரிமை உடையது. இப்பெருவிழாவும் பெரும்பாலும் அவன் தலைநகரத்து மக்கள் கொண்டாடியதாக இருக்கலாம். இப்பத்தின் கடைசிப் பாடலான 30-ஆம் பாட்டு அந்நாட்டை வருணிக்கிறது. அது சிறப்பாகச் சேரநாட்டையே குறிப்பதாகவும் வேறு நாட்டைக் குறிக்க முடியாதபடியும் அமைந்திருக்கிறது. அதுவும் கூறப்படும் அரசன் மேல் கடற்கரை அரசனே என்று காட்டத் தக்கதாகும். இப்பத்தின் இறுதிப் பகுதியான பதிகம் மிகவும் சிறப்பு வாய்ந்த தொன்று. இச் சேரன், இமயவரம்பன் இளவல் என்ற குறிப்புடன் அது தொடங்குகிறது. அவன் உம்பற் காட்டைத் தனக்கு நிலையான உரிமையுடையதாக்கிக் கொண்டான். உம்பற்காடு என்பது அச்சொல்லின் குறிப்பின்படியே யானைக்காடாக இருந்திருக்க வேண்டும். இது மேற்கு மலைத்தொடரின் இப்பாலிருக்கும் ஆனைமலையைச் சூழ்ந்த காடாக இருக்கக்கூடும். அவன் அகப்பாவை அழித்த அப்பகலிலேயே அதனைத் தீக்கிரையாக்கினான்; தன் குடியில் மூத்தவர்களிடம் பெரும் பற்றுடையவனாய்த் தன் ஆட்சிக்கு உட்பட்ட நிலங்களை அவர்களுக்குப் பகிர்ந்து தந்தான். இச்செய்தி மிகவும் முக்கியமானதேயாகும். ஏனெனில்; அவன் தன் முன்னோர் ஆண்ட நாட்டினுக்குப் புறம்பான பகுதிகளை வென்றான் என்பது மட்டுமன்று; அவற்றைத் தன்னிலும் மூத்தவர்களான உறவினரிடையே பகிர்ந்து கொடுத்தான் என்பதும் தெரிகிறது. கவியின் கற்பனையை நீக்கிக் கூறினால், இதன் பொருள்-

அவன் தான் வென்ற நாடுகளில் தன் உறவினர்களில் சிலரைத் தெரிந்தெடுத்துத் தலைவராக்கினன் என்பதாகும். இது பெருந்தன்மை மட்டுமன்று; அரசியல் நுட்பமும் ஆகும். ஆனால் கவி இயல்பை ஒட்டி ஆசிரியர் முன்னைய் பண்பையே விதந்தோதுகிறார். அவனது அடுத்த அருஞ் செய்ல் முறைப்படி இரண்டு கடல்களின் நீரிலும் அபி ஷேகம் பெற்றதாகும். இஃது எங்ஙனம் நடைபெற்றதெனக் கவி வருணித்துக் கூறக் கிடைத்தது நம் பேறே யாகும். யானைகளை அங்கங்கே நெடுக வைத்து ஒருநாள் காலை இரு கடல் நீரையும் கொணர்ந்து அவன் திருமுழுக்காடினன். இங்கே உரையாசிரியர், 'இரு கடல் என்பது தனக்கே உரிய மேல் கடலும் தன் எல்லை கடந்து பிறர்க்குரிய கீழ்க்கடலும் ஆகும்' என்று விளக்கம் தருகிறார். அவனுடைய அடுத்த வீரச்செயல் அயிரைமலையில் வெற்றித் தேவி (விஜய லக்ஷ்மி)க்கு வழிபாடு நடத்தியதாகும். இவ்விரண்டும் இணைத்துக் கூறப்படும் நிலையிலிருந்து, அபிஷேகமும் இம் மலையிலேயே நடந்தது என்று பெரும்பாலும் கொள்ளலாம். அடுத்த சிறந்த செய்கை தக்கார் போற்றும் வாழ்க்கை முறையை அவன் மேற்கொண்டதே. அஃதாவது உலக வாழ்வைத் துறந்து காட்டில் வாழ்ந்த அவன் மதிப்புக் குரிய சமயகுருவான நெடும்பார தாயனை அவன் பின் பற்றினன். அவனது மற்றொரு செயலும் குறிப்பிடத் தக்கதாகும். அவனைச் சிறப்பித்துப் பாடிய புலவர் பாலைக் கௌதமனர் என்பவர். தம் பாடல்களில் பெரும்பாலும் பாலை நிலத்தைப் பற்றியே பாடிப் புகழ்பெற்ற பார்ப்பன ராகிய கௌதமரே அப்புலவர். இத்திணைக்குரிய நிலத் தைப் பாடுவதில் அவர் காட்டிய திறமே புலவர்களிடையே அவரை சிறப்பித்துக் கூறும் இந்த அடையாயிற்று. இப் பெருஞ் சேர மன்னனைப் பாடியதற்காக அவர் வேறொன் றையும் பரிசிலாக விரும்பவில்லை; தாமும் தம் மனைவியும் சுவர்க்கம் செல்லுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் என்றுமட்டுமே விரும்பினர். அரசன் கற்றவர்

களை அடுத்து உசாவி இதற்காகப் பத்து வேள்விகள் செய்தான். பத்தாம் வேள்வி நடக்கும்போது உடனிருந்த பார்ப்பனனும் அவன் மனையும் மறைந்துவிட்டனர் என்பது கூறப்படுகிறது.

## நார்முடிச்சேரல்

மூன்றும் மன்னன் வழக்கப்படி நீண்ட தொடர்களால் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் அஃதாவது களங்காயாலான மாலையையும் நாராலான முடியையும் அணிந்த சேரன் என்று இந்நூலின் நாலாம் பத்தில் குறிக்கப்படுகிறான். அவனைச் சிறப்பிக்கும் புலவர் காப்பியாற்றுக் காப்பியனார் என்பவர். இப்பத்தின் முதற்பாட்டில் திருமால் பற்றிய தெளிவான குறிப்பு ஒன்றை, உரையாசிரியர் அனந்தசயனம் (திருவனந்தபுரம்) கோயிலைப் பற்றியது எனக் கொள்கிறார்.

"தெள்ளுயர் வடிமணி யெறியுநர் கல்லென
உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி
வண்டூது பொலிதார்த் திருஞெம ரகலத்துக்
கண்பொரு திகிரிக் கமழ்குரற் றுழாஅ
யலங்கற் செல்வன சேவடி பரவி
நெஞ்சுமலி யுவகையர் துஞ்சுபதிப் பெயர
மணிநிற மையிரு ளகல நிலாவிரிபு
கோடுகூடு மதிய மியலுற் றூங்குத்
துளங்குகுடி விழுத்திணை திருத்தி முரசுகொண்
டாண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு"

—பதிற்றுப்பத்து, பாடல் 31. வரி. 5-14.

இவ்விடத்தில் அக்காலத்தில் வழக்கமொன்று குறிக்கப்படுகிறது. மக்கள் விலையேறிய பொருள்கள் எவற்றையேனும் இங்கே கடலில் எறிந்துவிட்டுப் பின் குளித்துப் பசி நீங்கா வயிற்றுடனேயே கோயிலுக்கு வந்து வழிபாடு நடத்திவிட்டுத் தங்களிடத்துக்குப் பாதுகாப்பாகச் சென்றனர். இக்கூற்றின் சிறப்பு என்னவென்றால், தொலைதூரத்திலிருந்து வழிபாட்டிற்கு வந்தவர்களுக்கு அரசனே பாதுகாப்பளித்தான் என்பதே.

" நெடுமிடல் சாயக் கொடுமிட றுமியப்
பெருமலை யானையொடு புலங்கெட விறுத்து "
—பதிற்றுப்பத்து. பாட்டு. 32. வரி. 10-11.

என்னும் இவ்வடிகளில் வெற்றிவீரனாகிய இவ்வரசன் நெடுமிடல் (அதாவது ஆற்றல் மிக்கவன்) என்ற குடிப்பெயருடைய அஞ்சித் தலைவனைக் கீழ்ப்படுத்தினான் என்ற குறிப்புக் காணப்படுகிறது. சற்று மேற்சென்று 38-ஆம் பாட்டில், முன்பு 2, 4 வரிகளில் குறிப்பிட்ட சிறப்புப் பெயருடனேயே அவன் குறிக்கப்படுகிறான். பின்னும் 8-ஆம் வரியில் 'சேரலர் அரசன்' என்றும், 11,12-ஆம் வரிகளில் 'வசையில் செல்வன்' என்றும்,

" மையற விளங்கிய வடுவாழ் மார்பின்
வசையில் செல்வ வான வரம்ப "
—பதிற்றுப்பத்து. பாட்டு. 38. வரி. 11-12.

'வான வரம்பன்' என்றும் கவி அவனைக் குறிக்கிறார். வானவரம்பன் என்ற இத்தொடரைக் கண்டு, காலஞ் சென்ற திரு. சேஷ ஐயர் மலைவுற்றார். அவன் ஆட்சி அடிவானம் வரை எட்டியிருந்தது என்ற அதிசயோக்தியைத் தவிர இது வேறு எதுவுமன்று. பிற சொற்றொடர்களாலும் இக்கருத்து அடிக்கடிக் குறிக்கப்படுவதுண்டு.

" சிலம்பி கோலிய வலங்கற் போர்வையின்
... ... ... ...
சீர்மிகு முத்தந் தைஇய
நார்முடிச் சேரனின் போர்நிழற் புகன்றே "
—பதிற்றுப்பத்து, பாடல் 39; வரி. 13; 16—17.

என்னும் பகுதியில் போர்வை என்ற இடம் குறிக்கப்படுகிறது. மற்றைச் சங்க நூல்களிலும் இஃது ஓரிடத்தின் பெயராகக் குறிக்கப்பட்டிருக்கிறது. கடைசி அடியிலும் அவனை நார்முடிச் சேரல் என்ற பெயருடன் குறித்து ஆசிரியர் எதுகை நயம்பட அவன் நாட்டை யடைந்தோருக்கு அது தரும் பாதுகாப்பைப் பற்றிக் கூறுகிறார். அடுத்த பாட்டாகிய,

"எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்துப்
பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ யாகைக் கடிமுத றடிந்த
தார்மிக மைந்தி ஞர்முடிச் சேரல்
புள்கா லுன்னஞ் சாயத் தெண்கண்
வறிதுகூட் டரிய விரவலர்த் தடுப்பத்
தான்றர வுண்ட நனைநறவு மகிழ்ந்து
நீரிமிழ் சிலம்பி னேரி யோனே"

—பதிற்றுப்பத்து, பாடல். 40. வரி. 13—20

என்னும் பாட்டில், 'ஏழு முடியாலான மாலையை அணிதல்' என்ற நன்கு பழக்கப்பட்டுப்போன தொடர் குறிக்கப் படுகிறது. மேலும் 14—16 அடிகளில் அவன் பொன்னங் கண்ணியையும் பொலந்தேரையுமுடைய நன்னனது வாகை மரத்தை வேருடனும் கிளையுடனும் அழித்த சேரன் என்ற சிறப்புப் பெறுகிறான். 20-ஆம் அடியில் 'நேரிக்கு உரிய வன்' என்ற முறையில் அவன் நேரியோன் என்றழைக்கப் பெறுகிறான். 'நேரி' என்பது நீர் கொப்புளித்த ஒரு குன்று ஆகும். நேரி என்ற சொல்லை உறுப்பாகக் கொண்ட அடைத்தொடர் சோழருக்கும் உண்டு.' ஆயினும், இங்கே சேரன் நீர் கொப்புளிக்கும் நேரிமலையை உடையவன் என்றே வருணிக்கப்படுகிறான். பதிகத்தில் இச்சேரன் வானவர் செல்வன்-சேரல் ஆதனுக்கும் வேளாவிக் கோமான் மகள் ஆன பதுமன் தேவிக்கும் புதல்வன் என்று குறிக்கப்பட்டிருக்கிறான். அவனுக்குரியதாகக் கூறப்படும் அடுத்த பெருஞ் செயல்—எல்லைப்புறங்களில் தொந்தரவு தந்த கொள்ளைக்கூட்டங்களை ஒழித்துப் பாது காப்புச் செய்ததாகும். அவன் பூழி நாட்டின்மீது பெரியதொரு படையெடுப்பு நடத்திக் 'கடம்பின் பெரு வாயில்' என்ற இடத்தில் அந்நாட்டின் தலைவனாகிய நன்னனை முறியடித்து அவன் தலையை வெட்டி வீழ்த்தி ஞன். இக்கடம்பின் பெருவாயிலே பெரும்பாலும் நன்னன் தலைநகராக இருந்திருக்கக்கூடும். இவ்வெற்றியின் பயனாக அவன் பொன்னால் அலங்கரிக்கப்பட்டிருந்த நன்னன்

வாகை மரத்தை வெட்டினன். இன்னும் பலப்பல மறந்தரு போர்கள் நடத்தி அவன் தன் குடிக்குப் புகழை உண்டு பண்ணினன். அவன் இது பாடிய புலவனுக்கு மிகுந்த வள்ளன்மையுடன் 40 நூறுயிரம் பொற்காசுகள் கொடுத்த துடன் தான் ஆண்ட நாட்டிலும் ஒரு பாதி தந்து அதனை அவனே ஆளும்படியும் செய்தான். அவன் ஆண்ட வருடங்கள் 25 என்றும் கூறப்படுகிறது.

## சேரன்—செங்குட்டுவன்

அடுத்த பத்துடன் நாம் நம் ஆராய்ச்சியின் உள்ளிடத்தை அடைகிறோம். ஐந்தாம் பத்தின் தலைவன் சிலப்பதிகாரத்தின் தலைவனுகிய சேரன் செங்குட்டுவனே ஆவன். சிலப்பதிகாரத்தில் விரிவாகக் கூறப்படும் அவன் செயல்கள் இங்கும் விரிவுபடவே கூறப்படுவதுடன் அதில் காணுத சில புதிய செய்திகளும் இதில் தரப்படுகின்றன. இப்பத்தில் முதலாவதான

"முரசுடைப் பெருஞ்சமத் தரசுபடக் கடந்து
வெவ்வ ரோச்சம் பெருகத் தெவ்வர்
மிளகெறி யுலக்கையி னிருந்தலை யிடித்து
... ... ... ...
கடும்பரிப் புரவி யூர்ந்தநின்
படுந்திரைப் பனிக்கட லுழந்த நாளே"
—பதிற்றுப்பத்து. பாடல். 41. வரிகள் 19—21; 26—27.

என்னும் பாட்டு அவன் வீரர்களைக் குறிக்கிறது. அவன் சேனையைப்பற்றிக் கூறுகையில், ஆசிரியர், அவன் வீரர் மிளகு அரைக்கும் உலக்கைகளையே ஆயுதமாகக் கையாண்டனர் என்று கூறுகிறார். கடைசி வரியில் பொதுப்படையான சொற்களால் அவன் தன் பகைவரை எதிர்க்கும்படி தன் கடலகத்தே சென்றுன் என்பதும் கூறப்படுகிறது. 42-ஆம் பாட்டில் வரும்

"அண்ணல் யானை யடுபோர்க் குட்டுவ
... ... ... ...
மாயிருந் தெண்கடல் மலிதிரைப் பௌவத்து

வெண்டலைக் குருஉப்பிசி ருடையத்
தண்பல வருஉம் புணரியிற் பலவே"
—பதிற்றுப்பத்து. பாடல். 42. வரிகள் 9; 21—23.

என்னும் பகுதிகளால் அவன் போர்கெழு குட்டுவன் என்று கூறப்படுகிறான். இப்பாட்டின் இறுதியில், கடல் அவன் நாட்டின் சிறந்த பண்பு என்பது கூறப்படுகிறது.

"போரடு தானைப் பொலந்தேர்க் குட்டுவ
இரும்பனை திரங்கப் பெரும்பெய லொளிப்பக்
குன்றுவறங் கூரச் சுடர்சினந் திகழ
வருவி யற்ற பெருவறற் காலையு
மருஞ்செலற் பேராற் றிருங்கரை யுடைத்துக்
கடியோர் பூட்டுநர் கடுக்கை மலைய
வரைவில் அதிர்சிலை முழங்கிப் பெயல்சிறந்
தார்கலி வானந் தளிசொரிந் தாஅங்(கு)
—பதிற்றுப்பத்து. பாடல். 43. வரி. 11—18.

என்னும் பாடலில் அவன் அழகிய சோலையையுடைய குட்டுவன் என்றும் போர்புரி தானையின் தலைவன் என்றும் குறிப்பிடப்பெறுகிறான். அதன்பின் வரும் 13—20 அடிகளில் பரிசில் வழங்கும் அவனது வண்மைக்குக் கரை யுடைத்து எழும் வெள்ளத்தையுடைய பேரியாற்றுக்கு வளம் தருவதான மழை நீர் பொழியும் வானத்தின் வண்மை உவமையாகக் கூறப்படுகிறது. இப்பாட்டில், ஆடவர் பாடியும் பெண்டிர் ஆடியும் பாடியும் இடத்துக் கிடம் சென்று தொழிலாற்றி, வள்ளல்கள் ஆதரவைப் பெற்று வாழுவதையே தொழிலாக உடைய வகுப்பினர் இருந்தனர் என்ற செய்தி குறிப்பிடத்தக்க தொன்றாகும். பேரியாறும் மலைகளில் மழை பெய்த நீரால் ஒழுகும் அதன் வெள்ளமும் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைச் சிறப்பிக்கும் இந்நூலின் 28-ஆம் பாடலில் வருணிக்கப் பட்டபடியே வருணிக்கப்படுகின்றன. இவ்யாறும் இங்கே பிற இடங்களிற் குறிக்கப்படுவதுபோலப் 'பேரியாறு' என்று குறிக்கப்படாமல் 'பேர்யாறு' என்றே குறிப்பிடப் படுகிறது.

" நுண்கொடி யுழிஞை வெல்போ ரறுகை
சேணா ரூயினும் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்
கரண்கடா வுறீஇ யணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுத றடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
யொழுகை யுய்த்த கொழுவில் பைந்துணி"
—பதிற்றுப்பத்து. பாடல். 44. வரி. 10—17.

என்னும் அடிகளில் அவன் தன்னுடன் நட்புக்கொண்டவனும் பழையனுக்கு அயல் நாட்டவனுமான 'அறுகன்' என்ற தலைவனுடன் சேர்ந்து பழையன் தலைநகராகிய மோகூரைப் படையெடுத்துத் தாக்கிய வரலாற்றுச் செய்தி கூறப்படுகிறது. இப் படையெழுச்சியில் அவன் பழையன் குடிச்சின்னமாகிய வேப்ப மரத்தை வெட்டி வீழ்த்தி, அதனை. அவன் யானைகளின் மூலமே இழுத்துவந்தான்; அத்துடன் அங்ஙனம் இழுத்து வருவதற்குக் கயிறாகப் பழையன் பெண்டிர் தலைமயிரை வெட்டிக் கயிறாகத் திரித்து உபயோகித்தான் .என்பதும் கூறப்படுகிறது. 45-ஆம் பாட்டில் ஏழு முடிகளாலமைந்த மாலையை அவன் அணிந்த செய்தி குறிக்கப்படுகிறது. இப்பாட்டில் இஃது ஒன்றை மட்டும் கவனித்துக்கொண்டு மேற்செல்லுவோம். 46-ஆம் பாட்டில் வரும் சிறப்புடைச் செய்தி யானைமீதிருந்து கடலகத்துச் செல்லும் குட்டுவர் அல்லது சேரர் அங்கிலையிலிருந்து வேல் வீசிப் பகைவர்களை அழித்துக் கடலால் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த சிறந்த பாதுகாப்பை ஒழித்தனர் என்பதே யாகும். அதனை,

" பல்செருக் கடந்த கொல்களிற் றியானைக்
கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்
டுடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன் ... ...
—பதிற்றுப்பத்து. பாடல். 46: வரி. 10—13.

என்னும் இப்பகுதியால் அறிக.

"கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ
... ... ... ...
நின்மலைப் பிறந்து நின்கடன் மண்டு
மலிபுன னிகழ்தருந் தீநீர் விழவில்
பொழில்வதி வேனிற் பேரெழில் வாழ்க்கை
மேவரு சுற்றமோ டுண்டினிது நுகருந்
தீம்புன லாய மாடுங்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே"
—பதிற்றுப் பத்து. பாடல். 48. வரிகள். 3—4; 13—18.

என்னும் பாடலில் அவன் அஞ்சா நெஞ்சுடன் கடலகம் புகுந்து தன் எதிரிகளுடன் போரிட்ட பரதவன் (மீன்படவன்) எனக் குறிக்கப்பெறுகிறான். பாடலின் இறுதி, அவன் குடிகள் கடலை நோக்கி வெள்ளம் பெருகியோடும் ஆறுகளின் கரைகளில் வேனிலைக் கழிப்பது பற்றிக் கூறுகின்றன. ஆற்றில் குளித்துக் கோடையில் அதன் கரையில் பகலை இன்பத்துடன் கழிக்கும் மக்கட் கூட்டத்தை வருணிக்கும் பகுதியில் "அவன் மலையில் தோன்றி அவன் கடலில் சென்றடையும்" ஒரு தனியாறே குறிப்பிடப் படுகிறது. இஃது அவன் நாடு கடற்கரையிலிருந்து தொடங்கி அவன் நாட்டில் ஒழுகும் ஆறுகளுக்குப் பிறப்பிடமான மலைகள்வரை பரந்து கிடந்தது என்பதைக் காட்டும். இதில் கூறப்படும் காஞ்சி என்ற சொல் அந்நாட்டின் ஆற்றினுடைய சிறந்த குறியான மரத்தின் பெயரன்றி வேறெதுவும் அன்று என்னலாம்.

"களிறுபரந் தியலக் கடுமா தாங்க
வொளிறுகொடி நுடங்கத் தேர்திரிந்து கொட்ப
வெஃகுதுரந் தெழுதருங் கைகவர் கடுந்தார்
வெல்போர் வேந்தரும் வேளிரு மொன்று மொழிந்து
மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை யதிர மண்டி
... ... ... ...
கருஞ்சினை விறல்வேம் பறுத்த
பெருஞ்சினக் குட்டுவற் கண்டனம் வரற்கே"
—பதிற்றுப்பத்து. பாடல். 49. வரிகள். 4—9; 16—17

என்னும் அடுத்த பாட்டில் பழையனை எதிர்த்த செயலே கூறப்படுகிறது. இங்கே காணப்படும் மேற்பட்ட விவர மெல்லாம் பழையனுக்குப் பிற தலைவர்களும் வீரரும் துணையாயிருந்தனர் என்பதுமட்டுமே யாகும். இப்பத்தின் இறுதியில் வரும் 50-ஆம் பாட்டில் வெள்ளப் பெருக் குடைய காவிரி பற்றிய குறிப்பு வருகிறது. அது நேர் கிழக்காக 'நிறை வெள்ளத்துடன் ஒழுகுவதாகக் கூறப் படுகிறது. இதனை,

"வளங்கெழு சிறப்பின் உலகம் புரைஇச்
செங்குணக் கொழுகுங் கலுழி மலிர்நிறைக்
காவிரி யன்றியும்' பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூடல் அனையை"

—பதிற்றுப்பத்து. பாடல். 50. வரி. 4—7.

என்னும் அடிகளால் அறிக. இவ்வரசன் நற்குணப் பரப்புக் குக் காவிரியின் வெள்ளப்பரப்புப்போல மூன்று காவிரியின் பரப்பு உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்குறிப்பு ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்ததே. ஏனெனில், வஞ்சி யைக் காவிரிநாட்டில் உள்ளதாகக் கூற இஃது உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. பதிகத்தினை ஆராய்ந்தால், அங்கே இவ்வரசன் வடநாட்டினர்க்கு அச்சந்தரும் நெடுங் கொடியை உடைய நெடுஞ் சேரலாதன் மகன் என்று வரு ணிக்கப்படுகிறான். அவன் தாயின் பெயரும் இங்கே தரப் பட்டிருக்கிறது. அவள் சோழரைச் சார்ந்த மணக்கிள்ளி அஃதாவது சோழ இளவரசியாகிய மணக்கிள்ளியாவள். இங்கே அடுத்துவரும் செய்தி கண்ணகி சிலைக்காகக் கல் கொணரும்படி அவன் வடபுலம் சென்றதும் அவ்வகையில் தூய்மையாகும்படி அதனைக் கங்கை நீராட்டியதும் ஆகும். இது மிக்க விரிவாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிறது. அவன் அடுத்த பெருஞ்செயல் அவன் தன் எதிரிகளை 'இடும்பில்' என்ற இடத்தில் வென்றதாகும். உரை யாசிரியர் இவ்விடத்தைத் தஞ்சை ஜில்லாவிலுள்ள 'இடும் பாவனம்' என்று விளக்கியிருக்கிறார். மேலும் அவன்

'வியலூர்' என்னும் இடத்தை அழித்து அதன்பின் ஒரு வேலை ஓர் ஆற்றையும் கடந்து சென்று 'கொடுகூர்' என்ற மற்றோரிடத்தையும் நாசம் செய்தான். அதன்பின் பழையனுடைய வேப்பமரத்தை வீழ்த்தியதும் அதனை அவன் பெண்டிர் தலைமயிராலான கயிற்றின் துணைக் கொண்டு யானைகளாலிழுத்துக் கொண்டுவந்ததுமான அருஞ் செயல் குறிக்கப்படுகிறது. அடுத்த செயல் நியாயமான சோழ அரசற்கு எதிராக எழுந்த கிளர்ச்சியாளரான இள வரசர் ஒன்பதின்மரையும் அவன் அழித்ததாகும். இஃது உறையூர்க் கோட்டை வாயிலின் புறம்பே நிகழ்ந்ததாக இங்கே குறிக்கப்படுகிறது. ஆனால் பிற இடங்களிலிருந்து இது நிகழ்ந்த இடம் திட்டமாக நேரிவாயில் என்றும் அது சோழர் தலைநகரான உறையூர்த் தென்கோட்டை வாயிலை அடுத்திருந்ததென்றும் நமக்குத் தெரிகிறது. இவ்வெதிரி களை அவன் நெடுநாள் தொடர்ந்து போரிட்டு வென்றான். இச்செயல்களில் பெரும்பாலானவை இந்நூலின் முந்திய பாடல்களிலேயே விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சில சிலப்பதிகாரத்தில் விரிவாகக் கூறப்பட் டுள்ளன. இவற்றால் இவை உண்மையான சரித்திர சம்ப வங்களே என்று கூறலாகும்.

## தண்டாரணியத்தில் ஆனிரைகொண்ட சேரன்

இனி, இதனை அடுத்த ஆறும் பத்திற்குச் செல்வோம். இதிற் குறிக்கப்படும் சேரன் தண்டகவனத்தில் ஆனிரை கைக்கொண்ட சேரன் என்றும் இதனைப் பாடிய புலவர் காக்கையைப் பாடியவர் என்ற பொருளில் காக்கை பாடினி யார் என்றழைக்கப்பட்ட நச்செள்ளையார் என்ற பெண் மகள் என்றும் தெரிகிறது. இச்சேரன் குடவர் கோமா னை நெடுஞ்சேரலுக்கும் வேளாவிக் கோமான் தேவிக்கும் புதல்வனுவான். எனவே, அவன் முந்திய இரண்டு அரச ருக்கும் உடன்பிறந்தவன். அதாவது நார்முடிச் சேரலின் உடன்பிறந்த சகோதரனும் செங்குட்டுவனின் மாற்றாந்

தாய் மகனுன சகோதரனும் ஆவன். அவனைப் பற்றித் தெரிவிக்கப் பெறும் முதற் செயல், அவன் நாட்டினை அடுத்து வடக்கிலுள்ள தண்டாரணியத்தில் (வடமொழி - தண்டகாரண்யம்) அவன் படையெடுத்ததாகும். இங்கே அவன் 'வருடை' என்ற ஆவினங்களின் பெருமந்தை முழுவதையும் கைக்கொண்டான். இவற்றை அவன் தன் தலைநகராகிய தொண்டிக்குக் கொண்டுவந்து அவற்றைப் பிராமணருக்குப் பகிர்ந்தளித்தான் என்பதும், ஒவ்வொரு பிராமணனுக்கும் இவ்வகையில் சேரநாட்டின் ஒரு கிராமமும் ஒரு பசுவும் வழங்கப்பட்டன என்பதும் தெரிகிறது. அவன் வானவரம்பன் என்ற பெயருக்கே பெரும் புகழ் தந்தவனுகக் கொள்ளப்படுகிறுன். வானவரம்பன் என்பது சேரர்களுக்கு ஆங்காங்கு வழங்கும் பெயர்களுள் ஒன்று. அவன் பிற தலைவர்கள் பலரையும் கீழடக்கினுன்; அரசர் பலரை வெளியே துரத்தினுன். (அனேகமாக அவர்கள் நாட்டைவிட்டு என்று கொள்ளலாம்.) அவன் பெண்புலவரான நச்செள்ளையாருக்குத் தாராளமாக ஒன்பது 'கா' எடையுடைய பொன்னும் அணிகலனுக நூறுயிரம் பொற்காசுகளும் கொடுத்ததுடன் இறுதியில் அப் பெண்மணியாளரையே மணஞ் செய்துகொண்டான்.

"இன்னிசைப் புணரி யிரங்கும் பெளவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்க்
கமழுந் தாதைக் கானலம் பெருந்துறைத்
தண்கடற் படப்பை நன்னுட்டுப் பொருந
... ... ... ...
குடவர் கோவே கொடித்தேர் அண்ணல்"

—பதிற்றுப் பத்து. பாடல். 55. வரி. 3—9.

என்னும் பகுதியால் அவன் மேல் கடற்கரைப் பகுதியை ஆள்பவன் என்ற குறிப்புடன் 'குடவர் கோ' என்று குறிப்பிடப்படுகிறுன்.

"ஏந்தெழி லாகத்துச் சான்றேர் மெய்ம்மறை
வான வரம்ப னென்ப"

—பதிற்றுப் பத்து. பாடல். 58. வரி. 11—12.

எனவரும் அடிகளில் அவன் 'வானவரம்பன்' என்றழைக்கப்படுகிறான்.

"தொடைமடி களைந்த சிலையுடை மறவர்
பொங்குபிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி
வருங்கட லூதையிற் பனிக்குந்
துவ்வா நறவின் சாயினத் தானே."

—பதிற்றுப் பத்து. பாடல். 60. வரி. 9—12.

என்னும் பகுதியில் கடற்கரைப் பட்டினமாயிருந்திருக்கக்கூடும் 'நறவு' என்பதுடன் அவன் பெயர் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது. ஒருவேளை இது வானவரம்பனைப்பற்றிக் கூறுகையில் குறிப்பிட்ட அதே நகரமாயிருக்கக்கூடும். இதுவரை நாம் குறிப்பிட்ட ஐந்து சேரரும் இரண்டு தலைமுறைக்கு உட்பட்டவர் என்பதை நாம் இங்கே கவனித்தல் வேண்டும். முதலிருவரும் சகோதரர்கள். அடுத்த மூவரும் அதுபோலவே சகோதரர்கள்; ஏனெனில் அவர்கள் முதற்சேரன் புதல்வர்கள் ஆவர். எனவே, இச் சேரர் ஐவராயினும் ஒருங்கே இரண்டு தலைமுறைகளுக்கு மேற்பட்டவர் அல்லர். இப்பொருள் பற்றி நாம் மேலே வாதிக்க வேண்டிவரும்.

## சேரமான் செல்வக் கடுங்கோ

பதிற்றுப் பத்தின் ஏழாம்பத்தில் செல்வக் கடுங்கோ விதந்துரைக்கப்படுகிறான். இப்பத்தின் ஆசிரியர் புகழ்பெற்ற சங்கப் புலவர் கபிலர் ஆவர். இதன் முதற்பாடலான 61-ஆம் பாடலில் கபிலர். தம் நண்பனும் வள்ளன்மைக்குத் தலைசிறந்தவனுமான பாரியுடன் அச்சேரனை ஒப்பிடுகிறார். அதனை,

"புலர்ந்த சாந்திற் புலரா வீகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழுவுமண் புலர விரவல ரினைய
வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென"

—பதிற்றுப்பத்து. பாடல் 61. வரி. 7—10.

எனவரும் அடிகளால் உணர்க.

(a) "வாழி யாத வாழி பலவே" வரி. 21.

(b) "கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்று நிலைதளர்க்கும் உருமிற் சீறி
யொருமுற் றிருவ ரோட்டிய வொள்வாட்
செருமிகு தானை வெல்போ ரோயே
... ... ... ...
செல்வக் கோவே சேரலர் மருக."

—பதிற்றுப் பத்து. பாடல் 63. வரி. 9—16

என வரும் 63-ஆம் பாடலில் அவன் 'ஆதன்' என்று அழைக்கப்படுகிறான். 8-12 வரிகளில் ஒரு முற்று கையின்போது இவன் சோழன், பாண்டியன் ஆகிய ஈரரசரையும் முறியடித்துத் துரத்தியதாகத் தெரிகிறது. இதன் பயனாக அக்காலத்தில் அவர்கள் ஆட்சியிலிருந்த பகுதிகளை அவன் கைக்கொண்டான் என்பது தெரிகிறது. இது பெரும்பாலும் அவ்வரசர் கைவசமிருந்த சேரநாட்டை ஒட்டிய பகுதிகளா யிருக்கக்கூடும். 60-ஆம் அடியில் அவன் செல்வக்கோ என்று உரைக்கப் பெறுகிறான். அவன் நீடு வாழ்க என்னும் ஆசியுடன் இப்பாடல் முடிவுறுகிறது.

"வலம்படு முரசின் வாய்வாட் கொற்றத்துப்
பொலம்பூண் வேந்தர் பலர்தி லம்ம
வறங்கரைந்து வயங்கிய நாவிற் பிறங்கிய
வுரைசால் வேள்வி முடித்த கேள்வி
யந்தணர் அருங்கலம் ஏற்ப நீர்பட்
டிருஞ்சே றாடிய மணன்மலி முற்றத்து"

—பதிற்றுப்பத்து. பாடல் 64. வரி. 1—5.

என்னும் பாடலில் முதல் ஐந்து வரிகளில் பார்ப்பனரிடம் அவன் காட்டிய வள்ளன்மை குறிக்கப்படுகிறது. இக்கருத்தையே 63-ஆம் பாடலின் முதல் வரியாகிய

"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே"

—பதிற்றுப்பத்து. பாடல் 63. வரி. 1.

என்பதும் உணர்த்துகின்றது. இதன்பின் 67-ஆம் பாட்டின் தொடக்க வரிகள் 'கொடுமணம்', 'பந்தர்' என்னும் இரண்டு

புகழ் சான்ற இடங்களைக் குறிக்கின்றன. இங்கு அரசன் பாணனிடம் கடலின்முத்தையும் மணிகளையும் வழங்குவதாக வாக்களிக்கிறான். கடைசி வரிகளில் சேரன் உயர்ந்த நேரிமலையையுடைய வீரன் என்றும் செல்வம் ஓங்கும் சேரன் என்றும் கூறப்படுகிறான்.

"கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண
• • • •
பறைபண் ணழியும் பாடுசால் நெடுவரைக்
கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே"
—பதிற்றுப்பத்து. பாடல் 67. வரிகள் 1—3; 21—23.

அவன் தன் முன்னோர்களுக்கும் மன நிறைவை உண்டுபண்ணினன் என்பது தெரிகிறது. பாட்டின் இறுதிப் பகுதி,

"தொலையாக் கொள்கைச் சுற்றம் சுற்ற
வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
யுயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை.
... ... ... ...
முழுமுதன் மிசையக் கோடுதோறுந் துவன்று
மயிரை நெடுவரை போலத்
தொலையா தாகநீ வாழு நாளே"
—பதிற்றுப்பத்து. பாடல் 70; வரி. 17—19; 25—27.

என, அவன் அயிரைமலை நிலைபெற்றிருக்குமளவும் நீடு வாழ்வானாக என்று வாழ்த்துகிறது. பதிகத்தில் அவன் அந்துவன் மகன் என்று குறிக்கப்படுகிறான். வேறிடங்களில் அவன் அந்துவன் சேரல் என்ற பெயருடன் வழங்கப்பெறுகிறான். அவன் அன்னை 'ஒரு தண்டை' யின் புதல்வியான பொறையன் பெருந்தேவி யாவள். இப்பெயர் பொது முறையில் சேரன் அரசி என்றே பொருள்படும். ஏனெனில், பொறையன் என்பது சேரர்களின் பொதுப் பெயர்களுள் ஒன்றே யாகும். ஆயினும் இங்கே அஃது ஓர் இயற்பெயராகவே காணப் பெறுகிறது.

அவன் எதிரிகளைத் துரத்தியடித்தும் போர்களில் பொருது வெற்றியடைந்தும் சேரநாட்டுப் பகுதிகள் முழுவதையும் அடக்கியாண்டதாகத் தோற்றுகிறது. வேள்விகளும் பிற நற்காரியங்களும் செய்து அவன் தன் கடமைகளை நிறைவேற்றினன். அவன் திருமாலிடம் மாருத பற்றுடையவன் என்பதும் 'ஓகண்டூர்' என்று கூறப்பட்ட ஊரைத் தானமாகக் கொடுத்தான் என்பதும் தெரிகின்றன. வாழ்க்கையின் உட்பொருளை அறியும் வகையில் அவன் தன் சமய குருவையும் விஞ்சியவன் என்பது கூறப்படுகிறது. புலவருக்கு அவன் ஆயிரம் பொற்காசுகளும் 'நன்ரு' என்ற மலைமீதிருந்து பார்த்தால் காணப்படும் ஊர்கள் அனைத்தையும் ஈந்தான் என்று உரையாசிரியர் குறிக்கிரூர். புறநானூறு என்ற தொகைநூலில் 387-ஆம் பாட்டுச் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற அரசனைச் சிறப்பிக்கிறது. அவன் இதே அரசனுயிருக்கக்கூடும். அவனை அங்குப் பாடிய புலவர் உரைக்குறிப்பின்படி குண்டுகட் பாழி ஆதன் என்பவன் அவன். அப்பாட்டினிடையே 29—30-ஆம் வரிகளில் நன்குணரப்பட்ட சிறப்புத் தொடராலேயே அவன் குறிக்கப்பெறுகிருன். 32—33 வரிகளில் அவன் தலைநகர் வஞ்சி என்றும், அதன் புறமதில்கள் பொருநை நீர் மோதப் பெற்றன என்றும் கூறுகின்றன. இப்பாட்டின் உரைக்குறிப்பு இவ்வரசன் சிக்கற்பள்ளியில் உயிர்நீத்தான் என்ற முக்கியமான செய்தியைத் தருகிறது.

"ஊழி வாழி பூழியர் பெருமகன்
பிணர்மருப் பியானைச் செருமிகு நோன்ருட்
செல்வக் கடுங்கோ வாழி யாதன்
என்ருத் தெவ்வ ருயர்குடை பணித்திவண்
விடுவர் மாதோ நெடிதே நி.........
புல்விலை வஞ்சிப் புறமதில் அலைக்கும்
கல்லென் பொருநை மணலினு மாங்கட்
பல்லூர் சுற்றிய கழனி
யெல்லாம் விளையும் நெல்லினும் பலவே."

—புறம். செய்யுள். 387. வரி. 28—34

புறம் 13-லும் அச்சேரன் குறிக்கப்பெறுகிறன். இப் பாட்டின் உரைக் குறிப்பு அந்துவன் சேரலைப் பற்றியும் 'முடித்தலை' மன்னனாகிய பெருநற்கிள்ளியைப் பற்றியும் குறிப்பிடுகிறது. இதை யியற்றிய புலவர் உறையூரிலுள்ள ஏணிச்சேரியைச் சார்ந்த முடமோசியார். புலவர் கருவூரில் அரசன் மாளிகையின் உப்பரிகையில் இருந்தார் என்றும் அது கூறுகிறது. சோழன் ஏறிய யானை கட்டுமீறி அவனைக் கட்டமைந்த கருவூர்க் கோட்டையை நோக்கிக் கொண்டு சென்றது. சோழன் நலத்தைப் பற்றிக் கவலை கொண்ட புலவர், அதற்கேற்ப அவன் ஊறின்றி மீள்வானாக என்று விரும்புகிறர். சோழன் கோட்டையைப் பகைமை காரணமாக அணுகவில்லை. ஆனல் மதங் கொண்ட யானையால் வேறு வழியின்றி அங்கே கொண்டு செல்லப்பட்டான் என்ற மறைபொருளையும் அச்சொற்கள் விளக்குபவையாகும். பாடலின் தன்மையை விளக்கும் முறையில் உரையாசிரியர் இச்செய்திகளைத் தருகிறர்:

" இவனியா ரென்குவை யாயின் இவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
வெய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னாப்பண் திங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே "

—புறம். செய்யுள். 13. வரி. 1—14.

இந்த அந்துவன் சேரல் செல்வக் கடுங்கோவின் தந்தை எனக் கருதப்படுபவன். கருவூரைப்பற்றி இப் பாடல் கூறுவது குறித்தும் சேரர்களுடன் அதன்

தொடர்பு குறித்தும் குறிப்பிடுகையில் நாம் மீண்டும் இப் பாடலைக் கவனிப்போம்.

## சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை

இனி, நாம் கவனிக்கவேண்டுவது 8-ஆம் பத்து ஆகும். இது செல்வக் கடுங்கோவுக்கும் வேள் ஆவிக் கோமான் புதல்வியான பதுமன் தேவிக்கும் புதல்வனான சேரன் பெருஞ்சேரல் இரும்பொறையைச் சிறப்பிப்பது. அவன் மிக அரிய செயல்கள் செய்த அரசன். அவன் அதிகமான் அரசரின் தலைநகரும் கோட்டையுமாகிய தகடூரைத் தகர்த்தெறிந்தவன். இப்பத்தின் தொடக்கப்பாட்டில் வரும்

"மத்துக்கயி றுடா வைகற்பொழுது நினையூஉ
வான்பயம் வாழ்நர் கழுவு டலைமடங்கப்
பதிபா ழாக வேறுபுலம் படர்ந்து"

—பாடல் 71. வரி. 16—18.

என்னும் அடிகளுள், 'கழுவுள்' என்ற ஆயர் தலைவனைப் பற்றிக் குறிப்பு வருகிறது. 14—19 வரிகள் இச்சேரன் இவ்வாற்றல் மிக்க தலைவனை அடக்கியதாகக் கூறுகின்றன. கழுவுளை அடக்கியபின் அவன்போன்ற பிற தலைவர்களையும் அடக்கும்படி அவன் முன்னேறிச் சென்றான்.

"உரவோ ரெண்ணினு மடவோ ரெண்ணினும்
பிறர்க்குநீ வாயி னல்லது நினக்குப்
பிறருவம மாகா வொருபெரு வேந்தே
... ... ... ...
காவிரி மண்டிய சேய்விரி வனப்பிற்
புகார்ச் செல்வ பூழியர் மெய்ம்மறை
கழைவிரிந் தெழுதரு மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந கொடித்தேர்ப் பொறைய".

—பதிற்றுப்பத்து, பாடல் 73. வரி. 1—3;.........

என்னும் செய்யுட்பகுதி அவன் பிற அரசர்கட்கு ஒப்புமைக்கான ஒரு முன்மாதிரி யாவான் என்றும், ஆயின் அவனுக்கு ஒப்புமை கூற யாருமிலர் என்றும் குறிக்கிறது. இதே பாட்டில் சற்று மேலே அவன் புகார் நகரின்-சோழர்

தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின்மீது ஆட்சி செலுத்திய செல்வன் என்றும், அதன்பின் பூழியர் (பாண்டியர்) களது கவசம் என்றும் இன்னும் அடுத்தபடி முகில்கள் மூடப்பெற்ற உயர் கொடுமுடிகளையுடைய கொல்லிமலையை யாண்ட வீரகாசன் என்றும் குறிக்கப்பெறுகிறான். 'அவன் பெருமையைப்பற்றி அவனும் கூறுவதில்லை; அதனைக் கூற அவனினும் மிக்காருமில்லை யாதலின் அது பற்றிய கூற்றைப் பிற தலைவர்கள் ஏற்பதற்கில்லையே!' என்று புலவர் (சமத்காரமாக) வருந்துகிறார். அடுத்து வரும் 74-ஆம் பாடலில் வரும்,

" கேள்வி கேட்டுப் படிவ மொடியாது
வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்ப
... ... ... ...
கொடுமணம் பட்ட வினைமா ணருங்கலப்
பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்
... ... ... ...
...... ...... ...... நின்வயின்
முழுதுணர்ந் தொழுக்கு நரைமூ தாளனை
வண்மையும் மாண்பும் வளனு மெச்சமும்
தெய்வமும் யாவதுந் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெருமநின் படிமை யானே.

—வரி. 1—2; 5—6; 23—28.

என்னும் அடிகளால், அவன் தகுதிப்படி உசாவியறிந்து பல வேள்விகள் ஆற்றியவன் என்றும் அவற்றை முறைப்படி செய்வதனால் தக்கோரால் போற்றப்பட்டவன் என்றும் அவன் தன் மதிப்புக்குரிய புரோகிதரையே தன் அறிவுரையாலும் முன்மாதிரியாலும் துறவு பூணும்படி செய்த அறநிலை வாழ்க்கை யுடையவன் என்றும் புகழப்பெறுகிறான். 75-ஆம் பாடலில் வரும்,

" பொலந்தார் யானை யியறேர்ப் பொறைய
வேந்தரும் வேளிரும் பிறருங் கீழ்ப்பணிந்து
நின்வழிப் படாஅ ராயினெள் "

வரி. 3—5.

என்னும் அடிகளில் அவனுடைய யானைகளும் தேரும் அழகுடையவை என்று கூறப்படுகின்றன. 'மன்னரும் தலைவரும் அவன் ஆதிக்கத்தை ஏற்காவிடின் எங்குத் தான் செல்ல முடியும்?' என்று புலவர் கேட்கிறார். 76-ஆம் பாடலில் குறிப்பிடத்தக்கது எதுவுமில்லாமையின் அதனைக் கடந்து 77-ஆம் பாட்டை யடைந்தால் அங்கே அவன் பகைவர்களைத் துரத்தி அவர்களை, கொங்கு நாட்டு மக்களின் ஆடுமாடுகள் என்னும்படியாகக் காடுகளுக்கு ஓட்டினான். இங்கே தரப்படும் குறிப்பு ஆடுமாடுகளுக்குப் பேர்போன கொங்கு நாட்டையும் அங்கே பரந்துமேயும் ஆடுமாடுகளைப்பற்றி மட்டுமேயாம். 78-ஆம் பாடலின்கண் வரும்

"வெல்போ ராடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயி லிறும்பிற் றகடூர் நூறி
பேஎ மன்ற பிறழநோக் கியவ
ரோடுறு கடுமுரண் துமியச் சென்று
வெம்முனை தபுத்த காலைத் தந்நாட்
டியாடுபரந் தன்ன மாவி
னுபரந் தன்ன யானையோன் குன்றே"

வரி. 8—14.

என்னும் அடிகளால் வீறுமிக்க வீரர்களால் காக்கப் பட்ட தகடூர் அழிக்கப்பட்டதுபற்றிய தெளிவான குறிப்புத் தரப்படுகிறது. குதிரைகளும் யானைகளும் அடங்கிய அவன் சேனை பரந்து சென்றது, மேய்ச்சலுக்காகப் பரந்து செல்லும் ஆடுமாடுகளுக்கு உவமையாகக் கூறப்பட்டிருக் கிறது. இது மேலே குறிக்கப்பட்ட கருத்தோடு ஒத்ததே யாகும். 79-ஆம் பாடலில் வரும்

"படியோர்த் தேய்த்த வாண்மைத் தொடியோர்
தோளிடைக் குழைந்த கோதை மார்ப
... ... ... ...
மடையெதிர் கொள்ளா வஞ்சுவரு மரபிற்
கடவுள் அயிரையின் நிலைஇக்
கேடில வாக பெருமநின் புகழே"

வரி. 6—7; 17—19.

என்னும் அடிகளால் அவன் தன் சேரர் குடிப்பெயருள் ஒன்றையே (கோதை) குறிக்கும் மாலையை அணிந்த மார்பன் என்று அவன் விரித்துரைக்கப்படுகிறான். அவன் வெற்றித் திறம் பொது மொழியால் புனைந்துரைக்கப் படுகிறது. அவன் புகழ் அயிரை மலையின் தேவிபோன்று நிலைபெற்றிருக்குமாக எனப் புலவர் தம் விருப்பந் தெரிவிக்கிறார். 80-ல் குறிப்பிடத்தக்க எதுவும் இல்லை. மேல் வரும் பதிகம், தொடக்க வரிகளைப்போலவே அவன் பெற்றோர் விவரம் தருகிறது. பின் உச்சியிலே நன்னீரை உடைய மலையைத் தன்னகம் கொண்ட கொல்லிப் பகுதியிலுள்ள அதிகமானுடன் அவன் செய்த போர் விவரம் வருகின்றது. இங்கே அவனை எதிர்த்துப் போரிட்டவன் தகடூர்த் தலைவனாகிய அதிகமான் என்பவன். அதிகமான் படை வீரர்கள் வேல் தாங்கிப் போரிட்டனர். அவன், அதிகமானை மட்டுமன்றி அவன் உதவிக்கு வந்தவர்கள், அஃதாவது அவன் துணைவர்களான இரண்டரசர்களையும் தோற்கடித்து அவன் தலைநகராகிய தகடூரை அழித்தான். இவ்வெற்றியைப் பொருளாகக்கொண்டு தகடூர் யாத்திரை என்ற தனி நூல் எழுந்தது. பதிகத்தில் இவ்வெற்றி சிறிதளவு விரிவுபட வருணிக்கப்பட்டிருக்கிறது. புகழ்பெற்ற சங்கப் புலவரான அரிசில் கிழாருக்கு அரசன் தன் அரண்மனையிலுள்ள யாவற்றையும் தந்து, தானும் தன் அரசியுடன் வெளியே சென்றுவிட்டான். அரசிருக்கையும் புலவருக்கே தந்தான். அனைத்தையும் பெற்ற புலவர் அரசனிடம் அரசிருக்கையையும் அரச செல்வத்தையும் பிறவற்றையும் மீட்டும் பெற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டபின் அவனுக்கு உதவியாக அவன் அமைச்சரானார். தகடூரை அழித்த அப்பெருஞ்சேரல் 17 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான்.

## இளஞ்சேரல் இரும்பொறை

இனி இளஞ்சேரல் இரும்பொறையைப் பற்றிக் கூறும் 9-ஆம் பத்திற்குச் செல்வோம். பெருஞ்சேரலிரும்பொறை

யுடன் மாறுகொண்ட இப்பெயர் இவனை அவன் மகனெனக் குறிக்கும் நோக்குடன் ஏற்பட்ட தொடர் என்பது தோற்றும். அதனுடன் உண்மையில் பதிகமே, அவன் குட்டுவன் இரும்பொறைக்கும் மய்யூர் கிழான் மகள் வேண்மாள் அந்துவன் செள்ளைக்கும் புதல்வன் என்று கூறுகிறது. இப்பத்தின் 81-ஆம் பாடலில்,

"வேறுபுலத் திறுத்த வெல்போ ரண்ணல்
... ... ... ...
சுரும்பார் சோலைப் பெரும்பெயற் கொல்லிப்
பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து
மின்னுமிழ்ந் தன்ன சுடரிழை யாயத்துத்
தன்னிறங் கரந்த வண்டுபடு துப்பி
ஞெடுங்கீ ரோதி யொண்ணுதல் அணிகொளக்
கொடுங்குழைக் கமர்த்த நோக்கி னயவரப்
பெருந்தகைக் கமர்ந்த மென்சொற் றிருமுகத்து
மாணிழை யரிவை காணிய வொருநாட்
பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்
முனைகை விட்டு முன்னிலைச் செல்லாது
தூவெதிர்ந்து பெறுஅத் தாவின் மள்ளரொடு
தொன்மருங் கறுத்த லஞ்சி, யரண்கொண்டு
துஞ்சா வேந்தருந் துஞ்சுக
விருந்து மாக நின்பெருந் தோட்கே"

வரிகள் 18; 24—37.

எனவரும் அடிகளால் அரசனை 'வீர அரசன்' என்று குறிப்பிட்டுப் பின், தன் படையெழுச்சிகளைச் சற்று நிறுத்தி மனமுளைந்து வருந்தும் அரசியை ஒருநாட்பொழுதேனும் சென்று காணும்படியும் அவ்வொருநாளேனும் போரால் நலிவுற்ற தன் பகைவர்களுக்கு ஓய்வு தரும்படியும் புலவர் அரசனை வேண்டுகின்றார். இங்கே 24-ஆம் அடியில் கொல்லிமலை பற்றிய குறிப்பு ஒன்று காணப் படுகிறது. இதனைப் பின்பற்றிச் சேரர் தலைநகர் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள கரூரே என்று கூறுவதற்கு ஆதரவு தேடுவார் உளர். அதனைப் பார்வையிடுவதால் கொல்லிமலைக்கே சிறப்பான பூவணிந்து அவனைக் காண

வரும் அரசிக்கு மகிழ்ச்சியுண்டாகும் என்றும் அதற்கிடையே பகைவீரருக்கும் சிறிது ஓய்வு உண்டாகும் என்றும் புலவர் குறிக்கிருர். இங்கே புலவர், அரசன் கொல்லிமலை வரை சென்று போரிட்டு மீள்வதனுல் அவன் மனைவி அவ்விடத்துக்குரிய பூச்சூடித் தக்க முறையில் போராடித் தளர்ந்த அரசனை வரவேற்பாள் என்று தம் கற்பனை நயத்தைச் சொரிந்துள்ளார். இதுபற்றி நாம் மேலே மீண்டும் கூறுவோம். 81-ஆம் பாடலில் வேறு சிறந்த செய்தி எதுவும் இல்லை. அடுத்ததான 82-லும் அவன் படை வீட்டில் பாணன் அவனைக் காண வருவதைக் கூறிப் புலவர் அவனைக் கண்டு நில விளைவால் ஓங்கிய திருவுடைய அரசனைக் குறிப்பிட்டு அவன் பெருமையைப் பாராட்டுகிருர். அவன் போர்வீரன் மட்டுமல்லன்; வெற்றிகரமான ஆட்சியுடையவன்; பரிசில் வழங்குவதிலும் வள்ளன்மையுடையவன். 83-ல் குறிப்பிடத்தக்க செய்தி எதுவுமில்லை. 84-ஆம் பாட்டில்,

"பூழியர் கோவே பொலந்தேர்ப் பொறைய"

வரி. 6.

எனவரும் வரி அவனை மீட்டும் போர்வீரன் என்று குறித்துப் பாடலிடையே மேல் கடற்கரையிலுள்ள பூழி நாட்டைக் குறிப்பிட்டு அவனைப் பூழியர் இறைவன் என்றும் அழகிய தேருடைய பொறையன் என்றும் குறிக்கின்றது. சோழ அரசனுகிய சென்னியர் பெருமான் திறை உருவில் அவனுக்குத் தரும் பெரும்பொருள் பற்றியும் இப்பொருள் கொண்டு அவன் தன்னிடம் வரும் புலவர்கட்கும் பாணர்க்கும் வண்மையுடன் பரிசில்கள் வழங்கினுன் என்பது பற்றியும் இவ்வரசன் முன்னேனை செல்வக் கடுங்கோ கபிலருக்களித்தவற்றினும் மிகுதியான கிராமங்களை இவன் பரிசிலாகக் கொடுத்தான் என்பது பற்றியும் 85-ஆம் பாடலில்

"பொன்னவிர் புனைசெயல் இலங்கும் பெரும்பூண்
ஒன்னுப் பூட்கைச் சென்னியர் பெருமான்

இட்ட வெள்வேன் முத்தை............

... ... ... ...

அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்
உவலை கூரார்க் கவலையில் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற வூரினும் பலவே."

வரி. 9—14.

எனவரும் அடிகள் உணர்த்துகின்றன.

" புனல்பாய் மகளி ராட வொழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்
சாந்துவரு வானி நீரினும்
தீந்தண் சாயலன் மன்ற தானே"

வரி. 11—14.

என்று 86-ஆம் பாட்டில் வரும் அடிகள் 'வானி' என்ற ஆற்றை அவனுடைய ஆறாகக் குறிப்பதாகத் தோன்றுகிறது. உரையாசிரியரும் 'வானி' அவன் நாட்டின் ஆறுகளுள் ஒன்று என்று கூறுகிறார். வானி என்பது இன்று 'பவானி' என்றழைக்கப்படும் ஆறு ஆகும். அது கொங்கு நாட்டில் மேட்டு நிலத்தின் அடிவாரத்தில் ஒழுகி ஈரோட்டுக்குப் பக்கத்தில் காவிரியுடன் ஒன்று சேர்கிறது. 88-ஆம் பாட்டில்

" வையக மலர்ந்த தொழின்முறை யொழியாது
கடவுட் பெயரிய கானமொடு கல்லுயர்ந்து
தெண்கடல் வளைஇய மலர்தலை யுலகத்துத்
தம்பெயர் போகிய வொன்னார் தேயத்
துளங்கிருங் குட்டம் தொலைய வேலிட்
டணங்குடைக் கடம்பின் முழுமுதல் தடிந்து
பொருமுரண் எய்திய கழுவுள் புறம்பெற்று
நாம மன்னர் துணிய நூறிக்
கால்வல் புரவி யண்ட ரோட்டிச்
சுடர்வீ வாகை நன்னற் றேய்த்துக்
குருதி விதிர்த்த குவவுச்சோற் றுக்குன்றோ
டுருகெழு மரபின் அயிரை பரைஇ
வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்

கொற்ற மெய்திய பெரியோர் மருக
... ... ... ...
ஆரெயி லலைத்த கல்கால் கவணை
நாரரி நறவிற் கொங்கர் கோவே
யுடலுநர்த் தபுத்த பொலந்தேர்க் குருசில்
வளைகடன் முழுவிற் றொண்டியோர் பொருந
நீநீடு வாழிய பெரும நின்வயிற்
றுவைத்த தும்மை நனவுற்று வினவு
மாற்றருந் தெய்வத்துக் கூட்ட முன்னிய
புனன்மலி பேரியா றிழிதந் தாங்கு
... ... ... ...
உறுகா லெடுத்த வோங்குவரற் புணரி
நுண்மண லடைகரை யுடைதருந்
தண்கடற் படப்பை நாடுகிழ வோயே"

வரி. 1—14; 18—25; 40—42.

எனவரும் வரிகள் அவனுக்கு முற்பட்டோர் அருஞ் செயல்களைத் தொகுத்துரைத்து அவன் அவர்கள் கால் வழியில் வந்த சிறப்பினன் என்று கூறுகின்றன. அவன் வெற்றிகள் விந்தியமலைக்கும் கடல்களுக்கும் இடைபட்ட நிலப்பகுதியை இடமாகக் கொண்டன. அவன் முதற் செயல் கடற் போரிட்டுக் கடம்பழித்தல் ஆகும். அதன் பின் ஆயர்தலைவன் கழுவுளை வெல்லல், வேகமிக்க குதிரைப் படைகளை உடைய அண்டரை (ஆயரை) வெருட்டல் முதலியவை கூறப்படுகின்றன. அவற்றின் பின்னது, அயிரை மலை இறைவி வழிபாடு. அரசரும் தலைவரும் சேரர் அடிபணிந்து தொண்டு செய்தனர். இவையே அவன் முன்னோர்கள் அருஞ்செயல்கள். 19-ஆம் அடியில் அவனே 'கடுங்கோ' என்றும் 'கொங்கர்கோ' என்றும் 'தொண்டியின் வீர அரசன்' என்றும் விளிக்கப் படுகிறான். இறுதியாக "அவன் ஆதரவை நாடியவர்க்கு ஆற்றொழுக்குப் போலப் பரிசில்களை வழங்கினான்" என்பது கூறப்படுகிறது. உரையாசிரியர்கள், இங்கே கூறப்பட்ட ஆற்றை அயிரை மலையிலிருந்து ஒழுகும் ஆறு எனக் கொள்கின்றனர். பெரிய ஆறு என்று பொருள்படும்

பொதுச் சொல்லாகிய பேரியாறு என்ற பெயர் இங்கே அயிரைமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறு; அஃதாவது அயிரையாறு என்று கொள்ளப்படுகிறது. அரசன் வந்த கருத்தைக் குறிப்பிட்டு அவனுக்கு நீண்ட வாழ்நாள் அருளும்படி இறைவனை வணங்கிய பின் புலவர் பாட்டின் இறுதியில் அவனைக், 'கடலின் தண் புனலை யடுத்த மணற் பாங்கான நிலத்தினை உடைய தலைவனே' என்று அழைக்கின்றார். 89-ஆம் பாட்டு அவன் செங்கோன்மையை வருணிக்கிறது. இப்பாட்டினிடையில் அவன் பல வேல்களை யுடைய இரும்பொறை என்று அழைக்கப்பெறுகிறான். இறுதிப்பாட்டாகிய 90-ஆம் பாடலில்,

"அறன்வாழ்த்த நற்காண்ட
விறன் மாந்தரன் விறன் மருக
... ... ...
உருகெழு மரபின் அயிரை பரவியுங்
கடலிகுப்ப வேலிட்டும்
உடலுநர் மிடல்சாய்த்து
மலையவு நிலத்தவு மருப்பம் வெளவிப்
பெற்ற பெரும்பெயர் பலர்கை யிரீஇய
கொற்றத் திருவி னுரவோ ரும்பல்
கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே
மட்டப் புகாவிற் குட்டுவ ரேறே
யெழாஅத் துணைத்தோட் பூழியர் மெய்ம்மறை
யிலங்குநீர்ப் பரப்பின் மரந்தையோர் பொருந
வெண்பூ வேளையொடு சுரைதலை மயக்கிய
விரவுமொழிக் கட்டூர் வயவர் வேந்தே
... ... ...
நின்னாள், திங்க ளனைய வாக திங்கள்
யாண்டோ ரனைய வாக யாண்டே
யூழி யனைய வாக வூழி
வெள்ள வரம்பின வாகென வுள்ளிக்
காண்கு வந்திசின் யானே செருமிக்
குருமென முழங்கு முரசிற்
பெருநல் யானை யிறைகிழ வோயே"

—பதிற்றுப்பத்து. பாடல் 90. வரி. 12-13; 19-30; 51-57.

என்வரும் வரிகளில் அவன் வீரமிக்க மாந்தரன் பரம்பரையில் இறுதியில் வந்தவனாகக் கூறப்படுகிறான். 'மாந்தரன்' என்ற இப்பெயரும் சேரர்களுக்குத் தரப்படும் பொதுப் பெயர்களுள் ஒன்றாகும். பின்வரும் அடிகளில் அவன் மீட்டும் அயிரை இறைவியின் அடிபணிபவன் என்றும் 20-ஆம் அடிக்குப் பின்வரும் அடிகளில் கடலின்கண் பகை வீரர்களை எதிர்த்து வேல்களை எறிந்து அவர்களை முறியடிப்பவன் என்றும் வருணிக்கப்படுகிறான். அவன் மலையின் செல்வமும் நிலத்தின் செல்வமும் ஈட்டித் தன்னை அடைந்தோருக்கு அவற்றைப் பகிர்ந்து கொடுத்தான். இஃது அவன் சேரமுன்னோர்களின் பொதுப்பண்பே யாகும். பின் அவன் 'கொங்கர் கோ' என்றும் குட்டுவ அரசரிடையே அரியேறு போன்றவன் என்றும், பூழியரின் காவற்கவசம் என்றும், மாந்தையின் மக்களிடையே போர் வீரன் என்றும், வீரமிக்க காட்டூர் மக்களின் அரசன் என்றும் மற்றும் பல பொதுப்படையான சிறப்பு மொழிகளுடனும் புகழப்பெறுகிறான். பாட்டின் எஞ்சிய பகுதி அரசியைப் புகழ்ந்து காவிரியின் செழு நிலத்தை அவளுக்கு உவமையாகக் கூறுகின்றது. பாட்டின் இறுதியில் புலவர் அவன் நீண்டநாள் வாழ்க என்று வாழ்த்துரைத்து அவன் 'நாட்கள் மாதங்களாகவும் மாதங்கள் ஆண்டுகளாகவும் ஆண்டுகள் அவற்றினும் நீண்டகால எல்லைகளாகவும் விளங்குக!' என்று குறிப்பிடுகிறார். பதிகம் வழக்கப்படி அரசனுடைய பெற்றோர்களைக் குறிப்பிட்டுக் கூறியபின் அவன்முதல் வெற்றியாக இரண்டு அரசர்களுக்கும், விச்சியின் தலைவனுக்கும் எதிராகப் போரிட்டு அவர்கள் ஐந்து மலைக்கோட்டைகளையும் அழித்தது சிறப்பிக்கப்படுகிறது. பொத்தியிலுள்ள பெருஞ்சோழரை வென்று வித்தையிலுள்ள இளைய பழையன்மாறனை முறியடிப்பதென்ற தன் வாக்குறுதியை அவன் நிறைவேற்றினான். அவர்கள் செல்வத்தை யெல்லாம் அவன் வஞ்சிமூதூருக்குக் கொணர்ந்து அவற்றைத் தன் வள்ளன்மைக்குரியவர்கட்

கெல்லாம் பகிர்ந்து கொடுத்தான். அவன் தன் இராஜ விசுவாசமுள்ள மந்திரியும் வேதஞானத்தில் சிறந்தவனு மான மய்யூர்கிழானைத் தன் புரோகிதனினும் உயர்வாக மதித்திருந்தான். அவன் பெருஞ் சதுக்கப்பூதத்தைக் கொணர்ந்து, அதனைத் தன் தலைநகரில் நிறுவி அதற் கேற்ற விழாவினைகளை முற்றுவித்தான். அவன் தன் குடி களுக்குச் சிறந்த பாதுகாப்பளித்து ஆட்சி புரிந்தான். இப்பத்தின் ஆசிரியரான புலவர் பெருங்குன்றூர் கிழாருக்கு அவன் வண்கை நிறைவுடன் முப்பத்திரண்டா யிரம் பொன்னும், அவர் செல்வமும் சீரும் பெற்று நிறைந்த வாழ்வு வாழும்படி நிலங்களும் ஊர்களும் பிற சாதனங்களும் வழங்கினன். அவன் ஆண்ட காலம் 16 ஆண்டுகள் ஆகும்.

பதிற்றுப்பத்தின் இவ்வாராய்ச்சி சேரர் சரித்திரத்தை இரண்டு மூன்று தலைமுறைகள் அளவும் கொண்டு வருகின் றது. ஆயினும் அஃது ஏறக்குறைய ஒரு நூற்றாண்டின் சரித்திரத்தைக் கூறுவதாகக் கொள்ளலாம். கால எல்லை எதுவாயினும், அக்காலச் சரித்திரம் தெளிவாகவே கூறப் படுகிறது. துரதிருஷ்டவசமாக முதற் சேரனைப்பற்றி நமக்குக் கிட்டும் செய்திகள் (பாட்டுகளிலிருப்பவை) மிகக் குறைவே யாகும். அடுத்த பத்தில் (2-ல்) அடுத்த சேரன் பெற்றோர் பற்றிய விவரம் வருகிறது. இதன் மூலம் நமக்கு அவன் பெயர் மட்டுமே கிடைக்கிறது. அவன் உதியன் சேரல் என்று அழைக்கப்பட்டான் என்ப தொன்றே அவனைக் குறித்து நாம் அறிவது. இந்நூலில் பிற விடங்களில் காணப்படும் குறிப்புகளிலிருந்து அவன் முன்பே ஓரளவு புகழடைந்தவன் என்பது காண்கிறது. அவன் பின் வந்த அடுத்த சேரன் வெற்றிகள் கடற்கடம் பரை எதிர்த்து அவர்கள் காவல்மரத்தை அழித்ததுடன் தொடங்குகிறது. அவன் பொதுத் தொடர்களால் வடக்கில் இமயம் வரை ஆரியர் ஆண்ட பகுதி முதல் தெற்கில் கன்னியா குமரிவரையும் ஆண்டமை குறிப்பிடப்படு கிறது. இதே நூலின் மற்றோர் இடத்தில் அவன் ஏழுமுடி

களாலான மாலைகளை அணிந்தவன் என்பது கூறப்படுகிறது. இதிலிருந்து அவனோ அல்லது அவன் தந்தையோ அக்காலத் தரசர்களையும் சிற்றரசர்களையும் வென்றதாகத் தெரிகிறது. எனவே, இக்காலத்திலேயே சேர அரசர்கள் தங்கள் ஆற்றலைத் தங்கள் தாயகநாட்டிற்கப்பால் விரிவுபடுத்திக் குறைந்த அளவு தமிழரசர், சிற்றரசர் ஆகியவர்கள் மீதேனும் ஆதிக்கம் நாட்ட முயன்றனர் என்பது தெரிகிறது. பொதுப்படைத் தொடர்களால் அவன் தன் ஆதிக்கத்தை இமயமலையிலிருந்து கன்னியா குமரிவரை பரப்பினன் என்றும், சிறப்பாக இமயமலையில் தன் விற்பொறியை நாட்டினன் என்றும் அறியப்படுகின்றனவாயினும், பதிகத்தில் அவன் தன் ஆற்றல் மிக்க ஆட்சியைத் தமிழக முழுமையில் மட்டுமே நாட்டியதாகக் கூறப்படுகிறது. மூர்க்கத்தன மிக்க யவனரை அவன் வென்று அவர்களிற் சிலரைச் சிறைப்பிடித்துச் சிறைமீட்புக்காகப் பெரும் பொருள் பெற்றான். எனவே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்பற்றிய அளவில் இச்செயல்களே அவன் புகழுக்குரியவை. இந்நூலில் கூறப்படும் அடுத்த சேரன் அவன் தம்பி ஆவன். அவன் வெற்றிகள் இதனினும் நுணுக்கமாகவும் தெளிவாகவும் சரித்திர பூர்வ உண்மைகள் என்ற முறையில் குறிக்கப்படுகின்றன. அவன் மேற்கூறிய சேரன் இமயவரம்பன் தம்பி என்று தெளிவுபடக் குறிக்கப் பெறுகிறான். அவன் உம்பற் காட்டைத் தன் கீழ்க் கொண்டுவந்தான். உம்பற் காடு என்ற இப்பெயர் ஆனைக்காடு என்று பொருள்படும் என்றும் சேரரின் மேல் கரை நாட்டை ஏறத்தாழ அடுத்துள்ள ஆனைமலையைச் சூழ்ந்த காடுகளைக் குறிக்கும் என்றும் முன்னரே கூறியுள்ளோம். இதிலிருந்து அவனே சேரர் தாயக நாட்டிற்கு வெளியே சென்று புதுவதாக நாடு பிடித்த அரசன் என்பது விளங்கும். அவன் அடுத்த செயல் அகப்பாக் கோட்டையை வெற்றிகரமாகப் போர் புரிந்து பிடித்து அதனைப் பகலிலேயே தீக்கிரையாக்கி அழித்தது ஆகும்.

இந்த 'அகப்பா' என்ற பெயர் பிற இடங்களிலும் கூறப் படுகிறது. அது வட மலபாரில் கடற்கரை ஓரமாக உள்ள ஒரு கோட்டை என்று தோற்றுகிறது. இதன் பின் தனிப் படக் குறிக்கப்படத் தக்க ஒரு செய்தி கூறப்படுகிறது. அவன் தன் சேரர் குடியின் மூத்தோரிடம் மிகவும் பற்றுக் கொண்டவன் என்றும் அதன் பயனாகத் தான் வென்ற பெருநிலப்பரப்பில் அவர்களை ஆட்சி செய்யும்படி நியமித் தான் என்றும் அறியலாம். புலவர் புனைந்துரை நீக்கிக் கூறுவதானால் இதன் பொருள், 'அவன் பரந்த நிலப்பரப் பைச் சேரர் ஆதிக்கத்தில் கொண்டு வந்து அவற்றிற்கு ஆட்சித் தலைவராகச் சேரர் குடும்பத்தைச் சார்ந்தவரை நியமித்தான்' என்பதே. இஃது உண்மையில் குடும்பப் பற்றின் காரணமாக மட்டுமன்று; இராணுவ, அரசியல் தந்திர முறைகளின் காரணங்களாலும் ஆகும். அவன் அடுத்த செயல் இருகடல் நீராலும் ஒருங்கே திருமுழுக்குப் பெற்றது. இது பல படையெடுப்புகளின் இறுதியில், பொதுப்பட இருகடல்களுக்கும் இடைப்பட்ட நாட்டுப் பகுதியில் அவன் தலைமை ஏற்கப்பட்டதென்பதைக் குறிக் கும் 'சிறப்பு விழா முழுக்கு' என்று கொள்ளலாம். இதனால் அது, குறிப்பாக அவன், ஒரு கடலிலிருந்து தொடங்கி மறு கடல் எல்லைவரை வெற்றிகள் பெற்றான் என்பதைக் காட்டும். அதாவது மேல் கடல் முதல் கீழ்க் கடல்வரை அவன் வென்றான். அவன் குறிப்பாக அயிரையில் நிலைபெற்ற தேவியிடம் பற்றுடையவன். சேரர் வெற்றிகளின் போக்கைக் கவனமாக ஆராய்ந்தால், அவர்கள் முதலில் வடக்கு நோக்கி மேல் கடற்கரையில் தம் ஆதிக்கத்தைப் பரப்பி இப்போது மலையாள நாடு என்று கூறப்படும் இடங்கடந்து, பிற இடங்களில் துளுநாட்டுடன் தொடர்புடையவனாகக் கூறப்படும் நன்னன் ஆண்ட பகுதி உட்பட, கன்னடத்தைச் சார்ந்த துளு நாட்டுப் பகுதியையும் சேர்த்துக்கொண்டனர் என்றும், பின் மலை கடந்து நடுப் பகுதியாகிய கொங்கு நாட்டை நோக்கி

முன்னேறினர் என்றும் விளங்கும். எனவே, அயிரை என்பது இப்போது கன்னடத்தில் ஹகரி (Hagari) எனப் படுவதேயாகும். அப்பெயருடன் இன்று ஓர் ஆறுமட்டும் இருக்கிறது. ஆனல் இப்பாடல்களில் அப்பெயருடன் ஓர் ஆறு மட்டுமன்று; ஒரு மலையுமிருந்ததாகவும் அதன் உச்சியில் வெற்றி இறைவிக்குக் கோவிலிருந்ததாகவும் அதினின்று அவ்யாறு ஒழுகியதாகவும் கூறப்படுகின்றன. இப் பாடல் தொகுதியில் இரண்டுமே குறிக்கப்பட்டுள்ளன. இரு கடல் நீரால் விழாமுழுக்காடிய இடமும் இதுவே என்று தோற்றுகிறது. அரசர் என்ற நிலையிலும் அவன் பேரறிவு படைத்தவனுகவும் வாழ்க்கை முடிவில் சிறந்த பண்டிதரான நெடும்பாரதாயன் என்ற பிராமணருரையைப் பின்பற்றித் தான் துறவு மேற்கொண்டதுடன் அவ்வரையும் மேற் கொள்ளும்படி தூண்டியதாகவும் தெரிகிறது. அவன் பல் யானைச்செல்கெழு குட்டுவன் என்ற பட்டத்துடன் குறிக்கப்படுகிறான். பெரும்பாலும் அவன் படையுள் தலைசிறந்த பகுதி யானைப்படையே என்பதை இது குறிக்கக் கூடும். இவ்விடத்தில் உரை யாசிரியர் இருகடல் என்பதை விளக்கிக் கூறுகையில் ' தனக்கே உரிய மேல் கடலும் வெற்றியால் உரிமையாகப் பெற்ற கீழ்க் கடலும் ' என்று கூறிப்பது கவனிக்கத் தக்கது ஆகும். அவன்தான் முதன்முதலாகக் கொங்கு நாட்டை வென்றவன் என்று தெளிவுபடக் கூறப்படுகிறான். கொங்கு நாடு இங்கே கால்நடைகளுக்குப் பேர் போனதெனச் சிறப்பிக்கப்படுகிறது. இதிலிருந்தே கொங்கு நாடு சேர நாட்டைச் சேர்ந்ததன்று என்றும் அது சேரனல் வென்று கொள்ளப்பட்ட நாடே என்றும் விளங்கும். அவனைப்பற்றிக் கூறப்படும் பிற பொதுத் தொடர்களும் அவன் ஆண்ட பகுதி மேற்கிலிருந்தது என்பதைக் காட்டுபவையாகும். அவனுக்குப் பின் வந்தவன் அவன் தம்பியாகிய களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல். அவன் நாராலான முடியையும் களங்காய் என்ற ஒருவகைக் காயாலான மாலையையும் அணிந்தவன். அவன்

வெற்றிகளுள் முதன்மை வாய்ந்தது 'நெடுமிடல்' என்ற தலைவனை வென்றடக்கியதாகும். உரையாசிரியர், இப் பெயர் சங்கநூல்களில் வரும் அதிகமான் நெடுமான் அஞ்சி யின் குடும்பத்தாரது பொதுப் பெயர் என்று குறிக் கிறார். இந்'நெடுமிடல்' சங்கநூல்களிற் புகழ் வாய்ந்த அஞ்சியின் அடுத்த முன்னோனுயிருத்தல் கூடும். அஞ்சி யின் நாடு காவிரிக்கப்பால் கொங்கு நாட்டுப் பகுதி யில் உள்ளது என்பதை ஓர்தல் வேண்டும். இப்பகுதி பிற் கால வரலாற்றில் வடகோங்கு என்று குறிக்கப்படுகிறது. எனவே, இஃது அவன் அண்ணனால் தொடங்கப்பட்ட கொங்கு நாட்டு வெற்றியின் தொடர்ச்சியே யாகும். அவன் தந்தை இமயவரம்பன் எனப் பெயர் பெற்றது போலவே, அவனும் வானவரம்பன் என்ற சிறப்புப் பெயர் பெற்றான். இஃது அவன் நாடு அடிவானம் வரை எட்டிய தென்ற கவிதைப் புனைந்துரையே யன்றி வேறன்று. அவ னுக்கு மற்றும் 'ஏழு முடிமாலை யணிந்தவன்' என்றும், ஓரிடத்தில் 'நேரியோன்' என்றும் அடைகள் தரப்படு கின்றன. பதிகம், அவன் பூழி நாட்டிற் படையெடுத்து அதனை யாண்ட தலைவனைக் கடம்பின் பெருவாயில் என்ற அவன் தலைநகரில் தோற்கடித்துப் பொன்னால் அணி செய்யப்பட்ட அவன் குறியீட்டு மரமாகிய வாகையை அழித்தான் என்று புகழ்கிறது. இன்னும் பல வெற்றிகள் பொதுத் தொடர்களால் குறிக்கப்படுகின்றன. எனவே இங்கு இவ்விரு சகோதரர்களாலும் கொங்கு நாடு வெல்லப் பட்டது என்ற தெளிவான குறிப்புக் காணப்படுகிறது. இதிலிருந்து அவன் முன்னோர் பரம்பரையாக ஆண்ட நாட்டுப் பகுதி மேல் கடலுக்கும் மேற்குமலைத் தொடருக்கும் இடை யிலேயே கிடந்தது என்பது தெளிவாக ஐயத்துக்கிடமின்றிக் காணப்படும்.

## இக்குழுவின் தலை சிறந்த புகழுடையவன் சேரன் செங்குட்டுவனே.

நாம் இப்போது ஆராயப்புகும் செங்குட்டுவன் புகழ் மிக்க சேரரிடையேயும் புகழ்சிறந்தவன் ஆவன். அவன் முதன்மை வாய்ந்த சங்கப்புலவர்களால் பாடப்பெற்ற பெருமையையுடையவன். அவர்களில் முதன்மதிப்புக் குரியவர் பரணரேயாவர். செங்குட்டுவனைச் சிறப்பித்துப் பாடும் பாடல் தொகுதியை இயற்றியவர் இவரே. இங்கு நம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளுவது இத்தொகுதியின் முதலாவதான 41-ஆம் பாட்டு. அதில் அவனுக்குரிய கடல் எனக் கூறப்படுவது ஒருவேளை அதனகத்துள்ள வேலி மேடாயிருப்பினும் இருக்கக்கூடும். இதே பாட்டில் மற்றொரு சுவைவாய்ந்த குறிப்புக் காணப்படுகிறது. அது மிளகு அரைக்கும் உலக்கையே போர்க் கருவியாகவும் வழங்கப் பட்டது என்பதாகும். இப்பாடல் தொகுதியில் பெரியாறு மிக விரிவாகக் குறிப்பிடப்பெறுகிறது. இவ்விடங்களில் அவன் முன்னோனை சிறப்பனைப்பற்றிக் கூறப்படும் அதே தொடர்களே வழங்கப்பெறுகின்றன. மற்றும் தற் செயலாகப் பலவிடங்களில் இவ்யாறு குறிக்கப்படுவதை நோக்க இவ்யாறு ஒன்றே அவன் நாட்டிலுள்ள ஆறு என் பது தோற்றம். 'அறுகை' என்ற பிறிதொரு தலைவனுக் குத் துணையாகச் சென்று மோகூர்ப் பழையனை வென்றது, அவன் தன் வெற்றிகளை மோகூர்வரை அதாவது கொங்கு நாட்டுக்கு அப்பாலும் விரிவுபடுத்தினன் என்பதைக் காட் டுவதாகும். அவனை அடுத்து முன் சென்ற அரசன் தகடூர்வரை படையெழுச்சியைச் செலுத்தினன். இதி லிருந்து அம்முன்னோன் தொடங்கிய கொங்குநாட்டு வெற் றியை இவன் முற்றுவித்தான் என்பது பெறப்படுகிறது. மேலும் மோகூர்த் தலைவன் குறியீட்டு மரம் வேம்பு என்ப தைக் காண, அது பாண்டி நாட்டின் பக்கமாகத் தென்சாய லாய் இருக்கவேண்டும் என்பது தோற்றுகிறது. இவற்றால் புலவர்கள் அவனைப்பற்றிக் கூறும் சிறப்பின்படியே அவன்

கொங்குநாடு முழுவதையும் வென்றிருக்கவேண்டும். இம் மோகூர் வெற்றியிலும் மோகூர்த் தலைவன்மட்டுமே சம்பந்தப்பட்டவனாக இருக்கவில்லை. 49-ஆம் பாடலில் மோகூர்த் தலைவனாகிய பழையனுக்கு உதவியாகப் பிறஅரசர்களும் தலைவர்களும் வந்தனர் என்பது காணப்படுகிறது. இதை நோக்கக் கொங்குநாட்டின் வெற்றி நிலைபெற்றமைந்த வெற்றியாய்விட்டது என்று கூறுவதற்கில்லை. அதனைக் கவிழ்க்க மீண்டும் மீண்டும் முயற்சிகள் செய்யப்பட்டே வந்தன. 48-ஆம் பாடலில் அவனுடைய மலைப்பிறந்து அவன் கடலில் விழும் ஓர்யாறு பற்றிய குறிப்பு வருகிறது. இஃது அவன் நாடும் மேற்குமலைக்கும் மேல்கடலுக்கும் இடைப்பட்டதென்பதைத் தெளிவாகக்காட்டும். இத்தொகுதியின் கடைசிப்பாட்டில் ஒரு முக்கியமான உவமை காணப்படுகிறது. அவன் பெருமை, வெள்ளம் பெருக்கெடுத்த காவிரி போல் மூன்று காவிரிகளுடன் ஒப்பாகக் கூறப்படுகிறது. 'வஞ்சி—கரூரே' என்பதற்கு இவ்வுவமை வலிந்து பயன் கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வொரு தனிக் குறிப்பைக் கொண்டு, 'காவிரி சேரனது ஆறு' என்று கொள்ளுவதற்குச் சற்றும் இடமில்லை. வடகொங்கையும் தகடூரையும் வென்றதன் பயனாக மட்டுமே இவ்யாறு அவன் எல்லைக்குள் வரும். ஆனால் பாட்டில் கூறப்படுவது வெறும் உவமை மட்டுமே—காவியாலங்காரமான ஓர் உவமையே ஆகும். சேரன் பெருமை வெள்ளம் பொங்கிய காவிரிபோல் மூன்று மடங்கு பெரியது என்பதை மாத்திரமே அது காட்டும். உண்மையில் இது, 14-ஆம் பாட்டில் சேரன் இமயவரம்பனைப்பற்றிக் கூறுவதுடன் ஒப்பு நோக்கத்தக்கது. இமயவரம்பனுக்கு நிலம், நீர், வளி, ஆகிய பெரும்பூதங்களுடனும் இவற்றினும் பெரியதாய் விண்மீன்களையும் கிரகங்களையும் தன்னுள் தாங்கிய வானுடனும்கூட உவமைகூறமுடியாதென்றெல்லாம் புலவர் பரந்துரைக்கிறார். ஐம்பெரும்பூதங்களில் நான்கும் வானத்து நக்ஷத்திரங்களும் இமயவரம்பனுக்கு உவமை கூறப்பட்டதனால் இந்த நக்ஷத்திரங்

களோ கிரகங்களோ மற்றவைகளோ அவனுக்கு உரியவை என்று யாரும் கூறமாட்டார்கள்! சேரனுடைய அகன்ற நாட்டுப்பரப்பினுக்கும் பெரும்புகழுக்கும் வெள்ள நீர்க் காவிரியின் மும்மடங்கு பொருத்தமற்ற உவமைகூட அன்று. இங்கே குறிப்பிடப்பட்ட மூன்று ஆறுகளும் முறையே காவிரி, ஆன்பொருநை, குடவனாறு என்று உரையாசிரியர் கூறுவதுகூட ஒரு சமத்காரமான ஊகமே யன்றி வேறன்று. ஆன்பொருநை என்று இங்கே உரை யாசிரியர் கூறுவது கரூரின் அருகில் இன்று உள்ள அம ராவதியாகவே இருக்கலாம். குடவனாறு என்பதும் இந்த அமராவதியில் கலக்கும் ஒரு சிற்றாறே ஆகும். ஆயினும், இவ்வுரையாசியர் மேற்கோள் எவ்வளவு பொது முறையில் பெருமையுடையதாயினும், இம்மூன்றின் கூடலை 'முப் பேராறுகளின் கூடல்' என்று எவரும் கொள்ளமுடியாது. மேலும் இம்மூன்றில் ஓர் ஆறு மிகச் சிறிய ஆறுமட்டு மன்று; காவிரியில் விழுவது கூடவன்று என்பது உரை யாசிரியர் கோட்பாட்டை ஏற்கப் பெருந்தடையாகும். இப் பாட்டைப் பாடிய புலவர் காவிரி அகண்ட காவிரியாய்ச் செல்லும் இடத்தைச் சார்ந்தவர். இவ்விடத்துக் காவிரிப் புது வெள்ளம் பொங்கி அயல் இடமெங்கும் பரந்து செல்லும் போது தரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியே யாகும். அப்படியும் புலவர் இவ்வொரு காவிரியின் பெருமிதக் காட்சி மட்டும் சேரன் புகழின் பரப்பிற்கு ஈடாகாது என்றும், அதற்கொப்பாகக் கூறவேண்டும் காட்சி உண்டானல் இதுபோன்ற காவிரிகள் மூன்று வேண்டும் என்றுமட்டுமே குறித்தார். அமராவதியைக் குறிக்கு மளவில் ஆன்பொருநை என்ற பெயரும் உரையாசிரியர் காலத்திற்குமட்டுமே பொருத்தமானதாயிருந்திருக்கக்கூடும். ஏனெனில் கரூர் சேரர்கள் ஆட்சிக்கு உட்பட்டு விரிவுபட்ட சேரர் பெரு நாட்டின் எல்லை நகரமானபின்தான் இவ் வாறு இப்பெயர் பெற்றிருக்க முடியும். இங்ஙனம் செங் குட்டுவனுடன் தமிழ் நாட்டில் சேரர் தலைமை நிலைநிறுவப்

பட்டதென்னும் அஃது அவன் தந்தையால் தொடங்கப் பட்டு அண்ணனால் மேலும் தொடர்ச்சியடைந்து அவன் காலத்திலேயே முற்றுவிக்கப்பெற்ற கொங்கு நாட்டு வெற்றியின் பயனேயாகும். இப்பாடல்களில் அவனுக் குரியவையாகக் கூறப்படும் பிற செயல்கள் வட ஆரியர் நாட்டின்மீது படையெடுத்ததும் வியலூர், கொடுகூர் வெற்றி களும் பழையன் முறியடிக்கப்பட்டதும் ஆகும்: இவற் றுடன்கூடப் பதிகம் ஒன்றையே ஆதாரமாகக் கொண்ட மற்றொரு செயல் சோழ இளவரசருள் ஒன்பதின்மர், உரிமைப்படி அரசுரிமை கொண்ட சோழனுக்கு எதிராக எழுந்து நடத்திய உள்நாட்டுப் போரில் அவன் தலையிட்டு அவர்களை முறியடித்தழித்து, ஒழுங்கான உரிமையாளன் ஆட்சியை நிலைபெறுவித்ததாகும். சோழர் செயல்களில் இங்ஙனம் சேரர் தலையிட்டதன்மூலம், பழையன் வகையில் தலையிட்டதனால் சேரர் கை தெற்கில் எவ்வளவு நீண்டதோ அவ்வளவு கிழக்கிலும் நீண்டு எட்டியது என்பது பெறப் படும். எனவே, கொங்கு வெற்றி அவன் காலத்திலேயே முற்றுப் பெற்றது என்ற உறுதியான செய்தியை நாம் அறிந்து கொண்டோம். பிற இடங்களில் கண்ட செய்திகளிலிருந்து அவன் துணைவனாகிய திருக்கோவலூர் மலையமான்காரி என்பவன் ஓரியைப் போரில் கொன்று, அவனது கொல்லிக் கூற்றத்தைச் செங்குட்டுவனுக்கு உரிமையாக் கினான் என்றறிகிறோம். இதனைக் கல்லாடனார்,

" ..........., ............ செவ்வேள்
முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
லோரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேற் பலவின் பயங்கெழு கொல்லி
நிலைபெறு கடவு ளாக்கிய
பலர்புகழ் பாவை யன்னநின் னலனே."

—அகம். 209.

என்னும் பாட்டில் குறிப்பிடுகிறார். எனவே செங்குட்டுவன் காலத்துக்குமுன் கொங்கு வெற்றி நிறைவெய்தியதில்லை

என்பதும் தெளிவாகிறது. அதற்குப் பின்னும்கூட அதிகமான் அஞ்சி என்னும் தலைவனால் அது மீண்டும் எதிர்ப்புக்கு உரிதாயிற்று என்பதை,

"அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்
அரும்பெறல் மரபின் கரும்பிவட் டந்து
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபின் முன்னோர் போல
'வீகையங் கழங்கா லிரும்பனம் புடையற்
பூவார் காவிற் புனிற்றுப்புலா நெடுவே
லெழுபொறி காட்டத் தெழாஅத் தாயம்
வழுவின் றெய்தியு மமையாய்"

—புறம். 99. வரி. 1-8

என வரும் ஔவையார் பாடிய பாடலால் அறிகிறோம். இப்பாட்டு, அந்த அஞ்சி உண்மையில் சேரர் குடியில் பிறந்த ஒருவனேயென்றும், புதிதாக வென்ற நாட்டை யாளும்படி சேரனால் நியமிக்கப் பட்டவனே என்றும் தெளிவுபடுத்துகிறது. அங்ஙனம் இவனை நியமித்த சேரன் பல்யானைச்செல்கெழுகுட்டுவனாக இருக்கக்கூடும். இதனை நாம் மீண்டும் மேல் ஆராய்ச்சிக் கெடுத்துக்கொள்வோம்.

சேரன் செங்குட்டுவனுக்குப் பின் வந்தவன், அவன் மாற்றாந்தாய் வழியில் உடன் பிறந்தவன் என்று முன்னமே கூறினோம். அவன் 53-ஆம் பாட்டில் கூறியபடி தன் முன்னோனால் தன் நாட்டில் சேர்க்கப்பட்ட பகுதிகளை மீட்டும் வென்றுகொண்டான்; அதுபோல் கடற்கரையோரமுள்ள 'நறவை'யும் மறுபடியும் மீட்டுக்கொண்டான். இவ்வகையில் சேரர் ஆதிக்கத்தை அவன் உறுதிப்படுத்தினான். ஆனால் அவனுக்கே தனிச்சிறப்பான வெற்றி, வடமொழிவாணர் தண்டகாரண்யம் என்று கூறும் தண்டாரணியத்தைப் படையெடுத்து, அங்குள்ள கால் நடைகளைக் கைக்கொண்டு வென்றதாகும். அவன் தன் தலைநகராக இருந்திருக்கக்கூடும் தொண்டிக்கு அவற்றைக் கொண்டு போய்ப் பலருக்குத் தானம் வழங்கினான். இத்துடன் அவன் ஒவ்வொரு பிராமணனுக்கும் சேரநாட்டின் ஓர்

ஊரும் பசுவுமாகப் பல பிராமணருக்குக் கொடுத்தான் என்பது கூறப்படுகிறது. இஃது அவன் அப்பகுதியில் பிராமணரைக் குடியேற்றினன் என்று கொள்ளத் தக்க குறிப்பு ஆகும். இதிலிருந்தும் செங்குட்டுவன் வென்ற பகுதிகளில் வெற்றி நிலைபெற்றிருந்ததென்றும் இச் சேரன் தலையிட்டான் என்று தோற்றும் இடம்கூட (அத்தலையீடாகக் கொள்ளப்படலாமானல்) அவன் நாட்டின் வடக்கிலோ வட கிழக்கிலோதான் என்றும் ஏற்படுகிறது. இவனுக்குப் பின் வந்த சேரனும் அதன்பின் வந்த இருவரும் ஒரு தொகுதியாகச் சேரத்தக்கவர்கள். அவர்கள் ஒருவேளை சேர அரசரின் கிளைக் குடியினராக இருக்கலாம். ஏழாம் பாட்டின் தலைவன், அந்துவன் சேரல் என்பவன் புதல்வன். நாம் மேற்கண்ட நேர்வழியில் இத்தகைய பெயர் காணப்படவேயில்லை. அவன் ஓரே முற்றுகையில் இரண்டு அரசருடன் போரிட்டானென்பது கூறப்படுகிறது. இப் போர் எங்கு நடைபெற்றதென்பது நமக்குத் தெரியவில்லை. இது மீண்டும் தமிழ் நாடு முழுவதும் தலைமையை நிலை நிறுத்தும் முயற்சியாகவே காணப்படுகிறது. அவன் மிகச் சிறந்த அரசனகவும் எல்லாவகையிலும் இலக்ஷிய புருஷனகவுமே காணப்படுகிறன். அவனைப் பாடிய புலவரும் சாதாரணமானவர் அல்லர்; புலவருள் சிறந்தவரும் சங்கப் புலவரிடையே பரணருடனெப்பாகக் கொள்ளப் பட்டவருமான கபிலர் ஆவர். அடுத்த இரு சேரரும் நெடுஞ் சேரல் இரும்பொறை, இளஞ் சேரல் இரும்பொறை என்ற பெயர்களே காட்டுகிறபடி, அவனை நேராக அடுத்துவந்த கால் வழியினர் ஆவர். இவர்களது தலை சிறந்த செயல் 'கழுவுள்' என்ற தலைவனை வென்று அடக்கியது. இவர்களுள் முதல்வனுடைய சிறந்த செயல்கள் சங்கத்திற் புகழ் பெற்ற அரிசில்கிழார் என்ற புலவரால் பாடப் பெறுகின்றன. அவன் தகடூர்த் தலைவன் அதிகமானை அடக்கினன். இவ்வதிகமான் சேரனுக்கு எதிராக எழுந்த கிளர்ச்சிக்காரனக இருந்திருக்க வேண்டும். ஆனல் இம்

முறை இவனுடன்கூட மற்ற இரண்டரசர்களும் வெல்லப்பட்டதாகத் தெரிகிறது. அதோடுமட்டுமன்று; இம்முறை பகைவர் தோல்வி, நிறை தோல்வி யாயிற்று. ஏனெனில், அவன் அதிகமான்களின் தலைநகராகிய தகடூரை அழித்து விட்டான். அதிகமான் சேரர் குடியினனாக இருந்த போதிலும், ஒரு வேளை, பல்யானைச் செல்கெழுகுட்டுவனால் புதுவதாக வென்ற நாட்டில் நியமிக்கப்பட்டவனாக இருந்திருக்கக்கூடுமாயினும் அவன் அவர்களை மீறிக் கிளர்ச்சி செய்ய எழுந்து அடிக்கடி அடக்கப்படவேண்டியவனாக இருந்தபடியால் இறுதியில் இச்செடுஞ்சேரலிரும்பொறையால் முற்றிலும் அழிக்கப்பட வேண்டியவனானான். தகடூரை வென்றழித்ததே ஒரு வேளை வடகொங்கு நாடு முற்றிலும் சேர நாட்டில் சேர்க்கப்படுவதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும். இதனை, அடுத்த பிற்காலத்தில் உணரப்பட்டபடி, வட கோங்கு என்பது மேட்டு நிலத்திலிருந்து கரூரின் தெற்கிலுள்ள ‘குழித்தலை’வரை காவிரியின் வடக்கிலுள்ள பகுதி முழுவதையும் குறிப்பதாகும். இளஞ்சேரலே இவன்பின் வந்தவனும் இவன் மகனுமாதல் கூடும். நம் ஆராய்ச்சிக்குரிய அரசருள் இறுதியானவனான இச்சேரன் செயல்களுள் தலைமையானது, இரண்டரசர்களும் விச்சித்தலைவனும் அவர்களின் ஐந்து மலைக் கோட்டைகளும் அழியத் தோற்கடிக்கப்பட்டதே யாகும். அவன் பொத்தியிலுள்ள பெருஞ்சோழனையும் வித்தையைச் சார்ந்த இளம்பழையன் மாறனையும் வென்று அவர்களிடமிருந்து கிடைத்த செல்வத்தை வஞ்சிமூதூரில் தன்னை அடைந்தவர்களுக்கெல்லாம் வழங்கினான். இப்பாடல்களில் வஞ்சி குறிப்பிடப்படுவது இதுவே முதல் முறையாகும். அவன் தன் அமைச்சனைத் தன் புரோகிதனை விடக்கூட வைதிக வாழ்வில் சிறந்தவனாக்கியிருந்தான். அவன் செயல்களில் மற்றொன்று, பெருஞ் சதுக்கப் பூதத்தைக் கொணர்ந்து தன் தலைநகரில் நிலைபெறுவித்து அதன் பேரால் விழாக்கள் நடைபெறுவித்ததாம். இவற்றால்

தமிழ் நாட்டின் நிலைமை இக்காலத்திலும் குழப்பமடைந்தே யிருந்ததென்றும், நாம் ஆராய்ச்சி செய்த இவ்விரண்டு அல்லது மூன்று தலைமுறைகள் வரையும் அந்நிலையிலேயே தொடர்ந்திருந்ததென்றும் அறிகிறோம். அக்காலம் மூவரசர் தமிழ் இந்தியாவில் தம் ஆட்சியை நிலைநிறுத்தவும் குறுநில மன்னரைத் தம்மிடம் உண்மையான பற்றுடையவராக்கவும் முயன்ற காலம் ஆகும். இங்கே காணும் செய்திகளை வைத்துக்கொண்டு நாம் ஆயும் கால இறுதிவரையோ அல்லது அப்போதுகூடவோ அது முற்றுப்பெற்றது என்று கூறமுடியாது.

சேரர் சம்பந்தப்பட்டவரை, பதிற்றுப்பத்தை இது வரை ஆராய்ந்து அறிந்தவற்றைச் சுருக்கமாகத் தொகுத்துரைத்தால், நாம் ஏற்கவேண்டும் நிலை இதுவாகும்:

இந்நூலின் குறிப்புகளுள் அடங்கும் இரண்டு மூன்று தலைமுறைகளில் சேரர் அதிகாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து சேரன் செங்குட்டுவன் கீழ்த் தென் இந்தியாமீது தலைமைநிலை எய்திற்று. சேரநாடு மேல் கடற்கரை ஓரமுள்ள ஒரு பகுதியாகும். அது வடக்கே கள்ளிக்கோட்டை முதல் தெற்கில் திருவாங்கூர்ப் பகுதிவரை, குறைந்த அளவு திருவனந்தபுரம் வரையாகிலும் பரந்து கிடந்தது ஆகும். இவ்விடத்திலிருந்து சேரர் முதல் முன்னேற்றம், இன்று வட மலபார் என்றும் இரண்டு கன்னட ஜில்லாக்கள் என்றும் வழங்கும் கரையோரப்பகுதியையும் அதன் தொடர்ச்சியாக வடகிழக்கில் முன் சென்று தண்டகாரணியப் பகுதியையும் உள்ளிட்டதாகும். மற்றொரு திசையில் ஏற்பட்ட முன்னேற்றம் கொங்குநாடு நோக்கியது. இதில் முதற்படியான வெற்றி இப்புலவர்களால் உம்பற்காடு என்று வழங்கப்பெறும் யானைமலைப்பகுதி யாகும். அங்கிருந்து அப்பாற்சென்று கொங்குநாட்டிலேயே இரண்டு மூன்று படிகளாக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும். முதற்படி பெரும்பாலும் அதன் வடபகுதி முற்றிலும் பரந்திருக்கலாம். இதன் மூலம் சேரர் நாட்டில் வட கோயம்புத்தூரும்

சேலமும் சேர்க்கப்பட்டு அவ்விடத்திலேயே தகடூரில் (தர்மபுரம்) இராஜப்பிரதிநிதியாட்சி ஏற்பட்டிருக்க வேண்டும். அடுத்தபடி, இப்பகுதியிலேயே தெற்கு நோக்கியதாக இருக்கவேண்டும். இம் முறை சேரர் கொல்லிமலைப் பகுதியைக் கைக்கொண்டனர். இவ்விடம் உண்மையில் ஓரி என்ற தலைவனிடமிருந்து இலக்கியத்தில் திருமுடிக்காரி என்று வழங்கப்படும் சேரரது நண்பனான மலையமான் தலைவனால் கைக்கொள்ளப்பட்டுச் சேரனுக்கு உரிமையாக்கப்பட்டதாகும். நம் ஆராய்ச்சியைப் பற்றிய மட்டில், கொங்கு விஜயம் அஃதாவது காவிரியின் வடகரையில் தென் பக்கமாகக் காவிரியில் அமராவதி வந்து விழுமிடமாகிய குழித்தலைவரையுள்ள கொங்கு நாட்டின் பகுதியாகிய வட கொங்கு நாட்டின் வெற்றி இதனுடன் முற்றுப்பெறுகிறது. இக்கொங்கு வெற்றி முற்றுப்பெற்றதன் பயனைச் சேரர் கருவூரைத் தம் எல்லையின் முக்கிய நகரமாகக் கொண்டிருக்கக்கூடும் என்று எண்ணுவது இயல்பே. கொங்கு நாட்டுப்பகுதியில் எழுந்த கிளர்ச்சிக்காரர் அனைவருக்கும் உடந்தையாயிருந்ததாகக் குறிக்கப்படும் சோழ-பாண்டியரை அங்கிருந்து சேர அரசர் கவனித்துக்கொள்ள முடியும்.

இச் செய்திக்கு நாம் மீண்டும் ஒருமுறை திரும்பி வருவோம். இப்போதைக்குச் செங்குட்டுவன் காலத்திற்குள் கொங்குநாடு முழுவதும் வெல்லப்பட்டதென்றும் ஆயினும், அடுத்த தலைமுறைவரை அது முற்றிலும் அடக்கப்படவில்லை என்றும் கூறுவது போதியது ஆகும். அத் தலைமுறையிலேயே பெருஞ்சேர லிரும்பொறை, தகடூர் அதியமான் தலைவர்களின் தலைநகரை யழித்து அவர்களைத் தண்டித்து அடக்கவேண்டி வந்தது. பதிற்றுப்பத்தில் அடங்கிய சேரன்-செங்குட்டுவனைக் குறித்த இப்பாடலை இயற்றிய புலவராகிய பரணர் சேரரின் இத்தலைமுறையைச் சார்ந்தவர். மற்றச் சேரரைப் பாடிய புலவரனைவருடனும் அவர் சமகாலத்தவராக இருந்தவர். அவர் வாழ்ந்த காலத்

தில் தமிழ்நாட்டில் நான்கு அல்லது ஐந்து அரசர் தொடுத்து ஆண்டனர். இக்காலத்தின்மீது போராளி விளக்கம் தரக்கூடும் என்ற முறையில் 1918-ஆம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் முன் நான் ஆற்றிய ஒரு சொற்பொழிவை நூலின் இப்பகுதி யுடன் பிற்சேர்க்கையாகச் சேர்க்க முற்பட்டேன். இதே பகுதி பின்னல் 'தென் இந்திய வரலாற்றின் தொடக்கம்' என்ற என் நூலிலும் சேர்க்கப்பட்டது. இச்சொற்பொழிவு ஒன்றிரண்டு சொற்களின் திருத்தங்களும் கீழ்க்குறிப்பு களில் காட்டப்பட்ட ஒன்றிரண்டு கருத்து மாறுபாடுகளும் நீங்கலாக அஃது ஆற்றப்பட்டபடியே தரப்படுகிறது.

## பரணர் காலம்

கி. பி. முதல் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இந்திய நாகரிகம் இருந்த நிலைமைகளைப்பற்றிக் கூறப்பட்ட செய்தி களிலிருந்து அதில் தொகுத்துக் கூறப்பட்ட செய்திகள் பல்வேறு ஆதாரங்களினின்றும் எடுத்தாளப்பட்டவை என்றும் அவை கட்டுரையில் இடையிடையே மட்டுமே தரப்பட்டிருக்கின்றன என்றும் காணலாம். இப்பொது விவரங்களுக்கு இடந்தரும் ஆதாரங்களின் மதிப்பின் ஏற்றத் தாழ்வுகளை அறியும் வரையில் இவ் வாதாரங்களை வகுத்து ஒழுங்குபடுத்திப் பார்ப்பது பயன் தருவதாகும். இவற்றுள் சிலவற்றில் உதாரணமாகப் புத்தமதந் தழுவிய இலங்கையின் காலத்தொடர்ச்சி வரலாறுகளான தீபவம்சம் மகாவம்சம் முதலியவற்றின் மதிப்பு நன்கு தெரியத்தக்க அளவு அவ்வாதாரங்களின் தன்மைகள் நன்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன[1]. முதலிரண்டு மூன்றும் அத்தியா யங்களில் பண்டைய கிரேக்க ஆசிரியர்களின் தராதர மதிப்பைப் பற்றியும் கூறியிருக்கிறோம். முதல் அத்தியாயத் தில் தென் இந்தியாவைப்பற்றிக் குறிப்பிடுகின்ற வட மொழி ஆசிரியர்கள் பற்றியும் ஆராய்ந்து மதிப்பிட்டோம்.

1. Vide chapters I and II, the Beginnings of South Indian History.

கல்வெட்டுகள், எழுத்துமூலங்கள் ஆகியவற்றின் வகையில் இக்காலத்தைப் பற்றியவையாக நமக்குக் கிடைக்கும் ஆதாரங்கள் நாணயங்களில் காணப்படும் பழங்கதைக் குறிப்புகள் நீங்கலாக இல்லை யென்றே கூறும்படி அவ்வளவு குறைவேயாகும். அச் சிலவும் இந்தியாவின் இப் பகுதி பற்றிய அசோகன் கல்வெட்டுகள் முதலிய ஒன்றிரண்டே ஆகும். இனி நமக்கு எஞ்சி நிற்பவை இலக்கிய ஆதாரங்களே. இவற்றுள் தமிழிலக்கியமும் வடமொழி இலக்கியமும் வடமொழிச் சார்பான பல மொழி இலக்கியங்களும் நமக்கு உதவக்கூடும். ஆயினும் இக் காலத்திற்கு வடமொழி இலக்கியமும் வடமொழிச் சார்பான இலக்கியங்களும் தமிழிலக்கியத்தை நோக்க அவ்வளவு சிறப்புடையவை அல்ல; ஆதலின் தமிழிலக்கிய மொன்றனையே இங்கு எடுத்துக்கொள்வோம்.

இவ் விலக்கியத்தின் மதிப்பை நன்குணர்ந்து அதனினின்றும் உண்மைச் செய்திகளைக் கணித்தறிய உதவும் வகையில் அதன் தனி ஆசிரியர்களைப்பற்றியும் தனிப்பட்ட தலைமுறையிலுள்ள ஆசிரியர்களைப் பற்றியும் நுணுகி ஆராய்வோம். அவர்களைப்பற்றி அறிந்த செய்திகளை மனத்திரையில் படமாகக் கொண்டபின், பிற இடங்களில் கிட்டும் செய்திகளுடன் அவற்றை ஒப்பிட்டுக் கி. பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்திலுள்ள நிலைமைகள்பற்றி உள்ள சான்றுகளின் மூலம் முன்னர்க்கண்ட உண்மைகளின் மெய்ம்மையை ஆராய்ந்தறியலாம். இங்ஙனம் அறியவேண்டிச் சங்கத் தமிழ் நூல்களிற் கண்ட பரணர் என்ற புலவரை மாதிரிக்காக எடுத்துக்கொள்ளுவோம்:

பரணர், பரம்பரையாக, மதுரையின் மூன்றும் சங்கத்தின் உறுப்பினராகக் கூறப்படும் 49 புலவருள் ஒருவர். தமிழிலக்கியத்தில் அவர் பெயர் தலைமைவாய்ந்த சிறப்புடையது. ஏனெனில் அவர் அவ்விலக்கியத்தின் தலை சிறந்த பெயர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார். எனவே, அவர் பெயரை நடுநாயகமாகக் கொண்டு பல புகழ் சிறந்த

பெயர்களை நாம் ஒருங்கு திரட்டமுடியும். அத்துடன் அவர் நெடுநாள் வாழ்ந்தவராகவும் காணப்படுகிறார். எனவே அவர் தலைமுறையில் மிகப்பல புலவரும் மன்னரும் தொடர்பு கொண்டுள்ளனர். அவரைப் பற்றி ஆராய்வதன் மூலமே அவர் காலத்தில் தென் இந்தியாவின் நிலைமைகளையும் நாம் நன்கறியலாம். பரணர் மரபுரையாகப் பிராமண குலத்தவர் என்று கூறப்படுகிறார். சங்க இலக்கியம் எனத் தொகையாகக் கூறப்படும் பல நூல்களில் அவர் இயற்றிய பகுதிகள் காணப்படுகின்றன. அவர் சேரன் செங்குட்டுவனைப் பாடிய புலவர். இச் செங்குட்டுவன் பெயர் சங்க இலக்கியங்களை ஒருபுறமும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இணைக் காப்பியத்தை ஒருபுறமும் பிணைக்கிறது. அண்மையில் இவ்விரண்டு நூல்களும் தனித்தனி நூல்களாகக் கணிக்கப்பட வேண்டும் என்றும் இரண்டிற்கும் இடையே அனேகமாக நீண்ட காலப்பகுதி இருக்க வேண்டும் என்றும் கூறும் வாதம் எழுந்துள்ளது. ஆனால், பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தில் அவர் செங்குட்டுவனைப் பாடியிருக்கிறார். செங்குட்டுவன் சகோதரரான இளங்கோவடிகளே சிலப்பதிகாரத்தின் ஆசிரியர். பரணர் தோழரான சாத்தனாரே மணிமேகலையின் ஆசிரியர். எனவே அவர்கள் எக்காலத்தவராயிருந்த போதிலும் சரி, மூவர் காலமும், ஒன்றே என்பதுமட்டிலும் உறுதியாகின்றது என்பதை ஓர் எளிய படிப்பாளியும் எளிதில் காணக்கூடும். பரணர் பாடிய பாடல்களாக நற்றிணையில் 12 சிறுபாடல்களும், குறுந்தொகையில் 15-ம், பதிற்றுப்பத்தில் ஒருபத்தும், அகநானூற்றில் 32-ம், புறநானூற்றில் 12-ம், திருவள்ளுவமாலை என்ற தொகுதியில் ஒன்றும் கிடைத்துள்ளன. இத் தொகை மிகப்பெரியது என்றே கருதப்படத்தக்கது. புறம் 4-ல்[2] அவர் சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்

2. பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கட லிவக்தெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
வனையை யாகன் மாறே"

னியைப் பாடுகின்றார். அவனுக்கு இவ்விசித்திரமான நீண்ட தொடர் பெயரா யமைந்ததுகூட இப்புலவர் அவனுக்கு உவமையாகக் கூறிய ஒரு தொடரை ஒட்டியே யாகும். இங்கே கவினுறு காலைச் செவ்வான ஒளியிடையே கடலினின்று பெருத்தத் தோற்றத்துடன் எழும் இளஞாயிற் றுடன் அவன் ஒப்புமைப்படுத்தப்படுகிறான். பொருநராற் றுப்படையில் முடத்தாமக் கண்ணியார்[3] குறிப்பின்படி இச்சோழனே காரிகால் சோழன் தந்தையாகக் காணப்படு கிறான். புறம் 63-ல் அவர் (குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்ற) சேரனையும்[4] (பெருவிறற்கிள்ளி என்ற) சோழனை யும் குறிப்பிட்டு இருவரும் போர் புரிந்து களத்தில் இறந்து விட்டதாகக் கூறுகிறார். இதே செய்தி கழாத்தலையார்[5] என்ற புலவராலும் பாடப்பட்டிருக்கிறது. பழநி மலையை யடுத்த நாட்டை ஆண்ட கடையெழு வள்ளல்களில் ஒருவ னான பேகன் என்பவன் இப் புலவரால் பாடப்பட்டவன். அவனைப்பற்றிய குறிப்புகளுள் ஒன்று அவன் கைம்மாறு கருதாது ஈபவன் என்பது.[6] இதற்குத் தலைச்சிறந்த உதாரணமாக அவன் குளிர் பொறாது வருந்திய காட்டு மயிலுக்குத் தன் போர்வையைத் தந்தது குறிக்கப்படுகிறது. நமக்கு இவ்விடத்தில் பயன்படத்தக்கதான செய்தி பேகன் மனைவியான கண்ணகியைக் குறித்ததாகும் (இவள் சிலப் பதிகாரத்துக் கண்ணகியின் வேறானவள்). பேகன் பொது மகள் ஒருத்தி காரணமாக அவளைத் துறந்திருந்தான். பரணர் அவன் தன் மனைவியை ஏற்பதன் மூலம் நேரிய நெறியைக் கடைப்பிடிக்கும்படி தூண்டினார். இதே தருணத்தில் இதே துயர்தரும் செய்தியில் அத்துறக்கப் பட்ட மனைவி சார்பாக மூன்று புலவர்கள் பேசினர். அவர் கள் கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய

---

3. 'உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்'
4. Note at foot of the poem Puarm 62
5. புறம். 141, 142.
6. புறம். 144, 145.

வர்கள். இவர்கள் முறையே பதிற்றுப்பத்தின் 7, 8,9-ஆம் பத்துகளின் ஆசிரியர்கள் ஆவர். புறம் 369-ன் உரைக் குறிப்பின்படி சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் (தன் பகைவர்களை வேல்கொண்டு கடலகத்துத் துரத்திய குட்டுவன்) அல்லது சேரன் குறிக்கப்படுகிறான். இக் குட்டுவன் சிலப்பதிகாரத்திற் கூறப்படும் சேரன்-செங்குட்டுவனே யாவன். ஏனெனில், பரணர் அவனைச் சற்று ஏறத்தாழ இதே தொடர்களால் பதிற்றுப் பத்தில் அவரது பத்தின் 46-ஆம் பாடலில் குறிப்பிடுகிறார்.[7] நற்றிணை 6-ல் அவர் கொல்லிமலையைச் சார்ந்த ஓரி பற்றிக் குறிப்பிடுகிறார். அதே நூலின் 201-ஆம் பாட்டில் அவர் கொல்லிப்பாவை என்ற தெய்வத்தின் புகழ்பெற்ற சிலையைக் குறிப்பிடுகிறார். கொண்கானத்து நன்னனைப் பற்றிய பல செய்திகளை இப்புலவர் விரிவாக எடுத்துரைக்கிறார். இவற்றுள் முக்கியமானது அவனுக்கு எதிராகச் சேரன் போர் புரிந்ததாகும். இப்போரிலேயோ அல்லது வேறு போரிலோ சேரர் தளபதியாகிய ஆய் எயினன், நன்னன் படைத்தலைவனாகிய ஞிமிலி என்பானுக்கெதிராகப் போரில் பட்டு வீழ்ந்தான்.[8] நன்னன் கோட்டையாகிய பாழியில் நன்னனது பெரும் பொருட்குவை வைக்கப்பட்டிருந்ததை அவர் கூறுகிறார். குறுந்தொகையில் ஒரு பாட்டு (292) நன்னன் தோட்டத்தின் வழியாகச் சென்ற ஓர் ஓடைநீரில் மிதந்து வந்த அவன் தோட்டத்துப் பழமொன்றை எடுத்துத் தின்ற பெண்ணை நன்னன் கொலைசெய்த செய்தியை அவர் விரி

---

7. 'பல்செரு கடந்த கொல்களிற் றியானைக்
கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்'

8. "அடுபோர் ஞிமிலி செறுவல் கடைசி
வன்மை யொயினன்வீழ்ந் தன்ன ஞாயிறு
.................................
கடும்பரிக் குதிரை யாஅ யெயினன்
நெடுந்தேர் ஞிமிலியொடு பொருதுகளம் பட்டென"

வாகக் கூறுகிறார்.[9] அவனுடைய கொடுமை மற்றோரிடத்திலும் தெளிவுடக் கூறப்படுகிறது. நற்றிணை 270-ல் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட யானைகளைக் கட்டுவதற்கு அவன் அவர்கள் பெண்கள் தலைமயிர்களிலிருந்து கயிறுகள் திரித்தான் என்பது கூறப்படுகிறது. கோசர் என்ற குடியினர் நன்னன் பட்டத்து யானையைக் கொன்றபின் அவன் நாட்டிற் புகுந்தனர் என்று பரணர் கூறுவது பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளோம்.[9a] நன்னன் வாழ்க்கையில் பல செய்திகள் குறிக்கப்படுகின்றன. இங்கே குறிக்கப்பட வேண்டும் மற்றொரு முக்கியமான செய்தி அகம் 195-ல் கொங்குநாட்டில் கோசர் புகுவது பற்றிய செய்தியாகும்.[10]

பதிற்றுப்பத்தில் பரணர் செங்குட்டுவனைப் பாடும் 5-ஆம் பத்தை மீட்டும் கவனிப்போம்: பதிகத்தில் சேரன் செங்குட்டுவன் சோழ இளவரசியான மணக்கிள்ளிக்கும் குடவர் கோமான் நெடுஞ்சேரலாதனுக்கும் மகன் என்பது குறிக்கப்படுகிறது.[11] அவன், பத்தினி (தெய்வ உருப்பெற்ற தலைவியாகிய கண்ணகி)க்காகக் கல் கொணரும்படி முதலில் காடுகளைக் கடந்து கங்கை நாட்டை அடைந்தான் என்பது கூறப்படுகிறது. மீண்டும் வரு

---

9. "மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்கு
ஒன்பதிற் றென்பது களிற்றோ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல"

9a. "......................................நன்னன்
கருமா கொன்று நாட்டிற் போகிய
ஒன்றுமொழிக் கோசர்"

10. "கண்கவி னழித்ததன் றப்பற் றெறுவர
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்றுமுரண் போகிய
கடுந்தேர்த் திதிய னழுக்கைக் கொடுங்குழை
யன்னி மிஞிலியி னியலும்."

11. இவள் சிலப்பதிகாரத்து 'நற்சோணை' என்று அழைக்கப்படுகிறாள்.

கையில் அவன் தன் பகைவர்களுக்குரிய ஆடுமாடு கள் பலவற்றைக் கொண்டுவந்தான் என்பதும் கூறப் படுகிறது. அவனுடைய அடுத்த செயல், வியலூரில் அவன் பகைவர்களை முறியடித்து அவ்விடத்தை யழித்ததாகும். அதன்பின் அவன் ஆற்றின் மறுகரையை யடைந்து கொடு கூர்க் கோட்டையை அழித்தான். பின் அவன் பழையன் நாட்டில் முன்னேறிச் சென்று (அவன் குறியீட்டு மரமா யிருந்திருக்கக் கூடும்) வேம்பை வெட்டிய பின் அவன் யானைகளில் பலவற்றைக் கைக்கொண்டு எதிரிகளின் பெண் டிர்களுடைய தலைமயிராலான கயிற்றால் அவற்றைப் பிணைத் தான். அவன் அடுத்துச் செய்த செயல் சோழ அரசர் ஒன்றுபட்ட சகோதரர்களும் அவனுடன் இடைவிடாது போர் புரிந்தவர்களுமான சோழ இளவரசர்களை வாயிலில் (பிற நூல்களின்படி நேரிவாயிலில்) முறியடித்து அழித்த தாகும். அவன் கடைசிப் பராக்கிரமம் அவன் கடலிற் பகை வர்களை அழித்ததாகும். இது புறம் 369 பற்றிய குறிப்பில் முன்பே குறிக்கப்பட்டது. பாடலின் பிற்சேர்க்கையான (அனுபந்தம்) பதிகத்தில் பல்வேறு செய்திகள் கூறப்படு கின்றன. இவற்றுள் சில, பாட்டிலேயே விரிவாகக் கூறப் படுபவை. அவன் வடபுலப் படையெழுச்சி பதிற்றுப் பத்து 43-ஆம் பாட்டு 6-11 வரிகளில் பொதுவகையில் குறிக்கப்படுகிறது. அவன் பழையன் நாட்டின்மீதும் அவன் துணைவர்கள்மீதும் படையெடுத்துச் சென்றதும் போரினிடையில் அவன் செய்த செயல்களும் 44-ஆம் பாட்டு 10-17 அடிகளில் சிறிது விளக்கமாகவே கூறப்படு கிறது.[12] அவன் ஏழு முடிமாலையை யணிவது பற்றி 45-ஆம் பாட்டு 6-ஆம் அடியில் ஒரு குறிப்புக் காணப்படு கிறது. 46-ஆம் பாட்டு 11-14 அடிகளில் கடற்போர் பற்றியும் அவன் எதிரிகளுக்குக் கடலால் ஏற்பட்ட பாது காப்புப் பற்றியும் கூறப்படுகின்றன. இது கடலிடைப் பாதுகாப்புடன் தங்கிய கடற் கொள்ளைக்காரரைக் குறிக்

12. 'எழுமுடி மார்பின் எய்திய சேரல்'

கின்றதென்பது தெளிவு. 48-ஆம் பாட்டு 4-ஆம் அடியில் அவன் கடல்கடந்த நாடுகளிலிருந்து தன்னுடைய நாட்டார்க்குச் சாதனங்கள் வருவதைத் தடுக்கும் பகைவர்களைக் கடலிலிருந்து அகற்றும் நோக்கத்துடன் இடைவிடாது கடலிற் போராடும் ஒரு நல்ல மீன்படவனென அழகுபட உருவகப்படுத்தப்படுகிறான். 49-ஆம் பாட்டு 7-10 அடிகளும் 16-17 அடிகளும் இச்சேரனுக்கு எதிராகப் பழையன் முனைப்புடன் எதிர்த்து நின்றதையும் அவன் இறுதியில் அழிக்கப்பட்டதையும் குறிக்கின்றன. கடைசியாக 50-ஆம் பாட்டில் 7-ஆம் அடியில் காவிரி, அமராவதி, குடவனாறு ஆகிய மூன்றாறுகளின் இணைப்புப் பற்றிய ஒரு குறிப்புக் காணப்படுகிறது. இக் கடைசிக் குறிப்பை நாம் இங்கே தருவதன் காரணம், சேரர் தலைநகர் (ஆன் பொருநை அல்லது பொருந்தம் என்று கூறப்படும்) அமராவதியின் கரையிலுள்ள கரூர்தான் என்று கூறுபவர்கள் இதனைப் பேராதாரமாகக் கொள்வதனாலேயே. இதற்கு மாறாக இதே பாட்டில் பெரியாற்றின் ஓய்விலா நீரொழுக்குப் பற்றிப் பல குறிப்புகள் வருகின்றன. ஓரிடத்தில் அஃது அவன் நாட்டிலேயே பிறப்பிடங் கொண்டதெனினும் அவன் நாட்டிலேயே கடலில் கலக்கிறதென்பதும் கூறப்படுகிறது (48-ஆம் பாட்டு 13-18 அடிகள்.) 43-ஆம் பாட்டு 15-ஆம் அடியும் இங்கே குறிப்பிடத்தக்கது. இத்தொகுதியின் 22-ஆம் பாட்டின் 15-16-ஆம் அடிகளில் அவன் சிற்றப்பன் கொங்கு நாட்டை வென்றதாகக் குறிப்பிடுவதை நினைவிற்கொண்டால், இக் குறிப்பின் பொருள் நன்கு விளங்கும்.[13]

---

13. The passage in poem 50 relating to the joining of the three rivers may be literally translated "flowing due east and carrying the water to the full is the Kaveri; you resemble the junction of three such rivers in full flood".

" வளங்கெழு சிறப்பி னுலகம் புரைஇச்
செங்குணக் கொழுகுங் கலுழி மலிர்நிறைக்

இச்செயல்களுள் சிலப்பதிகாரம் அவன் வடபுலப் படையெடுப்பை மிக்க விரிவாக வருணிக்கிறது. சிலை யெடுப் பதற்குக் கல் கொணரும் நோக்கத்துடன் அவன் படை யெடுத்தான் என்பதை அது தெளிவாகக் குறிக்கிறது. வடபுல எதிரிகளுக்கெதிரான அவன் வெற்றிகள் பற்றியும் விரிவாகக் கூறப்படுகிறது. இப்படையெடுப்புகள் எவ்வ ளவுதூரம் வரலாற்றுத் தொடர்பான உண்மைகள் என்பது

---

காவிரி யன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூட லனையை."

This would hardly support the specific interpretation of the commentator that this has apparently reference to the Kaveri, Amaravathi, and Kudavanaru. As a simple fact, the river Kudavanaru in the vicinity is a small stream that falls into the Amaravathi. If this is what the commentator actually meant, it is hardly in keeping with the idea underlying the poet's statement. The Kudavanaru falls into the Amaravathi. It does not join the Kaveri. The Amaravathi joins the Kaveri a considerable distance lower down than Karur, and is joined by a considerable stream from the left bank of the Kaveri, now called Karai Kottuan-aru. It is quite likely that it had the name Kudavanaru. But then where is the need that there should be three rivers actually joining to meet the sentiment to wich the poet here gives expression? The poet saw the expansive Kaveri in full floods apparently, and was full of admiration for the magnificent river flowing so full. When he had occasion to see the monarch and praise his greatness, naturally these expansive floods came into his mind, and, instead of saying as vast as the flooded Kaveri, he went one better and put it that it would require three such magnificent flooded rivers joining, to give as a correct motion of the great monarch's magnificence. There seems hardly and warrant to make more out of this passage than this. It cannot therefore lend itself to any kind of a notion that the Kaveri was a river of the Chera country and belonged to him any more than the four elements and the luminaries, such as the planets and the stars, drawn in similar comparison in poem 14 of the Paditrupattu.

நம் ஆராய்ச்சிக்கு அவசியமான செய்தியன்று. ஆயினும், பதிகத்தையே யன்றி அந்நூலின் உட்பகுதியிலேயே பத்தினியைப் பற்றிய குறிப்புக்காணப்பெறாமைதுர்ப்பாக்கியமே யாகும். தமிழில் பதிகம் என்பதும் பாயிரம் என்பதும் பின்னுரை அல்லது முன்னுரையே யாகும். அஃது எவர் வேண்டுமானாலும் எழுதத்தக்கதன்று. அஃது ஆசிரியருடன் மிக நெருங்கிய தொடர்புடைய ஒருவரால் முன்னுரையாக அல்லது முகவுரையாக அல்லது புனைந்துரையாகக் கூறப் படுவதே யாகும். இதுபற்றி எழுதத்தகும் அன்னியன் உரையாசிரியன் மட்டுமே ஆவன். இது நீங்கலாகப் பொதுவாக ஆசிரியரிடமிருந்து காலத்தாலோ மற்ற வகையாலோ தொலைதூரமான எவரும் அதனை எழுதமாட்டார் என்றே நான் கொள்கிறேன். இஃது எப்படியாயினும் இப்பகுதியின் மற்றப் பல செய்திகள் நூலின் மொழிகளாலேயே உறுதிப்படுகையில் உறுதிபெறாத சில மட்டும் பொய்ம்மையானவை என்று கொள்வதற்கு ஏது இல்லை. இதுமட்டுமன்று. இச்செய்தி பற்றியமட்டில் நூற்குறிப்பு எதுவுமில்லை என்று கூறுவதற்குமில்லை. 43-ஆம் பாட்டு 6-11 அடிகள் இதனையே குறிப்பதாகக் கொள்ளக்கூடும்.[14] மற்றவற்றுள் சில, பெரும்பாலும் இதே சொற்களில் சிலப்பதிகார ஆசிரியரால் அதாவது செங்குட்டுவன் சொந்தச் சகோதரராலேயே கூறப்படுகிறது.

இச்செயல்களைப் பற்றியவகையில் இரண்டு செய்திகள் கேள்விக்கு இடந்தருபவையாய் இருக்கின்றன. 11-ஆம் பாட்டு 13-14-ஆம் அடிகளில் அவன் தந்தை கடற்கடம்பரை

---

14. "கடவு ளிலிஇய கல்லோங்கு நெடுவரை
வடதிசை யெல்லை இமய மாகத்
தென்னங் குமரியோ டாயிடை யரசர்
முரசுடைப் பெருஞ்சமந் ததைய வார்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவி னழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ"

அழித்ததைத் தனக்கு உரிமையாகக் கொள்கிறான்.[15] 12-ஆம் பாட்டு 3-ஆம் அடியிலும்,[16] 17-ஆம் பாட்டு 4-5 அடிகளிலும், 20-ஆம் பாட்டு 2-4 அடிகளிலும் இதே செய்தி குறிக்கப்படுகிறது. இதில் கடைசிக் குறிப்புத் தெளிவுபட ஆற்றுவாய் நில (delta) இயல்புடைய ஒரு தீவைக் குறிக்கிறது. அதோடு அவன் இமயமலையில் தன் விற்பொறி நாட்டி வட ஆரியரையும் வென்றடக்கியதாகத் தெரியவருகிறது. இன்னும் விசித்திரமாக இரண்டாம் பத்தின் பதிகத்தில் அவன் சில யவனர்களை (கிரேக்கர்களை)ச் சிறைப்பிடித்துக் கைகளை முதுகின் பக்கமாகக் கட்டித் தலையில் நெய்யூற்றி அவர்களை விடுவிப்பதற்காக மிகுதியான விடுதலைப் பொருளைப் பெற்றான் என்றும் அவன் சிறப்பித்துக் கூறப்பெறுகிறான். பிறிதோரிடத்தில் இதுவே இமயமலைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையிலுள்ள அரசர்களிடையே முதன்மை தந்து, அவனுக்கு 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்ற பெயர் தரும் முதல் செயலாகும் என்று புலவர் குறிப்பிடுகிறார். இத்தொடரின் முற்பகுதியாகிய 'இமயவரம்பன்' என்பது 'இமயமலையை எல்லையாகக் கொண்டவன்' என்று பொருள்படும். இத்தொடரும் இதுபோன்ற சில தொடர்களும் துரதிருஷ்ட வசமாகக் காலஞ்சென்ற திரு. கே. கனகசபைப் பிள்ளையவர்களால் 'இமயவர்மன்' என்றும் பிறவுமாகத் திரிக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட மூல நூல்களில் இதற்கு ஆதாரம் எதுவுமில்லை. தந்தையின் அடைச் சிறப்புகள் மகனுக்குக் கூறப்படுவதால் அவனுடைய இச்செயல்கள் முக்கியமானவையாகின்றன. இந்நூலின் 3-ஆம் பத்து இமயவரம்பனின் தம்பி ஒருவனைக் குறிக்கிறது. அவன் செங்குட்டுவனுக்குச் சிற்றப்பன் ஆதல் வேண்டும். அவன் அயிரைக்கோட்டையை வென்றதாகச்

15. "பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய வேஎய்."

16. "கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின வேந்தே."

சிறப்பிக்கப்படுகிறான் (21-ஆம் பாட்டு 29-ம் அடி). அவன் கொங்கு நாட்டைக் கீழடக்கியதாக 23-ஆம் பாட்டு 15-22 அடிகளில் குறிக்கப்படுகிறான். அதே பாடல் 26-ஆம் வரி [17] எங்கோ ஒரு மலைக்கோட்டையை அவன் அழித்த தாகக் கூறுகிறது. 28-ஆம் பாட்டு 10-11 அடிகளில் பெரியாறு இச்சேரர்களின் ஆறாக இருந்ததுபற்றிய தெளி வான குறிப்புக் காணப்பெறுகிறது. ஆனால், பெரியாறு என்பதைப் பொதுத்தொடராகப் பெரிய ஆறு என்று கொள்ளலாம். ஆனால், இவன்தான் கொங்கு நாட்டை அடக்கியவன் என்பதை நினைவில் கொண்டால் அது சேர நாட்டில் இருப்பதாகக் கூறவேண்டுமே தவிரப் புதியதாக வென்ற நாட்டில் இருப்பதாகக் கூறப்படாதென்பது விளங்கும். சேரனின் இவ்வெற்றிதான் ஒரே நாளில் [18] இரு கடல் நீரிலும் குளித்த புகழைத் தந்தது. இஃது அவன் ஆட்சிப்பகுதி இருகடலையும் தழுவிக் கிடந்தது என்பதை மிகைப்படுத்திக் கூறும் அக்கால வழக்கமா யிருக்கலாம். அதுபோலவே தந்தை, சிற்றப்பன் ஆகிய இருவருக்கும் பின்வந்த செங்குட்டுவன் மேல்கரையில் கொச்சி முதல் கிழக்கில் கொங்கு வழியாகக் கீழ்க்கரைவரை யுள்ள நிலப்பகுதிக்கு நேரே உரியவனானன் என்று கேள் விப்படுகிறோம். மேலும் ஏழுமுடி மாலையைத் தந்தையும் மகனும் அணிந்தவகை எதுவாயினும் அதனுக்குரிமை விழைகின்றனர். ஒருவேளை இது பிற்காலத்தில் மும்முடிக்கு என்ன முக்கியத்துவ மிருந்ததோ அதைவிடப் பின்னும் கூடுதலாக இராதிருந்திருக்கலாம். மூன்று முடிகளும் ஏழு முடிகளும் மூவரசுகளையும் ஏழரசுகளையும் அல்லாமல் வேறு எதனையும் குறிக்காதும் இருக்கலாம். இவ்வேழு தெய்விக மான எண் என்றல்ல. மூன்று முடியுடை யரசர்களே யன்றித் தென் இந்தியாவின் பகுதிகளில் ஏழு முக்கியமான குறு

17. " அண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்து."
18. " கருங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி
யிருகட னீரு மொருபக லாடி "

நில மன்னர் அந்நாளில் இருந்தனர் என்பது தெரிகிறது. இதனை மற்றோரிடத்தில் நாம் கவனிப்போம். இத்தருணத்தில் நாம் கூறவேண்டுவதெல்லாம் இந்நூல்களின் வரலாற்றுத் தொடர்பான மெய்ம்மை, சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய துணைக்காப்பியங்களின் உண்மையை ஒப்புக்கொள்ள முடியாதவர்களாலும்கூட மறுக்கப்படுதற்கில்லை என்பது மட்டுமே. ஆயினும் இதற்கெதிராக இந்தத் துணைக் காப்பியங்களில் ஒன்றின் ஆசிரியர் செங்குட்டுவனின் தம்பியும் மற்றொன்றின் ஆசிரியர் நண்பரும் ஆவர் என்பதை ஓர்தல் வேண்டும். அவர்களில் ஒவ்வொருவரும் நூலிற் குறிக்கும் வரலாற்றுச் செய்திகள் நூலின் பிற பகுதிகளிலிருந்து பிரித்து உணரத்தக்கவையே. அத்தகைய செய்திகள் அக்காப்பியங்களிலும் வரலாற்றுத் தொடர்பான செய்திகள் அடங்கிய இப்பாடல்களால் வலியுறுத்தவும் பெறுகின்றன. ஆகவே நேர்மையான ஆராய்ச்சியாளரின் ஐய மனப்பான்மைகள் கற்பனை நவீனங் (நாவல்) களில்கூடக் காணத்தக்க இத்தகைய ஆசிரியர் தற்குறிப்புகளை ஒப்புக்கொண்டே யாகவேண்டும். இதில் உண்மையான முயற்சி எதுவெனில், எது சரித்திரபூர்வமானது—எது கற்பிதமானது என்று பிரித்துணரும் நுண்ணுணர்வே யாகும். இவ்வகையில் ஆராய்ந்தால் செங்குட்டுவன் தந்தையும் சிற்றப்பனும் சரித்திரபூர்வமான அரசரே யாவார்கள். அவர்கள் ஆட்சியில் மேற்கடற் கரையின் 'வேலிமேடு' கடற்கொள்ளைக்காரர் தொல்லைக்கு உட்பட்டு இருந்தது.[19] அதனை ஒழிக்கத் தந்தையும் மகனும்

---

19. This view of the term Kadambu in the poems finds strong confirmation in the City of Nannan having been known "*Kadambin peruvaiyil* (vide *Padikam* in the fourth-ten poem 40. ll. 13-15)[1] and the Kadambar being one among four *Kudis* (cultivators) in Puram 335. ll. 7-8.[2]

1. "பூழி நாட்டைப் படையெடுத்தத் தழீஇ
யுருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை யறுத்தவன்"

2. "துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை."

பாடுபட்டனர். அவர்கள் அதில் பெருவெற்றியடைந்தனர் என்பது பல்வேறு தமிழ்ப்பாடல்களில் கூறப்படுகிறது. மேல் கடற்கரையின் செழித்தோங்கிய துறைமுக வாணிகத்தை யும் அவை விரித்துரைக்கின்றன. இங்ஙனம் கடற்கரையில் கடற்கொள்ளைக்காரர் நிறைந்திருந்த ஒரு காலத்தையும் அஃது ஓய்வுற்றிருந்த ஒரு குறிப்பிட்ட காலத்தையும்பற்றி ரோம வாணிகம் பற்றிக் குறிக்குமிடத்தில் பண்டைய கிரேக்க ஆசிரியர் தெளிவான மொழிகளால் விரித்துரைக் கின்றனர். ப்ளினி இக்கடற்கொள்ளைக்காரர் பற்றிய குறையை எடுத்துரைக்கின்றார் என்பது கூறப்பட்டது. தாலமி ப்ளினி கூறும் கேர்ஸோனீஸஸுக் கெதிரில் இச் செய்தி நிகழ்வதாகக் குறிப்பிட்டார். பின் அவர் நாராவுக் கும் திண்டிஸுக்கும் வருமுன் உள்ள வெள்ளைத்தீவு என வழங்கிய இடத்தைக் குறிப்பிட்டு அது தமிரிகாவின் முதல் வாணிக இடம் என்று கூறுகிறார். பெரிப்ளஸ் கூறும் கெர்ஸொனீஸஸ் வடகன்னடத்தில் 'காளி நதி' என்று கூறும் பகுதியின் கோடியிலுள்ள சிறு தீபகற்பத் தையே யாகும் என்பதில் ஐயமில்லை. இதற்கு எதிரில் 'சிப்பிப் பாதைகள்' என்று வழங்கும் தீவுகள் இருக் கின்றன. இவையே பெரிப்ளஸ் கூறும் "கேனிடே" ஆக இருக்கக் கூடும். 'வெள்ளைத் தீவு' என்பது சில நூலாரின் 'லியூகெ' என்பதுடனும் நாட்டு மொழிகளில் 'வெள்ளியங் கல்லு' என்றும் 'தூவக் கல்' என்றும் கூறப்படுவதுடனும் ஒன்றுபட்டதே யாகும். கடைசி இரண்டு தொடர்களும் உண்மையில் 'லியூகெ' அல்லது 'வெள்ளைத் தீவு' என்பதன் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பே யாகும். புதிய இம்பீரியல் கெஜெட்மீயர் என்ற தொகுதியில் உள்ள பிஜியன் தீவு இதுவே என்று கருதப்படுகிறது.[20] இதன் பின் திமிரிகா (தமிழக) நாட்டின் முதல் துறைமுகங்களான நௌராவும் திண்டி

21. Vol. 20. Page 136.

ஸூம் குறிக்கப்படுகின்றன. இவை தாலமியின் நித்ரியா ஸூடனும் திண்டிஸூடனும் இணைபவை. தாலமி நித்ரி யாஸை நாட்டின் ஒரு சந்தையிடம் என்கிறார். அவர் கூறும் தொடர் 'அரியகெ அந்த்ரான் பய்ரடான்' அதாவது கடற் கொள்ளைக்காரரின் 'அரியகா' என்பது ஆகும். இந்நித்ரியாஸைக் குறித்துத்தான் ப்ளினி பின்வருமாறு கூறுகிறார்: "முஸிரிஸ் என்ற பெரிய வாணிக இடத்திற்குச் செல்லும் கப்பல்களுக்கு அவற்றைத் தாக்கும் கடற் கொள்ளைக்காரரின் ஆபத்து அதிகம். அவர்கள் நித்ரியாஸூக்கு உரியவர்கள்; அதன் அயலிடங்களைத் தொல்லைப் படுத்தினார்கள்."

இங்ஙனம் நித்ரியாஸ் ஒரு வாணிக இடமாக மட்டுமன்றிக் கரையினின்று அகன்ற ஒரு தீவாகவும் கூறப் பட்டிருக்கிறது. இதன்படி நித்ரியாஸ் எங்கிருப்பினும் இத்தீவு அத்துறைமுகத்தின் வாயிலிலேயே இருந்திருக்க வேண்டும் என்பது ஏற்படுகிறது. ப்ளினி கூறும் நித்ரியாஸ் அல்லது 'நாரா' என்பது 'கண்ணனூரே' என்று திரு. ஷாப் (Mr. Schoff) கொள்கிறார். ஆனால் இது வெகுதூரம் தெற்கில் விலகியிருப்பதாகும். முன் காட்டியபடியே கண்ணனூர் என்பது இடைக்கால நிலநூல் வல்லாரது எலிக்குன்றம் (Mount d'Ely) ஆகும். நித்ரியாஸ் மங்களூரைக் குறிக்கும் என்ற 'யூலி' என்பவருடைய ஊகம் தற்செயலாகச் சரியாக முடிவதாகும். மங்களூர் நேத்ராவதி, குருபா என்ற இரண்டு கிளையாறுகளிடையே யுள்ள ஆற்றுவாய் நிலத்தின் தலைப்பில் உள்ளது. இ'நேத்ராவதி'யே 'நித்ரியாஸ்' அல்லது 'நித்ரியான்' என்ற பெயரைத் தந்த சொல் ஆகும். ஒருவேளை அந்நகருக்கு 'நாரா' என்ற பெயர் அதிலிருந்தே வந்ததாக இருக்கலாம். இதுவே துறைமுகத்துக்கு எதிரான தீவுக்கும் அப்பெயர் வந்ததன் காரணமா யிருக்கவும் கூடும். திண்டிஸ் இதிலிருந்து நெடுந்தொலை தெற்கிலுள்ளது; இப்போது பெய்ப்பூர் இருக்குமிடத்தின் அருகாமையிலுள்ள அது, 'கட

லுண்டி' என்ற இடமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் பெரிப்ளஸ் கூறும் கடற்கொள்ளைக்காரர் தொல்லையுடைய கடற்கரை, வட கன்னடத்தின் தென் கோடியிலுள்ள 'கார்வார்' முனையிலிருந்து மங்களூர்த் துறைமுகம்வரை இருந்தது என்பதைக் காண்கிறோம். இது கடற்கடம்பு (கடம்பராகிய கடற்கொள்ளைக்காரர்கள்) பற்றிய தமிழிலக்கிய வர்ணனையுடன் மிகவும் பொருந்துவ தாகும். அந்நூலில் அவர்கள் கடலிற் காணப்பட்டனர் என்றும் சேரன் செங்குட்டுவனாலும் அவன் தந்தையாலும் அடிக்கடிக் கடலுள் அவர்கள் சந்திப்பிடமாகிய தீவிற் சென்று அவர்களை முறியடிக்க வேண்டியிருந்தது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதுவே இக்கடற் கொள்ளைக்காரர் களைப்பற்றித் தாலமி ஒன்றும் கூறாததையும் விளக்கும். அவர் அக் கடற்கரையைக் 'கடற் கொள்ளைக்காரர் கடற்கரை' என்றுமட்டும் கூறிப்போயினர். கடற்கடம் பர் முதலில் கடற் கொள்ளைக்காரராயிருந்து பின்னர் நாகரிகப்பட்டுப் பிறருடன் கலந்திருக்கவேண்டும் என்று கொள்ளலாம். இக் கோட்பாடு முரட்டுக்குணம் படைத்த பெண்கொலை புரிந்த நன்னனைப்பற்றிய செய்திகளுடன் நன்கு பொருந்துவதாகும். அவன் தலைநகரும் முன் குறிப்பிட்டபடி 'கடம்பின் பெருவாயில்' என்று அழைக்கப் படுகிறது. அவன் இடைவிடாத போர்களினிறுதியில் மற்றொரு பெருஞ்சேரனல், அதாவது பதிற்றுப்பத்தில் நாலாம்பத்தின் தலைவனாகிய களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரனல் கொல்லப்பட்டான்.

எனவே, இச் சங்க கால நூல்களைப் பண்டைக் கிரேக்க நில நூல் வல்லார் குறிப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், முதல் சேரர்கள் வட ஆரியர் படை யெடுப்பை எதிர்ப்பதில் முனைந்து நின்றனர் என்பதும், தென் இந்தியாவில் தங்கள் வெற்றிகளை விரிவு படுத்திக் கடலினின்று கடல்வரை யாண்டனர் என்பதும் விளங்குகின்றன. ஆயினும், மனித நாகரிகத்துக்கு அவர்

கள் செய்த பெருந்தொண்டு, முதற்சேரனும் அவன் மகனுமாக மேல்கடற்கரையில் கடற் கொள்ளைக்காரரின் பெருந் தொல்லையை ஒழித்ததாம். பிற சேரரும் ஒரு வேளை அவர்கள் கீழ்ப்பட்ட குறுநில மன்னரும் இவ்வகை யில் உண்மையான தொண்டாற்றியிருக்கக் கூடும். வேலி மேட்டுக் (கடற்கரை) கடற் கொள்ளைக்காரர் தொல்லை யற் றிருந்தகாலம் பியூட்டிஞ்சர் அட்டவணை யெழுதின கால மாகிய சுமார் கி. பி. 80-முதல் 222 வரையுள்ள காலமாக இருக்கலாம்.

பரணர் பாடல்களையும் அவற்றுடன் இணைக்கக்கூடிய பிற இலக்கியச் சான்றுகளையும் பிற சான்றுகளையும் சேர்த்துவைத்துப் பார்த்தால் அவை இவ்விலக்கியத்துக் குப் புறம்பான வேறு இரு சான்றுகளின் இணைப்பால் காணப்படும் உண்மையுடன் பொருந்துவது கர்ணலாம். அதாவது பண்டைய கிரேக்க நிலநூல் வல்லார் கூற்றை யும் இப்பகுதியில் காணப்படும் ரோம நாணயங்களிலிருந்து கிட்டும் செய்திகளையும் ஒப்பிட்டு, அவற்றின் பலனுடன் பார்த்தால் அவை பொருந்துவது தெரியவரும்.

உதாரணமாகப் பரணர் முக்கியமாகச் சேர அரசரை யும் சோழ அரசரையுமே குறிக்கிறார். அவர் பாண்டிய அர சர்களை அவ்வளவாகச் சிறப்பிக்கவில்லை. ஆயினும் இடை யிடையே அவர் தம் பாடல்களில் குறு நில மன்னர் பல ரைப்பற்றிக் கூறுகிறார். மூன்று நான்கு சோழர்கள் வகையிலும் குறுநில மன்னர்கள் வகையிலும் அவர்கள் 'ஏழு முடிமாலை'களை அணிந்தனர் என்று அவர் கூறுவது கடையெழு வள்ளல்கள் என்று இலக்கியத்தில் குறிக்கப் பட்ட ஏழு குறுநில மன்னரையும் குறிக்கும் என்னலாம். சோழ அரசர் வரிசை முறையில் பெருவிறற்கிள்ளி, அவன் பின் இளஞ்சேட் சென்னி, அவன்பின் கரிகாலன் ஆகிய வர்கள் ஆவர். இவர்களுக்கிடையே செங்குட்டுவன் தலை யீட்டுக்குக் காரணமாக உறவினரிடையே போர் விளைத்த கிள்ளிகள் அல்லது சோழ அரசர்கள் மறைமுகமாய்க்

குறிக்கப்படுகிறார்கள். சேரர் பற்றிய வகையிலும் அவர் இமய வரம்பன் நெடுஞ் சேரலாதனையும் அவன் மகன் செங்குட்டுவனையும் முதலாமவன் தம்பி ஒருவனையும் இருவரிடையும் வந்த இரண்டாமவன் மாற்றாந்தாய் வழி உடன் பிறந்தானையும் பற்றிச் சிறப்பிக்கிறார். பிற இடங்களில் வையாவிக்கோப் பெரும்பேகன் என்று வழங்கப்பெறும் இப்பேகனைப் பரணர் காலத்தினனாகக் கொள்ளவே வேண்டும். மேலும் போர்க்களத்தில் பொருது வீழ்ந்த சேரனையும் சோழனையும் அவர் குறிப்பதிலிருந்து அதே செய்தியைக் குறிப்பிட்ட புலவரான கழாத் தலையாருடன் அவர் சமகாலத்தவர் என்பது ஏற்படுகிறது. அத்துடன் கபிலரினும் மூத்த சமகாலத்தவராக இருக்கவேண்டும் கழாத்தலையார் இருங்கோவேளின் அரையம் என்ற தலைநகரது அழிவைக் குறிப்பிட்டதாகக் கபிலரது மற்றொரு பாட்டுக் கூறுகிறது.

இவ்வகையில் முன் ஓர் அத்தியாயத்தில் குறிப்பிட்ட நூலாசிரியரான மாமூலனார் தரும் சில குறிப்புக்களையும் நாம் கவனித்தல் தகும். அகம் 55-ல் உள்ள ஒரு முக்கியமான குறிப்புத் தெளிவான மொழிகளில் 'வெண்ணி(ல்)' என்ற இடத்துப் போர் பற்றிக் குறிப்பிடுகிறது. இங்கே சோழன் கரிகாலன் தன் சமகாலத்தவனான சேரனைத் தோற்கடித்தான். அப்போது முதுகில்பட்ட ஒரு புண்ணால் வெட்கமடைந்து சேரன் பட்டினியால் உயிர்துறந்தான். இதே செய்தி கழாத்தலையார், வெண்ணிக்குயத்தியார் என்ற மற்றும் இரு புலவர்களால் ஏறத்தாழ அதே சொற்களால் புறம் 65, 66-ல் குறிக்கப்படுகிறது. முதற் புலவர் குறிப்புச் சற்று மறைமுகமானதாகக் கொள்ளப்படலாமாயினும், மற்ற இருவர் குறிப்புக்களும் நேரடியானவையும் தெளிவானவையும் ஆகும். இதே புலவராகிய மாமூலனார் அகம் 126, 127-ல் கடற்கொள்ளைக்காரர்க் கெதிராகச் சேரர் அடைந்த வெற்றிகளைக் குறிப்பிடுகிறார். இஃது அப்புலவர் அவ்வரசனுடன் சமகாலத்தவர் என்பதைக்

குறிக்கும். அவர் ஒரு பாண்டியனைக் குறிக்கிறாராயினும் அஃது எந்தப் பாண்டியன் என்று அறியக்கூடவில்லை. இதே நூல் 232, 233-ல் பாரதப் போரில் இருபுறத்துப்படைகளுக்கும் உணவளித்த சேரனைப்பற்றிக் குறிப்பிடப்படுகிறது. இப்போது நம் ஆராய்ச்சிக்குப் பொருத்தமான செய்தியென்னவெனில் அதில் குறிப்பிடப்படும் போரொன்றில் ஏழு வள்ளல்களில் ஒருவனை எவ்வி என்ற பாண்டிய நாட்டுத் தலைவன் ஒருவன் போரில் இறந்தான். இங்கே அவர் பரணர் பெயரைக் குறிப்பிட்டு, வீழ்ந்த தலைவன் வீரத்தைப் பரணர் புகழ்ந்தனர் என்றும் கூறுகிறார். இது பரணரை எவ்வியுடன் சமகாலத்தவராக்குகின்றது. பரணர் காலத்துடன் இணைத்துக்கொண்டு வரத்தகும் மற்றொரு தலைவன் (சேலம் ஜில்லாவில் இது போழ்து தர்மபுரி என்று வழங்கும்) தகடூரைச் சார்ந்த அதிகமான் அஞ்சி ஆவன். மாமூலனார் இயற்றிய 114-ஆம் பாட்டில், நம் மூலபாடம் சரியானதானால், இத்தலைவன் வேறொரு தலைவனுக்கு அஞ்சித் தன் உறவினரிடையே ஒளிந்திருந்தான் என்பது கூறப்படுகிறது. இத்தலைவன் நன்னன் என்று தோற்றுகிறது. 207-ஆம் பாட்டில் பரணர் கொல்லிமலைகள் ஓரிக்கு உரியதெனக் கூறுகிறார். ஆயினும் அடுத்த பாட்டில் கல்லாடர் என்ற மற்றொரு புலவர் ஓரியின் மறைவுபற்றி வருந்துகிறார். இதன்படி திருக்கோவலூரைச் சேர்ந்த காரி என்பவன் ஓரியைக் கொன்று கொல்லிமலையைச் சேரனுக்கு உரிமையாக்கினான். இங்கே குறிப்பிடப்படுவது பேரவாவால் தூண்டப்பட்ட ஒரு நெடும்போர் அல்லது போர்கள் ஆகும். தகடூர் அஞ்சி திருக்கோவலூர்க் காரியைப் போர்க்களத்தில் முறியடித்துப் பின்னர் அவனை முற்றுகை செய்தான். காரி பகைவனை எதிர்த்து நிற்கமாட்டாமல் கொல்லிமலையைக் கொள்ள ஆவல்கொண்டிருந்த சேரன் பாதுகாப்பைவேண்டினான். காரி தான் விருப்புடன் சேவை செய்வதாக முன் வந்து ஒரு படையின் தலைமையில் சென்று ஓரியைத்தோற்கடித்துக் கொன்று கொல்லிமலையைச் சேரனுக்குச் சேர்ப்

பித்தான். இதே பாடலில் கல்லாடர் பாண்டியன் எழுவரை முறியடித்த ஆலங்கானப் போர்பற்றிக் கூறுகிறார். இது பற்றி நாம் பின்னர்க் கூறுவோம். நமக்கு வேண்டுவதற்கதிகமாகச் சொல்லாமலே பரணர், புகழ்பெற்ற எழுவரிடையே காரி, ஓரி, எவ்வி ஆகியவரை அறிந்திருந்தார் என்று கூறலாம். பிற சிறு தலைவர்கள்பற்றிக் கூற வேண்டுவதில்லை. நன்னனுடன் அவர் தொடர்பைப்பற்றி முன்னரே கூறியிருக்கிறோம். இங்ஙனமாக நாம் ஒரு தலைமுறையை, பரணரின் தலைமுறையைச் சுற்றிக் கணக்கெடுத்துவிட்டோம். அதனுள் புலவர், வள்ளல்கள், சேர சோழர் பரம்பரையில் பலர், தமிழிலக்கியத்தில் ஏழு பெரிய வள்ளல்கள் எனப்படும் எழுவருள் பெரும்பான்மையான தலைவர்கள் ஆகியோர் உட்படுகின்றனர். பரணரை ஒத்த சிறப்புடைய இன்னும் ஒன்றிரண்டு புலவர்களைப்பற்றி இவ்வகையில் ஆராய்ந்து இவ்விலக்கியத் தொகுதியை வைத்துக் கொண்டு மதுரை மூன்றும் சங்கம் என்ற ஓர் அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா என்று பார்ப்போம்.

சுருக்கமாகக் குறிப்பிடும் முறையில் இங்கே கரிகாலன், அவன் தந்தை, பாட்டன் ஆகியவர்கள் பொதுப்படச் சேரன் நெடுஞ்சேரலாதன், அவன் தந்தை அத்துடன் ஒருக்கால் அவன் மகனாகிய செங்குட்டுவன் ஆகியவருடன் சமகாலத்தவர்களாவர் என்று கூறலாம். இக்காலத்துக் குறுநில மன்னர்கள் பேகன், ஓரி, காரி, அதிகன், எவ்வி, நன்னன், ஆய் எயினன் ஆகியவர்கள். இவர்கள் அனைவரும் பரணர் காலம் எனப்படக்கூடும் ஒரே காலத்திற்கு உரியவர்களே. நாம் இதிற் கண்ட புலவர்கள் பரணர், மாமூலனார், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார், கழாத்தலையார், வெண்ணிக்குயத்தியார், கல்லாடனார் ஆகியவர்கள். இத்தொகையை நோக்க இவர்களே ஒரு தனிச் சங்கமாய் அமையப் போதியவர்கள் என்னலாம். பரணர் தெளிவான சொற்களால் எந்தப் பாண்டியனையும் குறிக்காவிடினும் நாம் கவனிக்காமல் விட்டுவிட முடியாத ஒரு குறிப்பு

உண்டு. அதுவே அகம் 115-ஆம் பாடல் ஆகும். இதில் கூடற் பரந்தலை என்ற போர் குறிப்பிடப்படுகிறது. இத்தொடரின் முதற் சொல்லாகிய கூடல், மதுரையைக் குறிக்கும். பிற் பகுதி போர்க்களம் என்ற பொருளுடையதாக இருக்கலாம். இப்போரில் பாண்டியன் தன்னை எதிர்த்த இரண்டரசர்களை முறியடித்து ஓட்டி அவர்கள் போர்முரசுகளைக் கைக்கொண் டான். இஃது இலக்கியத்தில் தலையாலங்கானத்து வெற்றிவீரன் என்று கூறப்படும் பாண்டிய இளவலோ என்று தோற்றும்படியான குறிப்பாகும். அவன் வர லாற்றை நாம் மேல் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளு வோம்.

## சேரர்மீதும் வஞ்சிமீதும் பாடல்களியற்றிய மற்றைய சங்கப் புலவர்கள்

### வஞ்சிநகர் ஒரு மேல் கடற்கரை நகர் : அதன் பெயர் வஞ்சிக்கோடியைத் தழுவி வந்ததாகும்.

இதுவரை நிகழ்த்திய ஆராய்ச்சியின் பயனைகச் சேர நாடு மேற்குக் கடற்கரை யோரமாகக் கன்னட ஜில்லாக்கள் இரண்டிலிருந்து திருவாங்கூரின் பெரும்பகுதிவரை கிடந்த தென்பதும் தெற்குப்பக்க எல்லை சரித்திரப் போக்கின் உயர்வு தாழ்வுகளுக்கேற்ப மாறிக்கிடந்ததென்பதும் தெளி வாக அறியப்படுகின்றன. தொடக்கத்தில் சேரநாடு மிகச் சிறிய அளவினதாகவே இருந்தது. ஆனல் வடக்கு நோக் கியும் வடகிழக்கு நோக்கியும் விரிவான வெற்றிகளின் பயனைக, அது விரிவடைந்தது. பிற்காலங்களில் அது கிழக்கு நோக்கிப் பரந்து கோங்கு முழுவதையும் உட் கொண்டது. அடுத்தபடியாக அது கிழக்கு, தெற்கு ஆகிய இரண்டு திசைகளிலும் ஒருகால் வடக்கிலும் கூடப் பரந்து தமிழ் இந்தியாமீது ஏகாதிபத்தியநிலையை நாட்டிற்று. சேரர் களின் தலைநகர் மேற்குக் கடற்கரையில் ஓரிடத்திலிருந் தது. அது பண்டைக் கிரேக்க நிலநூல் வல்லாரால் 'கரூர்'

என்று அழைக்கப்பட்டது. முசிரித் துறைமுகம் அவர்களால் தலைநகர் என்று குறிக்கப்பட்டது. இதன் பொருள் தலைநகராகிய 'கரூர்' முஸிரியிலிருந்து நெடுந்தூரத்திலிருக்க முடியாது என்பதுதான். அது மட்டுமன்று. கரூரும் முஸிரிஸும் இரண்டும் ஒரே ஆசிரியரால் தலைநகர்கள் என்று குறிப்பிடத்தக்க அளவு அவைகள் மிக அண்மையிலேயே இருந்திருக்கவேண்டும். சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் நாம் ஆராய்ந்ததிலிருந்து இந்நூல்கள் சேரர் தலைநகரை வஞ்சி என்ற ஒரே பெயரால் மட்டுமே குறிக்கின்றன வென்றும், மூலத்தில் கரூர் என்ற பெயரே தலைநகரின் பெயராக வரவில்லை என்றும், ஆயினும் தனிப்பட்ட இரண்டிடங்களில் மட்டும் சிலப்பதிகாரத்தின் முதல் உரையாசிரியர் தலைநகருக்குக் 'கரூர்' என்ற மறு பெயரையும் தருகிறார் என்றும் காட்டினோம். மணிமேகலையோ அதனை வஞ்சியென்று மட்டுமே குறிக்கின்றது. சேரர்களைப் பற்றியே தனிப்படக் கூறும் நூலாகிய பதிற்றுப்பத்தும் அவர்கள் நாடு மேல்கரையோரமாகக் கிடந்ததென்றும் அவர்கள் தலைநகர்களாக அமைந்த முக்கிய நகரங்களெல்லாம் மேற்குக் கரையை ஒட்டியேயிருந்தன என்றும் தெளிவாகக் காட்டுகின்றது. சேர மன்னரில் மிக முக்கியமானவர்களுடைய பெயர் இவற்றுள் ஏதேனும் ஒரு நகருடன் தொடர்புடையதாகக் குறிப்பிடப் படுகிறது. ஒரு தடவை தவிர வஞ்சி, 'வஞ்சி' யென்ற பெயரால் இவ்வாசிரியர்களால் குறிக்கப் பெறவில்லை. 9-ஆம் பாட்டின் பிற்சேர்க்கையில் மட்டும் 'வஞ்சி மூதூர்' என்ற பெயர் சேரன் இளஞ்சேரல் இரும்பொறையின் தலைநகராகக் கூறப்படுகிறது. ஆகவே இப்பாடல்கள் வஞ்சி என்ற பெயர்பற்றி மௌனம் சாதிப்பதிலிருந்து வஞ்சிப் அப்பெயரால் அவர்களுக்கு அறியப்படாதிருந்தது என்று கொள்வதற்கில்லை. ஆயினும் குறிக்கப்பட்ட ஓரிடம் தவிர அஃது அப்பெயரால் கூறப்படவில்லை. கொங்கு நாட்டில் சேரர்கொண்ட ஆதிக்கத்தின் விவர முற்றும் மிகத்

தெளிவாகக் கூறப்படுகிறது. ஆகவே தலைநகர் வஞ்சி, உள்நாட்டில் உள்ள திருச்சிராப்பள்ளிக் கரூர் என்று கூறுவது சாத்தியமன்று என்பது தெளிவாகிறது. சிலப்பதிகாரம் ஒரே படித்தாகத் தலைநகரை 'வஞ்சி' என்று குறிக்கிறது. அதுவும் இந்நூலில் கதைப்போக்கில் பல இடத்தில் தலைநகரின் பெயர் வருகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். இந்நூல் வஞ்சியை ஆன்பொருநை என்ற ஓர் ஆற்றுடனும் தொடர்புபடுத்துகிறது. பொருநை என்ற பெயரும் அவ்வாற்றுக்குக் கூறப்படுகிறது. இக்குறிப்புகளை ஒப்பிட்டுக் காணும்போது பெரியாறு என்பது அவ்வாற்றின் மற்றொரு பெயரே யென்றும் வஞ்சி அதன் கரையில் அல்லது குறைந்த அளவில் அதனுக்கு மிக அருகிலேயே இருந்தது என்றும் தெரியவரும். வஞ்சி என்ற பெயர் சம்பந்தப்பட்டவரை இந்நூலில் அது பூவுடைய வஞ்சி என்ற வஞ்சிக்கொடிக்கு எதிராகத் 'பூவா வஞ்சி' என்று கூறப்படுகிறது. இவ்வஞ்சிக் கொடி உரிய பருவத்திலேனும் பூக்கும் ஒரு கொடியா யிருந்திருக்க வேண்டும். வஞ்சி நகரோ அங்ஙனம் பூக்கமுடியாத ஒன்று ஆகும். ஆகவே, வஞ்சி என்ற பெயர் ஆசிரியரே அதற்குக் கொடுத்த பெயராகும். ஆனல் வஞ்சி என்ற பெயர் பூக்கும் கொடி ஒன்றைக் குறிக்கும். அது தமிழில் கொடி மாதுளை என வழங்கப்பெறும். அச்சொல்லுக்குச் 'சூரல்' என்றும் 'மூங்கில்' என்றும் மறுபொருள்கள் உண்டு. ஆயினும் சிலப்பதிகாரத்தில் அந்நகருக்குத் தரப்பட்ட பெயர் இச்சொல்லின் முதலாம் பொருளையே தழுவியதாகும். அதாவது மரம் அல்லது செடி என்று நாம் கூறத்தகும் பிறவகைகளைத் தழுவாது அது வஞ்சிக் கொடியையே தழுவுவது ஆகும். ஆசிரியரின் இக்கருத்து வஞ்சிநகர்ப் பெண்களை வஞ்சியிலுள்ளவர்களே, வஞ்சிக்கொடி போன்ற இடையை உடையவர்களே . என்ற பொருளில் அவர் அடுக்கு நயத்துடன் 'வஞ்சியீர், வஞ்சியிடையீர்' என்று குறிப்பிடுவதால் அறியப்படுவதாகும். இவ்விடத்தில்

வஞ்சியை மூங்கில் என்றோ சூரல் என்றோ கூறுதல் எத்தகைய கற்பனையுடன் பார்த்தாலும் பொருந்தாது. எனவே சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சம்பந்தப்பட்ட மட்டில் வஞ்சி சேரர் தலைநகரின் இலக்கியப் பெயர் எனினும் அது தமிழிலக்கியத்திலும் வடமொழி இலக்கியத்திலும் வஞ்சி என்ற சொல் கொடி என்ற பொருளில் வருவதைத் தழுவி எழுந்ததென்றும் கொள்ளலாம்.

## கருரும் சங்கப்புலவர் நக்கீரரும்

பதிற்றுப்பத்து ஆராய்ச்சினிடையில் அவ்வப்போது உரையாசிரியர் வழங்கிய இடத்தன்றி, நூலில் கரூர் என்ற பெயர் வரவில்லை என்பதை வாசகர்கள் கவனித்திருக்கலாம். ஆனல் வஞ்சிமூதூர் என்ற ஒரு குறிப்பு அச்சமயம் அது தலைநகரின் பெயராக நன்கு அறியப்பட்டது என்று காட்டப் போதியதாகும். இங்ஙனம் நன்கு நிலைநிறுத்தப் படக்கூடும் இக்கோட்பாட்டைப் பெரும்புகழ் வாய்ந்த நக்கீரரின் சங்கப்பாடல் ஒன்று மறுத்துவிடுவதாகக் காண்கிறது. அத்துடன் சங்க மரபுப்படி அவரே மதுரையிலுள்ள மூன்றும் சங்கத்தின் தலைவரும் ஆவர். இப்பாட்டு, முறைப்படத் தவறின்றி உறந்தையைச் சோழர் தலைநகராகக் குறிப்பிடுகிறது. அதேபோலத் தவறின்றிப் பாண்டியர் தலைநகரை வழுதி - கூடல் அல்லது கூடல் என்று தெரிவிக்கின்றது. இதேபோலத் தவறுக்கிடமில்லாமல் இப்பாட்டின் இறுதியில் கோதை (சேரன்) தலைநகராகச் சிறோங்கும் பெரிய நகராகிய கோதை — திருமாவிய நகர் கருவூர் அல்லது கரூவூர் என்று கூறுகிறது.

"ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்
அறங்கெழு நல்லவை உறந்தை அன்ன
பெறலரு நன்கலன் எய்தி.........
............ ........... ...........
அரண்பல கடந்த முரண்கொள் தானை
வாடா வேம்பின் வழுதி கூடல்

............ ............ ............ ...........
ஆள்கோட் பிழையா அஞ்சுவரு தடக்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத்
தெண்ணீர் உயர்கரைக் கவைஇய
தண்ணான் பொருநை மணலினும் பலவே."

அகம். 93.

அது மட்டுமன்று. குளிர்ச்சி பொருந்திய ஆன்பொருநையால் அந்நகரின் முன்புறத்திலுள்ள இறங்கும் துறைகளில் ஒதுக்கப்பட்ட மணற் குவியல்களையும் அவர் அதனுடன் குறிப்பிடுகிறார். எனவே, இவ்வாசிரியர் கூற்றுப்படி பார்த்தால் சேரர் தலைநகர் ஆன்பொருநையின் கரையிலுள்ள கரூர் ஆகும். கடைசியிற் சொன்ன இப்பெயர் சேரர் தலைநகரைக் குறிக்கும் என்பதில் சிறிதும் சந்தேகத்துக்கு இடமில்லை. ஏனெனில், பிற தலைநகர்களைக் குறிப்பது போன்றே அவர் இதனையும் குறிக்கின்றார். சங்க காலத்திய பண்டை நூல்களுள் சேரர் தலைநகர் ஆன்பொருநையின் கரையிலுள்ள கருவூர் என்று கூறும் தெளிவான குறிப்பு இஃது ஒன்றே. சேரர் தலைநகராக நன்கு உணரப்பட்ட வஞ்சி என்ற பெயரை இஃது எவ்வளவு தூரம் மறுக்கத்தக்கது என்று ஆராய்வோம். அத்துடன் இஃது எவ்வளவு தூரம் தலைநகர் கருவூர் என்றும் அதுவும் மேற்குக் கரையிலுள்ள கரூரை யல்லாமல் உள்நாட்டுக் கருவூரே என்று நிலைநிறுத்தத் தக்கது என்றும் ஆராய்வோம்:

நக்கீரர் 93-ஆம் பாட்டில் தரும் குறிப்புத் தெளிவாகக் கருவூர் ஆன்பொருநையின் கரையிலுள்ளது என்று கூறுகிறது. இங்கே ஆசிரியர் கருத்துத் தலைநகர் மூன்றையும் குறிப்பதாதலால் கருவூர் சேரர் தலைநகர் என்ற செய்தியும் மிகத் தெளிவான குறிப்பே யாகும். இவ்வடிப்படைமீது கருவூர் என்பதும் ஆன்பொருநை என்பதும் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள கரூரும் அதனைக் கரையிற்கொண்ட,

அமராவதியும் ஆகும் என்று கொள்வது பொருந்துவ தாகுமா? சேரர் நாட்டைப்பற்றியும் அவர்கள் தலைநகரைப் பற்றியும் அவர் திட்டமான கருத்து எதுதான் என்று நாம் அறியவேண்டும். நக்கீரர்,

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
முதுநீர் முன்றுறை முசிறி முற்றிக்
களிறுபட எருக்கிய கல்லென் ஞாட்பின்
அரும்புண் உறுநரின் வருந்தினள்."

செய். 57.

எனவரும் அகநானூற்றுப் பாடலில் பாண்டிய அரசனொரு வனால் முசிறி முற்றுகையாய்ப் படுவதைக் குறிப்பிட்டு, அவன் அம்முற்றுகையை மிகவும் அதிகரித்ததால் அந்நகர் வாசிகள் மிகவும் துன்புற்றனர் என்று கூறுகிறார். இதே முசிறி முற்றுகையை எருக்காட்டூர்த் தாயங்கண்ணன் என்ற மற்றொரு புலவரும் ஏறத்தாழ இதே தொடர்க ளால் குறிப்பிடுகிறார்.

"....................................சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ஆர்ப்பெழ வளைஇ
அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடிநுடங்கு மறுகிற் கூடல்."

செய். 149.

எனவரும் அகநானூற்றுச் செய்யுளில் இம்முற்றுகை வெற் றிகரமாக நடந்ததென்றும் பாண்டியன் முசிறியிலிருந்து ஏதோ ஒரு சிலையைக்கொண்டு சென்றானென்றும் இங்கே அவர் கூறுகிறார். இப்பாட்டினிடையே அவர் முசிறியை வரு ணிக்கையில் அது சேரரின் சுள்ளி என்ற பேராற்றின் கரையில் உள்ளது என்றும் குறிக்கிறார். மேலும் இதே ஆறு கட லொடு கலக்கும் இடத்திலிருந்து நன்கு அலங்கரிக்கப்பெற்ற

யவனர் கலங்கள் பொன் சுமந்து தவழ்ந்து சென்றன வென்றும் பின் ஆற்றுடன் கடல் நோக்கிச் செல்லுகை யில் அவ்விடத்து விலையாகப் பெற்ற மிளகைச் சுமந்து சென்றனவென்றும் தெரிவிக்கிறார். இதே முசிறியைப் பற்றி,

"கலந்தந்த பொற்பரிசங்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து
மலைத்தாரமுங் கடற்றாரமுந்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்குகடல் முழவின் முசிறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரைய ரல்லோர் வரையலள் இவளென."

செய். 343.

என வரூஉம் புறநானூற்றுச் செய்யுளில் பரணர் வருணிக்கும் வருணனையுடன் இது முற்றிலும் ஒத்து விளங்குகிறது. இது, முசிறி என்பது இப்போதைய பெரியாறு கடலொடு கலக்கு மிடத்தில் இருந்ததென்பதைக் குறிப்பாகக் காட்டும். கப்பல்களின் போக்குவரவு பற்றி இங்கே கூறப்படுவதும் ப்ளினியால் கூறப்பட்ட முறையுடன் முற்றிலும் ஒத்திருக்கிறது. கப்பல்கள் தம் இறக்குமதிச் சரக்குகளை இறக்கும் படி ஆற்றின்மேலே சென்று, பின் மற்றச் சரக்குகளை ஏற்றிச் செல்லவேண்டி யிருந்தது. ஆனால், இதுவரையில் நாம் கூறியவற்றால் அது தலைநகர் வஞ்சியின் ஒரு பகுதியாக இருந்திருக்க வேண்டுமாயினும், இப்பாட்டைப்பற்றிய மட்டில் இவ்விடத்தையே சேரர் தலைநகர் என்று கூறச் சான்றெதுவுமில்லை. ஆயினும் நக்கீரருக்கு மூத்த அவர் சம காலத்தவரும் பதிற்றுப்பத்தில் செங்குட்டுவனைப் பாடிய வருமான பரணர்,

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து

வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி அன்னவென் நலந்தந்து சென்மே."

செய். 396.

என வரும் அகப்பாட்டில்,

ஆரியரைத் தாக்கித் துன்பத்துக்கு ஆளாக்கிய இமய மலை யுச்சியில் விற்பொறி நாட்டிக் கோபங்கொண்டெழுந்த வடவரசரைச் சிறைக்கொண்ட அவனது தலை நகர் வஞ்சி என்று கூறியுள்ளார். இங்கே கூறியுள்ள வர்ணனை சேரன் இமயவரம்பன் அல்லது அவன் மகன் செங்குட்டுவனைக் குறிப்பதுபோலக் காணப்படுகிறது. தலைநகரின் பெயர் எதுவாயினும் சரி, பரணர் சேரர் தலைநகரை வஞ்சி என்ற பெயருடன் உணர்ந்திருந்தார் என்பது தெளிவாகக் காணப்படும். எனவே சேரர் தலைநகர் உள்நாட்டுக் கருவூர் என்று நாம் இன்றியமையாது கொள்ளத்தக்க விதத்தில் அது சரியாகக் கருவூர் என்ற பெயருடன் உணரப்பட்டதாக இருக்கவில்லை என்பதை ஊகிக்கலாம். நாம் எடுத்துக் காட்டியபடி சிலப்பதிகாரத்தில் வஞ்சி கருவூர் என்ற பெயருடன் நூலில் யாண்டும் குறிப்பிடவில்லை யாயினும் வஞ்சியுடன் ஆன்பொருநையே மிக நெருங்கிய தொடர்பு உடையதாகக் குறிக்கப்படுகிறது. செல்வக் கடுங்கோ வாழி ஆதனைக் குறிக்கும் புறநானூறு (387-ஆம் பாட்டுப்) போன்ற சங்க நூல்களில் சேரர் தலைநகரை வஞ்சி என்ற பெயருடனேயே கூறும் பிற சங்க நூல்களும் இருக்கின்றன. உரைக் குறிப்பின்படி இப் பாட்டுச் சிக்கற்பள்ளியில் இறந்தவனைக் கூறப்படும் சேரனைப் சிறப்பித்துக் கூறுவது. இவன் பதிற்றுப்பத்தின் 7-ஆம் பத்தில் கூறப்பட்ட சேரன் செல்வக் கடுங்கோவே என்று நாம் கொள்ளலாகும். வஞ்சி நகரும் அதன்மீது மோதும் பொருநை யாற்று வெள்ளமும் இங்கே குறிக்கப் படுகின்றன. இந்நகருக்கும் இவ்யாற்றுக்குமுள்ள தொடர்பு இங்கேயும் நக்கீரரது 93-ஆம் பாட்டிற் கண்டது போலவே தெளிவானதாக இருக்கிறது. வேற்றுமை, ஓரிடம் நகர்

வஞ்சி என்ப்படுவதும் மற்ருேரிடம் கருவூர் எனப்படு வதுமேயாகும். சேரநாடு மேற்குக் கடற்கரை யோரமாகக் கிடந்ததென்று கூறப்புட்டதற்கு மேலாக அதன் தலைநகர் வஞ்சியாயினும் கருவூராயினும் அது மேற்குக் கரையிலேயே இருந்திருக்க வேண்டும். இங்கே வஞ்சியைக் குறிக்கும் வேறு சில புறநானூற்றுப் பாக்களைக் குறிப்போம் :

“கடும்பி னடுகல நிறையாக நெடுங்கொடிப்
பூவா வஞ்சியுந் தருகுவ னென்ருே
வண்ண நீவிய வணங்கிறைப் பணைத்தோள்
ஒண் ணுதல் விறலியர் பூவிலை பெருகென
மாட மதுரையுந் தருகுவன்”

கோவூர் கிழார் செய். 32. வரி. 1–5

என்னும் புறப்பாட்டில், சோழன் நலங்கிள்ளி என்ற ஒரு வனைப்பற்றிக் கூறுகையில் அவன் தன்னை மகிழ்வித்த பாணர்க்குப் பூவா வஞ்சியைப் பரிசிலாகத் தந்தான் என்பது கூறப்படுகிறது. அவன் இதேபோலப் பாண்டியன் மதுரையைக்கூட வழங்கும் நிலையில் இருந்தான். எனவே, பூவா வஞ்சி என்பது சேரர் தலைநகரே என்பது விளங்கும். இங்கே உரையாசிரியர் ‘பூவா வஞ்சி’ என்பதை ஐயத்துக்கு இடமில்லாமல் சேரர் தலைநகரான கருவூர் என்று கொள்கிருர்.

இதே ஆசிரியரான கோவூர்கிழார் சோழன் நலங் கிள்ளியைச் சிறப்பித்துக் கூறுவதாவது: “அவன் படை யெடுக்க எண்ணிய நாடு தொலைவில் இருக்கிறது என்ற காரணத்தால் அவன் வீரர் முன்செல்லத் தயங்குவார் அல்லர். அவர்கள் அவன் ஆணையை மேற்கொண்டு முன்னேறுவர். அவர்கள் நேரே மேல் கடற்கரையை அணுகித் தம் குதிரைகளின் குளம்புகளை மேல்கடலிற் குளிக்கச் செய்வர். இங்ஙனம் தென் இந்தியாவை முற்றிலும் சுற்றிவந்து, முன் நிகழ்ந்தது போலவே வடக்கு நோக்கி அவர்கள் வருவர், என்ற அச்சத்தால் வடவர் உறக்கம் நீப்பர். இதனை,

550—11

"போரெனிற் புகலும் புனைகழல் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வேம் அல்லேம் என்னார் கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
வலமுறை வருதலும் உண்டென் றலமந்து
நெஞ்சுநடுங் கவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே."

செய். 31. வரி. 9-17.

என்னும் புறப்பாட்டால் நன்கு தெளிக. இக் கருத்துச் சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு குறித்துக் கூறப்படுவதை மிகவும் ஒத்ததாயிருக்கிறது. இது கூறும் தொடர்களும் முற்றிலும் சிலப்பதிகாரத்தை நினைவூட்டுவனவாக இருக்கின்றன.

"செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்
தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்லன் அரஞ்செ யவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலி னிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்
கடிமரந் தடியு மோசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப
வாங்கினி திருந்த வேந்தன்"

செய். 36. வரி. 3-11.

என்னும் புறப்பாட்டில் ஆலத்தூர் கிழார் என்ற மற்றொரு புலவர் குளமுற்றத்துத் துஞ்சிய சோழனைப்பற்றிக் கூறுகையில் சோழன் தன் படையுடன் பகைவன் தலைநகர் வரை சென்று போரிட்டதாகவும் சோழன் படைகள் தண் ஆன் பொருநைக் கரையிலுள்ள மரங்களை வெட்டுவதைப் பகைவன் தன் தலைநகர் உள்ளிருந்து கேட்டானாயினும் வெளி வாராதிருந்தான் என்றும் குறிப்பிடுகிறார்.

"..................................ஓங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்டு
இமயம் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடுகெழு நோன்றாள் பாடுங் காலே."

செய். 39. வரி. 13-18.

எனவரூஉம் புறப்பாட்டு வரிகளில் நப்பசலையார் என்ற மற்றொரு புலவர் அவன் வஞ்சியைத் தாக்கிச் சேரனை ஏறக்குறைய அழித்தான் என்றும் அச்சேரன் பொன் வேர்கள் தாங்கிய இமயத்தில் விற்பொறி நாட்டியவன் என்றும் வானவன் என்றும் குறிப்பிடுகிறார். இது வஞ்சி முற்றுகையிடப்பட்ட காலத்தைக் குறித்தது. இதனை 36-ஆம் பாட்டின் உரைக்குறிப்புக் கருவூர் முற்றுகை என்று குறிக்கிறது.

புறநானூற்று உரையாசிரியர் சம்பந்தப்பட்ட வரை அவருக்கு வஞ்சியும் கருவூரும் ஒரே நகரின் இரு பெயர்களே என்பதுபற்றி ஐயமிருந்ததாகக் காணவில்லை. 31-ஆம் பாட்டில் சோழர் சேனை சேரநாட்டைச் சுற்றியோ அல்லது தலைநகரைச் சுற்றியோ வடபுலஞ் செல்வதென்ற குறிப்பு, வஞ்சி அல்லது கருவூர் மேல்கரையிலேயே உள்ளது என்பதைக் காட்டுவதாகும்.

## சிறுபாணாற்றுப்படை வஞ்சியை மேல்கரை நகராகவே கொள்ளுகிறது.

பத்துப்பாட்டின் 3-ஆம் பாட்டாகிய 'சிறுபாணாற்றுப் படை வஞ்சியைப் பற்றிக் கூறும் குறிப்பு இச்செய்தியைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் உறுதிப்படுத்துவதாகும்.

"கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழல்
மஞ்சள் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்கணுற மேல்குபு பெயராக்

குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளுங்
குடபுலங் காவலர் மருமான் ஒன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே ”

வரி. 41–50

என்னும் சிறுபாணாற்றுப்படை வரிகள் மேல் புறக் காவலரின் கால்வழியினரைக் குறிக்கின்றன என்பதில் ஐயமில்லை. இங்கு அவர்களின் அழகிய நேரும் வஞ்சியும் குறிக்கப்படுகின்றன. அவன் வடக்கில் இமயத்தில் விற் பொறி நாட்டியவன் என்று குறிக்கப்படுகிறான். அவன் நாட்டின் பண்புகளைக் குறிக்கையில் எருமைகள் மஞ்சளின் பசிய இலைகளும் மிளகுக் கொடிகளும் நெருங்கிய நிலத்தி லும் பலாமர நிழலிலுள்ள தடங்களிலும் செங்கழுநீர் மலர் களை மேய்ந்ததன் பின் பரந்த மல்லிகைக் கொடியின் மென் சேக்கையிற் கிடந்து உறங்கும் என்று ஆசிரியர் கூறு கிறார். அவன் நாட்டின் தன்மைகள் இவையானால் இவை சேரநாட்டின் தன்மைகளே என்பதில் ஐயமில்லை. அரபிக் கடலுக்கும் மேற்கு மலைக்கும் இடையிலுள்ள இந்நாடு ஏறத் தாழ இதே தொடர்களால் சிலப்பதிகாரத்திலும் வரு ணிக்கப்படுகிறது. புலவரின் நோக்கம் இங்கே பாணனை அந்நாட்டை நோக்கி வழிகாட்டுவதாகும். அந்நாளைய சிறப்புவாய்ந்த வள்ளல்களான மூவரசரையும் எழு குறு நில மன்னரான வள்ளல்களையும் விலக்குவதன் மூலம் அவர் இதைத் தெளிவுபடக் காட்டுகிறார். இப்பகுதி சேரர் வஞ்சி யைக் குறிப்பிட்டுப் பின் சோழர், பாண்டியர் தலைநகர்களை அதேபோலக் கூறுகிறது. பாண்டியன் பொதுத் தொடர் களால் தென்றிசைக் காவலன் என்றும் சோழன் கீழ்த் திசைக் காவலன் என்றும் குறுநில மன்னர் பிற பகுதி களுடனும் குறிக்கப்படுகின்றனர். மேற்கூறிய நாட்டு இயல்புகள், சிறப்பான விளைவுகள் ஆகியவற்றையேயன்றி, மேற்றிசை அரசர் என்ற குறிப்பு அவர்களைக் கருவூருக்கும்

கொங்கு நாட்டுக்கும் அரசர் எனக் கொள்ள உதவுவ தன்று.

### கொங்கு, சேரநாடு, வஞ்சி ஆகியவைபற்றிக் கோவூர்கிழார் இன்னும் நிர்ணயமாகக் குறிக்கிருர்.

கோவூர் கிழார் என்ற புகழ் சிறந்த புலவர்,

"மைந்த ராடிய மயங்குபெருந் தானைக்
கொங்கு புறம்பெற்ற கொற்ற வேந்தே
... ... ... ...
வேந்து புறங்கொடுத்த வீய்ந்துகு பறந்தலை
மாட மயங்கெரி மண்டிக் கோடிறு
புருமெறி மலையி னிருநிலஞ் சேரச்
சென்றோன் ................................
வஞ்சி முற்றம் வயக்கள னுக
அஞ்சா மறவர் ஆட்போர் பழித்துக்
கொண்டனை பெரும குடபுலத் ததரி"

செய். 373.

என்னும் புறப்பாடலில் குராப்பள்ளித் துஞ்சிய சோழன் கருவூரை எதிர்த்து அதனை அழிக்காமற் போயினும் அதற் குப் பெருங்கேடு செய்தான் என்று குறிப்பது இவ் ஐயத்தை முற்றிலும் போக்குவதாகும். துரதிருஷ்ட வச மாக இடையில் சில வரிகள் குறைபட்டுக் காண்கின்றன. மேற்கிலுள்ள சேரநாட்டைப் பற்றியும் கொங்குநாட்டைப் பற்றியும் பிரித்துரைக்கும் வகையில் இது நிர்ணயமானதாக இருக்கிறது. இப்பாடலின் 9-ஆம் அடியில் சோழன் சேனைகள் முதலில் கொங்குநாட்டுப் படைகளை முறியடித் தன என்பது கூறப்படுகிறது. இதுவரை குறைபட்ட இடம் எதுவும் இல்லை. அதன்பின் மூன்று இடைக் குறை களுடன் 15 அடிகள் நீளமுள்ள பகுதி வருகிறது. பகுதி யின் பொதுப்போக்கை இக்குறைகள் பாதிப்பவையாக இல்லை. மூன்றும் இடைக் குறையை அடுத்து அவன் வஞ்சியின் முன்முற்றத்தைப் போர்க்களமாக்கிப் பின் சேரனை முறியடித்து மேல் நாட்டையும் கைக்கொண்டான்

என்பது தெரிகிறது. மேற்றிசை யரசரான சேரர் தலை நகரம் ஆகிய வஞ்சி, கொங்குநாட்டின் வேறானது என்று தெளிவுபட எப்பகுதியாவது சந்தேகத்திற் கிடமின்றிக் கூறுவதானால் அஃது இப்பகுதியே யாகும். கரூர் சேரரைச் சார்ந்ததாக இருக்கலாம். ஆனால் சோழன் முன்னேறிக் கொங்குநாட்டை முதலில் வென்று அனேகமாய் போரிட்டுக்கொண்டே முன்னேறி. வஞ்சியின் முற்றம்வரை சென்று ஒருவேளை அங்கும் போர் செய்தான் என்பது கூறப்படுகிறது. இதிலிருந்து சேரர் தலைநகராகிய வஞ்சி மேல்கரையில் இருந்தது என்று நாம் காண்கிறோம். இதே புலவர்களால் அது சிலசமயம் 'கருவூர்' என்றழைக்கப் பட்டது. எனவே கருவூர் என்ற பெயரும் நன்கு உணரப் பட்ட ஒரு மறுபெயர் என்றே அது காட்டுகிறது. புறநானூற்றின் உரையாசிரியர் யாதொரு தயக்கத்துக்கும் இடமின்றியும், சிலப்பதிகாரத்தின் பழைய உரையாசிரியர் சில சமயமேனும், கருவூரை வஞ்சியுடன் ஒன்றுபடக் கூறியும் இருப்பவை இந்த இரு பெயர்களும் ஒரே நகரின் பெயர்கள் என்பதும் அது மேல்கரையில் சேரநாட்டில் இருந்தது என்பதுமே காட்டும். இவற்றினின்றும் முடிவாகச் சங்க நூல்களின் அகச் சான்றுகளால் கொங்கு நாட்டுக் கரூர் சேரர் தலைநகரான வஞ்சிக் கருவூர் அன்று என்பது மிக மிகத் தெளிவாக ஏற்படுகிறது. இதற்கு மேலும் சான்றாக ஆன்பொருநை வஞ்சியுடனும் கருவூருடனும் சேரக் கூறப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் சான்று கொண்டுமட்டுமே அதனைப் பேரியாறு என்று கூறலாகும்.

## மற்றச் சங்கப் பாடல்களும் இதே கருத்துடையவை

வஞ்சி, திருச்சிராப்பள்ளி ஜில்லாக் கரூரே யென்பதற்கு, ஆதரவாகப் புறநானூற்றுப் பாக்கள் சில எடுத்துக் காட்டப்படுகின்றன. அவற்றுள் முக்கியமான பாட்டு புறம் 13-ஆம் செய்யுளாகும். இதனில் சோழன் பெருநற்கிள்ளிக்கும் அந்துவன் சேரல் இரும்பொறைக்கும்

இடையேயுள்ள ஒரு செயல் குறிக்கப்படுகிறது. சேரன் தலைநகரில் இருக்கையில் சோழன் அவன் நகரை முற்றுகையிட்டான். நகர் இங்கே உரைக் குறிப்பில் 'கருவூர்' என்று குறிக்கப்படுகிறது. சோழன் கருவூரை முற்றுகை யிடுகையில் அந்துவன் சேரல் அவனை அவமதிக்கும் முறையில் அசட்டையாகத் தலைநகரிலேயே இருந்தான். உறையூரின் ஒரு பகுதியாகிய ஏணிச்சேரியில் வசித்த முடமோசியார் என்ற புலவர் அப்போது உடனிருந்தார். புலவர் அரண்மனை மேல்தளத்தில் சேரனுடன் இருக்கையில் கட்டு மீறிய பெரிய யானையொன்று சோழ அரசனை முதுகில் தாங்கிக் கோட்டையை நோக்கி ஓடிவந்தது. இந்நிலையில் வரும் சோழனும் அவன் யானையும் எதிர்ப்புக் காளாகிச் சிறைப் படுத்தப்பட்டுப் போர் முறை வழக்கப்படி நடத்தப்பட்டு விடுவரோ என்று கவலைகொண்ட புலவர், மிக்க நயமாகச் சேரனிடம் யானைமீதுள்ள சோழன் கோட்டை நோக்கி வருவது அதனை எதிர்ப்பதற்கன்று என்றும், மதங் கொண்ட பட்டத்து யானையினாலேயே கொண்டு செல்லப் படுகிறான் என்றும் கூறுகிறார். புலவர் எண்ணம் சோழன், சேரனால் தீங்கடையக் கூடாதென்பதே ஆகும். சோழ அரசன் தீங்கு அடையக் கூடாதே என்ற கவலையே அம் மாதிரிச் சொற்போக்கின் காரணம் என்று உரையாசிரியர் விளக்குகிறார். இதிலிருந்து உறையூர் வாசியான ஒரு புலவர் சேர அரசருடன் அனேகமாகச் சோழன் பேரால் அல்லது தூதராகச் சென்றிருந்தனர் என்றும் அவர் முற்றுகையிற்பட்ட சேரனுக்கும் முற்றிய சோழனுக்கும் சமாதானம் செய்யும் நோக்கம் உடையவராக இருந்தார் என்றும் கொள்ளலாம். அவர் உறையூர் வாசி என்பதும் கருவூர் வஞ்சியைப்போல் தொலைதூரத்திலில்லாது, அண்மையிலேயே உள்ளது என்பதும் இங்குக் குறிப்பிட்ட இடம் கருவூரே என்று கொள்ளச் சாதகமாக எடுக்கப்பட்டதுடன் இதுபோல் பிறவிடங்களில் கரூர் என்று கூறப்படும் இடங்களும் திருச்சிராப்பள்ளிக் கரூரைக் குறிக்கும்

என்றும் கொள்ளப்பட்டுப் போயின. அதன் பயனுக அக்கருரே சேரர் தலைநகராகவும் கொள்ளப்பட்டது. இவ்வகையில் வஞ்சிக்கும் கருருக்கும் உள்ள அண்மை இவ்விடத்தில் கவனிக்கவேண்டும் செய்தியே அல்லவென்றும் கீழ்த்திசை யரசரான இச் சோழரும் பாண்டியரும் அரபிக் கடற்கரைவரை மேற்கே சென்று படை எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ இருந்தன என்றும் காட்டலாம். குறிப்பாக 31-ஆம் பாட்டில் வடநாட்டரசர் கீழ்த்திசைச் சோழன் மேற்கே கடந்து சென்று பின் சேர நாட்டிலிருந்து வலப்புறம் திரும்பி வடக்கு நோக்கிப் படையெடுப்பதென்பது எதிர்பாராத வழக்கன்று என்று குறிப்பிடுகிறது. அதனல் மூலத்திலன்றி உரைக்குறிப்பிலேயே குறிப்பிடப்பட்ட சோழன் பெரு நற்கிள்ளியால் முற்றுகையிடப்பட்ட அந்துவன் சேரலின் தலைநகரான கருவூர் சேரர் தலைநகரான வஞ்சிக்கருரே அன்றி வேறெதுவுமன்று என்பது விளங்கும். கருவூர் என்ற மறு பெயருடைய சேரர் தலைநகராகிய வஞ்சி மேற்குக்கரை வஞ்சியே அன்றித் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள வஞ்சிக் கருர் அன்று.

## சேரர் கொங்கு வெற்றி—படிப்படியாக நிகழ்ந்த நிகழ்ச்சி

இனி இச்செய்தி பற்றிய சங்க இலக்கியச் சான்றுகளைக் கவனிப்போம்: சிறுபாணுற்றுப்படை, சங்க இலக்கியங்கள் அனைத்திலும் மிகப் பிற்பட்டது என்று எண்ண இடமுண்டு. சங்க காலத்திற் சிறப்புப்பெற்ற பலரும் அதில் குறிக்கப்படுகின்றனர். அந்நூலின் தலைவரான புரவலரும் வேறிடங்களில் அப்பெயருடன் குறிக்கப்படுபவரேயாவர். நாம் இதுகாறும் சேரர் வரலாற்றில் சில படிப்படியான வளர்ச்சி முறையைக் கண்டிருக்கிறேம். அவற்றைக் கீழ் வருமாறு சுருக்கிக் கூறலாகும்: முதற்கண் சேரர் - குடவர் கோ, குடவர் கோமான் அல்லது பொதுப்படக் குடபுல வேந்தர் என்ற தமிழ்த் தொடர்களால் மேற்குப் பகுதி அரசராகவே

குறிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஆட்சிப் பகுதி அரபிக் கடற்கரை யோரமாக மங்களூரிலிருந்து தொடங்கித் தெற்கே திருவாங்கூரின் பெரும்பகுதியும் உள்ளிட்டுக் கிடந்தது. அதன் தெற்கிலுள்ள எல்லை குறித்து இதற்குமேல் நமக்குத் திட்டமான விவரம் கிடைக்கவில்லை. தொடக்கத்திலேயே இப்பகுதி முழுமையும் சேரநாட்டில் முற்றிலும் அடங்கி யிருந்ததென்று நாம் நிர்ணயமாகக் கூறமுடியா விட்டாலும் சேரர் பரம்பரையில் வந்த குறுநிலத் தலைவர்களே இவற்றை முற்றிலும் ஆண்டிருந்தார்கள் என்று கொள்ளலாம். இவர்களில் ஒரு சாரார் மேற்கண்டபடி வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்கள். அவர்கள் படிப்படியாக வடக்கு நோக்கித் தம் எல்லையை விரிவுபடுத்தி அப்பக்கம் சேரர் கீழிருந்த பகுதி முழுமையையும் ஒரே ஆட்சிக்குள் கொண்டுவந்து ஒற்றுமைப்படுத்தினர். இவ்வுண்மை, 'பெண்கொல்லி' அடையால் அடிக்கடி வரலாற்றில் குறிக்கப்படும் நன்னன் என்ற தலைவனுக்கும் சேரர்களுக்கும் நடைபெற்ற போர்களால் விளக்கமுறுகிறது. நன்னன் போரில் தோற்று மாண்டதன்பின் வடக்கு நோக்கி விரிவடைந்த சேரர் நாட்டுடன் நன்னன் ஆண்டபகுதியும் சேர்க்கப்பட்டது. இங்ஙனம் உரம்பெற்ற சேரர் ஆட்சிப்பகுதி பின் மேற்கு மலைத்தொடரைக் கடந்து முன்னேறத் தொடங்கி அம்மலைத்தொடரை அடுத்த கிழக்குப்பகுதியைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டது. இதன் பின்னர்த்தான் கொங்கினுடன் சேரர் தொடர்பு தொடக்கமுறுகிறது. இக்கொங்கு வென்றடக்கப்பட்டுச் சேரர் கீழ் வரும்வகையில் இரண்டுமூன்று படிகள் ஏற்பட்டு அதன் முடிவிலேயே முற்றிலும் அது பிடித்தடக்கப்பட்டது. தகடூரை ஆண்ட அதிகமான் நாட்டைச் சேரர் வென்று தம் நாட்டுடன் சேர்த்ததுடன் இவ்விறுதிக்கூறு முடிவுபெறுகிறது. இங்ஙனம் பிடிக்கப்பட்ட நாட்டுப் பகுதியே இதனையடுத்துள்ள பிற்காலத்தில் 'வடகொங்கு' என்று அழைக்கப்பட்ட இடமாகும். இம் முன்னேற்றம் நிகழ்ந்த அதே

காலத்தில்தான், இப்பகுதிக்குக் கிழக்கிலுள்ள சிற்றரசர்கள் சச்சரவுகளில் சேரர் வெற்றிகரமாகத் தலையிட்டனர். இவ்வகையில் அவர்கள் நேரில் தாமே அதிகப் போர் செய்யாமலேயே 'கொல்லிக் கூற்றம்' எனப்படும் பகுதியைத் தம் நாட்டகத்தே சேர்த்துக் கொண்டனர். இங்ஙனம் பிற்காலச் சரித்திரத்தில் வடகொங்கு எனப் பெயர் பெற்ற காவிரிக்கு வடக்கில் உள்ள கொங்கு நாடு முழுவதையும் அவர்கள் தங்கள் ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டனர். இக்கூறு முற்றுப்பெறு முன்னதாகவே சேரர், சோழர் வியவகாரங்களிலும் தலையிட்டு அவர்கள் தலைநகராகிய உறையூரின் வாயில்வரை சென்று போர் செய்து அந்நாட்டில் சோழர் செல்வத்துக்கு அதுவரை பேரழிவு செய்துவந்த ஓர் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தனர். இதுவும் மோகூர்த் தலைவனை பழையன் மாறன் தோல்வியும் சேர்ந்து மேற்கடற்கரையிலிருந்து வளர்ந்த சேரநாட்டின் வளர்ச்சியின் உறுபேரெல்லையை அடைந்தது. இதன் மூலம் தமிழ் நாடு முழுமையிலும் சேரர் அரசியல் தலைமை நிலையை அடைந்தனர். இக்கால முழுமையிலும் நமக்குக் காஞ்சிநகர்ப் பல்லவரைப் பற்றிய கேள்வி எதுவுமே ஏற்படவில்லை. இக்காலத்தில் ஏற்பட்ட நிலைமைகளைக் கவனித்துப் பார்த்தால் தென் இந்தியாவில் பல்லவர் ஆட்சிக்கு முற்பட்ட காலமே இது எனக் காணலாம்.

### கொங்கு இன்னும் தனிப்பகுதியே ! கரூர் அதன் தலைநகரம்

சேரநாடு கிழக்கு நோக்கிக் 'கொங்கு நாடு' வரை விரிவடைந்து வலிவடைந்ததன் பயனாகச் சேரர் சோழருடனும் பாண்டியருடன் இன்னும் நெருங்கிவரலாயினர். சேரர் கொங்கு நாட்டு அதிகமான் தலைவர்களுடன் நடத்திய போர்களுள் அடிக்கடி மற்ற இரண்டரசரும் அத்தலைவர்களுக்கு உதவி செய்து முறியடிக்கப்பட்டதாகக் குறிப்

பிடப்படுகிறது. எனவே, சேரரது கிழக்கு நோக்கிய முன்னேற்றத்தைப்பற்றிச் சோழ பாண்டியர் பராமுகமாக இருந்துவிடவில்லை என்பது விளங்கும். அவர்களுடன் அடிக்கடி சண்டையிட்டும் பலகால் இருவரையும் ஒருங்கே முறியடித்துமே சேரர் தங்கள் ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியவர்களாக இருந்தனர். சங்க நூல்கள் சிலவற்றிலேயே இத்தகைய நிலைமைபற்றிய விவரங்கள் தரப்படுகின்றன. கொல்லிமலை இப்பொழுது மிகுதியாகக் குறிக்கப்படுகிறது. ஆகவே, கொல்லிமலை அருகில் அல்லது கொல்லிமலைப் பக்கமாகப் உள்ள எல்லையும் முக்கியத்துவம் அடைந்திருக்கவேண்டும். அனேகமாகக் காரணத்தினாலேயே திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள கொங்கு நாட்டுக் கரூர் சேரர் ஆதிக்கத்தில் உள்ள நாட்டுப் பகுதியின் எல்லையடுத்த நகரம் என்ற முறையிலும் சோழ பாண்டியர் எல்லையைநோக்கிய நகரம் என்ற முறையிலும் மிகவும் முன்னணி நிலைக்கு வந்திருக்கவேண்டும். அஃது இது முதல் சேரநாட்டின் இரண்டாந் தலைநகரமாகிவிட்டது. தலைநகருக்கடுத்த துணைத் தலைநகர் என்ற முறையில் அது கருதப்பட்டதிலும் வஞ்சி என்ற மறுபெயரால் சிறப்பிக்கப்பட்டதிலும் வியப்பெதுவுமில்லை.

ஆயினும் எந்தச் சங்கநூலிலும் இஃது ஐயத்துக்கு இடமின்றி வஞ்சி என்ற பெயரால் குறிக்கப்பட்டதென்று காணவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆன்பொருந்தம் என்ற ஆற்றின் பெயரும் ஒருவகையில் நகரின் இப்பெயருடன் பொருந்துவதேயாகும். 'கரூர்' என்பது வடமொழிவாணர் வழக்கில் 'வஞ்சுளாரண்யம்' அல்லது அவ்விடத்தின் சிறப்புடைய தாவரமாகிய 'மூங்கிலின் காடு' என்றே கூறப்படுகிறது. இங்குள்ள பெரிய சிவன்கோவிலும் 'ஆனிலை' அல்லது 'திரு ஆனிலை' என்று வழங்கும். கோவிலின் இப்பெயரில் இருந்துதான் ஆன்பொருந்தமென்று ஆற்றுக்குப் பெயர் வந்ததோ என்பதுபற்றி ஒன்றும் உறுதியாகக் கூறுவதற்கில்லை. கொங்கு நாட்டில்

நமக்கு கிடைத்துள்ள பல கல்வெட்டுக்களிலும் அதனுடன் கூட வஞ்சி என்ற பெயர் கூறப்படவில்லை. ஆயினும் வஞ்சுளாரண்யம் என்ற பெயரை ஒட்டி ‘வஞ்சி’ என்ற பெயரும் ஏற்பட்டிருத்தல்கூடும். சங்கநூற்பாட்டுகள் பலவற்றின் உரைக்குறிப்புகள் கரூர் என்ற பெயரைக் குறிப்பிடுகின்றன. பல இடங்களில் சிறப்பிக்கப் பெற்ற புரவலன் பெயருடன் இப்பெயர் காணப்படுகிறது. ஆயினும் வேறு பல இடங்களில் அஃது ஆசிரியர் பெயரின் முன்னரே கூறப்படுகிறது. இதிலிருந்து அவ்வாசிரியர் கருரைச் சார்ந்தவர் என்று தோன்றுகிறது. ஆசிரியரைப்பற்றிய வரை இவர்கள் திருச்சிராப்பள்ளி ஜில்லாக் கரூரிலிருந்தே வந்தவர்களாக இருக்கக்கூடும். பிற இடங்களில் இப்பெயர் அதனினின்றும் வேறுபட்டதாகவே கருதப்படல்வேண்டும். இஃது எப்படியாயினும் சரி, இந்நூற் பகுதிகளில் கருவூர் என்ற பெயர் வரும் இடங்களில் எல்லாம் இச்செய்தி மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அப்பெயர் வருமிடத்துள்ள சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் திருப்திகரமாகப் பரிசீலனை செய்யாமல் இப்பெயரை வஞ்சி என்று கொள்ளாது திருச்சிராப்பள்ளி ஜில்லாக் கரூரைக் குறிப்பதாகக் கொள்ளுதல் தகாது.

பல்லவர்கள் தொண்டை மண்டலத்துக்குள் வந்து, தென் இந்திய அரசர்களுள் ஒரு பகுதியினராக நிலை பெற்றதற்குச் சற்றுமுன்னுகத் தமிழ் நாட்டின் வட எல்லைக்கு அப்பால் இருந்து தமிழ்நாட்டிற்குள் ஒரு மக்கட் கூட்டம் குடியேறிவந்தது. இஃது அக்கால நிலைமையை முற்றிலும் தலைகீழாக்கியது. இதுவே பிற்காலக் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டில் நிகழ்ந்ததாகக் கூறும் களப்பிரர் படையெடுப்பு எனத் தோற்றுகிறது. சங்க இலக்கியங்கள் மூலம் தமிழ் நாட்டில் இருந்ததாகத் தெரிய வரும் நிலைமைகள் மாறியதற்குக் காரணமான நிகழ்ச்சியும் இதுவேயாக இருக்கக்கூடும். இம்மாற்றத்தில் மிகவும் துயருக்கு உட்பட்டது சோழநாடே ஆகும். பாண்டிய நாடு

சில காலம் புகழ்மங்கி ஒன்றிரண்டு தலைமுறைகளுக்குப் பின் ஏறத்தாழ முன்னைய நிலையை மீண்டும் அடைகின்றது. ஆனால் இதற்குள் பல்லவர் அரசு காஞ்சியில் நிலைபெற்று விட்டது. இதன் பயனாகத் தமிழ் இந்தியாவில் முன்னைய அரசுகளுடன் பல்லவ அரசும் இடம் பெறுகின்றது. அடுத்த சில தலைமுறைகளில் பல்லவர்க்கும் பாண்டியருக்கும் போட்டி ஏற்படுகிறது. இதுவரையும் எப்போதுமே கொங்கு ஒரு தனி நில இயல் பகுதியாக இருந்ததுடன் மட்டுமன்று; அவர்களிடையே நடந்த போராட்டங்களிலும் தனி அரசியல் பகுதியாகவே காணப்படுகிறது. தென் இந்திய வரலாற்றில் இக்காலத்திற்குப் பிறகுகூட நாட்டின் ஆட்சிப் பகுதிகளிலிருந்து அது தனியாக வேறுபட்ட ஒரு பகுதியாகவே நிலவிற்று. அதிகமான் முன்போலவே இப் போதும் அடிக்கடி மேல்நிலையாட்சியினரை மீறி எழும் சிற்றரசாகவே இருந்து வந்தான். அவன் அநேகமாக முன்னிலும் வலிமையுற்றவனாக இருந்ததாகத் தோற்றுகிறது. ஏனெனில் தெற்கே வன்மை மிக்க பாண்டிய அரசு அவன் செயல்களில் வந்து தலையிடவேண்டி வந்தது. இவ்வதிகமான் தலைவனை வீழ்த்தி அதன்பின் பாண்டியன் வட கொங்கு என்று பெயர் பெற்ற நாட்டில் முன்னேறிப் பேரூரில் ஒரு பெரிய திருமால்கோவில் எடுப்பித்தான். பின் பாண்டியன் சேனை, மேலும் குறுக்காக மங்களூர் அல்லது மங்களாபுரம் என்ற கொடுங்கலூர்வரை சென்று அங்கிருந்த விழிஞத்தில் கரையிறங்கித் திருவாங்கூரைக் கடந்து மீண்டும் பாண்டிய நாட்டை யடைந்தது. கொங்கு இக் காலத்திலும் ஒரு தனி அரசியல் பகுதியாக இருந்தது என்பதற்கும் அதைப்போலவே அதனைக் கடந்து மேற்கில் சேரநாடும் ஒரு தனி நாடாகவே இருந்தது என்பதற்கும் இஃது ஒரு தெளிவான சான்று ஆகும்.

## வைணவ ஆழ்வாராகிய குலசேகரர் ஒரு சேர அரசர்

சேர நாட்டரசராகிய குலசேகர ஆழ்வார் ஏறத்தாழ இக்காலத்தவர் என்றே நாம் கொள்ளவேண்டும். அவர்

தமிழ்நாடு முற்றிலும் மேலாதிக்கம் செலுத்தியவராவர். அனேகமாகக் குலசேகர ஆழ்வார் காலம் மேற்குறிப்பிட்ட கல்வெட்டுகளிற் கண்டுள்ள பாண்டிய வம்சம் தோற்று வதற்கு முந்தியதாக இருக்கவேண்டும். இவ்வாழ்வார் திருமாலிடம் முழுமையும் ஈடுபட்டவர். எனவே சேர அரசு உச்ச நிலையிலிருந்த இந்தக் காலத்திலும் சேரநாட்டை ஆள்வதனல் அவர் மனம் நிறைவு அடையவில்லை. சீரங்கத்தி லுள்ள அரங்கநாதர் வழிபாட்டில் மூழ்ந்து உலகியல் வாழ்வு முற்றிலும் துறந்தபின்தான் அவர் மனநிறைவு பெற்ருர். அவர் பொதுவாகச் சேரர் கோமான் அல்லது வில்லவர் கோமான் என்றும் கொல்லி நகர் இறைவன் என்றும் அழைக்கப்படுகிருர். வில்லவர் என்பது சேரரைக் குறிக்கும் மறுபெயரேயாகும். வைணவரது நாலாயிரப் பிரபந்தத்தில் உட்பட்டிருக்கும் பெருமாள் திருமொழியில் இவ்வாழ்வாருடைய பாடல்களாகப் பத்துப் பாடல் தொகுதி கள் இருக்கின்றன. பிரபந்தத்தின் மற்றெல்லாப் பகுதி களையும் போலவே இவையும் பத்து அல்லது பதிெருே செய்யுட்களடங்கிய பதிகங்களாக பிரிக்கப்பட்டிருக்கின் றன. இப்பாடல்களில் அவர் தம்மைச் சேரர் தலைநகரத் தின் அரசன் என்பது மட்டுமன்றிக் கொல்லிக் காவலன் என்றும் 'கூடல் இறைவன்' என்றும் 'கோழி வேந்தன்.' என்றும் குறிப்பிடுகின்ருர். கடைசியிற் கூறிய இரண் டிலும் கோழி என்பது உறையூரின் பெயரும் கூடல் என்பது மதுரையின் பெயரும் ஆகும். ஆனல், இங்கே கொல்லி என்று கூறப்படுவது யாது? அது கொல்லி மலையைக் குறிக்கும் எனக் கொள்வது இயல்பு என்னலாம். இங்கே குறிப்பிடப்படுவது அதுதான் என்று கூற முடி யுமா? அது மூன்ரும் நாடாகிய சேர நாட்டைக் குறிப்பது போல் தோன்றவில்லையா? இதுவகையில் பதில் கூற முயலுமுன் அடுத்த தொகுதியின் இறுதிப் பகுதியைக் கவனிப்போம். இங்கே அவர் தம்மைக் 'கொங்கர் கோமான்' அல்லது கொங்கு நாட்டரசர் எனக் கூறுகிருர்.

8-ஆம் தொகுதியின் கடைசிச் செய்யுளில் அவர் தம்மைக் கொல்லி நகரின் அரசர் எனக் கூறிக்கொள்கிறார். இதிலிருந்து முன் குறிப்பிட்ட கொல்லி, கொல்லி மலையன்று; கொல்லி நகரேயாகும் என்பது ஏற்படுகிறதன்றோ? இதே பாட்டில் அவர் தம்மைக் கூடல் வேந்தன் என்றும் குறிக்கிறார். இதற்கு உரையெழுதும் பேரும் பெருமையுமுடைய வைணவ ஆசாரியரான பெரியவாச்சான் பிள்ளை கொல்லியென்பது சோழன் படைவீடு அல்லது தலைநகர் என்று கூறுகிறார். இதேயிடத்தில் அவர் கூடல் என்பது பாண்டியன் தலைநகர் என்றும் தெரிவிக்கிறார். எனவே அவர் கருத்துப்படி கொல்லி சோழர் தலைநகராக வேண்டும். அவர் ஏன் கொல்லியைச் சோழர் தலைநகராகக் கொண்டார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், இதற்கெதிராகக் குலசேகர ஆழ்வாரே சோழர் தலைநகரை உறையூரின் மறுபெயராக நன்குணரப்பட்ட கோழி என்று கூறுகிறார். 9-ஆம் தொகுதி இறுதிப் பாட்டில் ஆழ்வார் தம்மைக் 'கோழியர் கோன்' என்று குறிக்கிறார். 10-ஆம் தொகுதி இறுதிப்பாவிலும் அவர் 'கோழியர் கோன்' என்று குறிக்கப்படுகிறார். எனவே அவர், தாம் பேர்பெற்ற மூன்று தமிழ்நாடுகளின் தலைவர் என உரைத்து முறையே அவற்றின் தலைநகர்களைக் குறிப்பிடுகிறார் என்பது தெளிவு. ஆயினும், கொல்லி அல்லது கொல்லை நகர் என்பது இன்றும் ஐயத்துக்கு இடமாகவேயிருக்கிறது. உரையாசிரியர், படைவீடு என்ற தொடரைத் தலைநகர் என்ற பொருளில் கூறுவதனால் கொல்லி, சோழர் தலைநகர் என்பதே அவர் கருத்து என்பது தெரிகிறது. உறையூருக்குக் கொல்லி என்று மறுபெயர் இருந்ததாக இக்காலத்தில் நமக்குச் சான்று எதுவும் கிட்டவில்லை. ஆயினும் கொல்லி என்பது சேரநாட்டிலுள்ள வஞ்சிக் கரூர் அல்லது திருவஞ்சிக் குளத்தின் மறுபெயர்களுள் ஒன்று என்று தெரிகிறது. குலசேகர ஆழ்வார் பிறந்தது இங்கேதான். இது சரியானல் 'கொல்லி காவலன்' 'கொல்லிநகர்க்

காவலன்' என்ற தொடர்கள் சேரர் வேந்தன் என்று மட்டுமே குறிக்கும். சேரர் தலைநகருக்கும் கொல்லி என்ற பெயர் இருந்திருக்கலாம். ஒருபுறம் வைணவ ஆசாரியரான வேதாந்த தேசிகர், 'குலசேகர ஆழ்வார் வஞ்சிக் குளத்தில் பிறந்தார்' என்று தெளிவாகக் கூறுகிறாராயினும், அவருக்குப்பின் இரண்டு மூன்று தலைமுறைக்குப் பிறகு வந்த திருநீயபிரம்ம தந்திர ஸ்வாமியின் குருபரம்பரை, 'திருவஞ்சிக்குளம் என்ற மறுபெயருடைய கொல்லி நகர்' என்று கூறுகிறது. ஆறுயிரப்படி குரு பரம்பரையைச் சேர்ந்த பின் பழகிய பெருமாள் ஜீயர், 'குலசேகரர் கொல்லி நகராகிய படைவீடு அல்லது தலைநகரில் பிறந்தார்' என்று கூறுவதுடன் அமைகிறார். எனவே சேரர் தலைநகராகிய வஞ்சி அல்லது வஞ்சிக் குளம் என்பதற்குக் கொல்லி என்ற மறுபெயர் இருந்ததென்பதும் தெரிகிறது. அதற்கு 'மாகோதைப் பட்டினம்' என்றும் வேறு பெயரிருந்ததென்று அறிகிறோம். இஃது ஒருவேளை முஸிரிஸ் துறைமுகத்தைக் குறிப்பதாக இருந்திருக்கக்கூடும். ஆழ்வார் தம்மைச் சேர அரசர் என்று குறிக்கின்றதொன்றை அன்றி வேறு சேரர் வம்சாவளியில் அவர் இடம்பெறும்படியான எதுவும் சான்று இருப்பதாகத் தெரியவில்லை. சில குரு பரம்பரைக் குறிப்புகளில் அவர் தந்தை திருடவரதர் என்று கூறப்பட்டிருக்கிறார். இதுவும் இவ்வகையில் சற்றும் உதவுவதன்று. தமிழிலக்கியத்தில் குறிப்பிடப்படும் எந்தச் சேரருடனும் அவரைத் தொடர்பு படுத்த இது போதவில்லை. ஆயினும், சேரநாடு ஒரு தனி நாடாகவே தொடர்ந்திருந்து வந்ததென்பதையும் சேர அரசர் பலர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சிபுரிந்து வந்தனர் என்பதையும் இவற்றை மறுதலிக்கும் சான்றுமில்லாததனால் நாம் அனேகமாக ஏற்றுக் கொள்ளலாம். எப்படியும் தமிழ்நாடு முற்றும் தாம் பேரரசு உடையவரெனக் கூறிக்கொள்ளும் இக்குலசேகர ஆழ்வாரைக் குறித்து நமக்குத் தெரியவரும் செய்தி எதிலிருந்தும் அவர் கொங்குக் கருவூரைத் தலைநகராகக்

கொண்டிருந்ததாகக் காணவில்லை எனினும் ஓரிடத்தில் (மூன்றும் திருமொழி 9-ஆம் பாட்டு) அவர் தம்மைக் 'கொங்கர் கோமான்' எனக் குறிக்கிறார். ஆகவே இச் செய்தியிலும் அவர் முன்னைய சேரரிடமிருந்து மாறுபட்ட வர் அல்லர் என்பது தெளிவு. கொங்கு அச்சமயம் சேர ஆட்சியிலிருப்பினும் அது தனித்தே நின்றது. குலசேகர ஆழ்வார் பல்லவர்களை எங்கும் குறிப்பிடவில்லை: காஞ்சி யில் பல்லவர் ஆட்சி நிலை பெறுவதற்கு முந்திய காலத்தவ ராகவே இவரைக் கொள்ளவேண்டும்.

## சேரமான் பெருமாள் நாயனரும் சேக்கிழாரும்

சேரநாட்டுடன் நேரடியான தொடர்பு உடைய சேர அரசர் ஒருவர் தமிழிலக்கியத்தில் சிறப்புப் பெற்றிருக்கிறார். பெரிய புராணத்தில் இடம் பெற்ற அவர் வாழ்க்கை வர லாற்றிலிருந்தும் அவருடன் சமகாலத்தவரும் அவர் நண்பரும் ஆசிரியருமான சுந்தரமூர்த்தி நாயனர் அவரைப் பற்றிக் குறிப்பிடுவனவற்றிலிருந்தும் சேரநாடு, வஞ்சி ஆகி யவை பற்றி நமக்குச் சில விளக்கங்கள் கிடைக்கின்றன. பெரிய புராண வரலாற்றை ஏற்றுக்கொள்வதானல் அவர் மேற்றிசை நாட்டிலேயே பிறந்தவர் ஆதல்வேண்டும். அவர் அரசுரிமையையுடைய நேர்கால் வழியில் வந்தவ ரல்லர் என்பது தோற்றுகிறதாயினும் அவர் சேர அரசர் குடும்பத்தில் பிறந்தவராகவே யிருக்கக்கூடும். அவர் மக்கள் தேர்விலேயே அரசுரிமை பெற்றவர். ஆட்சி நடத்தும்பொழுது அவர் நாயன்மாரது சைவ இயக்கத்தில் பெரிதும் கவர்ச்சியுடையவராய் நற்காலமாக அக்காலத்தவ ரான சுந்தமூர்த்தி நாயனரைச் சைவ முதற்பெருந் தல மாகிய சிதம்பரத்தில் சந்தித்தார். அவர் வரலாற்றில் விரிவாகப் புகுவது நம் ஆராய்ச்சிக்கு உரியதன்று. மேல் நோக்கமாக அவரைக் குறித்த பெரிய புராணச் செய்தி களை நோக்கினல் அவர் தம் அரசுரிமைத் தலைமையிடத்தை மேற்குக் கரையிலுள்ள வஞ்சியிலேயே கொண்டிருந்தார்

என்பது தெரிகிறது. இவ்வஞ்சி முழு நகரமும் பெரிய புராண வரலாற்றில் அதன் ஆசிரியரால் பல்வேறு இடங்களில் பல வகையாக வஞ்சி, மாகோதை, அஞ்சைக்களம் என்று அழைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அப்பெயர்களிடையே அவர் குறிக்கும் வேறுபாடு களையும் நாம் கவனிக்காதிருக்க முடியாது. பெரிய புரா ணத்தில்° சேரமான் பெருமாள் புராணத் தொடக்கத்தில் பழம்புகழ்த் திருவஞ்சைக் களத்தைத் தன்னகத்தே யுடைய பழைய மலைநாட்டு வருணனை தரப்படுகிறது. அரசர் இருக் கும் நகரும் பழைய கொடுங்கலூர் நகரம் ஆகும். இவற் றைப்பற்றிய இத்தொடக்கக் குறிப்புகள் மீட்டும் மீட்டும் கூறப்படுகின்றன. பின்வரும் பாட்டொன்றில் நகர முழுமைக்கும் கோதை அரசர் அல்லது சேரரின் மாகோதை என்ற மறுபெயர் தரப்படுகிறது. அவர் பிறப்புப் பெயர் பெருமாக்கோதை யாகும். இது பெரும் சேரல் என்ற பழைய தமிழிலக்கியப் பெயரைப் போலவே பெரிய சேரன் எனப் பொருள்படும் தொடர் ஆகும். இளமையிலேயே அவர் திருவஞ்சைக்களத்து நிலைபெற்ற தெய்வத்தினிடம் ஈடுபாடுடையவர் என்று கூறப்படுகிறார். கிழக்கு நோக்கிச் செல்லும் அவர் முதற்பயணத்தில் அவர் அகன்ற° வஞ்சி நகரின் உட்புறத்திருந்து (வஞ்சியின் அகநகரிலிருந்து) புறப்பட்டது சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது. வெளிச் செல்லுமுன் அவர் திருவஞ்சைக்களம் சென்று தம் வழிபடு தெய்வத்தை வணங்கினர். பயணத்தின் முற்பகுதியில் அவர் கொங்கு நாட்டைக் கடந்து சென்றார். எனவே, அவர் வரலாற்றை எழுதிய சேக்கிழாருக்கு இவற்றைப் பற்றிய நுட்பமான வேறுபாடுகள் மிகத் தெளிவாகத் தெரிந்திருந்தன என்பது அறியலாம். வான வரம்பன் என்ற சேரரின் அபூர்வமான பட்டமும் இவ்விடத்தில் சேக்கிழாரால் கையாளப்படுகிறது. இத்தொடர் பண்டைத் தமிழிலக்கியத்தில் புலவர்களுக்கு நன்கு பழக்கமாயிருந்த தொன்று ஆகும். எனவே இதை, அவர் பயன்படுத்து

வதிலிருந்து அவர் அவ்விலக்கியத்தை நன்கறிந்தவர் என்றும் ஏற்படும். இந்த நுட்ப விவரங்களே பெரிய புராணத்தின் இறுதியில் சுந்தரமூர்த்தி நாயனர் வெள்ளானை மீதும் சேர அரசர் குதிரையிலுமாக சுவர்க்கத்திற்குச் செல்லும் பகுதியில் மீட்டும் கூறப்படுகின்றன. இங்கே மூன்று பெயர்கள் வருகின்றன. முதலாவது, அவர் நண்பரான நாயனரைக் காண அவர் தம் சேனையின் தலைமையில் வஞ்சியிலிருந்து புறப்பட்டார்; சுந்தரமூர்த்தி நகருள் நுழைந்தபோது பழம் பெருமை வாய்ந்த மதில்களை யுடைய மாகோதையினுள் நுழைந்தார்; சிவனை வணங்கச் செல்லுமிடத்து இருவருமாகத் திருவஞ்சைக்களத்தை அணுகியதாகக் கூறப்படுகிறது. (22, 27, 28-ம் பாடல்கள்) சேரமான் பெருமாளின் ஆட்சிப் பகுதி மேற்குக் கடற் கரையிலுள்ளது என்பது பற்றியும் அவர் தலைநகரம் வஞ்சி என்ற பொதுப்பெயருடையது என்பது பற்றியும் கொடுங்களூர் அதன் சிறந்த பகுதி என்பது பற்றியும் சேரமான் பெருமாள் நாயனரைப்போலவே ஆசிரியர் சேக்கிழாருக்கும் எத்தகைய ஐயமுமில்லை. அது மாகோதை என்றும் வழங்கப்பட்டது. திருவஞ்சைக் களம் என்ற சைவத் திருத்தலம் இம்மாகோதையின் ஒரு பகுதியே யாகும்.

## பெரிய புரானப்படி கோங்கு சேரநாட்டினின்றும் தனிப்பட்டது.

இனிச் சேரமான் பெருமாள் நாயனரின் நண்பரும் ஆசிரியருமான சுந்தரமூர்த்தி நாயனர் பாடிய சேரமான் பெருமாள் நாயனர் புராணத்தை எடுத்துக்கொண்டால் இங்கு எங்கும் ஒன்றுபோலவே சிவனுறையிடம் அஞ்சைக் களம் என்றே வழங்கப்படுகிறது. சேரமானின் தந்தையார் வலம்புரிச் சங்குகளைக் கடல் அலைகள் கொண்டலைக்கும் கரையிலுள்ள மாகோதையின் புறச் சோலையிலுள்ள அஞ்சைக்களத்தில் வாழ்ந்தார். இப்பதிகத்தின் 9 பாடல்களில் இதே செய்தி மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. ஆனல், 7-ஆம் பாட்டு மற்றவற்றினும் சற்று மிகுதியான

விவரம் தருகிறது. இது மாகோதையைச் சார்ந்த அஞ்சைக் களம் கடற்கரையிலிருந்ததென்றும் பலவகைச் செல்வங் களும் நிறைந்த கப்பல்களும் அதன்வாயிலாகக் கரைக்குள் முன்னேறிச் சென்றன என்றும் கூறுகிறது. இது முற் குறிப்பிட்ட காட்டூர்த் தாயன் கண்ணனுருடைய பாட்டா கிய அகம் 146-ஐயும் பரணர் பாட்டாகிய புறம் 343-ஐயும் நினைவூட்டுவதாகும். சுந்தரமூர்த்தியும் சேரமான் பெரு மாளும் இருவரும் 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தனர். கி. பி. 825-உடன் தொடங்கும் கேரள ஆண்டிற்குக் காரணமான வர் இச்சேரர். அவ் யாண்டு இன்றளவும் 'கொல்லம் ஆண்டு' என்று கூறப்படுகிறது. இக்கொல்லம் ஆண்டின் பெயர், குலசேகர ஆழ்வார்பற்றிக் கூறுகையில் நாம் குறிப் பிட்ட வஞ்சியின் மறுபெயரான கொல்லி நகரை ஒட்டிய தாக இருக்கலாம். பெரிய புராணத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்திகள் சேக்கிழார் காலத்திற்கு, அதாவது 11-12-ஆம் நூற்றாண்டுகளுக்குப் பொருத்தமானவை. ஆனல், சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரத்திலிருந்து நாம் ஆராய்ந்தறிபவை ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றாண்டைக் குறிக்கும். அவர், 'சேரமான் பெருமாள் நாயனர் தலை நகரம் மாகோதை என்றழைக்கப்பட்டது' என்று தெளி வாகக் கூறுகிருர். அதன் துறைமுகத்தில் எல்லாவகை அரும்பொருள்களைத் தாங்கிய கப்பல்களும் வந்து தங்கின. அந்நகரின் ஒரு பகுதியாகிய அஞ்சைக்களத்தில் சிவன் கோவில் இருந்தது. மூன்று நூற்றாண்டுக்குப் பின் வாழ்ந் தவரும் மிகக் கவனமாக ஆராய்ந்து பெரிய புராணத்தை இயற்றியவராகக் கூறப்படுபவரும் ஆன சேக்கிழார், அவரால் அக்காலத்தில் அறியத்தக்க விவரங்களை நமக்குத் தருகிருர். தம் ஆராய்ச்சியை ஒரு தெய்விகக் கடமையாகக் கொண்டு கவனமாகச் செய்தார் என்ற பெருமை அவருக் குக் கட்டாயம் எப்படியும் உரியது. அவர் கூறுகிறபடி அஞ்சைக்களம், மாகோதை, கொடுங்கோளூர், வஞ்சி ஆகிய யாவும் தலைநகரின் பெயர்களே. அரசர்குடி சேரர்

அல்லது பொறையர் எனப்படுகிறது. சில சமயம் கேரளர் என்ற பெயரும் காணப்படுகிறது. சேரமான் பெருமாளின் அடைகளுள் ஒன்றுக 'வானவரம்பன்' என்பதும் காணப் படுகிறது. ஆயினும், இது மற்றப் பெயர்களைப்போல் அவ்வளவு சாதாரணமாக அறியப்பட்டதாக இல்லை. ஆனல், சேக்கிழார் குறிப்பிடுவது வானவரம்பன் குடியையே. அவர் சேரர் குடியரசரையே குறிக்கிருர் என்பதில் ஐயமில்லை. கதையின் இடையிலும் சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்தியும் போய்த் திரும்பும் பயணங்கள் இரண்டின் வர்ணனையின்போதும் அவர் சேரநாட்டை அல்லது கேரளத்தை மேற்குமலைக்கும் கடலுக்கும் இடைப் பட்டதென்று தெளிவாகக் காட்டுகிருர். சமயப்பற்றுள்ள புண்ணிய யாத்திரிகர் மேற்குமலைக்கப்பால் கொங்கு நாட்டைக் கடந்து செல்கின்றனர் என்றவிடத்துக் கொங்கு நாட்டையும் அவர் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிருர். சுந்தரமூர்த்தி நாயனரும் இதே மாகோதையைப்பற்றித் தெளிவாகக் குறிக்கிருர். அவர் செய்தி பரணர் வர்ணனை யையும் காட்டூர்த் தாயன் கண்ணனர் வர்ணனையையும் பெரி தும் ஒத்திருக்கின்றது. மாகோதை, அரசன் தலைநகரை ஒத்த சிறப்பு உடையது என்பது மேலே எடுத்தாண்ட நக்கீரரது பண்டைய இலக்கியத்துக் காணும் பாடலால் விளங்கும். இதில் அவன் பாண்டியனல் முசிறி முற்றுகை யிடப்பட்டதையும் சிலைபோன்ற ஏதோ ஓர் அரும்பொருள் மீட்கப்பட்டுக் கொண்டுபோகப்பட்டதையும் குறிப்பிடுகிருர். பெரிய புராணம் காலத்தால் பிந்தியதாயினும் இச்செய்தியில் மிகவும் முக்கியத்துவம் உடையதே யாகும். எப்படியெனில் கொடுங்கோளூர், மாகோதை, திருவஞ்சிக்குளம் ஆகிய யாவும் நகர முழுமைக்குமோ அல்லது அதன் பாகங் களுக்கோ பெயர்களாகும் என்றும் இவற்றுள் எப்பெய ராலும் அது கேட்போரால் குழப்பத்திற்கு இடமின்றி உணரப்படுவதென்றும் அது தெளிவுபடக் காட்டுகிறது. ஆயினும் இப்பெயர்களிடையே கரூர் என்ற பெயர் இடம்

பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுமட்டு மல்லாமல் இப்பெயர்களை வழங்குமிடத்திலும் சேக்கிழார் இவற்றின் வேறுபாடுகளையும் தெளிவாகக் கூறுகிறார். மாகோதை என்பது துறைமுகமும் தலைநகரின் ஒரு முக்கியமான பெரிய சுற்றுப்பகுதியும் ஆகும்: தேவார ஆசிரியர் சுந்தரமூர்த்தியுடன் ஒன்றுபட அவர் வஞ்சிக் களம் என வழங்குவது சிவன் கோவிலிருக்குமிடம் ஆகும். கொடுங்கோளூரும் ஒரு தெளிவான பெயரே. ஆனால், அதுவும் நகரின் ஒரு பாகமே யாகும். வஞ்சி மதிலுடைய நகரமெனப்படுகிறது. இதன் பொருள் அதுவே முக்கிய நகர்ப்பகுதி என்பதாகும். இவ்வேறுபாடுகள் எவ்வகை யில் முக்கியமானவை என்பதைச் சற்று பின்னால் குறிப் பிடுவோம். ஆனால், இந்த இலக்கிய ஆதாரங்கள் தரும் விவரப்படி பொது விவரங்கள் சம்பந்தப்பட்டவரை நமக்குக் கிட்டும் சான்றுகள் ஒரேவகையாகச் சேர நாட்டின் மூலப்பகுதி மேற்குக் கடற்கரையிலுள்ளது என்றும், பொதுவாக மேற்குமலைக்கும் கடலுக்கும் இடையி லுள்ளது என்றும் கூறுகின்றன. இக்கரை நெடுகிலும் அதன் பரப்புச் சரித்திரப்போக்கில் கூடுதல் குறை வாக இருந்தது. சேரர் ஆட்சிப் பரப்பு முதலில் கரை யோரமாக இருந்தது. இதுபற்றி நமக்கு இப்போது அக்கறை யில்லை. அதன்பின் சேரநாடு கொங்குநாடு நோக்கி வளர்ச்சி ஏற்பட்டது. இதனிறுதியில் சங்க இலக்கிய காலத் தரசர் களின் ஆட்சியில் கொங்குநாடு முழுமையும் சேரர் ஆட்சியி லிருந்தது. சேரநாட்டின் இவ்விரிவு தென்னாட்டின் மூவரச ரிடையும் புதிதான ஒரு சச்சரவிற்குக் காரணமாயிற்று.

அடுத்தபடியாகப் பிற்காலத்தில் சேர அரசர், மாறு பட்டு எழுந்த சிற்றரசனாகிய தகடூர் அதிகமானுக்கு எதிராக அடிக்கடிச் சண்டையிட்டனர். அப்போது சோழரும் பாண் டியரும் அவ்வப்போது அவனுக்கு உதவியாகவும் இருந் தனர். அதன்பின் பல்லவர் அரசு நிலைபெற்றுத் தமிழ் நாடு முற்றிலும் பேரரசு நிலைநிறுத்தும் எண்ணங்கொண்

டதும் இதே அதிகமானுக்கு ஆற்றல் மிக்க பல்லவனுகிய நந்திவர்ம பல்லவ மல்லன் உதவியாக நின்று பாண்டியன் தேர்மாறனுக்கு எதிராகப் போரிட்டான். பாண்டியன் தேர்மாறன் அதிகமான் தலைநகரிலேயே அவனையும் அவன் உதவியாளரையும் முறியடித்துக் கொங்கு நாட்டைக் கடந்து மங்களாபுரம் அல்லது மங்களூர் என்றழைக்கப் பட்ட துறைமுகத்தை யடைந்தான். இது கொடுங்கோளூரின் பெயர் என்பதில் ஐயமில்லை. அங்கிருந்து அவன் கப்பலேறித் தனக்கே உரிய துறைமுகமாகிய விழிஞத்தி லிறங்கித் தன் தலைநகரை யடைகிருன். பாண்டியன் சேனையின் இச்செயல் கொங்கு ஒரு தனி நாடாயிருந்த தென்பதை நமக்குக் காட்டுவதுடன் சேரர் தலைமைப் பகுதி கடற்கரையிலேயே யிருந்ததென்பதையும் விளக்கு கிறது.

வரலாறு இவ்வகையில் இலக்கியத்துக்கு உறுதி அளிக்கிறது.

இனி இலக்கியத்தை விட்டு அகன்று வரலாற்றைப் பார்த்தால் சங்க காலத்தை யடுத்துப் பின்வந்த காலத்தில் தென் இந்தியாவின் அரசியல் நிலைமை ஏறத்தாழப் பின் வருமாறு இருந்த தென்னலாம்: பல்லவர் வருகைக்கு முன் ஏற்பட்ட மக்கட் புடைபெயர்ச்சி ஒன்று தென் இந்திய அரசியல் நிலையைக் கவிழ்த்துச் சோழ நாட்டை விழுங்கிப் பாண்டிய நாட்டையும் சிலகாலம் மறையச் செய்தது. சோழர் இதினின்றும் மீண்டனர் என்பதற்கான திட்ட மான விவரம் எதுவும் நமக்குக் கிட்டவில்லை. பாண்டியர் அதனின்றும் மீளும் காலத்திற்குள் பல்லவர் காஞ்சியில் நிலைபெற்று விட்டதைக் காண்கிறோம். பல்லவர் கல் வெட்டுகள் கூறுகிறபடி பல்லவர்களின் அருஞ்செயல் களுள் முதலாவதாகச் சோழநாட்டைப் பிடித்தது கூறப்படு கிறது. சோழ அரசு மறைந்துபோனதையும் இது விளக்கு கிறது. ஆயினும் இச்சோழ பாண்டியன் போரெழுச்சி களின் இடையே பாண்டியருடன் சேரன் குறிப்பிடப்

பெறுகிறான். இரண்டு மூன்று தலைமுறைகள் அளவும் நடைபெற்ற இப்பாண்டியர்-பல்லவர் போர்களில் தென் இந்தியாவின் நிலைமை இங்ஙனமே இருந்து வந்தது. கொங்கு நாட்டுப் பகுதியும் நாம் மேற்கூறிய வகையிலேயே இருந்துவந்தது. மற்றப் போர் புரியும் நாடுகளுக்கும் தனக்கும் இடையே கொங்கு நாடு இருந்ததன் பயனாகச் சேரநாடு இவற்றால் பாதிக்கப்படாமலே இருந்து வந்தது.

பாண்டியர் ஆற்றிய இடைவிடாப் போர்களின் பயனாகப் பல்லவர் ஆட்சி வன்மை இறங்கத் தொடங்கியது. சோழர் சற்று முன்னிலைக்கு வருகின்றனர். அப்போது முதற் சோழர் உரிமையை நிலைநிறுத்திச் சோழ அரசாட்சியை நிலைபெறுவித்தபின், பல்லவர் சொந்த நாடாகிய தொண்டை நாட்டை வென்றான். அவன் அடுத்த வெற்றி கொங்கு நாட்டினது என்று கூறப்படுகிறது. அதனை அவன் முற்றிலும் தன் அதிகாரத்துக்குக் கொண்டு வந்தான். இயல்பாக இவ்வளர்ச்சி சோழனைச் சேரநாட்டு எல்லைக்குக் கொண்டுவந்தது. சோழரது தொடக்க காலத்தில் சேரர் பெயர் வரினும் அது 'தோழர்' என்ற முறையிலேயே வருகிறது. சேரர், சோழர் குடியுடன் திருமண உறவு கொள்கின்றனர். அது மட்டுமன்று. இச்சேர அரசிளங் குமரிகளுடன் பெரும்பாலும் அவர்கள் உறவினர்களென்ற முறையில் மற்றும் பலர் சென்று சோழர் ஆட்சியில் உயர்நிலைகளில் அமர்கின்றனர். இவர்களில் சிலர் சோழர் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றனர். இவர்களின் பெயர்களுடன் வரும் தொடர் 'கோடுங்கோளூரான்' என்பது. அக்காலைச் சேரர் தலைநகரின் சாதாரணமாகத் தெரியவரப்பட்ட பெயர் 'கொடுங்கோளூராக' யிருக்கக் கூடும். 'கொடுங்கோளூரான்' என்பது 'கொடுங்கோளூரில் வசிப்பவன்' அல்லது 'அங்கிருந்து வந்தவன்' என்ற குறிப்புடையது.

இராஜராஜன் சேரநாட்டை வெல்ல முயன்ற போது அவன் இப்பகுதி நோக்கிப் படையெடுக்கவேண்டி

வந்தது. இரண்டு போரெழுச்சிகளின் பின் அவன் சேரநாட்டைத் தன் பேரரசினுக்குள் கொண்டுவந்தான். தெற்கிலுள்ள கடற்கரை ஓரப் பகுதியில் திருவனந்த புரத்திற்குச் சற்றுத் தெற்கிலுள்ள இடம் வரையும் உள்நாட்டுப் பகுதியில் இதனினும் வடக்கே தள்ளியுள்ள ஏதோ ஓர் இடம்வரையும் இன்று திருவாங்கூர் என்று அழைக்கப்பெறும் நாட்டின் ஒரு பகுதி பாண்டியர் நாட்டில் சேர்ந்துவிட்டது. ஓங்கிவரும் சோழ அரசுடன் பாண்டியர் நடத்திய போர்கள் எல்லாவற்றிலும் தென் திருவாங்கூரின் மேல்கரையிலுள்ள துறைமுகங்கள் எல் லாம் பல கடற்போராட்டங்களின் நிலைக்களன்களாக விளங்கின. இவை, பெரும்பாலும் களவியல் உரையில் எடுத்தாளப்படும் மேற்கோள்களில் பெரும்பகுதிக்கு மூல மானதும் அண்மையில் வெளியிடப்பட்டதுமான பாண்டிக் கோவையில் அரிகேசரி பாண்டியன் அருஞ்செயல்களாகக் குறிக்கப்பட்ட நிலைமையினையே நினைப்பூட்டுபவையாக இருக்கின்றன. முசிறியைச் சார்ந்த நீலகண்டன் இயற்றிய இவ்வுரையின் மேற்கோள்கள் பெரும்பாலும் இந்நூலி லிருந்தே யாகும். நாம் குறிப்பிட்ட காலத்தின் பிற்பகுதி யாகிய இதிலும்கூடச் சேரநாடு என்பது கடற்கரைப் பகுதியின் வடபாகத்தை மட்டுமே குறிக்கின்றது. இதற்குப் பின்வரும் நூற்றாண்டுகளிலேயே வேணாடு முந்துறக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இக்காலப்பகுதி நம் ஆராய்ச்சிக்கு வேண்டுவதில்லை. சேரர் தலைநகரம் தொடர்ந்து வஞ்சியாகவே இருந்திருக்கவேண்டும். ஆனால் அஃது இக்காலத்தில் கொடுங்கோளூர் என்றே பொது மக்களிடையே வழங்கிவந்தது. எனினும் பெரிய புராணம் வஞ்சி, மாகோதை முதலிய பெயர்களையும் குறிப்பதை நோக்க அவை வழக்காறு அற்றுவிட்டனவென்று முற்றி லும் கூறமுடியாது. எனவே சேரர் தலைநகராகிய வஞ்சி கிறிஸ்து ஆண்டின் தொடக்கமுதல் 12-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ச்சியான வாழ்வுடையதாயிருந்தது.

## மேற்கூறிய ஆராய்ச்சிகளால் ஏற்படும் முடிவுகள்

மேற்கூறியவை யனைத்திலும் தெரியவரும் வஞ்சியின் இட அமைப்பு, பழைய நிலை ஆகியவற்றைப்பற்றிய முடிவுகளைத் தொகுத்துக் கூறி முடிப்போம். வஞ்சி மற்றைத் தலைநகரங்களைப் போலவே கோட்டை—கொத்தளமுள்ளது. அவற்றின் அமைப்பு மற்ற இந்திய நாடுகளின் கோட்டை—கொத்தளமுள்ள நகர்களின் அமைப்பைப் பின்பற்றியதாக இருந்தது. இம்மதிலக நகரையும் அதன் சாதனங்களையும் கட்டடங்கள் முதலியவற்றையும் அல்லாமல் இத்தலை நகரைச் சார்ந்த பிற பகுதிகள் பற்றியும் விவரங்கள் தரப் படுகின்றன. சிற்சில இடங்களில் இத்தலைநகருடன் நெருங்கிய தொடர்புடையதாகப் பெரியாற்றின் முகத்துவாரத்தருகில் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினம் குறிக்கப்படுகிறது. இதுவே தமிழிலக்கியத்தில் முசிறி என்றும் பொது மக்கள் வழக்கில் முயிறி என்றும் மாகோதை என்றும் வழங்கியதாகும். அது பிற்கால இலக்கியங்களிலும் யூதர்கள் பட்டயங்களிலும் மகோதை என்றும் மகோதயப் பட்டினம் என்றும் குறிக்கப்படுகிறது. இம்முசிறி அல்லது முயிறிக்கோடு என்பது இக்காலத்தில் அழிக்கோடு என்று கூறப்படுமிடத்தில் அமைந்திருந்தது என்று கொள்ளுதல் பொருந்தாக் கூற்று ஆகாது. ஏனெனில் இஃது ஆழி முகம் என்ற தொடரிலிருந்து வந்ததெனக் கொள்ளப்படத் தக்கது. இதனையே பண்டைக் கிரேக்க நூல்வல்லார் பெரியாற்றின் போலி முகம் என்ற பொருள்பட 'ஸ்யூடோஸ்தமாஸ்' என்று மொழி பெயர்த்தனர். அஃது இப்போது கொடுங்கோளூர் இருக்குமிடத்திலிருந்து இரண்டு அல்லது இரண்டரை மைல் தூரத்திலிருக்கிறது.

அங்கிருந்து கொடுங்கோளூரை நோக்கிச் சென்றால் வழியில் தேவார ஆசிரியர் அஞ்சைக்களம் என்றும், பொது மக்கள் வழக்கு வஞ்சிக்குளம் என்றும் கூறிய சைவத் திருத் தலத்தை அடைகிறோம். அதில் இப்போது கோவில் மட்டுமே இருக்கிறது. கோவிலில் சிவன் கோவில்களில்



சதுக்சபூதம்

காணப்படும் உருவங்கள் மட்டுமன்றிச் சேர அரசனன சேரமான் பெருமாள் நாயனர், தமிழப் பார்ப்பன நாயனுராகிய சுந்தரமூர்த்தி நாயனர் ஆகியவரது உலோகத்தாலான உருவங்களும் இருக்கின்றன. கோவிலின் அமைப்பு முற்றிலும் திராவிடப் பண்புடையது. வழிபாட்டுடன் சம்பந்தப்பட்ட பிற இடங்களும் திராவிடப் பழக்க வழக்கங்களை நினைவூட்டுபவையாகவே யிருக்கின்றன. இப்போது கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் வடபுலப் படையெழுச்சியின்போது சேனையின் தலைமையில் புறப்படும் முன்னதாகச் சென்று இறைவன் பிரசாதம் பெற்ற கோவில் இதுவே என்று உறுதியாகக் கூறுவது கடினம் ஆகும். இவ்விடத்துக்குத் தரப்பட்டிருக்கும் மகாதேவப் பட்டினம் என்ற பெயரிலிருந்தே இவ்விடத்தில் ஒரு சிவன் கோயிலிருந்தது என்பது மறுக்க முடியாத செய்தியே யாயினும் இன்றிருக்கும் கோவிலே சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்ட கோவில் என்று நாம் உறுதிகொண்டுவிட முடியாது. இவ்விடத்திலோ அல்லது அருகாமையிலோ சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுவதாகக் காணப்படும் இதனிலும் பெரிய சிவன் கோயில் இருந்திருக்கக்கூடும்.

இனிக் கொடுங்கோளூர்ப் பகுதிக்கு வருவோம்: இது தொடக்கத்தில் கண்ணகியின் பிரிவை நினைவூட்ட எடுப்பிக்கப்பட்ட கோவிலன்றி வேறன்று. இஃது அக்கோவிலையும் அதன் சூழ்நிலைகளாய் கோவிலுடன் தொடர்புடையவர்கள் வாசஸ்தலங்களான சில வீடுகளையும் உடைய சிறு கிராமமாக இருந்திக்கக்கூடும். அதனின்று மிக அண்மையிலேயே இன்று க்ஷேத்திரபாலர் என்று அழைக்கப்படும் மிகப் பெரிய சிலையொன்றின் கோவில் அமைந்திருக்கிறது. செங்குட்டுவன் மட்டுமன்றி அவன் முன்னோர்களில் எவரோ ஒருவரும் சதுக்கம் அல்லது ஊர்ப்புற வெளியின் பூதமாகிய சதுக்கப் பூதத்தைச் சேரர் தலைநகருக்குக் கொண்டு வந்ததாகச் சிலப்பதிகாரம் குறிக்

கிறது. இப்போது அப்புற வெளியைக் குறித்து எல்லை கோல முடியவில்லை. பதிற்றுப்பத்தில் பின்னைய சோழர் ஒருவரால் சதுக்கப் பூதத்திற்குக் கோவிலெடுப்பிக்கப் பட்டதென்றும் விழா நிறுவப்பட்டதென்றும் குறிப்பிடப் படுகிறது. இக்கூறுகள் ஏறத்தாழ நகரெல்லைக்கு வெளியிலுள்ளவைகளேயாகி இருக்கவேண்டும். அஃது அனேகமாக நகரில் மதில் பாதுகாப்புடைய இடத்துக்கு வெளியிலேயே இருந்திருக்கலாம். தலைநகரம் அல்லது அரசன் உறையும் நகரம் சாதாரணமாக ஒரு கோட்டைப் பகுதியும் கோட்டைக்கு வெளியிலுள்ள ஒரு நகரப் பகுதி யையும் உட்கொண்டதாக இருக்கும். அம்மதிலுக்கு வெளியில் சாதாரணமாக மதிலுக்கு வெளியிலிருக்கும் வகுப்பினர் இருப்பர். பிறர் கோட்டைக்கு அகமே யிருப்பர். சாதாரணமாக சிவன் கோவில் அமைவது நகரின் வடகிழக்கிலோ அல்லது ஏகதேசமாக அத்திசையி லோதான் ஆகும். இஃது எங்குமே நகரெல்லைக்கு வெளியி லிருக்க வேண்டுமென்றில்லை யாயினும் சாதாரணமாக வெளியிலேயே இருப்பதுண்டு. உயிர்நீத்த தலைவியாகிய கண்ணகியின் கோவிலும் தெற்கு அல்லது தென்மேற்கி லேயே இருந்திருக்கவேண்டும். கொடுங்கோளூர்க் கோவில் ஏறத்தாழ இவ்விட அமைப்புக்குப் பொருத்தமானதே. பூதமும் அதன் கோவிலும் ஊர்வெளியில் இருந்திருக்க வேண்டும். இவ்வெளியும் கோட்டைக்கு வெளியிலேயே இருந்திருக்கும். சோழர் தலைநகராகிய புகாரிலும் இந்தச் சதுக்கப்பூதம் இருந்தது. அது புகார் நகரில் தனித்தனி யான இருவேறு பகுதிகளான பட்டினப்பாக்கம், மருவூர்ப் பாக்கம் ஆகியவற்றினிடையிலுள்ள ஒரு சதுக்கத்திலிருந் தது. இத்தகைய இடங்களுக்கப்பால்தான் நாம் வஞ்சியை எதிர்பார்க்க வேண்டும். அது பெரியாற்றின் சங்கமுகத்தி லிருந்து 2½ முதல் 3 மைல் வரை உடையதாயிருந்திருக்கும். பெரியாற்றின் சங்கமுகத்தருகில் முசிறித் துறைமுகம் இருந்தது. வஞ்சிக்குக் கரூர் என்ற மறுபெயர் இருந்த

தென்பது அதன் அமைப்பை நமக்கு நன்கு காட்டுவதாகும். நாம் ஆராய்ச்சிக் கெடுத்துக்கொண்ட காலத்தில் இப்போதுள்ள காயல் இருந்ததோ இல்லையோ என்பதை நாம் ( உறுதியாகக் கூறமுடியாது. ஆனல் காயலின் கிழக்குப் பாகத்திலுள்ள பகுதிகள் வஞ்சி நகரின் பகுதிகளாகக் குறிக்கப்படத்தக்கவை. குறிப்பாக இப்போது மலையாளிகள் திருக்கணமதிலகம் என்று கூறும் இடத்தைச் சிலப்பதிகாரத்துக் குணவாயிலாகக் கொண்டால் அஃது ஏறத்தாழக் கோட்டையின் கிழக்கு மதிலின் நடு இடத்தைக் குறிக்கும். அஃது அனேகமாக நடுவில் இருந்திருக்கலாமாயினும் சரி நேர்நடுவாக இருந்திருக்க வேண்டுமென்பதில்லை. 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தி லுள்ள ஒரு நாட்டுப் படத்தைச் சற்றுத் திரித்து இங்கே வெளியிடப்படும் படத்தில் இதிலிருந்து கிழக்கு நோக்கி ஒன்று அல்லது ஒன்றரை மைல் தொலைவில் செங்குன்றூர் என்ற ஊர் இருக்கிறது. குணவாயில் என்ற இக்கிழக்குவாயிலில் அமைதியான வாழ்க்கையை விரும்பிய பல வகுப்பு மக்களும் குடியிருக்க அமைக்கப்பட்ட பல கட்டிடங்களுள் ஒன்றாகிய ஒரு கோட்டத்தில் இளங்கோ அடிகள் வசித்தார். இதன் வெளியில் உள்ள இச்செங்குன்று குன்றக் குறவர் வந்து கண்ணகி தெய்வமானதைக் குறித்துக் கூறிய இடமாகிய செங்குன்றுடன் நன்கு பொருந்துவதாகும். இதற்கு அனுகுணமாகவே இக்காலம் கருவாப்படஞ்ஞா என்றழைக்கப்படும் சிற்றூரின் பின்புறம் உள்ள இவ்விடத்துச் செம்பாறையுள்ள ஒரு குன்றின்மேல் ஒரு கோவிலிருக்கிறது. இங்கேயுள்ள செங்குன்று பல செங்குன்றுகளுள் ஒன்றாக இருக்கலாம். ஆனல் இங்கே நாம் கவனிக்கவேண்டுவது கீழ்வாயிலினருகில் சாதாரணமாக உறைந்து வந்த இளங்கோவடிகளைக் குன்றக்குறவர் வந்து கண்ட குன்றையே யாகும். குணவாயிலைத் திருக்கணமதிலகமாகக் கொண்டால் அவ்விடங்குறியாகக் கொண்டு நாம் அறிந்த கோட்டையின் அளவு, பரிமாணம் முதலிய

வற்றின் உதவியால் அதனை ஓரளவு மதிப்பிட்டு ஏறக் குறையச் சரியாகக் குறித்து வரையறுக்கலாகும். இக் கோட்டை சாதாரணமாகப் பார்த்தால் இக்காலக் காயலுக் கும் இக்காலக் கரையோரப் பாதைக்கும் இடையிலுள்ள நில முழுவதிலும் பரந்திருந்ததாகக்கூடும். ஏனெனில் சேரன் செங்குட்டுவன் படையெழுச்சியின் போது அவன் சேனை இவ்வழியே சென்றதாகக் கூறப்படுகிறது. இதே செய்தி நாம் முன்னரே மேற்கோள் காட்டிய மற்றொரு புறநானூற்றுப் பாட்டாலும் குறிப்பிடப் பெறுகிறது. எனவே அப்பாதைக்கும் இக்காலக் காயலுக்கும் இடைப் பட்ட தூரமே கோட்டையின் அகலத்தைக் குறிக்கும்.

சுருக்கமாகக் கூறினல் தெற்கெல்லை கொடுங்கோளூர்க் கோவிலும் பூதசதுக்கமும் ஆகும். வட எல்லை கொஞ்ச தூரம், ஓரிரண்டு மைல் தொலைவரை இருக்கலாம். இவ் வெல்லைகளுக்குள் கோட்டைக் குட்பகுதியான நகரம் இருந்திருக்கவேண்டும். மலையாளிகள் புதுவைப்பு அதாவது புதிதாக வசிக்குமிடமானது என்று வழங்கும் பகுதியிலேயே இஃது அமைந்திருக்கும். உண்மையில் காயலின் இப்புறம் உள்ள மண் முழுவதும் செந்நிற மண்ணாக இருக்கும்போது அப்புற நிலம் முற்றிலும் மணலாயிருக்கிறது. இலக்கியத் தமிழில் வைப்பு என்பது ஊர் அல்லது நகரின் வீடுகள் முதலிய கட்டடங்களைக் குறிக்கும். எனவே இங்கே அது கட்டப்பட்ட நகரம் எனப் பொருள்படும். கோட்டைக்கு வெளியிலும் அரசர் கோடைக்கால மாளிகைகள், பிரபுக் கள் மாளிகைகள், முதலிய பிற கட்டடங்கள் அமைந் திருக்கும். அத்தகைய ஒரு கட்டடம் குறிப்பிடப்படுகிறது. இங்கேதான் மாடலன் அறிவுரையால் செங்குட்டுவன் ஆணையின்மீது வேள்வி நடத்தப்பட்டது. இது சிலப்பதி காரத்தில் வேளாவிக்கோ மாடம் எனப்படுகிறது. இதன் பொருள் மட்டப்பாவுடைய ஆவிக்கோ என்ற பெயர் கொண்ட வேள் அல்லது சிற்றரசனுடைய மாளிகை என்றாகும். பதிற்றுப்பத்தில் வேள் ஆவிக்கோமானுடைய

புதல்வியராக மூன்று சேர அரசிகள் குறிக்கப் பெறுகின்றனர். இக்குடி, சிறப்பின் மிக்க குடி அல்லது சிறப்புமிக்க குடிகளுள் ஒன்று என்பது இது காட்டும். இன்று மலையாள அரசர் கொள்வதுபோல் அரசர் மனைவியர் இத்தகைய பெருங் குடிகளிலிருந்து கொள்ளப்பட்டனர். அது வேளாவிக்கோ மாளிகை என்ற பெயருடன் கூறப்படினும் வேளாவிக்கோ மாடம் என்று கூறப்படினும் அஃது ஒரு சோலை மத்தியிலுள்ள அரண்மனையே என்பது தெளிவு. அஃது ஒரு வேளை அப்பெருங் குடிக்கு உரியதாக இருக்கலாம். அவர்கள் வாசஸ்தலமாகக் கோட்டைப்பகுதிக் குள்ளும் மாளிகைகள் இருந்திருக்கலாம். கோடை மாளிகையே அரசன் பெருவேள்விக்கு இடமாகக் கொள்ளப்பட்டது. இப்போது காயலுக்கப்பால் இவ்வேளாவிக்கோ மாடத்தை நினைவூட்டும் ஓரிடம் இருக்கிறது. சேர அரசன் செங்குட்டுவனுல் தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்ட வகைக்கு அது மிகவும் பொருத்தமானதாக இருந்திருக்கக்கூடியதே. எனவே இப்பகுதியில் முன்னெச்சரிக்கையுடன் திட்டமிட்டு நில அகழ்வு ஏற்படுமானல் இப்பிரச்னை முழுமைக்கும் ஒளிவிளக்கம் தரும் பழம்பொருட் சின்னங்கள் காணப்படும் என்று நம்பலாம். அவற்றின் மூலம் இஃது உறுதியாக முடிவுபடுத்தப்பட்டு விவாதத்துக்கே இடமில்லாத நிலை வரலாம். அங்ஙனம் நில அகழ்வால் காணப்படக்கூடும் ஓரம்சமாக இந்நூலிலேயே முந்துறக் குறிப்பிடப்பட்ட ஒன்றை அதாவது விஷ்ணு-பத்மநாபனின் கிடந்த திருக்கோலம் அமையப் பெற்றிருந்த ஆடகமாடம் அல்லது பொன் மாளிகையைக் கூறலாம். அது சேரர் அரண்மனையில் அவர் உறைவிடத்துக் கருகில் சுமாரான அளவிலுள்ள மதிப்பு வாய்ந்த கோவிலாக இருக்கவேண்டும். அவ்விடத்துத் தலைமைத் திருவுருவையோ அல்லது வேறு சிறப்புக் குறியீடான பொருளையோ காணின் அஃது இச்செய்தியை ஐயத்துக்கப்பாற் பட்டதாக்கும். இதனைக் கொச்சி நாட்

டின் பழம்பொருள் ஆராய்ச்சி இலாகாவே மேற்கொள்ள லாம். உண்மையில் இதுபோன்ற ஆராய்ச்சி அவர்களால் வஞ்சிக் குளத்தின் அருகிலுள்ள சேரமான் பரம்பா என்னு மிடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுபோலவே இங்கும் ஆராய்ச்சி நிகழ்த்துவது நல்லது எனக் கொச்சி அரசியலாருக்கு நாம் சிபார்சு செய்ய விரும்புகிறோம்.

7751

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம்
31 ஜூலை 1932